# பகுதி III

# பகுதி III

## 2002 ஆம் ஆண்டில் நாணயச் சபையால் மேற் கொள்ளப்பட்ட முக்கிய நிருவாக வழிமுறைகள்

### தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களும், சுற்றறிக்கைகளும், பணிப்புரைகளும், அறிவித்தல்களும்

**வங்கி மேற்பார்வைத் திணைக்களம்**


பக்கம்

1. வங்கிகளுக்கும் ஏனைய நிதியியல் நிறுவனங்களுக்குமான கம்பனி ஆளுகையின் சட்டக்கோவை — i
2. 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித் தொழிற் சட்டத்தின் 86ஆம் பிரிவின் கீழ் - திரவச் சொத்துக்களுக்கான வரைவிலக்கணம்
   எண்: 02/ 04/ 002/ 0106/ 001 — xxi
3. கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகளின்மீது முன்மதியுடைய ஒழுங்கு விதிகளைப் பிரயோகித்தல்
   எண்: 02/ 04/ 002/ 0005/ 003 — xxii

**உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம்**

4. இலங்கை மத்திய வங்கியின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள், மீள்கொள்வனவு, நேர்மாற்று மீள் கொள்வனவு வசதிகள் மற்றும் இரண்டாந்தரச் சந்தையில் உடனடிக் கொள்வனவுகள் / விற்பனைகள் மீதான திருத்தப்பட்ட வழிகாட்டல்கள்
   - எண்: 35/ 01/ 001/ 0006/ 001 — xxv

**செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்**

5. செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் (இலங்கை சட்டவாக்கங்களின் 423 அத்தியாயம்) 16.3.2002 நாளிடப்பட்ட எண் 1227/ 11 அறிவித்தலின்படியான அறிவித்தல் — xxxii
6. இலங்கையில் வதியும் வெளிநாட்டு கடவுச்சீட்டு உடமையாளர்களால் வைத்திருக்கப்படும் கணக்குகள் மீதான வட்டிக் கொடுப்பனவு
   - எண்: 06/ 04/ 03/ 2002 — xxxiii
7. கப்பற்படுத்தல் கம்பனிகளின் சார்பில் கப்பற்படுத்தல் முகவர்களினால் பேணப்படும் ரூபாக் கணக்குகளில் கப்பற் சரக்குக் கட்டணத்தை வரவுவைத்தல்
   - எண்: 06/ 07/ 06/ 2002 — xxxiv
8. கடல் மற்றும் வான் சரக்குக் கட்டணங்களை வெளிநாட்டு நாணயத்தல் செலுத்தலும் கப்பற்படுத்தல்/ வான்வழிக் கம்பனிகளுக்கு வெளிநாட்டு நாணயக் கணக்கு வசதிகளை அனுமதித்தலும்
   - எண்: 06/ 07/ 07/ 2002 — xxxv
9. இலங்கை நாணயத்தின் இறக்குமதியும் ஏற்றுமதியும் பயன்படுத்தப்படாத வெளிநாட்டு நாணயத்தினை வைத்திருத்தலும்
   - எண் : 06/ 04/ 08/ 2002 — xxxvii

10. பொருட்களின் கப்பலேற்றம் மற்றும் உள்நாட்டு வான் பட்டியல்/ உள்நாட்டு ஏற்றுமுறிகள் கப்பலேற்றுவோரின் சரக்குப் பற்றுச்சீட்டுக்கள் என்பனவற்றின் வழங்கல் - எண் : 06/ 07/ 09/ 2002 xxxviii

11. செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் 19.4.2002ஆம் நாளிடப்பட்ட எண் 1232/ 14ஆம் இலக்க அறிவித்தலின் பிரிவுகள் 7, 10, 11, 15ஆம் அத்துடன் 30ஆம் பிரிவுகளின் நியதிகளின்படி தேவைப்படுத்தப்பட்ட அனுமதி. xxxix

12. பங்கு முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்குகள் எண் :06/ 02/ 10/ 2002 xlii

13. பொருட்களின் கப்பலேற்றல் மற்றும் உள்நாட்டு வான்பட்டியல்/ உள்நாட்டு ஏற்றுமுறிகள் கப்பலேற்றுவோரின் சரக்குப் பற்றுச்சீட்டுக்கள் என்பனவற்றின் வழங்கல் எண் :06/ 07/ 11/ 2002 xlv

14. செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் 08.08.2002 நாளிடப்பட்ட எண் 1248/ 19 அறிவித்தலின் படி பிரிவுகள் 7, 10, 11, 15மற்றும் 30 என்பனவற்றின் நியதிகளின்படி அனுமதி xlvi

15. வெளிநாட்டில் தொழில்புரியும் இலங்கையர்களுக்கு வெளிநாட்டு நாணயத்தில் வீடமைப்புக் கடன்கள் எண் :06/ 02/ 12/ 2002 xlvii

16. பொருட்களின் கப்பலேற்றல் மற்றும் உள்நாட்டு வான்பட்டியல் / உள்நாட்டு ஏற்றுமுறிகள் கப்பலேற்றுவோரின் சரக்குப் பற்றுச்சீட்டுக்கள் என்பவற்றின் வழங்கல் எண் :06/ 07/ 15/ 2002 xlviii

17. செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் 22.11.2002 நாளிடப்பட்ட எண் 1263/ 10 அறிவித்தலின் படி பிரிவுகள் 5, 21, மற்றும் 22 என்பனவற்றின் நியதிகளில் தேவைப்படுத்தப்பட்ட அனுமதி xlix

**பன்னாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம்**

18. ஐரோப்பிய தனி நாணயத்தின் அறிமுகம் "யூரோ" எண் :33/ 03/ 011/ 0013/ 001 li

19. வெளிநாட்டு நாணயங்களின் நாளாந்த தொழிற்படு நிலுவைகளின் மீதான வரையறை liii

20. வர்த்தக வங்கிகளிடமிருந்து வெளிநாட்டு நாணயத்தாள்களின் கொள்வனவிற்கான மத்திய வங்கியின் வீதங்கள் - 2002 liv

## பொதுப்படுகடன் திணைக்களம்

21. பத்திரப் பிணையங்களைப் பாதுகாப்பில் வைத்திருப்பதன் மீதான பணிப்புரைகள்
எண் : 08/ 24/ 002/ 005/ 01 lv

22. நிதியியல் கூற்றுக்கள் மீதான பணிப்புரை lviii

23. அரசிற்குச் சொந்தமான பிணையங்கள் கணக்கினை புறம்பாக்கல் மீதான பணிப்புரை lix

24. உள்நாட்டுத் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டம் lxii

25. பதிவு செய்யப்பட்ட பங்குத் தொகுதிகளும் பிணையங்களும் lxxv

26. இரண்டாந்தரச் சந்தை விலைக்குறிப்பேடு (கோரல் மற்றும் வழங்கல் விலைகள்)
எண் : 08/ 24/ 002/ 0005/ 01 lxxxviii

27. முதனிலை வணிகர்களினால் கிளை அலுவலகமொன்றினை நிறுவுவதன் மீதான பணிப்புரை
எண் : 08/ 24/ 002/ 005/ 01 lxxxix

28. புதிய கருவிகள் மீதான பணிப்புரை
எண் : 08/ 24/ 002/ 005/ 01 xc

29. மூலதனப் போதுமை மீதான பணிப்புரை xci

30. மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கைகள் மீதான பணிப்புரை xciv

31. இரண்டாந்தரச் சந்தை உண்மை வீதங்களின் மீதான பணிப்புரை
எண் : 08/ 24/ 002/ 0005/ 001 xcix

32. திறைசேரி முறி ஏலங்களுக்கான ஆகக்குறைந்த உதவுத் தொகைத் திட்டங்கள் மீதான பணிப்புரை
எண் : 08/ 24/ 002/ 0005/ 01 c

## வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம்

33. நிதிக் கம்பனிகள் (வைப்புக்கள்) சட்டத்தின் கீழான அறிவித்தல் - 2002ஆம் ஆண்டின் பணிப்புரை எண் 1- 13.09.2002 நாளிடப்பட்ட அறிவித்தல் இல. 1253 ci

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்

25 யூன் 2002

**உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினதும்**

**உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளினதும்**

**அனைத்து முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கும்**

அன்புள்ள ஐயா/ அம்மணி,

**வங்கிகளுக்கும் ஏனைய நிதியியல் நிறுவனங்களுக்குமான**
**கம்பனி ஆளுகையின் சட்டக்கோவை**

நிதித்துறையின் கம்பனி ஆளுகை குறித்த தேசிய செயலணிக் குழுவினால் தொகுக்கப்பட்ட வங்கிகளுக்கும் ஏனைய நிதியியல் நிறுவனங்களுக்குமான கம்பனி ஆளுகை தொடர்பான சட்டக்கோவையின் பிரதியொன்றினை இத்துடன் இணைப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன். இது, தேசிய மட்டத்தில் சிறந்த கம்பனி ஆளுகை நடைமுறைகளை ஊக்குவிப்பதற்காக ஏற்படுத்தப்பட்டதாகும்.

வங்கிகளுக்கும் ஏனைய நிதியியல் நிறுவனங்களுக்குமான கம்பனி ஆளுகைச் சட்டக்கோவை ஒரு ஒழுங்கு விதியாகவோ அல்லது சட்ட நியமமாகவோ கருதப்பட வேண்டுமென்ற உள்நோக்கமெதனையும் கொண்டிருக்காதபோதும், நிதியியல் முறையின் நேர்மையையும் உறுதிப்பாட்டினையும் பேணுவதற்கு சட்டக்கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள தத்துவங்களும் வழிகாட்டல்களும் நடத்தைகளின் நியமங்களாக கருதப்படும் என்பது வலுவாக விதந்துரைக்கப்பட்டிருக்கிறது.

உங்கள் உண்மையுள்ள

**திருமதி பி.பி. சிறிசேன**
வங்கி மேற்பார்வைத் திணைக்களம்

# வங்கிகள் மற்றும் ஏனைய நிதியியல் நிறுவனங்களுக்கான கம்பனி ஆளுகைக்கான சட்டக்கோவை இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டது

2002

இவ்வழிகாட்டல்கள் பின்வரும் ஆவணங்களைப்பயன்படுத்தி வரையப்பட்டிருப்பதுடன் ஆவணங்களில் காணப்படும் கருத்துக்களில் சில குறிப்பாக வங்கித் தொழில் மற்றும் நிதியியல்துறைகள் தொடர்பானவற்றில் பயன்படுத்தப்பட்டிருந்தன.

- *சிறந்த நடைமுறைச் சட்டக்கோவை*

  *(கம்பனி ஆளுகையின் நிதியியல் நோக்குகள் தொடர்பான விடயங்களின் மீது விதந்துரைப்புக்கள் செய்வதற்கான குழுவின் அறிக்கை) பட்டயக் கணக்காளர் நிறுவனம்.*

- *வங்கித் தொழில் அமைப்புக்களுக்கான கம்பனி ஆளுகையை மேம்படுத்தல்*

  *வங்கித் தொழில் மேற்பார்வை பற்றி பாசில்குழு.*

- *சபை அறை ஆளுகை தொடர்பான வெளிப்படுத்துகை வரைவு*

  *இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனம்*

- *நிதித்துறையில் கம்பனி ஆளுகை*

  *நிதித்துறையில் கம்பனி ஆளுகைபற்றி பொதுநலவாய தொழிற்பாட்டு குழுவினால் வெளியிடப்பட்டது 2000 நவெம்பர்.*

- *உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகளின் மதிப்பீட்டிற்கான கட்டமைப்பு வேலை*

  *வங்கித் தொழில் மேற்பார்வை பற்றி பசில்குழு*

  *பாசில் சனவரி 1998*

- *நிதியியல் துறையில் கம்பனி ஆளுகை*

  *கம்பனி ஆளுகையின் பயனுறுதியை மேம்படுத்துவதற்கான சரிபார்ப்புப் பட்டியலின் வழங்கல்*

  *பொதுநலவாய செயலகம் சனவரி 2001*

- *வங்கிகளின் கம்பனி ஆளுகை, மூலதனம், சொத்து, தரமான முகாமைத்துவம், வருவாய்கள் திரவத்தன்மை எல்லாம் ஒரே அமைப்பு முறையில் அரவிந் மதூர் மற்றும் ஜிம்பி பர்கான் ஆசிய அபிவிருத்தி வங்கி*

- *கம்பனி ஆளுகையில் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்திக்கான அமைப்பின் கோட்பாடுகள்*

## கம்பனி ஆளுகை தொடர்பான தேசிய செயலணிக் குழுவின் உறுப்பினர்கள்

| | |
|---|---|
| திரு. ஏ. எஸ். ஜயவர்த்தன (தலைவர்) | ஆளுநர், இலங்கை மத்திய வங்கி |
| திரு. பீ. எம் . நாகாவத்தை(தலைவருக்கு மாற்றாக) | துணை ஆளுநர், இலங்கை மத்திய வங்கி |
| திரு. அமிதா குணரத்ன | முகாமைப்பணிப்பாளர், வ/ப இலங்கை வர்த்தக வங்கி |
| திரு. நிக்கலஸ் செறில் | முதன்மை நிறைவேற்று அலுவலர், எச்.எஸ்.பி.சீ |
| திரு. ரஞ்சித் பர்னாந்து | பணிப்பாளர், முகாமைப்பணிப்பாளர், தே.அ.வங்கி |
| திரு. லஷ்மி நரசிம்மம் | உள்நாட்டுத் தலைவர், இந்தியன் ஓவசீஸ் வங்கி |
| திரு. தேவா றொட்டிகோ | முதன்மைப்பங்காளர், பிறைஸ் வாட்டர்கவுஸ் கூப்பர்ஸ் |
| திரு. நிகால் பொன்சேகா | பொதுமுகாமையாளர், இ.அ.நி.கூ. வங்கி |
| திரு. சிவகணநாதன் (மறைந்த) | ஆலோசனையாளர் இ.ம. வங்கி |
| திரு. டபிள்யூ. செல்லமுத்து | தலைவர், எப்.எச்.எ |
| திருமதி. கதுறுகம | பணிப்பாளர், சட்டம், இ.ம. வங்கி |
| தேசமானிய லலித் கொத்தலாவல | தலைவர் சிலிங்கோ குறூப் |
| திரு. கென் பாலேந்திரா | தலைவர், இலங்கை வங்கி |
| திரு. சந்திரா ஜயரத்ன | முகாமைப்பணிப்பாளர், ஈகள் இன்சூரன்ஸ் |
| திரு. மனோ தித்தாவல | தலைவர், மக்கள் வங்கி |
| திரு. பீ. ரீ. சிறிசேன (செயலாளர்) | பணிப்பாளர், வங்கி மேற்பார்வை, இ.ம. வங்கி |
| திருமரி என். யூ. சுதந்தா மேதாவி (செயலாளருக்கு உதவி) | உதவிப் பரீட்சகர், வங்கி மேற்பார்வை, இ.ம.வங்கி |

## வங்கிகள் மற்றும் ஏனைய நிதியியல் நிறுவனங்களுக்கான
## கம்பனி ஆளுகையின் சட்டக்கோவை

### அறிமுகம்

### கம்பனி ஆளுகை

*கம்பனி ஆளுகை என்பது " மேம்பட்ட செயலாற்றத்தினூடாக கம்பனிகளின் முகாமைத்துவம், அதன் சபை, அதன் பங்குடைமையாளர்கள் மற்றும் ஏனைய உரிமை கோருவோருக்கிடையிலான உறவு முறைகளின் ஒரு தொகுப்பாகும். (பொ.அ.ஒ.அமைப்பு)*

*கம்பனி ஆளுகை என்பது உறுதியான வங்கித் தொழில்முறையின் மிக இன்றியமையாததான பாதுகாப்பொன்றாகும். ஆசியா பொருளாதார நெருக்கடியிலிருந்து தோற்றம் பெற்று வருவதனால், இப்பிராந்தியத்திலுள்ள பெரும்பாலான நிறுவனங்கள் சிறந்த கம்பனி ஆளுகையை அறிமுகப்படுத்த விரும்புகிறது." (வங்கிகளின் கம்பனி ஆளுகை அரவிந் மதூர் மற்றும் ஜிம்மி பர்கான் ஆ.அ.வங்கி)*

கம்பனி ஆளுகையானது கட்டமைப்பினையும் வழங்குகின்றது. இதனூடாக கம்பனியின் குறிக்கோள்கள் உருவாக்கப்படுவதுடன் அக்குறிக்கோள்கள் அடையப்பட வேண்டிய முறை பற்றியும் கண்காணிப்புச் செயற்பாடு பற்றியும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. சிறந்தகம்பனி ஆளுகையானது கம்பனியினதும் பங்குடைமையாளர்களினதும் நன்மைகளைத் தன்னகத்தேகொண்ட குறிக்கோள்களைப் பற்றியிருப்பதற்கு சபைக்கும் முகாமைத்தவத்திற்கும் பொருத்தமான ஊக்குவிப்புக்களை அளிக்கத்தக்கதாகவும் வினைத்திறன்மிக்க கண்காணிப்பு ஏற்படுத்திக் கொண்டிருப்பதன் மூலம் கம்பனிகள் மிகச் சிறந்தமுறையில் மூலவளங்களைப் பயன்படுத்துவதனை ஊக்குவிக்கத்தக்கதாகவும் இருத்தல் வேண்டும்.

### போதுமையற்ற கம்பனி ஆளுகையினதும் நிதியியல் உறுதிப்பாடின்மையினதும் போதாத தன்மை

வங்கிகள், நிதியியல் நிறுவனங்களின் மிகச் சிறந்த கம்பனி ஆளுகை என்பது சிறந்த நிதியியல் முறைக்கு இன்றியமையாததொன்றாகும். தனிப்பட்ட வங்கிகள்/ நிதியியல் நிறுவனங்களைப் பொறுத்தவரை, இது மூலதனச் செலவினைக் குறைப்பதுடன் பங்குடைமையாளர்களின் பெறுமதியையும் கூட்டுகிறது. ஆசியாவின் நிதியியல் நெருக்கடி அரச வங்கிகளில் காணப்பட்ட கடுமையான போதுமையற்ற தன்மைகளுக்கு ஓரளவு காரணமாக இருந்தது. நெருக்கடிக்குப் பின்னைய காலத்தில் உருவாக்கப்பட்ட சூழ்நிலையின் காரணமாக ஆசியாவிலுள்ள பெரும்பாலான முக்கிய நிதியியல் நிறுவனங்கள், அவை தாக்குப்பிடிப்பதற்கான ஒரு வழிமுறையாக மட்டுமன்றி போட்டியிடுவதற்கான ஒரு ஆயுதமாகவும் ஆளுகைச் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தற்பொழுது விரும்புகின்றன.

கம்பனிகளிலும் நிதியியல் துறைகளிலும் போதுமான கம்பனி ஆளுகை இல்லாமையானது பல நாடுகளின் நிதியியல் உறுதிப்பாட்டின்மையினை ஏற்படுத்துகின்ற முக்கியமானதொரு காரணமாக இருக்கிறது. கம்பனித் துறையில் காணப்படும் பலவீனமான கம்பனி ஆளுகையானது (இடர்நேர் முகாமைத்துவ நடைமுறைகளுடன் இணைந்த விதத்தில்) கம்பனிகளின் இடர்நேர் தோற்றப்பாட்டினை அதிகரிப்பதுடன், நிலைமை வேறுவிதமாக இருந்தாலொழிய , வங்கிகள் மற்றும் ஏனைய நிதியியல் நிறுவனங்களின் இழப்புக்களின் மூலமான இடர் நேர்விளைவுகள் பெருமளவில் வெளிக்காட்டப்படும். கூடிய கருத்துப்படி கூறுவதாயின், வங்கிகளிலும், ஏனைய நிதியியல் நிறுவனங்களிலும் உள்ள கம்பனி ஆளுகையில் உள்ள பலவீனமானது அவர்களது வியாபார இடர் நேர்வுகளை அடையாளம் காண்பது, கண்காணிப்பது மற்றும் முகாமைப்படுத்துவது என்பனவற்றில் அவற்றின் இயலாற்றலைக் குறைத்துவருவதுடன் மோசமான கடன் வழங்கல் தகைமையையும் அந் நிறுவனங்களில் மிகையான இடர்நேர்வுகளையும் தோற்றுவிக்கின்றது. எடுத்துக்காட்டாக போதுமையற்ற கம்பனி ஆளுகையானது மோசமான கொடுகடன் இடர்நேர்வுகளின் மோசமான முகாமைக்கும், "கொடுகடன் கலாச்சாரம்" தேவைக்குக் குறைந்தளவில் முன்னேற்றமடைந்தமைக்கும் மிகையான வெளிப்படுத்தல்களில் கவனம் செலுத்துவதற்கும், வட்டிவீத இடர்நேர்வு மற்றும் செலாவணிவீத இடர்நேர்வுகளின் மோசமான முகாமைத்துவத்திற்கும், சில வெளிப்படுத்துகைகளில் இட்டுச்செல்லும். கம்பனி ஆளுகை மற்றும் இடர்நேர் முகாமைத்துவத்திலான வங்கியின் போதுமற்ற தன்மை கடன்தீர் ஆற்றலற்ற தன்மைக்கும் நிதியியல் உறுதிப்பாட்டின்மைக்கும் இட்டுச்செல்லும்.

### வங்கித்தொழில், ஏனைய நிதியியல் நிறுவனங்களிலுள்ள கம்பனி ஆளுகைகளின் கோட்பாடுகள்

பெரும்பாலும் அனைத்து ஏனைய கம்பனி தொழில் முயற்சிகள், வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் தமது ஆற்றல் தன்மைக்கு வைப்பாளர்களினதும் மற்றைய கொடுகடன் வழங்கியோரினதும் நம்பிக்கையைப் பேணுவதிலேயே மிக முக்கியமாகத் தங்கியுள்ளன. நிதியியல் நிறுவனங்களின் நீடித்திருக்கக்கூடிய நிதியியல் தன்மையும் உண்மையில் தாக்குப் பிடிக்கக்கூடிய தன்மையும் வைப்பாளர்களினதும் ஏனைய இணைப்பங்காளர்களினதும் நம்பிக்கையைப் பேணுவதிலேயே பெருமளவிற்கு தங்கியிருக்கிறது. எனவே அந்நிறுவனங்களின் பணிப்பாளர்களும் சிரேஷ்ட முகாமைத்துவமும் அவர்களின் வைப்பாளர்களுக்கும் ஏனைய கடனிறிப்போர்க்கும் பாதுகாப்பளிக்கும் விசேட கடமையைக் கொண்டுள்ளவர்களாகக் கருதப்படுவர்.நிதியியல் நிறுவனமொன்றின் கம்பனி ஆளுகை ஒழுங்குகள் கடனளிப்போரை பங்குடைமையாளருக்கும் கடனளிப்போருக்குமிடையிலான வட்டி முரண்பாடுகளை முகாமைப்படுத்தல், கடனளிப்போரு க்கும் (மற்றயோருக்கும்) செய்யப்பட்ட நிதியியல் வெளிப்படுத்துகையின் தன்மை, இடர் நேர் முகாமைத்துவ முறைகளின் தன்மை போன்ற பல்வேறு வழிகளில் கடனளித்தோரின் நன்மைகளைப் பிரதிபலிக்கும் கடமையைக் கொண்டிருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

### இடர் நேர்வு முகாமைத்துவமும் கம்பனி ஆளுகையும்

நிதியியல் நிறுவனங்கள் அவற்றின் தன்மை அவற்றின் வியாபார இடர் நேர்வுகளின் வீச்சு ஆகிய நியதிகளில் பெரும்பாலான கம்பனிகளிலிருந்து வேறுபடுவதுடன், இவ்விடர் நேர்விளைவுகள் மோசமாக முகாமைப்படுத்தப்படின் அது மோசமான விளைவுகளை ஏற்படுத்தும். வங்கிகள்/ நிதியியல் நிறுவனங்கள் பரந்தளவிலான இடர் நேர்வுகளை எதிர் கொள்வதுடன் அவற்றின் பெரும்பாலானவை கொடுகடன் இடர்நேர்வு, காப்பின்மையை கவனத்திற் கொண்டுள்ள இடர்நேர்வு, இதனுடன் தொடர்புபட்ட காப்பற்ற இடர் நேர்வு, வட்டிவீத இடர் நேர்வு, செலாவணிவீதஇடர் நேர்வு, கொடுப்பனவு முறைகளுக்கிடையேயான இடர் நேர்வுகள் மற்றும் வியாபாரத்துடன் தொடர்பான இடர்நேர்வுகள் என்பன உட்பட அவற்றின் தன்மையின் அடிப்படையில் சிக்கலான தன்மையினைக் கொண்டிருந்தன. குறிப்பாக, பெரும்பாலான நிறுவனங்கள் வலுவற்ற மெல்லிதான மூலதனமாக்கல் தளத்தின் மீதே தொழிற்படுகின்றன என்பதனையும் அவற்றின் தொகையில் கணிசமான முதிர்ச்சிப் பொருத்தப்பாடின்மைகள் காணப்படுகின்றன என்ற உண்மையினையம் கருத்திற் கொள்கையில் இவ்விடர் நேர்வுகளை சரியாக அடையாளம் கண்டு

முகாமைப்படுத்தப்படாவிடின் அத்தகைய நிறுவனங்கள் நிதியியல் ரீதியில் தகர்ந்து போவதற்கு காரணமாகிறது. ஆகவே அவர்களுக்கு அனைத்து சாத்தியமான வியாபார இடர் நேர்வுகளையும் வினைத்திறன்மிக்க முறையில் அடையாளங் காணல் கண்காணித்தல் மற்றும் முகாமைப்படுத்தல் என்பனவற்றை மேம்படுத்தக்கூடிய கம்பனி ஆளுகை கட்டமைப்பு ஒன்று தேவைப்படுகிறது.

### ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளும் கம்பனி ஆளுகையும்

பெரும்பாலான நிதியல் நிறுவனங்கள் முன்மதியுடைய தேவைப்பாடுகள், வரிவிதிப்பு ஒழுங்கு விதிகள். பல்வேறு அறிக்கையிடல் கடப்பாடுகள் மற்றும் அதை மொத்த செயற்பாடுகளை உள்ளடக்கிய பெரும் எண்ணிக்கையான ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன. ஆகவே, கம்பனி ஆளுகைக் கூட்டமைப்பு, அனைத்து நியதி மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளை உறுதிப் படுத்துவதற்கான முறைகளை உள்ளடக்கியிருப்பதற்கான தேவை நிறைவேற்றப்பட்டிருக்கின்றது என்பதனையும் முக்கிய உள்ளார்ந்தவளம் அல்லது உண்மையான வரம்பு மீறல் இருப்பின் அது எப்பொழுது ஏற்பட்டது என்பதனையும் உள்ளடக்கியுள்ளது.

### உயர்தர நிதியியல் வெளிப்படுத்தகை

வலுவான கம்பனி ஆளுகைக்கான மிக இன்றியமையாததான நிரப்புக்கூறு யாதெனில் கம்பனி மற்றும் நிதியியல் நிறுவனங்களுக்காக வலுவான நிதியியல் வெளிப்படுத்தல் தேவைப்பாடுகளை நடைமுறைப்படுத்துவதேயாகும். பணிப்பாளர்களினதும் மூத்த முகாமைத்துவத்தினதும் காரண காரிய முறைகளை வலுப்படுத்தும் ஒரு கருவி என்ற ரீதியில் நிதியியல் வெளிப்படுத்துகை இன்றியமையாததொன்றாக இருப்பதுடன் இடர்நேர் முகாமைக்கான ஊக்குவிப்புக்களையும் அதிகரிக்கின்றது. இது, சந்தைப் பங்கேற்பாளர் மற்றும் அவதானிப்பாளர்களுக்கு - முக்கியமாக வங்கிகளின் பாரிய கொடுகடன்நிற்போருக்கு, நிதியியல் தொடர்புச் சாதனங்களுக்கு, நிதியியல் ஆய்வாளர்களுக்கு, தரமிடல் முகவர்களுக்கு அவர்கள் நிதியியல் நிறவனங்களின் செயற்பாடுகளையும் ஆற்றலினையும் பயன்தரு முறையில் கண்காணிப்பதும். சிறந்த முறையில் செயற்படாத அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட முன்மதியுடைய நியமங்களை பூர்த்தி செய்ய்தவறும் நிறுவனங்களின்மீது பொருத்தமான ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற் கொள்வதும் இன்றியமையாததாகும். நிதியியல் வெளிப்படுத்துகை வைப்பாளர்கள் உட்பட சிறு கடனளிப்பவர்கள் அவர்களது நலவுரித்துக்களைப் பாதுகாத்துக்கொள்ளவதும் அத்தியாவசியமானதாகும்.

### சந்தை ஒழுக்காற்றுக்களை வலுப்படுத்தல்

சந்தை ஒழுக்காற்றுக்கள் நிதியியல்முறை உறுதிப்பாட்டினை மேம்படுத்தவதிலும் சிறந்த கம்பனி ஆளுகையைப் பேணல் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறை என்பனவற்றை ஊக்குவிப்பதிலும் பிரதான பங்கினை வகிக்கமுடியும் என்பது அதிகரித்த அளவில் அங்கீகரிக்கப்பட்டு வருகின்றது. மோசமான இடர்நேர் முகாமைத்துவத்தைப் பொறுத்தவரையில் மிக எச்சரிக்கையாயிருக்கவேண்டும்போல் தோன்றுகிறது. நீண்ட காலத்தில், பலமான சந்தை ஒழுக்காற்றுக்கள் வினைத்திறன்மிக்க இடர் நேர்வு முகாமைத்துவத்திற்கான ஊக்குவிப்புக்களை வலுவாக்குவதன் மூலமும் மோசமான செயற்பாடுகளைக் கொண்டவர்களைக் களையெடுப்பதன் மூலமும் நிதியியல் உறுதிப்பாட்டினையும் வினைத்திறனையும் அதிகரிக்கும்போல் தோன்றுகிறது.

## 2. கம்பனி ஆளுகையின் உள்ளடக்கம்

### *குறிக்கோள்கள்*

வங்கித் தொழில் மற்றும் நிதியியல்துறைக் கைத்தொழில் தோற்றப்பாட்டிலிருந்து, கம்பனி ஆளுகையானது பணிப்பாளர் சபைகளினாலும் மூத்த முகாமையினாலும் ஆளுகை செய்யப்படும் தனிப்பட்ட நிறுவனங்களின் வியாபாரங்கள் மற்றும் அலுவல்களின் தன்மையுடன் தொடர்புடையதாக இருந்தது. இவை பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளது.

- கம்பனி குறிக்கோள்களை ஏற்படுத்தல் (சொந்தக்காரர்களுக்கு பொருளாதார வருவாய்களை உருவாக்குகின்றமை உட்பட);
- இடர்நேர்வு முகாமைத்துவ கொள்கைகளையும் நடைமுறைகளையும் ஏற்படுத்துதல்;
- வியாபாரத்திறன் நாளாந்த தொழிற்பாடுகளை வினைத்திறனுடனும் ஒருங்கிணைப்புடனும் மேற்கொள்ளப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்தல் ;
- வைப்பாளர்களின் நலவுரித்துக்களைப் பாதுகாத்தல்;

- அங்கீகரிக்கப்பட்ட உரிமைகோருவோர்களின் நலவுரித்துக்களைப் பரிசீலித்தல்
- நிறுவனத்தினை பாதுகாப்பான ரீதியிலும் சிறந்த முறையிலும் தொழிற்படுத்தும் எதிர்பார்ப்புடன் கம்பனி நடவடிக்கைகளையும் நடத்தையினையும் ஒழுங்குமுறைப்படுத்தல்.
- பொருத்தமான சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு இணங்க தொழிற்படல்

**உபாயங்களும் தொழில் நுணுக்கங்களும்**

வலுவான கம்பனி ஆளுகைக்கு அடிப்படையான உத்திகள் மற்றும் தொழில் நுணுக்கங்கள் பின்ருவனவற்றை உள்ளடக்குகின்றன.

- கம்பனியின் நன்மதிப்பு, ஒழுக்கக் கோவை மற்றும் பொருத்தமான நடத்தைகளுக்குரிய மற்றைய நியமங்கள் மற்றும் அவர்களுடன் இணங்கிக் கொள்வதனை உறுதிப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் முறைகள்
- நன்கு இணைப்புச் செய்யப்பட்ட கம்பனி உத்திகளின் மூலம் தொழில் முயற்சிகளின் முழு வெற்றி மற்றும் தனிப்பட்டோரின் பங்களிப்பு மதிப்பிடப்பட முடியும்.
- பொறுப்புக்களையும், தீர்மானம் மேற்கொள்ளுகின்ற அதிகாரங்களையும் தெளிவாக ஒப்படைத்தல், தனிப்பட்ட ஆட்களிடமிருந்து பணிப்பாளர் சபைக்கு தேவைப்படும் ஒப்புதல்களின் உச்ச அதிகார த்தினை ஒருங்கிணைத்தல்;
- பணிப்பாளர்சபை, மூத்தமுகாமைத்துவம் மற்றும் கணக்காய்வாளர்களிடையே செயற்பாடுகளையும் ஒத்துழைப்பினையும் ஏற்படுத்துவதற்கான பொறி முறையொன்றினை நிறுவுதல்;
- உள்ளக மற்றும் வெளிக் கணக்காய்வு நடவடிக்கைகள் உள்ளிட்ட வலுவான உள்ளகக் கட்டுப்பாட்டுமுறை, இடர்நேர்வு முகாமைத்தவத் தொழிற்பாடுகள், வியாபாரத் தொழிற்பாடுகளில் சுதந்திரம் மற்றும் ஏனைய சரிபார்த்தல் மீதிகள்;
- வங்கிகளுடன் இணைந்துள்ள கடன்பாட்டாளர்கள் பாரிய பங்குடைமையாளர்கள், மூத்தமுகாமைகள் அல்லது நிறுவனங்களுக்குள்ளேயான முக்கிய தீர்மானங்களை எடுப்போர் (எடுத்துக்காட்டு - வர்த்தகர்கள்) உட்பட , நலவுரித்துக்களின் முரண்பாடுகள் குறிப்பாக பெரிதாக இருக்குமிடத்து இடர்நேர் காப்பின்மையைக் கொண்ட சிறப்புக் கண்காணிப்பு;
- மிகச்சரியான முறையில் செயற்படுவதற்காக மூத்தமுகாமைகள், வியாபாரத்துடன் இணைந்துள்ள முகாமை மற்றும் ஊழியர்களுக்கு இழப்பீடு, பதவி உயர்வு மற்றும் அங்கீகாரம் போன்ற வடிவங்களில் நிதி மற்றும் முகாமைத்துவ ஊக்குவிப்புக்களை வழங்கல்
- பொருத்தமான தகவல்களை கம்பனிக்குள்ளேயும் பொதுமக்களுக்கும் வழங்குதல்
- இனிவரும் ஆண்டுகளில் நிறுவனம் எய்தவுள்ள சாதனைகள் பற்றியும் கம்பனி நன்மதிப்புப் பற்றியும் நிறுவனத்திற்கும் அதன் உரிமைகோருவோர்களுக்கும் தகவலளித்தல்

**கம்பனி ஆளுகைக்கான சிறந்த நடைமுறைச் சட்டக்கோவை**

**கோட்பாடு 1**

**சபை**

ஒவ்வொரு வங்கியும்/ நிதியியல் நிறுவனமும் (இதனகத்துப் பின்னர் "நிதியியல் நிறுவனம்" எனக் கூட்டாக அழைக்கப்படும்) வலுவான பணிப்பாளர் சபையொன்றினை தலைமையாகக் கொண்டிருத்தல் வேண்டும். இச்சபை அதன் கொள்கைகளை தீர்மானிப்பதாகவும் அவற்றின் நடைமுறைப்படுத்தல் உறுதிப்படுத்தக் கூடியதாகவும் நிதியியல் நிறுவனத்தினை வழி நடத்தக்கூடியதாகவும் கட்டுப்படுத்தக்கூடியதாகவும் இருத்தல் வேண்டும்.

***வழிகாட்டல் - 11***

நிதியியல் நிறுவனத்தின் தொழிற்பாட்டிற்கும் சிறந்த நிதியியல் ஆற்றலுக்கும் பணிப்பாளர்சபை பொறுப்பாக இருக்கும்.

பணிப்பாளர்சபை பின்வருவற்றிற்கான பொறுப்பினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

- கம்பனியின் தொலைநோக்கு, நடவடிக்கைகள், நன்மதிப்பு மற்றும் குறிக்கோள்களை உறுதிப்படுத்தல்

- கொள்கைகள், உத்திகள் மற்றும் வரவு செலவுத் திட்டங்களுக்கு ஒப்புதலளித்தல்
- நிறுவன அமைப்பியல் கட்டமைப்பிற்கு ஒப்புதலளித்தல்
- நிதியியல் நிறுவனங்கள் ஆள்படும் இடர்நேர்வுகளைப் புரிந்து கொள்ளுதலும் இவ்விடர் நேர்வுகளுக்கு ஏற்றுக் கொள்ளத்தக்க மட்டங்களை ஏற்படுத்தலும்
- இவ்விடர் நேர்வுகளை அடையாளங் காணவும், கண்காணிக்கவும் கட்டுப்படுத்தவும் அவசியமான நடவடிக்கைகளை மூத்தமுகாமை மேற்கொள்வதை உறுதிப்படுத்தல்
- நிர்ணயித்த குறிக்கோள்களை எய்தும் விதத்தில் முகாமைத்துவத்தின் கண்காணிப்பினை ஏற்படுத்துதல்.
- பொருந்தத்தக்க சட்டங்களுடனும், ஒழுங்கு விதிகளுடனும் இணங்கி ஒழுகுதல்.
- அவற்றின் நிதியியல் மற்றும் நிதியியல்- அல்லா செயலாற்றத்தினைக் கண்காணித்தல்.
- நிறுவனம் முழுவதிலும் சிறந்த கம்பனி ஆளுகையை ஏற்படுத்தி ஊக்குவித்தல்.

***வழிகாட்டல் 1.2***

நிதியியல் நிறுவனத்தின் பணிப்பாளர்சபை (இதனகத்துப் பின்னர் "சபை" என அழைக்கப்படும்) மற்றும் மூத்தமுகாமை என்பன உயர் ஒழுக்கவியல் மற்றும் ஒருங்கிணைப்பு நியமங்களை மேம்படுத்துவதற்கும், உள்ளகக் கட்டுப்பாடுகளின் முக்கியத்துவத்தை அனைத்து மட்ட ஆளணியினருக்கும் வலியுறுத்தி எடுத்து விளக்கப்பட வேண்டிய கலாச்சாரப் பண்புகளை நிறுவனத்திற்குள்ளே நிறுவுவதற்கும் பொறுப்பாக இருக்கும். அத்தகைய நிறுவனங்களிலுள்ள அனைத்துமட்ட ஆளணியினரும் உள்ளகக் கட்டுப்பாட்டுச் செயல்முறையிலுள்ள தமது பங்கினை விளக்கிங் கொள்ள வேண்டியதுடன் செயற்பாட்டிலும் முழுமையாக ஈடுபாடு கொண்டிருத்தல் வேண்டும்.

***வழிகாட்டல் 1.3***

சபையானது ஆண்டிற்குக் குறைந்தது 10 கூட்டங்களையாவது கூட்ட வேண்டியதுடன் குறிப்பான தேவை ஏற்படும் வேளைகளிலும் கூட்டத்தைக் கூட்டவேண்டும்.

***வழிகாட்டல் 1.4***

உத்தி செயலாற்றம் மூலவளங்கள் (முக்கியமான நியமங்கள் உட்பட) நடத்தை நியமங்கள் ஆகிய விடயங்களில் ஒவ்வொரு பணிப்பாளரும் தனது சுதந்திரமான தீர்ப்பினை தெரிவித்தல் வேண்டும்.

***வழிகாட்டல் 1.5***

சபையானது, குறிப்பாக அதன் தீர்மானத்திற்கென ஒதுக்கப்பட்ட விடயங்களின் அட்டவணையுடன் பின்வருவனவற்றையும் கொண்டிருத்தல் வேண்டும்.

- வியாபார உத்தியினை வடிவமைத்தலும் எப்பொழுது தேவையோ அப்பொழுதே மாற்றங்களை ஏற்படுத்தலும்.
- இடர்நேர்வு முகாமைத்துவ உத்தியினை வடிவமைத்தல்
- முதன்மை நிறைவேற்று அலுவலரும் முகாமைத்துவக் குழுவும் உயர் மனோதிடம் கொண்டுள்ளமையினை உறுதிப்படுத்தல்.
- மூத்த முகாமைத்துவம் உத்திகளைத் தொடர்ந்து மேற்கொள்ளுவதற்கு ஒப்புதலளித்தல்.
- பயனுள்ள தகவல் கட்டுப்பாடு மற்றும் கணக்காய்வு முறைகளைப் பயன்படுத்திப் பேணல்
- ஒழுங்குமுறைப்படுத்தல் சட்டம்/ ஒழுக்க நியமங்களுக்கு இணங்கி ஒழுகுதல், அத்துடன்
- இடர்நேர்வுகளைக் கட்டுப்படுத்தி முகாமைப்படுத்தல்

***வழிகாட்டல் 1.6***

பணிப்பாளர்கள் அவர்களது பணிகளை ஆற்றுவதற்கு வேண்டிய சுதந்திரமான தொழில்சார் மதியுரைகளைப் பெற்றுக் கொள்ளுவதற்கான ஒப்புதலளிக்கப்பட்ட நடைமுறைகள் இருக்கவேண்டியதுடன் அதற்காக ஏற்படும் செலவுகளின் நியாயமான மட்டத்தினையும் நிறுவனம் வழங்க வேண்டும்.

*வழிகாட்டல் 1.7*

சபை உறுப்பினர்கள் அவசியம் என உணரும் பின்வரும் வேளைகளில் நிதியியல் நிறுவனங்களின் கம்பனி ஆளுகைக்கு சபையானது வலுவினைக் கூட்டும்.

- அவர்களது கவனக் குறைவான தொழிற்பாட்டினை விளங்கிக் கொள்வதிலும், அத்தகைய நிறுவனங்கள் மற்றும் பங்குடமையாளர்களுக்கான "கடமைப் பற்றுறுதியிலும்"
- முகாமைத்துவத்தினை கேள்வி கேட்பதற்கான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்பதனை உணர்கையிலும் முகாமைத்தவத்திடமிருந்து நேரடியான விளக்கங்களைக் கேட்டுப் பெற்றுக் கொள்வதிலும்
- பக்கம் சாராத மதியுரைகளை வழங்குதல்;
- மிகையாக நீடிக்கப்படாமலிருக்கையில்
- மற்றைய அமைப்புக்களுடான அவர்களின் நடவடிக்கைகளிலும் அவற்றிற்கான கடப்பாடுகளிலும் காணப்படும் நலவுரித்துக்களின் முரண்பாடுகளைத் தவிர்த்தல்
- கொள்கைகளை உருவாக்கி அவற்றிற்கு ஒப்புதலளித்தல், தொடர்பூட்டல் வழிமுறைகளை நிறுவுதல் மற்றும் கம்பனி சார்ந்த குறிக்கோள்களின் செயற்பாட்டினைக் கண்காணித்தல் என்பனவற்றிற்காக மூத்த முகாமைகளுடனும் உள்ளகக் கணக்காய்வுகளுடனும் கிரமமாகக் கூடுதல்.
- குறிக்கோள் சார்ந்த மதியுரை வழங்குவதில் ஆற்றலைக் கொண்டிராத விடயங்களின் மீது தீர்மானமெடுப்பதிலிருந்து விலகியிருக்கையில்
- நிறுவனத்தின் நாளாந்த முகாமைத்தவத்தில் பங்கேற்காத வேளையில்

*வழிகாட்டல் 1.8*

அதன் கடமைகளை ஆற்றுகையில், நிதியியல் நிறுவனமானது தொடர்ந்தும் இலாபகரமான தன்மையினை எய்தும் விதத்திலும், வெளிப்படையான தன்மை, பதில் சொல்ல வேண்டிய கடமை, மற்றும் பொறுப்பாண்மை என்பனவற்றை அடிப்படையாகக் கொண்ட விதத்திலும், அந் நிறுவனங்களின் மிகச் சிறந்த நலவுரித்துக்களுக்கேற்ப நடந்து கொள்வதனை, நெறிப்படுத்துவதில் சபையானது தலைமைத்துவம் தொழில் முயற்சி ஒருங்கிணைப்பு மற்றும் தீர்ப்பைப் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

*வழிகாட்டல் 1.9*

சபையானது அதன் கடமைகளை ஆற்றுகையில், சபையின் நியமனங்களை வேறுபட்ட ஒழுக்காற்று விதிகளில் நிபுணத்துவம் பெற்ற பணிப்பாளர்களுக்கு கலந்து வழங்குவதன் மூலம் அவர்கள் ஒவ்வொருவரும் தீர்மானம் செய்யும் செயல்முறையின்போது பெறுமதியான கருத்துக்களை வழங்கக் கூடியதாகவும் சுதந்திரமான தீர்ப்பினை எட்டக்கூடியதாக இருப்பதனையும் சபை உறுதிப்படுத்த வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது.

*வழிகாட்டல் 1.10*

சபை அதன் கடமைகளைச் செய்யும்போது நிதியியல் நிறுவனங்கள் தொடர்பான அனைத்துச் சட்டங்கள், ஒழுங்கு விதிகள் மற்றும் சிறந்த வியாபார நடைமுறைகளின் சட்டக்கோவை என்பனவற்றிற்கு இணங்கி ஒழுகின்றமையை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

*வழிகாட்டல் 1.11*

அதன் கடமைகளை ஆற்றுகையில், நிதியியல் நிறுவனங்கள் பங்குடமையாளர்களுடனும் மற்றும் பங்காளர்களையும் பயன்தரு முறையில் தொடர்பு கொள்வதை சபை உறுதிப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

*வழிகாட்டல் 1.12*

அதன் கடமைகளை ஆற்றுகையில், ஆள் ஒருவர் அல்லது ஆட்களைக் கொண்ட குழுவொன்று தடங்கலற்ற அதிகாரத்தினைக் கொண்டிருக்கவில்லை என்பதனையும் அத்துடன் சபை பொருத்தமான அதிகாரச் சமநிலையும் அதிகாரமும் காணப்படுகின்றது என்பதனையும் நிறை

வேற்று அலுவலரினதும் தலைவரினதும் தொழிற்பாடுகளை பிரிப்பதிலும், நியதி மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல்களுக்குட்பட்டு நிறைவேற்று மற்றும் நிறைவேற்றல்லாப் பணிப்பாளர்களிடையே சமநிலையைப் பேணுதல் பிரதிபலிக்கப்படுவதனையும் சபை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

***வழிகாட்டல் 1.13***

அதன் கடமைகளை ஆற்றும்பொழுது, நிதியியல் நிறுவனத்தினது கட்டுப்பாட்டின் உள்ளக முறைகளினது பயன்பாட்டினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு செயற்பாடுகளையும் நடைமுறைகளையும் கிரமமாக மீளாய்வு செய்ய வேண்டுமெனவும் அவ்வாறு செய்வதன்மூலம் நிதியியல் நிறுவனத்தின் தீர்மானம் எடுக்கும் இயலாற்றலும் அறிக்கையிடலின் துல்லியமும், நிதியியல் பெறுபேறுகளும் எல்லா நேரத்திலும் உயர்மட்டத்தில் பேணப்பட வேண்டும் எனவும் சபை எதிர்பார்க்கப்படுகிறது.

***வழிகாட்டல் 1.14***

அதன் கடமைகளை ஆற்றும் பொழுது மூத்தமுகாமைத்துவம் அதன் மிகச் சிறந்தநடைமுறைக் கோவைப் பின்னுறுவதனை உறுதிப்படுத்த வேண்டும் என சபை எதிர்பார்க்கப்படுகிறது.

***வழிகாட்டல் 1.15***

சபை அதன் கடமைகளை ஆற்றுகையில், அது நிதியியல் நிறுவனங்களில் பயன்படுத்தப்படும் அனைத்துத் தொழில் நுட்பங்களும் முறைகளும் அதன் வியாபாரத்தினை சரியான முறையில் கொண்டு நடத்துவதறகுப் போதுமானவையென்பதனையும் அத்துடன் அர்த்தமுள்ள போட்டியாளனாக இது நிலைபெற்றுள்ளது என்பதனையும் உறுதிப்படுத்தவேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

***வழிகாட்டல் 1.17***

சபை அதன் கடமைகளை ஆற்றுகையில், அது நிதியியல்துறை நிறுவனத்தின் மூத்த முகாமைத்துவம் அவற்றின் கடமையினை திருப்திகரமான முறையில் மேற்கொள்வதனை உறுதிப்படுத்த வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

***வழிகாட்டல் 1.18***

பணிக்காலம், சுழற்சிமுறை மற்றும் ஓய்வுபெறும் வயது நியதிகள் மற்றும் நிபந்தனைகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நிதியியல் நிறுவனம் மற்றும் நிறைவேற்று அல்லா பணிப்பாளர்களிடையே பொருத்தமான பணி ஒப்பந்தமொன்று கையெழுத்திடப்பட வேண்டும்.

நிறைவேற்று அல்லாப் பணிப்பாளர்களை மீள நியமிப்பது சபையின் தொழிற்பாட்டிற்கு அவர்கள் வழங்கிய பங்களிப்பினை மதிப்பீடு செய்வதன் அடிப்படையில் இருத்தல் வேண்டும். சபை/ குழுக் கூட்டங்களில் குறைந்தது 50% மான கூட்டங்களில் பங்குபற்றாத நிறைவேற்றல்லாப் பணிப்பாளர்கள் பொதுவாக சபைக்கு/ குழுவிற்கு மீள நியமிக்கப்படக்கூடாது.

**<u>கோட்பாடு - 2</u>**

**பணிப்பாளர்களின் தகைமை**

சபையின் உறுப்பினர்கள் பங்குடமையாளர்களினாலும் பொதுமக்களினாலும் பரந்தளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட இயலாற்றல்களைக் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும். அவர்கள், நிதியியல் நிறுவனங்கள் அவற்றின் குறிக்கோள்களை எய்துவதற்காக பயனுள்ள பங்களிப்பினை வழங்கக்கூடிய அனுபவத்தினையும், அறிவினையும் நிபுணத்துவத்தினையும் நல்ல தீர்மானம் எடுக்கும் தன்மையினையும் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும். பணிப்பாளர்கள் கம்பனி ஆளுகையில் தமது பங்கினைத் தெளிவாக விளங்கிக் கொண்டவர்களாக இருக்க வேண்டியதுடன் முகாமைத்துவம் அல்லது வெளியிலிருந்தான நியாயமற்ற செல்வாக்கிற்கு உட்பட்டவர்களாக இருக்கக்கூடாது.

***வழிகாட்டல் 2.1***

நிதியியல்துறை நிறுவனமொன்றின் பணிப்பாளராக/ ஆள் ஒருவர் பதவி வகிப்பதற்கு "தகுதியும் பொருத்தமுமான ஆள்" ஆக இருந்தாலொழிய அத்தகைய நிறுவனத்தின் பணிப்பாளராக நியமிக்கப்படவோ, தெரிவு செய்யப்படவோ அல்லது முன் மொழியப்படவோ அல்லது பணிப்பாளராகத் தொடரவோ கூடாது.

**தகுதியும் பொருத்தமுமான ஆள் என்பதற்கான சோதனை**

ஆள் ஒருவர் தகுதியும் பொருத்தமுமான ஆள் என்பதனைத் தீர்மானிப்பதற்கு பின்வரும் விடயங்களில் ஏதாவது ஒன்றையோ அல்லது அதற்கு கூடுதலானவற்றையோ கொண்டிருத்தல் வேண்டும்.

- நாணயமான ஆள்
- பணிப்பாளர் கடமையின் பொறுப்புக்கள் நிறைவேற்றுகின்ற சிரத்தையும் ஊக்கமும் கொண்ட ஆள்
- நிதியியல் துறையின் வைப்பாளர்கள் அல்லது கடன் வழங்கியோரின் நலவுரித்துக்களை அல்லது உள்ளார்ந்த வளமுள்ள வைப்பாளர்கள் அல்லது கடன் வழங்கியோரின் நலவுரித்துக்கள் பணிப்பாளராக பதவி வகிக்கும் ஆளினால் ஏதாவது பயமுறுத்தலுக்குள்பட்டிருக்குமிடத்து அல்லது அவ்வாறு தோன்றுமிடத்து
- வியாபாரத்திலும், நிதியியல் விடயங்களிலும் ஆளின் முன்னைய நடத்தையும் நடவடிக்கைகளும்
- கல்விசார் தகைமைகள் அத்துடன்/ அல்லது, தொழில்சார் தகைமைகள் அத்துடன் அல்லது விதந்துரைக்கப்பட்ட துறைகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவற்றில் சிறந்த அனுபவம்.

***கோட்பாடு - 3***

**பணிப்பாளரின் நியமனமும் கடமைகளும்**

***வழிகாட்டல் 3.1***

பணிப்பாளர் பதவிக்கு ஆள் ஒருவரை முன்மொழிவதற்குக் குறைந்தது தலைவர், முதன்மை நிறைவேற்று அலுவலர் மற்றும் இரு பணிப்பாளர்களை உள்ளடக்கிய முறைசார்ந்த நியமனக் குழுவொன்று இருத்தல் வேண்டும். ஆளொருவரை விதந்துரைக்கும் குழு, சபையானது பின்வரும் அனுபவங்களையும் தேர்ச்சிகளையும் பெரும்பாலும் கொண்ட கலப்பான ஆட்களை உள்ளடக்கியிருப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

(அ) வங்கித்தொழில், நிதி, கணக்கீடு, சட்டம் அல்லது வியாபாரக் கணக்கீட்டில் பூரணமான அறிவு

(ஆ) வங்கித் தொழில் மற்றும் நிதியியல் கைத்தொழிலில் மூத்த மட்டத்திலான அனுபவம்

(இ) மனித மூலவள முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்பத் தேர்ச்சி அல்லது சந்தைப்படுத்தல் தேர்ச்சியில் அனுபவம்.

***வழிகாட்டல் 3.2***

மற்றைய பங்காளர்களின் கோரிக்கைகளைப் பொறுத்தவரையில் அவற்றிற்குப் பின்வரும் விதத்தில் மதிப்பளிப்பதன் மூலம் நிதியியல் நிறுவனங்களினதும் அதன் பங்குடைமையாளர்களினதும் சிறந்த நலவுரித்துக்களை முக்கியமாகக்கொண்டு கடமைபுரிய வேண்டியது பணிப்பாளர் ஒருவரின் கடமையாகும்.

(அ) நியதி மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்கு இணங்கி ஒழுகுவதன் மூலமும் அத்தகைய நிறுவனங்களுக்கான பற்றுறுதியுடனும்

(ஆ) சுதந்திரமான தீர்ப்பு.

(இ) நலவுரித்து தொடர்பான முரண்பாடுகள் தோன்றும் சந்தர்ப்பத்தில் நிறுவனத்தின் நலவுரித்தினை உறுதிப்படுத்தல்.

(ஈ) வேறுபட்ட பங்காளர்களுடனான நடவடிக்கைகளின்போது நியாயமான தன்மையினை உறுதிப்படுத்தல்.

(உ) கவனிப்பு, தேர்ச்சி, சிரத்தை மற்றும் தொழில்சார் நிபுணத்துவத்தினைப் பயன்படுத்தல்.

**<u>கோட்பாடு - 4</u>**

**தலைவர் மற்றும் முதன்மை நிறைவேற்று அலுவலர்**

ஒவ்வொரு நிதியியல் நிறுவனத்திலும் இரு முக்கிய பணிகள் காணப்படுகின்றன. அவையாவன.

(அ) சபையின் தொழிற்பாடுகளை மேற்கொள்வதற்கான தலைவரின் பொறுப்பு; அத்துடன்

(ஆ) நிதியியல் நிறுவனத்தின் வியாபாரத்தினைக் கொண்டு நடத்துவதற்கான முதன்மை நிறைவேற்று அலுவலரின் பொறுப்பு

*வழிகாட்டல் - 4.1*

நிதியியல் நிறுவனத்தின் தலைமைத்துவத்தில் தலைவருக்கும் முதன்மை நிறைவேற்று அலுவலருக்குமிடையிலான பொறுப்பாண்மைகளில் தெளிவானதொரு பிரிவு இருத்தல் வேண்டும். அது அதிகார சம நிலையையும் அதிகாரத்தையும் உறுதிப்படுத்தும்; அதன் மூலம் தனிப்பட்ட எவரும் தீர்மானம் செய்யும் அதிகாரத்தினைக் கொண்டிருக்கமாட்டார்கள்.

*வழிகாட்டல் - 4.2*

சபையில் வலுவானதும் சுதந்திரமான, நிறைவேற்று அல்லா மூலமொன்று இருத்தல் வேண்டும்.

**<u>கோட்பாடு -</u> 5**

**தலைவரின் பங்கு**

சிறந்த கம்பனி ஆளுகையை அடைந்து கொள்வதில் நிதியியல் நிறுவனமொன்றின் தலைவரது பங்களிப்பு மிக இன்றியமையாததாகும். கட்டளைகளை நிலைநிறுத்துவது, சரியான முறையில் கூட்டங்கள் நடத்தப்படுவதனை உறுதிப்படுத்தல், கலந்துரையாடப்பட்டுவரும் விடயங்கள் பற்றி கூட்டத்தின் கருத்து அல்லது தீர்மானம் பற்றி ஆராய்ந்தறித்தல் என்பன தலைவரின் பங்காக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

*வழிகாட்டல் - 5.1*

சிறந்த கம்பனி ஆளுகை காணப்படும் சூழலொன்றில், அனைத்துப் பணிப்பாளர்கள், நிறைவேற்று மற்றும் நிறைவேற்று அல்லாப் பணிப்பாளர்களை நிதியியல் நிறுவனத்திற்கு உச்ச நன்மைகளை ஈட்டிக் கொடுக்கும் பொருட்டு அவர்கள் தொடர்பான இயலாற்றலுக்குட்பட்ட விதத்தில் பயன்மிக்க முறையில் தொழிலாற்றுவதனை ஒரேவிதத்தில் ஊக்குவிப்பதற்கு தலைவர் உறுதிப்படுத்தவேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

*வழிகாட்டல் - 5.2*

நிதியியல் நிறுவனத்தின் நாளாந்த தொழிற்பாடுகளில் தலைவர் ஈடுபடாதிருப்பது விரும்பத்தக்கதாயினும், சபை நிறுவனத்தின் அலுவல்களை பூரணமான கட்டுப்பாட்டினுள்ள கொண்டிருப்பதையும் பங்காளர்களுக்கான கடப்பாடுகள் விடயத்தில் மிக உசாராக இருப்பதையும் உறுதிப்படுத்தும் வகையில் தொழிலாற்ற வேண்டும்.

*வழிகாட்டல் - 5.3*

தலைவரின் அந்தஸ்து முதன்மை நிறைவேற்றுப் பணிப்பாளரிலிருந்து பிரிக்கப்பட்டிருக்க வேண்டும். இது தனியொருவர் அதிகாரம் செலுத்துவதனை முக்கியமாகத் தவிர்க்கும்.

*வழிகாட்டல் - 5.4*

தலைவர் சபைக் கூட்டங்களை சரியான முறையில் நடத்தவேண்டியதுடன், மற்றைய விடயங்களுடன், பின்வரும் விடயங்களையும் உறுதிப்படுத்தவேண்டும்.

- அனைத்துப் பணிப்பாளர்களும் காத்திரமான முறையில் பங்கேற்பதனை
- அனைத்துப் பணிப்பாளர்களையும், அவர்கள் தொடர்பான இயலாற்றலுக்கேற்ப நிதியியல் நிறுவனத்தின் நன்மைக்காக, பயன்மிக்க பங்களிப்பினை வழங்குவதற்கு அனைத்துப் பணிப்பாளர்களையும் ஊக்குவிப்பது.
- சபையில் அதிகார சமநிலை பேணுவது,
- பரிசீலனையின் கீழ் உள்ள விடயங்கள் பற்றிய பணிப்பாளர்களின் கருத்துக்களை அல்லது தீர்மானங்களை உறுதிப்படுத்துதல்.
- நிதியியல் நிறுவனத்தின் அலுவல்களில் சபை பூரணமான கட்டுப்பாட்டினைக் கொண்டிருப்பதுடன் பங்குடமையாளர்களுக்கான அதன் கடப்பாடுகள் பற்றியும் உசார்படுத்துதல்;
- சபை உறுப்பினர் ஒவ்வொருவரும் கலந்துரையாடப்பட்டுவரும் விடயங்களின் முக்கியத்துவத்தினையும் தொழில்நுட்ப அம்சங்களையும் விளங்கிக் கொள்வது.

**கோட்பாடு - 6**

**முதன்மை நிறைவேற்று அலுவலரினதும் மூத்த முகாமைத்துவத்தினதும் பங்கு**

சபையானது முதன்மை நிறைவேற்று அலவலரின்மீது முழுமையான நம்பிக்கையை வைத்திருத்தல் வேண்டும். போதுமானளவு அமைப்பு முறைகளையும் கட்டுப்பாடுகளையும் நிறுவி அவற்றினைப் பேணிவருவதே முதன்மை நிறைவேற்று அலுவலரினதும் மூத்த முகாமைத்துவத்தினதும் பங்காகவுள்ளது.

முதன்மை நிறைவேற்று அலுவலர் சபையின் கொள்கைகள் பயன்தரு முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதற்கும் சபையினால் எடுக்கப்பட்ட கூட்டுத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் பொறுப்புக் கூறவேண்டியிருந்தவேளையில், நிதியியல் நிறுவனத்தின் செயற்பாட்டிற்கு வகை கூறவேண்டிய பொறுப்பு சபையைச் சார்ந்ததாக இருந்தது.

***வழிகாட்டல் - 6.1***

முதன்மை நிறைவேற்று அலுவலரின் தொழிற்பாடுகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருந்தது.

- நிதியியல்துறை நிறுவனங்களுக்கு உத்தி வாய்ந்த நெறிமுறைகளை விதந்துரைத்தல்.
- இலக்குகளையும், குறிக்கோள்களையும் எய்துவதில் தலைமை வகித்தல்
- சபையின் ஒப்புதல்களுக்காக தொழிற்பாட்டுத் திட்டங்களையும், வரவு செலவுத் திட்டத்தினையும் விருத்தி செய்தல்.
- இலக்குகள் அடையப்படுவதையும் சொத்துக்கள் பாதுகாக்கப்படுவதனையும் உறுதிப்படுத்தும் விதத்தில் கம்பனியின் நடவடிக்கைகளையும் கண்காணித்தல்.
- பொதுமக்கள் தொடர்பு (சமூகப் பொறுப்பாண்மை)
- தொழிற்பாட்டு விடயங்கள் பற்றி தலைவருக்கும் சபைக்கும் அறிவித்தல்
- நேரம் பிந்தாததும் தகவல்களை பொருத்தமான சபைக்கு வழங்குவதும் தேவைப்படும்போது முகாமைத்துவத்துடன் தொடர்பை ஏற்படுத்தல்.

***வழிகாட்டல் - 6.2***

சபையினால் வழிநடத்தப்பட்டு ஒப்புதலளிக்கப்பட்ட உத்திகளை வடியமைத்து நடைமுறைப்படுத்துவது பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாட்டு கொள்கைகளை ஏற்படுத்துதல்; உள்ளகக் கட்டுப்பாட்டு முறையின் பயனுறு தன்மையினைக் கண்காணித்தல், மற்றும் நிதியியல் நிறுவனத்தின் செயலாற்றத்திற்கு வகைகூறல் என்பனவற்றிற்கான பொறுப்பினை மூத்த முகாமைத்துவம் கொண்டிருத்தல் வேண்டும்.

***வழிகாட்டல் - 6.3***

நிதியியல் நிறுவனத்தின் குறிக்கோள்கள் அடையப்படுவதனை மோசமான முறையில் பாதிக்கக்கூடிய உள் மற்றும் வெளிக் காரணிகளை அடையாளங்கண்டு மதிப்பீடு செய்வதனை மூத்த முகாமைத்துவம் உறுதிப்படுத்த வேண்டும். இம்மதிப்பீடு அத்தகைய நிறுவனம் எதிர்நோக்கக்கூடிய அனைத்து இடர் நேர்வுகளையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

***வழிகாட்டல் - 6.4***

நிதியியல் நிறுவனத்தின் உத்திகள் குறிக்கோள்களை எய்துவதனைப் பாதிக்கின்ற இடர் நேர்வுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்பட்டு வருவதனை மூத்த முகாமைத்துவம் உறுதிப்படுத்ததல் வேண்டும். புதிய அல்லது முன்னரே இருந்து கட்டுப்படுத்தப்படாத எந்தவொரு இடர் நேர்வுகளையும் பொருத்தமான முறையில் கட்டுப்படுத்துவதற்கு உள்ளடக்கக் கட்டுப்பாடுகளில் திருத்தம் செய்யவேண்டிய தேவையும் ஏற்படலாம்.

**கோட்பாடு - 7**

**கம்பனிச் செயலாளரின் பங்கு**

கம்பனியின் செயலாளருக்காக 1982ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தினால் விதித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய தகைமைகளைக் கொண்ட ஆளொருவரே நிதியியல் நிறுவனமொன்றின் செயலாளராக (இதனகத்துப் பின்னர் கம்பனிச் செயலாளர் எனக் குறிப்பிடப்படும்) இருத்தல் வேண்டும்.

*வழிகாட்டல் - 7.1*

சபையின் நடைமுறைகள் பின்பற்றப்படுவதனையும், பொருந்தத்தக்க சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகள் என்பனவற்றிற்கு இணங்கி ஒழுகுவதனைக் கவனிப்பதனையும் பொறுப்பாகக் கொண்ட கம்பனிச் செயலாளரின் மதியுரையையும், பணிகளையும் பெற்றுக் கொள்வதற்கான வசதிகளை அனைத்துப் பணிப்பாளர்களும் கொண்டிருத்தல் வேண்டும்.

*வழிகாட்டல் - 7.2*

கம்பனிச் செயலாளர் ஒருவர் தலைவரின் மேற்பார்வையின் கீழ் கூட்டங்களின் நிகழ்ச்சி நிரல்களைத் தயாரிப்பதற்கும் அக்கூட்டங்களின் சரியான அறிக்கைகளைப் பேணுவதற்கும் பொறுப்பாக இருப்பார்.

*வழிகாட்டல் - 7.3*

கம்பனிச் செயலாளரை நியமிப்பதாயினும் பதவியிலிருந்து நீக்குவதாயினும் முழுச் சபைக்குமுரிய விடயமாக இருத்தல் வேண்டும்.

**<u>கோட்பாடு -</u> 8**

**பணிப்பாளரின் பயிற்சி/ பழக்குவித்தல்**

ஒவ்வொரு பணிப்பாளரும் அவர் முதன் முதலாக பணிப்பாளராக நியமிக்கப்படும் வேளையிலும் அதன் பின்னர் அவசியமெனக் கண்டவிடத்தும் நிதியியல் நிறுவனத்தின் வியாபாரம் பற்றி பொருத்தமான பயிற்சியினை/ பழக்குவிப்பினை பெற்றுக்கொள்ள வேண்டும். பயிற்சி /பழக்குவிப்புத்துறையானது பணிப்பாளர் பதவியின் பொதுவான வாய்ப்புக்கள் மற்றும் நிறுவனத்திற்கு குறித்துரைக்கப்பட்ட விடயங்களையும் உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும்.

*வழிகாட்டல் - 8.1*

பணிப்பாளர் ஒருவர் அவர் நிபுணத்துவம் பெற்ற துறையினைவிட வேறு ஒரு துறையில் அடிப்படை அறிவினைக் கொண்டிருப்பது, சிறந்த தீர்மானங்களை அவர் எடுப்பதற்கு உதவுமாகையால் இது எப்பொழுதும் நிதியியல் நிறுவனங்களுக்கு நன்மை பயப்பதாகவே இருக்கும்.

*வழிகாட்டல் - 8.2*

அனைத்துப் பணிப்பாளர்களும் பொருத்தமான ஆய்வரங்குகள், மாநாடுகளில் குறிப்பாக நிதியியல் முகாமைத்துவம், இடர்நேர்வு முகாமைத்துவம் தொழில் முயற்சி , முகாமை மற்றும், கம்பனி திட்டமிடல் போன்றவற்றில் கலந்து கொள்வதன் மூலம் அவர்களின் அறிவினை நாளதுவரை பூரணமாக்கிக் கொள்ள வேண்டும்.

**<u>கோட்பாடு-</u> 9**

**சபைகளுக்கான குழு அமைப்பு**

சபையின் பயனுறுதன்மை அதன் அமைப்பிலும் நடைமுறைகளிலுமே தங்கியுள்ளது. பின்வருவனவற்றை ஒத்த குழுக்களை நியமிக்குமாறு இது கேட்டுக் கொள்ளப்படும்.

அ) கணக்காய்வுக் குழு

உள்ளகக் கணக்காய்வு, கணக்காய்வுக் குழுவின் தலைவருக்கு அறிக்கையிடும். கணக்காய்வுக் குழுவின் தலைவர் பொறுப்பாக இருந்து பலயீனங்களைக் கட்டுப்படுத்துவதற்கும் பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதுடன் சபையின் தகவலுக்காக அறிக்கையையும் அனுப்புவார்.

கணக்காய்வுக் குழுவின் தலைவர் பெரும்பாலும் கணக்கியலில் பொருத்தமான தகைமையினை அல்லது கணக்கீட்டில் அல்லது கணக்காய்வு அறிவினையும் அனுபவத்தினையும் கொண்ட ஒருவராக இருத்தல் வேண்டும். கணக்காய்வுக்குழுவின் உறுப்பினர்கள் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பொறுப்புக்களைக் கொண்ட ஒருவராக இருக்கக் கூடாது.

ஆ) இடர் நேர்வு முகாமைத்துவக் குழு

இ) வருமானமீட்டும் குழு

ஈ) நியமனக்குழு

உ) நிறைவேற்றுக் குழு

ஊ) முகாமைத்துவக் குழு

எ) இழப்பீட்டுக் குழு

ஏ) பங்குடமையாளர் தொடர்பூட்டுக் குழு

***வழிகாட்டல் - 9.1***

ஒவ்வொரு குழுவினதும் தொழிற்பாட்டிற்கான தொடர்பான நியமங்களையும் தொழிற்பாட்டு நடைமுறைகளையும் சபை குறித்துரைத்தல் வேண்டும்.

***வழிகாட்டல் - 9.2***

நிதியியல் நிறுவனத்தின் மூன்று நிறைவேற்று அல்லாப் பணிப்பாளர்களையும் நிறுவனத்தின் தலைவர்/முதன்மை நிறைவேற்று அலுவலரையும் உள்ளடக்கிய நிறைவேற்றுக் குழு பின்வருவன போன்ற முக்கிய விடயங்களை ஆராய்வதற்காக மாதமிருமுறை கூடும்;

- முக்கியமான கடன் ஒப்புதல்கள்
- படுகடன் மீளமைப்புக்கள்
- இடர்நேர்வு முகாமைத்துவம்
- ஊழியர் கொள்கை மற்றும் ஏனைய கொள்கை விடயங்கள்

நிறைவேற்றுக் குழு முகாமையுடன் மிக நெருக்கமாகத் தொழிற்பட்டு அதிகார கட்டமைப்பிற்கும் சபையினால் குழுவிற்கு ஒப்படைக்கப்பட்ட பொறுப்புக்களுக்குமுட்பட்ட விதத்திலும் சபையின் சார்பில் தீர்மானங்களை மேற்கொள்ளும்.

***வழிகாட்டல் - 9.3***

- நிதியியல் நிறுவனமானது, முகாமைத்துவத்தின் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்காக முதன்மை நிறைவேற்று அலுவலரைத் தலைவராகக் கொண்டு முகாமையாளர் மட்டத்திற்கும் உயர்வான அலுவலர் உறுப்பினர்களை உள்ளடக்கிய முகாமைக் குழுவொன்றினைக் கட்டாயமாக நியமித்தல் வேண்டும். முகாமைத்துவக் குழுவின் முக்கியமான பொறுப்புக்கள் பின்வருவனவாக இருக்கும்.
- நிறுவனத்தின் தொலைநோக்கு, அதன் இலக்கு மற்றும் குறிக்கோள்கள் தொடர்பாக அலுவலர்களுக்கு தெளிவான செய்தியொன்றினை வழங்குவதன் மூலம் அலுவலர்கள் அனைவரும் அத்தகைய நிறுவனங்களின் நீண்டகால வெற்றிக்கும் உறுதியான செயலாற்றத்திற்கும் பங்களிப்பின் மூலமாக இதே குறிக்கோள்களை நோக்கிப் பணிபுரியக் கூடியதாயிருப்பதற்கு;
- சிறந்த கம்பனி ஆளுகை நடைமுறைகளை அபிவிருத்தி செய்வதற்கு,
- காலத்திற்குக் காலம் நவீன தொழினுட்ப அறிவு கொண்ட இளம் அலுவலர்களை நியமிப்பதற்கும் கம்பனியின் நன்மதிப்பினை கூட்டக்கூடிய தகுதியும் பயனுறுதியும் கொண்ட ஆளொருவரை நியமிப்பதற்குமான பொருத்தமான வெற்றித்திட்டம்.

<u>**கோட்பாடு - 10**</u>

**வெளிப்படையான தன்மை**

நிதியியல் துறையில் பயனுறுதியுள்ள கம்பனி ஆளுகையை மேம்படுத்துகின்ற இன்றியமையாத காரணியொன்றாக உள்ளது யாதெனில் நிதியியல் நிறுவனங்களுக்குத் தேவையான வலுவான நிதியில் வெளிப்படுத்துகைகளை அபிவிருத்தி செய்து நடைமுறைப்படுத்துவதேயாகும். அத்தகைய வெளிப்படுத்தல்கள் இடர்நேர் வளைவுகளில் சிறந்த முகாமைத்துவத்தையும் சந்தை ஒழுக்காற்றில் சிறந்த உறுதிப்பாட்டையும் தோற்றுவிக்கும். இது நிதியியல் நிறுவனங்களிடையே காணப்படும் பலத்தையும், பலயீனத்தையும் அடையாளங்கண்டு கொள்வதற்குத் தேவையான போதுமான தகவல்களை பங்குடமையாளர்களுக்கும், பங்காளர்களுக்கும் வழங்குகின்றது.

***வழிகாட்டல் - 10.1***

உயர்ந்ததர கணக்கீட்டு நியமங்களையும் நடைமுறைகளையும் அடித்தளமாகக் கொண்ட வெளிப்படுத்தல் தேவைப்பாடுகளின் பயனுறு தொகுதி இருத்தல் வேண்டும். இந் நியமனங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

***வழிகாட்டல் - 10.2***

வெளியகக் கணக்காய்வுகள் முழுமையான சுதந்திரம் கொண்ட கணக்காய்வாளரொருவரினால் நடாத்தப்பட வேண்டும். அதன் வாடிக்கையாளக்களுடனான எவருடைய வியாபாரத் தொடர்புகளும் கணக்காய்வாளர்களுடைய குறிக்கோள் மற்றும் சுதந்திரத்தினை விட்டுக் கொடுப்பதாக இருக்கக்கூடாது.

***வழிகாட்டல் - 10.3***

நிதியியல் வெளிப்படுத்துகைகள், பொருத்தமான தகைமைபெற்ற தரமுடைய நிறுவனமொன்றினால் பிர கடனப்படத்தப்பட்ட கணக்காய்வு வழிகாட்டல் தொகுதியினை அடிப்படையாகக் கொண்ட வலுவான வெளிக் கணக்காய்வுத் தேவைப்பாடுகளுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.

***வழிகாட்டல்– 10.4***

நிதியியல் தகவல்களின் வெளிப்படுத்தல்கள் நியாயமான ஒரு கால இடைவெளியில் மேற்கொள்ளப்படுமாயின் அவை மிகப்பயனுள்ளவையாக அமையும். உ.ம். அரையாண்டு அல்லது காலாண்டு

***வழிகாட்டல் - 10.5***

நிதியியல் வெளிப்படுத்துகையும், இடர்நேர்வு விளைவுகளுடன் தொடர்பான வங்கியினால் வழங்கப்பட்ட தகவல்களும் வங்கியுடனும் திரட்டப்பட்ட குழுவுடனும் தொடர்பானதாக இருத்தல் வேண்டும். சில விடயங்களைப் பொறுத்தவரை யில் உடமைக் கம்பனிகளின் வெளிப்படுத்துகைகளும் அவசியமானவையாக இருக்கும்.

***வழிகாட்டல் - 10.6***

பின்வருவன உள்ளிட்டவற்றை வெளிப்படுத்துவது விரும்பத்தக்கதாகும்;

- மூலதனத்தின்வகை மற்றும் மத்திய வங்கியினல் நெறிப்படுத்தப்பட்டவாறு, அளவீட்டு கட்டமைப்பின்படி பாசல் மூலமான உடன்படிக்கையை சாத்தியமானளவிற்குப் பயன்படுத்தி கொடுகடன் காப்பின்மைக்கான மூலதனத்தின் சதவீதம்.
- அங்கீகரிக்கப்பட்ட கொடுகடன் தரமிடல், இத்தரமிடலுக்கு அண்மையில் செய்யப்பட்ட மாற்றங்களும்; தாய் நிறுவனத்தின் கொடுகடன் தரமிடலை வெளிப்படுத்துமாறு கேட்கும் சந்தர்ப்பங்களிலும், அதன் தரமிடலுக்கு அண்மையில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ள விதத்திலும் இது பொருத்தமானதாக இருக்கக்கூடும்.
- ஐந்தொகை, வருமானக்கூற்று மற்றும் ஐந்தொகைக்கு வெளியேயான கடப்பாடுகள் என்பன மீதான அனைத்தையுமுள்ளடக்கிய விபரமான தகவல்கள்
- தனிப்பட்ட இணைக்கட்சியினர் அல்லது நிறுவனத்தின் மூலதனத்துடன் தொடர்பான இணைந்த இணைக் கட்சித் தொகுதியினருக்கு வெளிப்படுத்தும் நியதிகள் குவிந்த வெளிப்படுத்துகைகள்
- குறிப்பிட்ட பொருளாதாரத்துறைகள் அல்லது கைத்தொழில்களுக்கான மிகையான வெளிப்படுத்துகைகள்
- செயற்படாத் தொகை மற்றும் மீளமைக்கப்பட்ட கடன்கள் மற்றும் அத்தகைய கடன்கள் தொடர்பாக குறித்துரைக்கப்பட்ட ஒதுக்கங்களின் மட்டம் என்பன உட்பட சொத்துத்தரத்தின் மீதான வருமான தகவல்கள்; சொத்துத்தரங்கள் அறிக்கையிடப்பட்டிருப்பதுடன் ஒதுக்கங்கள் தீர்மானிக்கப்பட்டுள்ளன என்ற அடிப்படையின் மீது வெளிப்படுத்துகைத் தேவைப்பாடுகள் விரும்பத்தக்க வழிகாட்டல்களை வழங்க வேண்டியிருத்தல்;
- பாசல் குழுவின் சந்தைஇடர்நேர்வு கணிப்பியல் முறையை அல்லது மாற்று நம்பகத் தன்மையினை விரும்பத்தக்க முறையில் பயன்பெற்ற சந்தைஇடர்நேர்வு மீதான தகவல்கள் (அதாவது வட்டிவீத இடர்நேர்வு, செலாவணி வீத இடர்நேர்வு, மற்றும் பங்கு இடர்நேர்வு)
- கட்சியினரின் வெளிப்படுத்துகைகளுடன் தொடர்பான தகவல்கள்

- வியாபார நடவடிக்கைகளுக்கு நிறுவனங்களினால் வழங்கப்பட்ட நிதியிடல் தொடர்பான விபரங்கள், நிதி முகாமைத்துவ நடவடிக்கைகளுக்கும் நிறுவனத்தின் மைய வியாபாரங்களுக்கிடையிலான தொடர்புகளை மட்டுப்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட அமைப்புக்கள் என்பன உட்பட நிறுவனங்களின் நிதி முகாமைத்துவம், பிணைய நடவடிக்கைகள் மற்றும் பிணைப் பத்திரங்களைப் பொறுப்பாகக் கொண்ட வியாபாரங்கள் போன்ற விடயங்கள் மீதான தகவல்கள்.
- நிறுவனமொன்றின் உள்ளக கட்டுப்பாட்டு முறைகள், உள்ளகக் கணக்காய்வு ஒழுங்கு முறைகள் மற்றும் அதன் இடர்நேர்வு முகாமைத்துவ முறைகளின் போதுமைத் தன்மை மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றின் ஆய்விற்காகக் கொண்டிருக்கும் ஏனைய எந்த ஒரு ஒழுங்கும் உட்பட,
- நிறுவனம் அதன் வியாபார இடர் நேர்வுகளை முகாமைப்படுத்துவதற்காகக் கொண்டுள்ள தகவல்கள்;
- பணிப்பாளர்களினதும் மூத்த முகாமையினதும் பெயர்கள், தகைமைகள் மற்றும் அனுபவங்களை வெளிப்படுத்தல்.
- அவர்களது வாடிக்கையாளர்களின் தகவல்களுக்காக சிறந்தநடைமுறைச் சட்டக்கோவையை வெளியிடல்; இதன் கருத்து யாதெனில் நிறுவனம் உள்ளகச் சட்டக் கோவையைக் கொண்டிருக்க வேண்டும் என்பதேயாகும்.
- முறைப்பாடுகளைக் கையாள்வதற்கான நிறுவன முறையிலான வெளியீடு

**வழிகாட்டல் - 10.7**

நிதியியல்துறை நிறுவனங்கள் பின்வருவனவற்றை கிரமமாக வெளியிடுமாறு கேட்டுக் கொள்ளமுடியும்.

- தனிப்பட்ட பணிப்பாளர்களோ அல்லது மூத்த முகாமையாளரோ கொண்டிருக்கக்கூடிய முரண்பாடுகொண்ட நலவுரித்துக்களேதுமிருப்பின் அதன் தன்மை;
- பணிப்பாளர்கள் மற்றும் முகாமையாளர்களின் நலவுரித்துக்களின் முரண்பாடுகளைக் கையாள்வதற்கான சபையின் விதிகள்; அத்துடன்
- நிதியியல் நிறுவனங்களின் இடர்நேர்வுகள் எல்லா நேரங்களிலும் போதுமானளவில் அடையாளங் காணப்பட்டுள்ளமையைப் பற்றியும் கண்காணிக்கப்பட்டுள்ளமை பற்றியும், கட்டுப்படுத்தப்பட்டுள்ளமை பற்றியும் ஒவ்வொரு பணிப்பாளர்களும் திருப்திப்பட்டுள்ளார்களா என்பதுபற்றி அவர்கள் சான்றுரைத்துக் கையெழுத்திடல்.

**வழிகாட்டல் - 10.8**

பெயர் மற்றும் குறித்துரைக்கப்பட்ட பதவியின் மூலம் அடையாளங் காணப்படக்கூடிய அலுவலரொருவர், வெளிப்படுத்தல் தேவைப்பாடுகளுடன் கூடிய இணக்கங்களைக் கண்காணிப்பதற்கும் பொருத்தமான இடத்தில் இணக்கங்களை நடைமுறைப்படுத்துவதற்கான அதிகாரங்களுடனும் பதவியிலிருக்கலாம். அதிகாரம் சிறந்தவெளிப்படையான தன்மை மற்றும் பொதுப்பணிக்கும் அமைப்புக்கள் என்பனவற்றிற்குட்பட்டிருக்க வேண்டும்.

**கோட்பாடு 10 இற்கான பின்னிணைப்பு**

**வெளிக் கணக்காய்வாளரின் பங்கும் பொறுப்புக்களும்**

வரைவிலக்கணத்தின்படி, வங்கித்தொழில் அமைப்பொன்றின் ஒரு பகுதியாக அதன் காரணமாக உள்ளகக் கட்டுப்பாட்டு முறையின் ஒரு பகுதியாகவும் வெளிக் கணக்காய்வாளர்கள் இல்லாதபோதும், முகாமையுடனான கலந்துரையாடல்கள் உள்ளகக் கட்டுப்பாடுகளை முன்னேற்றுவதற்கான விதந்துரைப்புக்கள் என்பன உட்பட, அவர்களது கணக்காய்வு நடவடிக்கைகள் ஊடாக உள்ளகக் கட்டுப்பாடுகளின் மீது முக்கியமான தாக்கமொன்றினை அவாகள் கொண்டிருக்கின்றார்கள். வெளிக் கணக்காய்வாளர்கள், உள்ளகக் கட்டுப்பாட்டு முறையின் பயனுறு தன்மைக்கு முக்கியமான திருத்தங்களை வழங்குகின்றனர்.

வெளிக் கணக்காய்வுத் தொழிற்பாட்டின் முதன்மை நோக்கம் நிதியியல் நிறுவனத்தின் ஆண்டுக் கணக்குகள் மீதான கருத்தினை வழங்குவது அல்லது உறுதிப்படுத்துவதாக இருக்கின்ற அவ்வேளையில் வெளிக் கணக்காய்வாளர் நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறையின் பயனுறு தன்மையின்மீது தங்கியிருப்பதா என்பதனை தெரிவு செய்து கொள்ள வேண்டும்.

வெளிக் கணக்காய்வாளர்கள், அவர்களது சொந்தக் கணக்காய்வு நடைமுறைகளின் தன்மை, நேரமிடல் மற்றும் வாய்ப்பு என்பனவற்றினைத் தீர்மானிப்பதில், முறையின்மீது எந்தளவிற்கு தங்கியிருக்கலாம் என்பதனை மதிப்பிடும் பொருட்டு அவர்கள் உள்ளகக் கட்டுப்பாட்டு முறையின் மதிப்பீடொன்றை நடத்த வேண்டியிருக்கும்.

நிதியியல் கூற்றுக்கள் தவறான கூற்றுக்களை கொண்டிருக்கவில்லை என்ற நியாயமான உத்தரவாதமொன்றினை பெற்றுக் கொள்வதற்காக கணக்காய்வுகள் திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன என்பதை கணக்காய்வு நியமங்கள் தேவைப்படுத்துகிறது. கணக்காய்வாளர்கள் பரீட்சார்த்த அடிப்படையில் முக்கிய கொடுக்கல் வாங்கல்களையும் நிதியியல் கூற்று நிலுவைகள் மற்றும் வெளிப்படுத்தல்களுக்கு ஆதாரமான பதிவேடுகளைப் பரீட்சித்தல் வேண்டும். கணக்காய்வாளர்கள் பயன்படுத்தப்பட்டுள்ள கணக்கீட்டுக் கோட்பாடுகளையும் முகாமைத்துவத்தினால் செய்யப்பட்ட முக்கிய மதிப்பீடுகளையும் மதிப்பிடுவதுடன் அனைத்து நிதியியல் கூற்று எடுத்துக்காட்டலையும் மதிப்பிடுகிறது.

மத்திய வங்கி, வங்கிகளுக்கான தனிப்பட்ட விண்ணப்பங்களுக்கான மேலதிக தேவைப்பாடுகளுடன் நியம கணக்காய்வுத் தேவைப்பாடுகளையும் பிற்சேர்க்கையாக இணைக்கும். புதுத் திருத்தங்கள் சிலசமயம் பின்வருவனவற்றை உள்ளடக்கக்கூடும்.

- கணக்காய்வாளர்களை மேற்பார்வை செய்யும் மேலாண்மைகளுக்கு அறிக்கையிடுமாறு அல்லது சமர்ப்பிக்குமாறு தேவைப்படுத்தப்படலாம்; அத்துடன்
- கணக்காய்வாளர் அவர்கள் கொண்டிருக்கக்கூடிய ஏதாவது கரிசனைகள் பற்றி மேற்பார்வை செய்யும் மேலாண்மையாளர்களுக்கு அறிக்கையளிக்கக் கடமைப்படுதலும் ஒரு தேவைப்பாடு
- கணக்காய்வாளர்களின் உத்தேசிக்கப்பட்டுள்ள மாற்றங்கள் அல்லது அவர்களின் பதவிதுறப்புக்கள் பற்றி மேலாண்மையாளர்களுக்கு அறிவிக்க வேண்டும் என்றதொரு தேவைப்பாடு

**<u>கோட்பாடு</u> - 11**

## இடர்நேர் முகாமைத்துவ முறை

அனைத்து அடிப்படை வியாபார இடர்நேர்வுகளை சிறந்தமுறையில் அடையாளம் காணல், கண்காணித்தல் மற்றும் முகாமைப்படுத்தல் என்பனவற்றை மேம்படுத்தும் கம்பனி ஆளுகை அமைப்பொன்று நிதியியல் நிறுவனங்களுக்கு தேவையாகும். இவ்வமைப்புக்கள் நன்கு அபிவிருத்தி செய்யப்படுவது. பரீட்சிக்கப்பட்டதுமான இடர்நேர்வு முகாமைத்துவ முறைகள் பின்வருவன உள்ளிட்ட உள்ளகக் கட்டுப்பாடுகளையும் உள்ளடக்கியிருக்கலாம்.

***வழிகாட்டல் - 111***

இடர்நேர்வு முகாமைத்துவதத்திற்குப் பொறுப்பான அலுவலர்களுக்கு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களையளிப்பதன் மூலம் அவர்கள் இடர்நேர்வுகள் பற்றிய விளக்கங்களை நன்முறையில் அவர்கள் அபிவிருத்தி செய்து கொள்ளமுடிவதுடன் இதன் மூலம் அவர்களால் அவற்றைக் கட்டுப்படுத்திக் கொள்ளவும் முடியும்.

***வழிகாட்டல் - 112***

பணிப்பாளர்களும் மூத்த முகாமையாளர்களும் நிறுவனங்களின் வியாபாரங்களின் தன்மை, இடர் நேர்வுகளின் தன்மை, இடர் நேர்வுகளை போதுமானளவிற்கு முகாமைப்படுத்தாததினால் ஏற்படும் விளைவுகள் மற்றும் இடர்நேர்வுகளை பயனுறுதிமிக்க முறையில் முகாமைப்படுத்துவதற்கான தொழில்நுணுக்கங்களைச் சரியாக மதிப்பீடு செய்தல் என்பனவற்றை வலுவான முறையில் விளங்கிக் கொள்வதற்கு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் அவர்களை இயலச் செய்கின்றன.

***வழிகாட்டல் - 113***

முதன்மை நிறைவேற்று அலுவலர் அல்லது பணிப்பாளர்களுக்கு பொருத்தமான அறிக்கையுடனும் சபையின் காணத்தவறியுடனுமான வலுவான உள்ளகக் கணக்காய்வு நடைமுறைகள்

***வழிகாட்டல் - 114***

வங்கியினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற இடர்நேர்வுகளின் தன்மை மற்றும் அளவு மற்றும் அனைத்து முகாமைத்தவ முறைகளும் உள்ளகக் கட்டுப்பாடுகளும் எல்லா நேரமும் சரியான முறையில் பிரயோகிக்கப்பட்டு

வருகின்றன என்பதுபற்றி சபைக்கு வழங்கப்படும் கிரமமான உத்தரவாதம் உட்பட, இவ்விடர் நேர்வுகளை கட்டுப்படுத்துவதற்காக இடம் பெறும் அமைப்புக்களும் பற்றி மூத்தமுகாமைக்கும் சபைக்கும் கிரமமாக அறிக்கையிட வேண்டுமெனத் தேவைப்படுத்தும் ஒரு அமைப்பு

***வழிகாட்டல் - 11.5***

பணிப்பாளர் அவரது அல்லது அவளது இயலாற்றலுக்கு ஏற்ப வங்கியின் அனைத்து அடிப்படை வியாபார இடர்நேர்வுகளை பயன்தருமுறையில் அடையாளங் காணப்பட்டு கண்காணிக்கப்பட்டு, முகாமைப்படுத்தப்பட்டு வருகின்றமையால் எல்லா நேரங்களிலும் பயனுறு தொழிற்பாடுகளை எய்தத்தக்க முறையொன்று காணப்படுவதனையும் இட்டு பணிப்பாளர் பூரணமாக திருப்தி கொண்டுள்ளார் என்பதனைக் குறிக்கும் வங்கியினால் வெளியிடப்பட்ட பொதுமக்களுக்கான வெளிப்படுத்துகைக் கூற்றில் ஒவ்வொரு பணிப்பாளர்களினதும் கையெழுத்திடப்பட்ட உறுதியுரை

***வழிகாட்டல் - 11.6***

நிறுவனத்தின் இடர்நேர் முகாமைத்துவமுறைகளையும் உள்ளகக் கட்டுப்பாடுகளையும் தேவைப்படுத்துகின்ற கொள்கையொன்று காலத்திற்குக் காலம் வெளி ஆய்வுகளுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டியதுடன் ஆய்வின் பெறுபேறுகள் சபைக்கு அறிவிக்கப்படவும் வேண்டும்.

***வழிகாட்டல் - 11.7***

பொதுவான இடர் நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பு வேலையின் ஒரு பகுதியாக இணக்கத் தொழிற்பாடுகளை நிறுவனங்கள் நோக்கியதுடன் இணக்கச் சான்றிதழ்களை மாதாந்த அடிப்படையில் சபைக்கு சமர்ப்பிப்பதும்.

***வழிகாட்டல்- 11.8***

நிறுவனங்கள், முன்மதியுடைய தேவைப்பாடுகள், வரிவிதிப்பு ஒழுங்கு விதிகள், பல்வேறுபட்ட அறிக்கையிடல் கடப்பாடுகள் போன்றவற்றை உள்ளிட்ட பெரும் எண்ணிக்கையான ஒழுங்கு முறைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்கு இணங்க வேண்டிய தேவை காணப்படுகிறது. ஆகவே அனைத்து நியதி மற்றும் ஒழுங்கு முறைப்படுத்தல் தேவைப்பாடுகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன என்பதனை உறுதிப்படுத்துவதற்கான முறைகளை உள்ளடக்குவதற்கும் முக்கியமான உள்ளார்ந்தவளம் அல்லது உண்மையான மீறல் ஏதும் இருப்பின் அது எப்பொழுது இடம்பெற்றது என்பதை அறிவதற்கும் கம்பனி ஆளுகை கட்டமைப்பிற்கான தேவையொன்று காணப்படுகின்றது.

***வழிகாட்டல் - 11.9***

நிறுவனங்கள் அவற்றின் சொந்தக் கம்பனி வாடிக்கையாளரிடையே சிறந்த ஆளுகையை மேம்படுத்துவதற்காக அவர்களின் செல்வாக்கையும் தார்மீக இணக்கப்பாட்டையும் பயன்படுத்தவதற்கான வாய்ப்புக்களை நிறுவனங்கள் பரிசீலிக்க வேண்டியதுடன், அதன் மூலம் அவற்றின் செலாற்றம் மேம்பாடடைவதுடன், அவர்களின் இடர்நேர்வும் குறைவடைகின்றது. இது நிறுவனங்கள் தாமாகவே இறுதியில் நன்மையடைந்து கொள்ளவும் பொருளாதாரம் விரிவடையவும் உதவும்.

***வழிகாட்டல் - 11.10***

தொழிற்பாட்டு இடர்நேர்வுகளைத் தவிர்ப்பதற்கு கடமைகளைத் தனித்தனியாகப் பிரிக்கும் தேவை காணப்படுகின்றது. சபையானது அங்கீகாரமளிக்கும்முறை, வரையறைகள் மற்றும் அதிகார ஒப்படைப்பு வரையறை இடர்நேர்வுகளின் துல்லியமான தன்மையினை உறுதிப்படுத்துவதற்கான இரட்டைக் கட்டுப்பாட்டு முறையையும் குறித்துரைக்கலாம்.

**<u>கோட்பாடு - 12</u>**

**முன்மதியுடைய ஒழுங்கு முறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை ஒழுங்குமுறைப்படுத்துவோருக்காக**

முன்மதியுடைய மேற்பார்வையானது, நிதியியல் துறையில் சிறந்த கம்பனி ஆளுகையையும் இடர்நேர்வு முகாமைத்துவ ஒழுங்குகளையும் பின்பற்றுவதனை ஊக்குவிப்பதில் முக்கிய பங்கொன்றினை வகிக்கின்றது. நிதியியல் முறையில் பயனுறு கம்பனி ஆளுகையை மேம்படுத்துகின்றதொரு பின்னணியில் மேற்பார்வை ஒழுங்குகளின் போதுமையை மதிப்பீடு செய்கையில் பின்வரும் பரிசீலனைகள் முக்கியமானவையாகவுள்ளன;

***வழிகாட்டல்கள் - 12.1***

பணிப்பாளர்களும் மூத்த முகாமைத்தவமும், அவர்களது நிறுவனம் பயனுறும் கம்பனி ஆளுகை ஒழுங்குகளையும் அனைத்துப் பருபொருள் வியாபார இடர்நேர்வுகளையும் முகாமைப்படுத்துவதற்கான முறைகளையும், அம்முறைகள் எல்லா நேரங்களிலும் பிரயோகப்படுத்தப்பட்டு வருகின்றது என்பதனையும்இட்டு அவர்கள் தாமாகவே திருப்தி கொள்கின்ற விதத்தில் அவர்கள் பொறுப்புக்களை ஏற்றுக் கொள்ளுவதற்கு ஊக்குவிக்கப்படல் வேண்டும். இடர்நேர் முகாமைத்துவ முறைகளின் பயனுறுதி வாய்ந்ததன்மை, உள்ளகக் கட்டுப்பாடுகள், உள்ளகக் கணக்காய்வு ஒழுங்குகள் மற்றும் அதனுடன் தொடர்பான விடயங்கள் என்பனவற்றை உறுதிப்படுத்துகின்ற கிரமமான கூற்றுக்களில் கையெழுத்திடுமாறு நிறுவனப் பணிப்பாளர்களையும் மூத்தமுகாமைகளையும் மேற்பார்வை மேலாண்மையாளர்கள் கேட்டுக் கொள்ளுவது இதனை ஊக்குவிக்க ஒரு வழியாக இருப்பதுடன், அத்தகைய உறுதிப்படுத்தல்கள் தவறான வழிக்கிட்டுச் செல்வதாக அல்லது தவறாக இருக்குமிடத்து அவர்கள் அதற்கான பொறுப்பினைக் கொண்டிருப்பர்.

***வழிகாட்டல்கள் - 12.2***

நிறுவனங்கள் அவற்றின் கம்பனி ஆளுகை ஒழுங்குகள் மற்றும் இடர்நேர் முகாமைத்துவ முறைகளைக் கொண்டிருக்குமாறு ஊக்குவிப்பது அல்லது தேவைப்படுத்துவது வெளிக் கணக்காய்வாளர்களினால் அல்லது ஆலோசனையாளர்களினால் காலத்திற்குக் காலம் வெளி ஆய்வுகள் செய்யப்படுவதற்கு உள்பட்டதாகும்.

வெளிக் கணக்காய்வாளர்கள் அல்லது ஆலோசனையாளர்களினால் காலத்திற்குக் காலம் வெளி ஆய்வு செய்வது குறுகிய/ நடுத்தர/ நீண்டகாலங்களில் பெறக்கூடிய சாத்தியமான பெறுபேறுகளை உறுதிப்படுத்துவதற்காக எந்தளவிற்கு முடியுமோ இந்தளவிற்கு அளவீட்டு வடிவங்களில் (அதாவது அளவு கணியம்சார்) இன்றியமையாதசெலவு/ இலாப மதிப்பீடுகள் செய்தபின்பே மேற்கொள்ளப்பட வேண்டும்.

***வழிகாட்டல்கள் - 12.3***

பயனுறு கம்பனி ஆளுகையானது அத்தகைய நிறுவனங்களுக்கு பெருமளவு தொகை கடனாக வழங்கப்படும்போது அத்தகைய கடன்பட்ட நிறுவனங்களினால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்ற நிபந்தனையை மேற்கொள்ளுவதற்கு நிறுவனங்கள் ஊக்குவிக்கப்படுகின்றன.

***வழிகாட்டல்கள் - 12.4***

பன்னாட்டு ரீதியில் புகழ்பெற்ற கொடுகடன் தரமிடல் நிறுவனத்திடமிருந்து கொடுகடன் தரமிடலைப் பெற்று அதனைப் பேணுமாறும் பொதுமக்களுக்கு வெளிப்படுத்துமாறும் நிறுவனங்களைக் கேட்டுக் கொள்ளல், அவ்வாறு செய்வது ஒவ்வொரு வங்கியினதும் கம்பனி ஆளுகையினதும் இடர்நேர்வு முகாமைத்துவ இயலளவினதும் மேலதிகப் பரிமாணமொன்றினை வழங்கும்.

***வழிகாட்டல்கள் - 12.5***

கம்பனி ஆளுகை ஒழுங்குகள் மீதும் இடர்நேர்வு முகாமைத்துவ முறைகளின் மீதும் வழிகாட்டல்களை வழங்குவதும் கம்பனி ஆளுகை ஒழுங்குகளின் போதுமையை காலத்திற்குக் காலம் மதிப்பிடுவதற்கான கட்டமைப்பொன்றாக வழிகாட்டல்கள் பயன்படுத்துவதும்

***வழிகாட்டல்கள் - 12.6***

வங்கித் தொழிலுடன் தொடர்பான இடர்நேர் விடயங்களையும் அவற்றின் வங்கி ஆளுகைகளுடன் தொடர்பான ஏனைய விடயங்களையும் கலந்துரையாடுவதற்காக வங்கிப் பணிப்பாளர்களுடன் காலத்திற்குக் காலம் ஆலோசனைகளை நடத்தும்

***வழிகாட்டல்கள் - 12.7***

கம்பனி ஆளுகை இணங்குவிப்பு அலுவலர் ஒருவரை வைத்திருக்குமாறு வங்கிகளை கேட்டுக் கொள்வதுடன், குறிப்பிட்ட கம்பனி ஆளுகை ஒழுங்குகளின் போதுமையை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக இணங்குவிப்பு அலுவலரிடமிருந்து கிரமமான அறிக்கைகளைக் கோருதல்.

**சபைக்கு கிரமமாக வழங்கப்பட்ட முகாமைத்துவ தகவல்கள்**

- வங்கியின் கம்பனி ஆளுகையின் போதுமைத் தன்மையினையும் இடர்நேர் முகாமைத்துவ கட்டமைப்பினையும் மதிப்பீடு செய்வதற்கு சபையினால் பயன்படுத்தப்பட்ட முறையில், அத்துடன் இக்கட்டமைப்பு வேலைகளை எல்லா நேரமும் திருப்திகரமாகப் பயன்படுத்த முடியுமா என்பதனை மதிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்பட்ட முறையிலும்
- கணக்காய்வுக் குழுவின் உள்ளமைப்பு மற்றும் பங்கு என்பன உள்பட உள்ளக மற்றும் வெளிக் கணக்காய்வு ஒழுங்குகளின் தன்மை
- கணக்காய்வுக் குழுவினதும் ஏனைய குழுக்களினதும் அறிக்கைகள் கிரமமாகச் சமர்ப்பிக்கப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.
- வங்கிக்கும் அதன் பங்குடைமையாளர்களுக்கும் அல்லது மற்றைய கட்சியினருக்குமிடையில் காணப்படும் நலவுரித்து முரண்பாடுகளைக் கையாள்வதற்கான வங்கியின் கொள்கைகள்
- வங்கியின் பங்குடமையாளர் நுண்ணாய்வின் தன்மை
- வங்கிக் பணிப்பாளர்களின் சார்பில் காணப்படும் நலவுரித்து முரண்பாடுகளைக் கையாள்வதற்கான கொள்கைகள்
- வங்கி வாடிக்கையாளர்களின் கொடுகடன் மதிப்பீட்டிற்கான பிரமாணமாக கம்பனி ஆளுகையைப் பின்பற்றுவதுடன் கம்பனி ஆளுகை அதன் கம்பனி வாடிக்கையாளர் அனைவருக்கும் விரிவாக்கியது.
- இடர் முகாமைத்துவ முறைகளின் போதுமைத்தன்மையினையும் வங்கியினால் வழங்கப்பட்ட நிதியியல் வெளிப்படுத்துகைகளையும் உறுதிப்படுத்துவதில் சபை ஈடுபாடு கொண்டிருக்கும் தன்மை
- சபை அதன் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு உதவிபுரியும் பொருட்டு அதற்கு கிடைக்கச் செய்யப்பட்ட மூலவளங்களின் தன்மை
- பங்குடமையாளர்களுக்கு சபை அறிக்கையிடும் தன்மை மற்றும் சபை அதன் அலுவல்களை எவ்வாறு நடத்துவது என்பது பற்றிய ஒழிவுமறைவற்ற தன்மை
- வங்கி வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் வருமானம் மற்றும் மூலங்கள் பற்றி நேர்மையான தகவல்கள் அவர்களுக்கு வழங்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக மேற்பார்வை மேலாண்மையாளர்கள் வரிச்சீர்திருத்தத்தில் ஈடுபடவேண்டும்.
- மேற்பார்வை மேலாண்மையாளர்கள், பிணையங்கள் மற்றும் செலாவணித் தரகுகள் மற்றும் பங்குப் பரிவர்த்தனை என்பன கம்பனி/ வர்த்தகச் சட்ட திருத்தங்களுடன் தொடர்புபடுத்தப்பட்டிருக்க வேண்டும்.

02/04/002/0106/001

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்

15 ஒகத்து 2002

அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும்

1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித் தொழிற் சட்டத்தின் 86ஆம் பிரிவின் கீழ் - திரவச் சொத்துக்களுக்கான வரைவிலக்கணம்

1995ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க வங்கித் தொழில் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டத்தின் பிரிவு 86இல் "திரவச் சொத்துக்கள்" என்பதன் வரைவிலக்கணத்தைக் கொண்ட பந்தியினால் (எ) அளிக்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி நாணயச்சபையானது 1957ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க வெளிநாட்டுக் கடன்கள் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட இலங்கை அபிவிருத்தி முறிகள் திரவச் சொத்துக்களாக இருக்கும் எனத் தீர்மானித்திருக்கிறது.

ஆகவே உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், திரவச் சொத்துக்களைப் பேணுவது தொடர்பாக, வங்கித் தொழிற்சட்டத்தின் பிரிவு 21இன் ஏற்பாடுகளுக்கு இணங்கி ஒழுகும் நோக்கத்திற்காக இலங்கை அபிவிருத்தி முறிகளில் அவர்களது முதலீட்டின் நாளாந்த சந்தைப் பெறுமதியினை கணக்கில் எடுக்க வேண்டும்.

உங்கள் உண்மையுள்ள

ஒப்பம் . பணிப்பாளர் வங்கி மேற்பார்வை

02/04/002/0005/003

**வங்கி மேற்பார்வைத் திணைக்களம்**

30 டிசெம்பர் 2002

அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும்

அன்புள்ள ஐயா/ அம்மணி

**கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகளின்மீது**

**முன்மதியுடைய ஒழுங்கு விதிகளைப் பிரயோகித்தல்**

உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகளுக்கு பிரயோகிக்கத்தக்க முன்மதியுடைய ஒழுங்கு விதிகளின்மீது வங்கித் தொழில் சட்டத்தின் பிரிவு 24 (2) இன் நியதிகளில் நாணயச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளதைக் கவனிக்கவும்.

2. உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள் என்பனவற்றின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களின் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டவாறு, முன்மதியுடைய ஒழுங்கு விதிகளின் நடைமுறைப்படுத்தல் கட்டம் கட்டமாக அடிப்படையிலேயே இருக்கும்.

3. அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் 30 யூன் 2003இல் உள்ளவாறு நியதி மூலதன போதுமை விகிதத்தில் மீது இரு கூற்றுக்களைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளதை கவனிக்கவும்; ஒரு கூற்று உள்நாட்டு வங்கித் தொழில் வியாபாரம் தொடர்பான நியதி மூலதன போதுமை விகிதத்தினை மட்டும் எடுத்துக் காட்டுகின்ற வேளையில், மற்றையது கரைகடந்த வங்கித் தொழில் வியாபாரம் மற்றும் உள்நாட்டு வங்கித் தொழில் வியாபாரம் ஆகிய இரண்டும் தொடர்பான நியதி மூலதன போதுமை விகிதத்தினை ஒருங்கிணைந்த அடிப்படையில் எடுத்துக் காட்டுகின்றது.

4. இக் கடிதம் கிடைத்தமைபற்றி தயவு செய்து அறிவிக்கவும்.

உங்கள் உண்மையுள்ள

**திருமதி. பி.பி. சிறிசேன**

**வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்**

## கரைகடந்த வங்கித் தொழில் பிரிவுகள் மீது முன்மதியுடைய ஒழுங்கு விதிகளைப் பிரயோகித்தல்

**மூலதனப் போதுமை விகிதத்தின் மீது, 1997 ஒகத்து 22ஆம் நாளன்று மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் 2001 திசெம்பர் 27ஆம் நாளன்று மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் மூலம் திருத்தப்பட்டவாறான வங்கித் தொழில் சட்டத்தின் 19 (7)(அ) பிரிவின் கீழ் வெளியிடப்பட்டது.**

மேற் குறிப்பிட்ட தீர்மானத்தின் நியதிகளின்படி குறித்துரைக்கப்பட்ட மூலதன போதுமை விகிதம் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் கரைகடந்த வங்கித் தொழில் வியாபாரம் தொடர்பான விடயங்களுக்கு பிரயோகிக்கப்படும். கரைகடந்த வங்கித்தொழில் தொடர்பாக 2003 யூன் 30ஆம் நாளிலுள்ளவாறு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினால் பேணப்பட வேண்டுமென தேவைப்படுத்தப்பட்ட மூலதனப் போதுமை விகிதம் குறித்துரைக்கப்பட்ட மூலதனப் போதுமை விகிதத்தில் 50% மாக இருததல் வேண்டும் அதாவது அடுக்கு (மையம்) 2.5% இற்குக் குறையாத மூலதனப் போதுமை விகிதமும் காணப்பட வேண்டியதுடன் 2003 திசெம்பர் 31 அளவில் ஒன்று திரட்டப்பட்ட அடிப்படையில் கரைகடந்தவங்கித்தொழில் வியாபாரங்கள் மற்றும் உள்நாட்டு வங்கித்தொழில் வியாபாரங்கள் தொடர்பாக உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் குறித்துரைக்கப்பட்ட மூலதனப் போதுமை விகிதத்தினை அதாவது அடுக்கு 1 (மையம்) 5%திற்குக் குறையாதமூலதன போதுமை விகிதத்தினையும் 10 சதவீதத்திற்குக் குறையாத மொத்தப் போதுமை விகிதத்தினையும் பேணுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்று மூலதனப் போதுமை விகிதம் 2001 திசெம்பர் 27ஆள் நாளன்று மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தில் குறித்துரைக்கப்பட்ட மூலதனப் போதுமை விகிதத்தினை அதாவது அடுக்கு 1 (மைய) 5 சதவீதத்திற்குக் குறையாதபோதுமை விகிதத்தினையும் ஒன்று திரட்டப்பட்ட அடிப்படையில் 10 சதவீதத்திற்குக் குறையாத மொத்த மூலதனப் போதுமை வீதத்தையும் அடையும் வரை அத்தகைய வங்கியொன்று இலாபத்தை வெளியனுப்பவோ பங்கிலாபங்களைக் கொடுப்பனவு செய்யவோ முடியாது.

மேற் குறிப்பிடப்பட்ட தீர்மானம் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் உள்நாட்டு வங்கித் தொழில் தொடர்பாக பேணப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட மூலதனப் போதுமை விகிதத்தினைப் பாதிக்காது.

**ஒப்பம். ஏ.எஸ். ஜயவர்த்தன**

**ஆளுநர்**

**கொழும்பு**

***24 திசெம்பர் 2002***

## கரைகடந்த வங்கித் தொழில் பிரிவுகள் மீது முன்மதியுடைய ஒழுங்கு விதிகளைப் பிரயோகித்தல்

வங்கித் தொழில் சட்டம் பிரிவு 21(2) இன் கீழ் வழங்கப்பட்ட நியதி திரவச் சொத்து விகிதத்தின் மீதான 1989 ஏப்பிறல் 10ஆம் நாளன்று மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்.

*மேற் சொல்லப்பட்ட தீர்மானம் உள்நாட்டு வங்கித் தொழில் வியாபாரம் மற்றும் கரைகடந்த வங்கித் தொழில் வியாபாரம் ஆகிய இரண்டின் மீதும், ஒன்றுதிரட்டப்பட்ட அடிப்படையில் 2003 சனவரி 1ஆம் நாளிலிருந்து பிர யோகிக்கப்பட வேண்டும்.*

**ஒப்பம். ஏ.எஸ். ஜயவர்த்தன**

**ஆளுநர்**

**கொழும்பு**

***24 திசெம்பர் 2002***

## கரைகடந்த வங்கித் தொழில் பிரிவுகள் மீதான முன்மதியுடைய ஒழுங்கு விதிகளைப் பிரயோகித்தல்

1999 இன் எண் 2 கொண்ட வங்கித் தொழில் சட்டத்தின் (தனியொரு கடன்படுநர்களுக்கான வரையறை) பணிப்புரைகள்

*மேலே சொல்லப்பட்ட பணிப்புரைகள் 2004 சனவரி 1ஆம் நாளிலிருந்து செயற்படும் வகையில் இத்தால் திருத்தப்பட்டன;*

*(அ) அதிலுள்ள பந்தி 2இனை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாகப் பின்வரும் பந்தியினை உட்புகுத்துவதன் மூலம்;*

*"கரைகடந்த வங்கித் தொழில் பிரிவுகளுக்கும் பிர யோகிக்கத்தக்க பணிப்புரைகள்*

*2. இப்பணிப்புரைகள் உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்றின் கரைகடந்த வங்கித் தொழில் பிரிவினால் வழங்கப்பட்ட கடன்களுக்கும் ஏற்புடையதாகும். அத்தகைய நோக்கங்களுக்காக உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றின் உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவிற்கும் உள்நாட்டு வங்கித் தொழில் பிரிவென்பது இப்பணிப்புரைக்கமைய மற்றும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றின் உள்நாட்டு வங்கித்தொழில்பிரிவு மற்றும் கரைகடந்த வங்கித் தொழில் பிரிவு தொடர்பானது எனப் பொருள் கொள்ளப்பட வேண்டும்"*

*(ஆ)பந்தி 8இற்குப் பின்னர் அதனை அடுத்து புதிய பந்தியான 8அ உட்படுத்தப்படுகிறது.*

*"இலாபம் மற்றும் பங்கிலாபக் கொடுப் பனவுகளை வெளியே அனுப்புவதன் மீதான கட்டுப்பாடுகள்*

*8அ. பந்திகள் 3 மற்றும் 4இலுள்ள ஏற்பாடுகளை எந்த ஒரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கியும் மீறுமிடத்து அத்தகைய வங்கி அத்தகைய ஏற்பாடுகளை தொடர்ந்து மீறுகின்ற வரையில் இலாபங்களையோ அல்லது பங்கு இலாபங்களையோ அனுப்ப முடியாது"*

**ஒப்பம். ஏ.எஸ். ஜயவர்த்தன**

**ஆளுநர்**

**கொழும்பு**

***24 திசெம்பர் 2002***

உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம்

21 நவெம்பர், 2002

**சுற்றறிக்கை எண் 35/01/001/0006/001**

**அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் முதனிலை வணிகர்களுக்கும்**

**இலங்கை மத்திய வங்கியின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள்**
**மீள்கொள்வனவு, நேர்மாற்று மீள்கொள்வனவு வசதிகள் மற்றும்**
**இரண்டாந்தரச்சந்தையில் உடனடிக் கொள்வனவுகள்/ விற்பனைகள்**
**மீதான திருத்தப்பட்ட வழிகாட்டல்கள்**

உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களத்தின் திறந்தசந்தை தொழிற்பாடுகள் பிரிவினால் 21.11.2002 வரை கையாளப்பட்ட தொழிற்பாடுகள் பின்வருமாறு மீள ஒதுக்கப்பட்டுள்ளமை பற்றி உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் முதனிலை வணிகர்களுக்கும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

உள்நாட்டுத் தொழிற்பாடுத் திணைக்களத்தின் திறந்தசந்தைத் தொழிற்பாடுகள் முன்னரங்க அலுவலகம்:

- மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதங்களை ரொயிட்டர் திரையில் அறிவித்தல்.
- தொலைபேசி மூலம் அல்லது தொலைநகல் மூலம் பங்கேற்கும் நிறுவனங்களுடன் வணிகத்தில் ஈடுபடல்.

தொடர்பு கொள்ள வேண்டியவர் திரு.என்.ஜே. குணரத்தின

தொலைபேசி: 381921, 477044

**கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களத்தின் திறந்தசந்தைத் தொழிற்பாடுகளின் தீர்ப்பனவுப்பிரிவு:**

- பங்கேற்கும் நிறுவனங்களிடமிருந்து வணிகப் பேரத்தினை உறுதிப்படுத்துவதனை எழுத்தில் தொலைநகல் மூலம் அல்லது கடித மூலம் வணிகப் பேரம் முடிவடைந்த 30 நிமிடங்களுக்குள் பெற்றுக்கொள்ளல்.
- மத்திய வங்கியின் சார்பில் பங்கேற்கும் நிறுவனங்களுடன் மீள்கொள்வனவு, நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கைகளை மேற்கொள்ளல்.
- நேர்மாற்று மீள்கொள்வனவு வசதிகள் தொடர்பில் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களிடமிருந்து பெற்ற திறைசேரி உண்டியல்களையும் முறிகளையும் ஏற்றுப் பாதுகாப்பில் வைத்திருத்தல்.
- நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்கள் முதிர்ச்சியடைகையில் மீளக் புறக்குறிப்பிட்டு பங்கேற்கும் நிறுவனங்களிடம் திறைசேரி உண்டியல்களையும் முறிகளையும் வழங்குதல்.
- உள்நாட்டு தொழிற்பாட்டுத் திணைக்களத்தின் நடைமுறைக்கணக்குப் பிரிவிற்கு கொடுப்பனவு/தீர்ப்பனவு அறிவுறுத்தல்களை வழங்கல்.

தொடர்பு கொள்ள வேண்டியவர் திரு.ரி.எம்.ரி. தென்னக்கோன்

தொலைபேசி -477087

மேலே குறிப்பிட்டவாறு தொழிற்பாடுகள் மீள ஒதுக்கப்பட்டதனை பின்பற்றும் விதத்தில் மத்திய வங்கியின் திறந்தசந்தைத் தொழிற்பாடுகளுடன் தொடர்பான வழிகாட்டல்களைத் திருத்துவது அவசியமாகியிருக்கிறது. திருத்தப்பட்ட வழிகாட்டல்கள் இணைப்பு ஒன்றிலும் திருத்தப்பட்ட மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கைகள் முறையே இணைப்பு II மற்றும் III இலும் தரப்பட்டுள்ளன.

திருத்தப்பட்ட வழிகாட்டல்கள் 2002 நவெம்பர் 22ஆம் நாள் தொடக்கம் தொழிற்பாட்டிற்கு வரும்.

திருத்தப்பட்ட நடைமுறைகள் பற்றிய மேலதிக தகவல்களை, கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களத்தின் பணிப்பாளரிடமிருந்து 477035 என்ற தொலைபேசியிலோ அல்லது உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களத்தின் பணிப்பாளரிடமிருந்து 477644 என்ற தொலைபேசியிலோ பெற்றுக்கொள்ள முடியும்.

**பணிப்பாளர்**
கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம்

**பணிப்பாளர்**
உள்ளூர் தொழிற்பாடுகள் திணைக்களம்

**இணைப்பு I**

## இலங்கை மத்திய வங்கியின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் மீள்கொள்வனவுகள், நேர்மாற்று மீள்கொள்வனவு வசதிகள் மற்றும் இரண்டாந்தரச்சந்தையில் உடனடிக் கொள்வனவுகள்/ விற்பனைகள் மீதான திருத்தப்பட்ட வழிகாட்டல்கள்

**(அ) மீள்கொள்வனவு வசதி**

(i). உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளும் அரச பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களும் இதனகத்துப் பின்னர் பங்கேற்கும் நிறுவனங்கள் என அழைக்கப்படும் இவை இலங்கை மத்திய வங்கியின் மீள்கொள்வனவு வசதியில் பங்கேற்க தகுதியுடையனவாகும்.

(ii). மீள்கொள்வனவு ஓரிரவிலிருந்து ஏழு நாட்கள் வரை கிடைக்கத்தக்கதாக இருக்கும்.

(iii). சந்தையிலுள்ள திரவத்தன்மையின் மதிப்பீட்டின் அடிப்படையில் இலங்கை மத்திய வங்கியின் சந்தைத் தொழிற்பாட்டுக் குழு மீள்கொள்வனவு வீதத்தினைத் தீர்மானிக்கும். உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் திறந்தசந்தைத் தொழிற்பாட்டுப் பிரிவு இது பற்றி நாளாந்த அடிப்படையில் மு.ப.9.30 மணிக்கு ரொயிட்டர் திரையில் அறிவிக்கும்.

(iv). மீள்கொள்வனவு வசதியை பயன்படுத்த விரும்பும் பங்கேற்கும் நிறுவனங்கள் உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களதத்தின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் பிரிவிற்கு தொலைபேசி மூலமாக அல்லது தொலைநகல் மூலமாக தொகை மற்றும் மீள்கொள்வனவின் காலம் பற்றி அறிவிக்குமாறும் வணிகப் பேரம் பற்றி கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களத்தின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் தீர்ப்பனவுப் பிரிவிற்கு 30 நிமிடங்களுக்கிடையில் ஆனால் அதேநாள் பி.ப.2.30 இற்குப் பிந்தாமல் எழுத்து மூலம் உறுதிப்படுத்த வேண்டுமெனவும் கேட்டுக்கொள்ளப்பட்டன.

(v). அதன் பின்னர் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களத்தின் திறந்தசந்தை தொழிற்பாட்டுத் தீர்ப்பனவு பிரிவு உடன்படிக்கைகளைத் தயாரித்து தொடர்பான பங்கேற்கும் நிறுவனங்களுக்கு பி.ப.2.45இற்கு முன் தொலைநகலில் அனுப்பிவைக்கும். பங்கேற்கும் நிறுவனங்கள் முறையாகக் கையொப்பமிட்டு பூரணப்படுத்திய உடன்படிக்கையை கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களத்தின் திறந்தசந்தை தொழிற்பாட்டு தீர்ப்பனவுப் பிரிவிற்கு அதே நாளன்று பி.ப.3.00 மணிக்குப் பிந்தாமல் தொலைநகலில்/ நேரடியாக திருப்பி அனுப்புதல் வேண்டும்.

(vi). மீள்கொள்வனவு உடன்படிக்கை நிறைவடைந்ததும் (இணைப்பு II) மத்திய வங்கியுடனான தொடர்பான நிறுவனத்தின் கணக்கில் குறிப்பிட்ட பிணையத்தின் அதாவது திறைசேரி உண்டியல்/ களின் அத்துடன் அல்லது திறைசேரி முறி/ களின் விற்பனைப் பெறுமதி பற்று வைக்கப்படும்.

(vii). மீள்கொள்வனவின் கீழான திறைசேரி உண்டியல்/ களின் அத்துடன்/ அல்லது திறைசேரி முறி/களின் விற்பனைப் பெறுமதியானது, தொடர்பான மீள்கொள்வனவு வீதத்தினால் மீள்கொள்வனவு காலப்பகுதிக்கேற்ப தொடர்பான திறைசேரி உண்டியல்/களை அத்துடன் அல்லது திறைசேரி முறி/களை கழிவு செய்வதன் மூலமாக கணக்கிடப்படும்.

(viii). தொடர்பான கணக்குகளில் விற்பனைப் பெறுமதியும், அத்துடன் மீள்கொள்வனவு முதிர்ச்சியில் உடன்படிக்கைக் காலப்பகுதிக்கான வட்டிக்கூறு என்பனவற்றை உள்ளடக்கிய மீள வாங்கும் பெறுமதி வரவு வைக்கப்படும்.

(ix). குறிப்பிட்ட திறைசேரி உண்டியல்/கள் அத்துடன் அல்லது திறைசேரி முறி/கள் முதலீட்டாளருக்கு வழங்கப்படமாட்டாது, எனினும், அவை மத்திய வங்கியின் பாதுகாப்பில் வைத்திருக்கப்படும்.

(x). மீள்கொள்வனவிற்காக பங்கேற்கும் நிறுவனங்களுடன் மத்திய வங்கி பயன்படுத்தும் மாதிரி உடன்படிக்கை இணைப்பு II இல் தரப்பட்டுள்ளது.

**(ஆ)நேர்மாற்று மீள்கொள்வனவு வசதி**

(i). இதனகத்துப் பின்னர் பங்கேற்கும் நிறுவனங்களென அழைக்கப்படும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் அரச பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களும் இலங்கை மத்திய வங்கியின் மீள்கொள்வனவு வசதியில் பங்கேற்க தகுதியுடையனவாகும்.

(ii). நேர்மாற்று மீள்கொள்வனவு ஓரிரவிலிருந்து ஏழு நாட்கள் வரை கிடைக்கத்தக்கதாக இருக்கும்.

(iii). சந்தையிலுள்ள திரவத்தன்மையினது மதிப்பீட்டின் அடிப்படையில் இலங்கை மத்திய வங்கியின் சந்தைத் தொழிற்பாட்டுக் குழு நேர்மாற்று மீள்கொள்வனவு வீதத்தினைத் தீர்மானிக்கும். உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் திறந்த சந்தைத் தொழிற்பாட்டுப்பிரிவு இது பற்றி நாளாந்த அடிப்படையில் மு.ப.9.30 மணிக்கு ரொயிட்டர் திரையில் அறிவிக்கும்.

(iv). நேர்மாற்று மீள்கொள்வனவின்கீழ் இலங்கை மத்திய வங்கி, உடன்பாடு காணப்பட்ட நாளொன்றில் உடன்பாடு காணப்பட்ட விலையில் மீண்டும் விற்கப்படும் என்ற உடன்படிக்கையுடன் கழிவிடப்பட்ட விலையில் பங்கேற்கும் நிறுவனங்களிடமிருந்து திறைசேரி உண்டியல்/களை அத்துடன் அல்லது திறைசேரி முறி/களைக் கொள்வனவு செய்யும்.

(v). நேர்மாற்று மீள்கொள்வனவு வசதியைப் பயன்படுத்த விரும்பும் பங்கேற்கும் நிறுவனங்கள் உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களத்தின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் பிரிவிற்கு தொலைபேசி மூலமாக அல்லது தொலைநகல் மூலமாக வணிகப் பேரத் தொகை மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவின் காலம் பற்றி அறிவிக்குமாறும் வணிகப் பேரம் பற்றி கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு திணைக்களத்தின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் தீர்ப்பனவுப் பிரிவிற்கும் 30 நிமிடங்களுக்கிடையில் ஆனால் அதேநாள் பி.ப.2.00 மணிக்குப் பிந்தாமல் எழுத்து மூலம் உறுதிப்படுத்த வேண்டும் எனவும் கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

(vi). வணிகப் பேரம் உறுதிப்படுத்தப்பட்டதனை உடனடுத்து, ஆனால் அதே நாளின் பி.ப.2.30 மணிக்குப் பிந்தாமல், நேர்மாற்று மீள்கொள்வனவு தேவைப்படும் திறைசேரி உண்டியல்/கள் அத்துடன் அல்லது திறைசேரி முறி/களை இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களத்தின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் பிரிவிற்கு இலங்கை மத்திய வங்கியின் பெயருக்கு முறையாகப் புறக்குறிப்பிட்டு வழங்குமாறு பங்கேற்கும் நிறுவனங்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியின் பாதுகாப்பில் இருக்கும் குறிப்பிட்ட திறைசேரி உண்டியல்/கள் அத்துடன் அல்லது திறைசேரிமுறி/களை கொடுக்கல் வாங்கல்களை ஈடுசெய்யக்கூடிய போதுமானளவு முகப்புப் பெறுமதியுடன் வைத்திருப்பதற்கு விரும்பும் பங்கேற்கும் நிறுவனங்கள் அதன் மீது தேவையான புறக்குறிப்பீட்டினை செய்வதன் மூலம் அவ்வாறு வைத்திருக்க முடியும். பங்கேற்கும் நிறுவனங்கள் திறைசேரி உண்டியல்களை அத்துடன் அல்லது திறைசேரி முறிகளை நேர்மாற்று மீள்கொள்வனவின் முதிர்ச்சியின்போது இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவு மற்றம் தீர்ப்பனவுத் திணைக்களத்தின் திறந்த சந்தைத் தொழிற்பாட்டுக் கொடுப்பனவுப் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

(vii). இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களத்தின் திறந்த சந்தை தொழிற்பாட்டு தீர்ப்பனவுப் பிரிவு, பங்கேற்கும் நிறுவனங்களிடமிருந்து குறிப்பிட்ட திறைசேரி உண்டியல்/கள் அத்துடன் அல்லது திறைசேரிமுறி/களைப் பெற்றுக்கொண்ட பின்னர் உடன்பாடு காணப்பட்ட மீண்டும் விற்கும் விலைகள், உடன்படிக்கையின் வணிகப் பேரம் பேசிய நாள் மற்றும் முதிர்வடையும் நாள் என்பவற்றில் முறையே வரவு மற்றும் பற்று வைக்கப்படும் தொகைகளைக் குறிப்பிட்டு கொள்வனவு

செய்யும் மற்றும், இந்நோக்கத்திற்காக குறித்துரைக்கப்பட்ட நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கையைச் சரியாகக் கையொப்பமிட்டு தொலைநகலில் அனுப்பும்.

(viii). கையொப்பமிடுவதற்கு அங்கீகரிக்கப்பட்டவரினால் சரியாகக் கையொப்பமிடப்பட்ட உடன்படிக்கையை இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களத்தின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் பிரிவிற்கு அதே நாளன்று பி.ப.3.00 மணிக்குப் பிந்தாமல் தொலைநகல் மூலமோ நேரடியாகவோ அனுப்பப்பட வேண்டுமென பங்கேற்கும் நிறுவனங்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றன. இந்நோக்கத்திற்கென அங்கீகரிக்கப்பட்டுள்ள அலுவலர்களின் பெயர்களும் அவர்களது கையொப்பங்களும் நேர்மாற்று மீள்கொள்வனவின் கீழ் பங்கேற்பதற்கு முன்னர் அனைத்து பங்கேற்கும் நிறுவனங்களினாலும் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு திணைக்களத்தின் சிறந்த சந்தை தொழிற்பாடுகள் தீர்ப்பனவுப் பிரிவில் பதிவு செய்யப்படல் வேண்டும்;

(ix). நேர்மாற்று மீள்கொள்வனவின் கீழான கொடுக்கல் வாங்கல்கள், மேலே குறிப்பிட்ட கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு திணைக்களத்தின் திறந்த சந்தை தொழிற்பாட்டு தீர்ப்பனவுப் பிரிவினால் தொடர்பான திறைசேரி உண்டியல்/ உண்டியல்கள் அத்துடன் அல்லது திறைசேரி முறி/முறிகளைப் பெற்றுக்கொண்ட பின்னரே நடைமுறைக்கிடப்படும்;

(x). இலங்கை மத்திய வங்கியுடனான வெற்றி பெற்ற பங்கேற்கும் நிறுவனங்களின் கணக்குகளில் குறிப்பிட்ட திறைசேரி உண்டியல்/ உண்டியல்களின் அத்துடன் அல்லது திறைசேரி முறிகள்/ முறிகளின் கொள்வனவுப் பெறுமதி மேலேயுள்ள (viii) இற்கு உட்பட்ட விதத்தில் வரவு வைக்கப்படும்.

(xi). குறிப்பிட்ட திறைசேரி உண்டியல்/ உண்டியல்களின் அத்துடன் அல்லது திறைசேரி முறி/முறிகளின் கொள்வனவுப் பெறுமதி, இலங்கை மத்திய வங்கியின் சந்தை தொழிற்பாட்டுக் குழுவினால் தீர்மானிக்கப்படவிருக்கும் இலாப அளவினால் சீராக்கப்பட்ட திறைசேரி உண்டியல்/ உண்டியல்களுக்கான அத்துடன் அல்லது திறைசேரி முறி/முறிகளுக்கான தொடர்பான நடைமுறை முதலாந்தர சந்தை நிறையேற்றப்பட்ட சராசரி விளைச்சல் வீதத்தில் அதன் முதிர்ச்சிக்கு இன்னமுமுள்ள நாட்களின் எண்ணிக்கைக்கேற்ப கணிக்கப்படும்.

(xii). உடன்படிக்கையின் முதிர்ச்சியில், தொடர்பான கணக்குகள் கொள்வனவுப் பெறுமதியினையும், சந்தை தொழிற்பாட்டுக் குழுவினால் நிர்ணயிக்கப்படும் வீதத்தில் கணிக்கப்படும் வட்டிக் கூறினையும் சேர்த்து உள்ளடக்கும் பின்னைய விற்பனைப் பெறுமதியின் மூலம் பற்று வைக்கப்படும்;

(viii). பங்கேற்கும் நிறுவனங்களுடன் நேர்மாற்று மீள்கொள்வனவுகளுக்காக இலங்கை மத்திய வங்கியினால் பயன்படுத்தப்படவுள்ள உடன்படிக்கையின் மாதிரி இணைப்பு III இல் தரப்பட்டுள்ளது.

**(இ) இலங்கை மத்திய வங்கியின் இரண்டாந்தரச் சந்தையிலிருந்து திறைசேரி உண்டியல்களையும், திறைசேரி முறிகளையும் உடனடியாக கொள்வனவு செய்தல்.**

(i.). இதனகத்துப் பின்னர் பங்கேற்கும் நிறுவனங்கள் என அழைக்கப்படும் இவை, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளும் அரச பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களும் இலங்கை மத்திய வங்கியின் இரண்டாந்தரச் சந்தையிலிருந்தான திறைசேரி உண்டியல்/ உண்டியல்களின் அத்துடன் அல்லது திறைசேரிமுறி/ முறிகளின் உடனடிக் கொள்வனவில் பங்கேற்பதற்கு தகைமையுடையனவாகும்.

(ii). திறைசேரி உண்டியல்/ உண்டியல்கள் அத்துடன் அல்லது திறைசேரிமுறி/ முறிகளின் உடனடிக் கொள்வனவிற்காக இரண்டாந்தரச் சந்தையைப் பயன்படுத்த விரும்பும் பங்கேற்கும் நிறுவனங்கள் உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களத்தின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் பிரிவிற்கு தொலைபேசி மூலமாக அல்லது தொலைமடல் மூலமாக தொகை மற்றும் உடனடிக் கொள்வனவுக்காலம் என்பனவற்றுடன் வணிகப் பேரத்தினை அறிவிக்குமாறும் வணிகப் பேரத்தினை, கொடுப்பனவு மற்றும் தீர்ப்பன்வுகள் திணைக்களத்தின் திறந்த சந்தை தொழிற்பாடுகள் தீர்ப்பனவுப் பிரிவிற்கு 30 நிமிடங்களுக்கிடையில் ஆனால் அதே நாள் பி.ப.2.30 மணிக்குப் பிந்தாமல் உறுதிப்படுத்த வேண்டுமெனவும் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

(iii). கொடுக்கல்வாங்கல் (உடனடிக் கொள்வனவுகள்) நடைமுறை நிறைவடைகையில் மத்திய வங்கியுடனான பங்கேற்கும் நிறுவனங்களின் தொடர்பான கணக்குகள் குறிப்பிட்ட பிணையங்களின் கொள்வனவுப் பெறுமதியினால் பற்று வைக்கப்படும்.

(iv). திறைசேரி உண்டியல்/உண்டியல்களின் அத்துடன் அலல்து திறைசேரிமுறி/முறிகளின் கொள்வனவுப் பெறுமதி (இலங்கை மத்திய வங்கியின் கழிவுவீதம்), இலங்கை மத்திய வங்கியின் சந்தைத் தொழிற்பாட்டுக் குழுவினால் தீர்மானிக்கப்படவிருக்கும் இலாப அளவினால் சீராக்கப்பட்ட திறைசேரி உண்டியல்/உண்டியல்களின் அத்துடன் அல்லது திறைசேரிமுறி/முறிகளுக்கான நடைமுறை முதலாந்தர சந்தை நிறையேற்றப்பட்ட சராசரி விளைச்சல் வீதத்தில் அதன் முதிர்ச்சிக்கு இன்னமுமுள்ள நாட்களின் எண்ணிக்கைக்கேற்ப கணிக்கப்படும்;

(v). குறிப்பிட்ட திறைசேரி உண்டியல்/உண்டியல்களின் அத்துடன் அல்லது திறைசேரி முறிகள் தொடர்பான பங்கேற்கும் நிறுவனங்களுக்கு நேரடியாக வழங்கப்படும்.

**(ஈ) இலங்கை மத்திய வங்கியின் இரண்டாந்தரச் சந்தைக்கான திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளின் உடனடி விற்பனை**

(i). இதனகத்துப் பின்னர் பங்கேற்கும் நிறுவனங்கள் என அழைக்கப்படும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் அரச பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களும் இலங்கை மத்திய வங்கியின் இரண்டாந்தரச் சந்தைக்கான திறைசேரி உண்டியல்/உண்டியல்களின் அத்துடன் அல்லது திறைசேரிமுறி/முறிகளின் உடனடி விற்பனையில் பங்கேற்பதற்கு தகைமையுடனவாகும்.

(ii). திறைசேரி உண்டியல்/உண்டியல்கள் அத்துடன் அல்லது திறைசேரிமுறி/முறிகளின் விற்பனைக்காக இரண்டாந்தரச் சந்தையினைப் பயன்படுத்த விரும்பும் பங்கேற்கும் நிறுவனங்கள் உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களத்தின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் பிரிவிற்கு தொலைபேசி மூலமாக அல்லது தொலைமடல் மூலமாக தொகை, திறைசேரி உண்டியல்/உண்டியல்கள் அத்துடன் அல்லது திறைசேரிமுறி/முறிகள் என்பனவற்றின் தொடர்பான எண்கள் மற்றும் முதிர்ச்சித் திகதி வணிகப்பேரத்தினை கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களத்தின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் தீர்ப்பனவுகள் பிரிவிற்கு, 30 நிமிடங்களுக்கிடையில், ஆனால் அதே நாள் பி.ப.2.30 மணிக்குப் பிந்தாமல் உறுதிப்படுத்த வேண்டுமெனவும் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

(iii). வணிகப்பேரம் உறுதிப்படுத்தப்பட்டதனை உடனடுத்து, ஆனால் அதேநாள் பி.ப 2.30 மணிக்குப் பிந்தாமல் இலங்கை மத்திய வங்கியின் பெயருக்கு சரியாகப் புறக்குறிப்பீடு செய்து தொடர்பான திறைசேரி உண்டியல்/உண்டியல்களையும் அத்துடன் அல்லது திறைசேரிமுறி/முறிகளையும் இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களத்தின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் பிரிவிற்கு அனுப்பி வைக்குமாறு பங்கேற்கும் நிறுவனங்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

(iv). குறிப்பிட்ட திறைசேரி உண்டியல்/உண்டியல்களின் விற்பனைப் பெறுமதி (இலங்கை மத்திய வங்கியின் மீள்கழிவிடல் வீதம்) இலங்கை மத்திய வங்கியின் சந்தைத் தொழிற்பாட்டுக்குழுவினால் தீர்மானிக்கப்படவிருக்கும் இலாப அளவினால் சீராக்கப்பட்ட திறைசேரி உண்டியல்/உண்டியல்களின் அத்துடன் அல்லது திறைசேரிமுறி/முறிகளுக்கான தொடர்பான நடைமுறை முதலாந்தரச்சந்தை நிறையேற்றப்பட்ட சராசரி விளைச்சல் வீதத்தில் அதன் முதிர்ச்சிக்கு இன்னமுமுள்ள நாட்களின் எண்ணிக்கைக்கேற்ப கணிக்கப்படும்.

(v). இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களத்தின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் தீர்ப்பனவுப்பிரிவு இலங்கை மத்திய வங்கியுடனான அவர்கள் தொடர்பான கணக்குகளில் வணிகப்பேர நாளன்று திறைசேரி உண்டியல்/உண்டியல்கள் அத்துடன்/அல்லது திறைசேரி/முறிகளின் விற்பனைப் பெறுமதியினை வரவு வைக்கும்.

**(உ)கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களத்தின் பணிப்பாளர் மற்றும் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் பணிப்பாளர் ஆகியோர் தேவையைக்கருதி, பங்கேற்பு நிறுவனங்களுக்குப் போதியளவு கால அவகாசத்துடன் இவ்வழிகாட்டல்களை மாற்றலாம் அல்லது செம்மையாக்கலாம்.**

**இணைப்பு II**

தொலைபேசி எண்: 477087, 422094
தொலைநகல் எண்: 421192, 421194

திறந்தசந்தை தொழிற்பாடுகள் தீர்ப்பனவுப் பிரிவு
கொடுப்பனவு தீர்ப்பனவுத் திணைக்களம்
செத்தெம்பர், 2002

**மீள்கொள்வனவு உடன்படிக்கை**

**உடன்படிக்கை எண்**

மீள்கொள்வனவு உடன்படிக்கையின்கீழ் கீழே தரப்பட்டுள்ள விபரங்களின்படி இலங்கை அரசாங்கத்தின் திறைசேரி உண்டியல்கள் தங்களுக்கு விற்பனை செய்யப்பட்டிருப்பதனை நாம் இத்தால் உறுதிப்படுத்துகின்றோம்.

1. திறைசேரி உண்டியல் எண் :
2. முதிர்ச்சித்திகதி :
3. திறைசேரி உண்டியல்களின் முகப்புப்பெறுமதி (மில்) :
4. மீள்கொள்வனவிற்காக உடன்பட்ட தொகை :
5. விற்பனைத் திகதி (பெறுமதி நாள்) :
6. மீள்கொள்வனவுத் திகதி (முதிர்ச்சித் திகதி) :
7. காலம் (நாட்களின் எண்ணிக்கை) :
8. வீதம் (விளைவு), ஆண்டொன்றிற்கு % :
9. விலை (ஒவ்வொரு ரூ.100இற்கு) :
10. கழிவிடப்பட்ட பெறுமதி :
11. தீர்ப்பனவு :

நாங்கள் விற்பனை நாளன்று எங்களுடனான உங்கள் க/கு எண்..............இல் ரூ....................இனை பற்று (கழிவிடல் பெறுமதி) வைப்பதுடன் மீள்கொள்வனவு நாளன்று ரூ.........................இனை வரவு (கழிவிடல் பெறுமதி + வட்டி) வைப்போம்.

மேற்குறிப்பிட்ட திறைசேரி உண்டியல்கள் உடன்படிக்கைக் காலத்தில் உங்கள் சார்பில் எங்கள் பாதுகாப்பில் வைத்திருக்கப்படும்.

.............................................................
அங்கீகரிக்கப்பட்ட கையொப்பம்
(மத்திய வங்கி)
நேரம்......................

.................................................................
அங்கீகரிக்கப்பட்ட கையொப்பம்
(மத்திய வங்கி)
நேரம்................

நாங்கள் உடன்படுகிறோம்

................................................................
.............................................................
அங்கீகரிக்கப்பட்ட கையொப்பம்
(முதனிலை வணிகர்/வர்த்தக வங்கி)
முத்திரை
நேரம்.............
கவனிப்பு

அங்கீகரிக்கப்பட்ட கையொப்பம்
(முதனிலை வணிகர்/ வர்த்தக வங்கி)
முத்திரை
நேரம்................
தொலைநகல் எண்;

தயவுசெய்து தொலைநகல் மூலம் இதனை பி.ப. 3.00 மணிக்கு முன் உறுதி செய்யவும்.

இணைப்பு III

தொலைபேசி எண்: 477087, 422094
தொலைநகல் எண்: 421192, 421194

திறந்தசந்தைத் தொழிற்பாடுகள் தீர்ப்பனவு பிரிவு
கொடுப்பனவு தீர்ப்பனவுத் திணைக்களம்
செத்தெம்பர், 2002

## நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கை

**உடன்படிக்கை எண்:**

இலங்கை அரசாங்கத்தின் திறைசேரி உண்டியல்(கள்) முறி(கள்) என்பனவற்றை கீழே தரப்பட்ட விபரங்களிலுள்ளவாறு தங்களிடமிருந்து கொள்வனவு செய்துள்ளோம் என்பதனை இத்தால் உறுதிப்படுத்துகின்றோம்:

| 1. தி.உண்டியல்/ முறி எண் | முறித்தொடர்கள் | முதிர்ச்சி | கொள்வனவு விலை | விற்பனைக்கு விடப்பட்ட அளவு (முகப்புப்பெறுமதி) (ரூ) | கொள்வனவுப் பெறுமதி (ரூ) |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | மொத்தம் | | |

கேட்டுக்கொள்ளப்பட்ட தொகை ==========

2. மீள விற்கும் திகதி (முதிர்ச்சி திகதி) :
3. காலம் (நாட்களின் எண்ணிக்கை) :
4. வட்டி வீதம் (%) :
5. மீள விற்கும் பெறுமதி :
6. தீர்ப்பனவு :

எங்களுடனான தங்களின் க/கு எண்..........................................இற்கு திறைசேரி உண்டியல்(களின்)/ முறியின்(களின்) வழங்கல் மீதான கொள்வனவு நாளன்று ரூ..................................இனை கணிக்கில் வரவு (மொத்தக் கொள்வனவுப் பெறுமதி) வைப்பதுடன் உண்டியல்(களை)/ முறிகளை மீளவிற்கும் நாளன்று ரூ..................................இனை மேற்குறிப்பிட்ட கணக்கில் பற்று (மீள விற்கும் பெறுமதி) வைப்போம். மேற்குறிப்பிட்ட திறைசேரி உண்டியல்(கள்) மற்றும் முறி(கள்) எங்கள் பெயரில் புறக்குறிப்பீடு செய்யப்பட்டு கொள்வனவு செய்யப்படும் நாளன்று இலங்கை மத்திய வங்கியிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். இவை மீள விற்கும் நாளன்று புறக்குறிப்பீடு செய்யப்பட்டு தங்களிடம் வழங்கப்படும்.

..................................................................
அங்கீகரிக்கப்பட்ட கையொப்பம்
(மத்திய வங்கி)
நேரம்...............

நாம் உடன்படுகிறோம்

..................................................................
அங்கீகரிக்கப்பட்ட கையொப்பம்
(மத்திய வங்கி)
நேரம்.............

..................................................................
அங்கீகரிக்கப்பட்ட கையொப்பம்
(முதனிலை வணிகர்/வர்த்தக வங்கி)

நேரம்...............

..................................................................
அங்கீகரிக்கப்பட்ட கையொப்பம்
(முதனிலை வணிகர்/வர்த்தக வங்கி)
முத்திரை
நேரம்............

தயவுசெய்து தொலைநகல் மூலம் பி.ப 3.00 மணிக்கு முன்னர் உறுதிப்படுத்தவும்.

* பொருத்தமானவிடத்து

தொலைநகல் :

**இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிப் பத்திரிகை**

**அதிவிசேஷமானது**

**1227/11ஆம் இலக்கம்– 2002ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16ஆந் திகதி வியாழக்கிழமை**

## பகுதி I　தொகுதி　(I) - பொது

**அரசாங்க அறிவித்தல்கள்**

### செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழான அறிவித்தல்

**(இலங்கை சட்டவாக்கங்களின் 423 அத்தியாயம்)**

*1.　இலங்கை நாணயத்தின் ஏற்றுமதியும் இறக்குமதியும்:*

இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்குப் பயணம் செய்யும்போது வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு திரும்பிவரும் பொழுதும் விடயத்தின்படி இலங்கையர்கள் ரூபா 5000 த்தினை விஞ்சாத இலங்கை நாணயத்தாள்களை தம்முடன் ஏற்றுமதி செய்வதற்கும் இறக்குமதி செய்வதற்கும் திருத்தப்பட்டவாறான, 1953ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 22 இன் 1(அ) துணைப்பிரிவு மற்றும் பிரிவு 21 இன் 1(அ) துணைப்பிரிவு என்பனவற்றின் ஏற்பாடுகளின் நியதிகளுக்கிணங்க இத்தால் பொது அனுமதி வழங்கப்படுகின்றது.

*2. பயன்படுத்தப்படாத வெளிநாட்டு நாணயங்களை வைத்திருத்தல்:*

(அ)　தம்முடன் தடுத்து வைக்கப்பட்டுள்ள வெளிநாட்டு நாணயம் ஐ.அ.டொலர் 2000 த்தினை அல்லது அதற்குச் சமமான மாற்றத்தக்க வெளிநாட்டு நாணயத்தினை விஞ்சாதவிடத்தும் அதில் வெளிநாட்டு நாணயத்தாள்கள் ஐ.அ.டொலர் 500இற்கு மேற்படாது காணப்படுமிடத்தும் வெளிநாட்டுக்குப் பயணம் செய்வதற்காக அங்கீகரிக்கப்பட்ட வணிகர் ஒருவரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட பயணிகள் காசோலைகளினதும் வெளிநாட்டு நாணயத் தாள்களினதும் பயன்படுத்தப்படாத தொகையினை இலங்கையில் வதிவுடைய ஆளொருவர் தம்முடன் தடுத்து வைத்திருப்பதற்கு திருத்தப்பட்டவாறான, 1953 ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 6அ மற்றும் பிரிவு 48இன் கீழ் இத்தால் பொது அனுமதி வழங்கப்படுகின்றது.

(ஆ)　மேலே (அ) வில் குறிப்பிடப்பட்ட நியதிகளின்படி மேலே (அ)வில் குறிப்பிடப்பட்ட அத்தகைய ஆளொருவர் வெளிநாட்டுக்குப் பயணம் செய்யும்போது அவர்/அவள் அவ்வாறு தடுத்து வைக்கப்பட்டிருந்த அத்தகைய நாணயத்தினை அவருடன்/அவளுடன் ஏற்றுமதி செய்வதற்கு செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 22 மற்றும் பிரிவு 48இன் நியதிகளின்படி இத்தால் பொது அனுமதி வழங்கப்படுகின்றது.

**எச். ஏ. ஜீ. எட்டியாரச்சி,**

செலாவணிக் கட்டுப்பாட்டாளர்.

*2002, மார்ச் 16.*

தொடர்பு எண் 06/04/03/2002

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
அ.பெ. 883
கொழும்பு
31 சனவரி 2002

அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களுக்கான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்

அன்புள்ள ஐயா,

**இலங்கையில் வதியும் வெளிநாட்டு கடவுச்சீட்டு உடமையாளர்களால்**
**வைத்திருக்கப்படும் கணக்குகள் மீதான வட்டிக் கொடுப்பனவு**

அனைத்து அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களும் வதிவிட விசாவில் இலங்கையில் வதியும் வெளிநாட்டுக் கடவுச்சீட்டுக்களை வைத்திருப்போரின் வசமுள்ள கேள்வி வைப்புக்கள் தவிர்ந்த, ரூபா வைப்புக்கள் மீதான வட்டியினை அவர்களுக்கு தற்பொழுது செலுத்தலாம் என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

95/02/28ஆம் நாளிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் இலக்கம் எண் ஈசி/05/95 (டி) இத்தால் நீக்கப்படுகின்றது.

உங்கள் உண்மையுள்ள
எச். ஏ. ஜி. எட்டியாரச்சி
செலாவணிக் கட்டுப்பாட்டாளர்

பிரதிகள் - ஆளுநர்
துஆ (நா)
துஆ (வி)
ஆ.உ
பொ.ஆ.திப
வ.மே.ப
மு.க
ஆலோசனையாளர்/ வங்கித்தொழில், நிதியியல் பணிகள்
ஆலோசனையாளர்/ சட்டம்

தொடர்பு எண் 06/07/06/2002

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
அ.பெ. 883
கொழும்பு
18 பெப்புருவரி 2002

**அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களுக்கான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்**

அன்புள்ள ஐயா,

**கப்பற்படுத்தல் கம்பனிகளின் சார்பில் கப்பற்படுத்தல் முகவர்களினால் பேணப்படும் ரூபாக் கணக்குகளில் கப்பற் சரக்குக் கட்டணத்தினை வரவு வைத்தல்**

நடைமுறைக்கணக்கு (மூலதனமல்லா) தொழிற்பாடுகள் மீதான செலாவணிக் கட்டுப்பாட்டுத் தடைகளை அகற்றுவது தொடர்பாக 1994 மாச்சு 18ஆம் நாளிடப்பட்டதும் எண் ஈசி/06/94 கொண்டதுமான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுடன் சேர்த்து அதில் கப்பற்படுத்தல் கம்பனிகளின் சார்பில் கப்பற்படுத்தல் முகவர்களினால் பேணப்படும் ரூபாக்கணக்குகளில் கப்பற்சரக்கு மற்றும் பயணச் சேகரிப்புக்களை மட்டுமே வரவு வைக்க நீங்கள் அனுமதிக்கப்பட்டது தொடர்பில் வழங்கப்பட்ட 1994 மாச்சு 18ஆம் நாளிடப்பட்டதும் எண் ஈ.சி/டி/ஜி.எல்/1994/2 கொண்ட அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களுக்கான எமது வழிகாட்டல்களின் விடயம் 'இ' இன் இறுதி இரண்டு பந்திகள் தொடர்பில் தங்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது.

2. சரக்குக் கட்டண சேகரிப்புக்களுக்கு மேலதிகமாக கப்பல் கம்பனிகளின் சார்பில் கப்பற்படுத்தல் முகவர்களினால் தரையை அடிப்படையாகக் கொண்ட குறிப்பிட்ட தொகைகளை ஈடுசெய்வதற்காக துறைமுக மேடைக் கையாளல் கட்டணங்களாக விதிக்கப்படும் கப்பற்சரக்கு கட்டணத்தின் கூறொன்றல்லாத கட்டணங்களையும் இந்த ரூபாக் கணக்குகளில் வரவு வைக்கப்பட்டு வருவதாக எனது கவனத்திற் கொண்டு வரப்பட்டுள்ளது.

3. துறைமுக மேடை கையாளல் கட்டணம் உள்ளூர் செலவுகளை ஈடுசெய்வதற்காகவேயன்றி, வெளியில் பண அனுப்பல்களை மேற்கொள்ளும் நோக்கங்களுக்காக கப்பற் கம்பனிகளின் பெயரில் பேணப்படும் கணக்குகளில் வரவு வைக்கப்படுவதற்கான மேற்குறிப்பிட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் நியதிகளுக்கு ஏற்புடையதல்ல. ஆகவே துறைமுகமேடைக் கையாளல் கட்டணங்களை அத்தகைய கணக்குகளில் வரவு வைக்கக்கூடாது என நீங்கள் அறிவிக்கப்படுகின்றீர்கள். கப்பல் கம்பனிகளினால் பேணப்படும் கணக்குகளில் துறைமுகமேடை கையாளல் கட்டணங்களை வரவு வைக்கும் நடைமுறையை உடனடியாக நிறுத்துவதனால் கப்பற் முகவர்களுக்கும் கப்பல் கம்பனிகளுக்கும் ஏற்படக்கூடிய இடர்ப்பாடுகளைக் கருத்திற்கொண்டு இவ்வறிவுறுத்தல்கள் 2002 மாச்சு 4ஆம் நாளிலிருந்தே நடைமுறைக்கு கொண்டு வரப்படுவதனால் கப்பல் முகவர்கள் பொருத்தமான மாற்று ஒழுங்குகளை மேற்கொள்ள போதுமான நேரகாலத்தினைக் கொண்டிருப்பர்.

உங்கள் உண்மையுள்ள

செலாவணிக் கட்டுப்பாட்டாளர்

பிரதி: இலங்கை கப்பற்படுத்தல் முகவர் சங்கம்

தொடர்பு எண் 06/07/07/2002

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்

இலங்கை மத்திய வங்கி

அ.பெ. 883

கொழும்பு

22 மார்ச்சு 2002

**அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களாக நியமிக்கப்பட்டுள்ள வர்த்தக வங்கிகளுக்கான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்**

அன்புள்ள ஐயா,

**கடல் மற்றும் வான் சரக்குக் கட்டணங்களை வெளிநாட்டு நாணயத்தில் செலுத்தலும் கப்பற்படுத்தல்/ வான் வழிக் கம்பனிகளுக்கு வெளிநாட்டு நாணயக் கணக்கு வசதிகளை அனுமதித்தலும்**

எண் ஈசி/டி/ஜிஎல்.1994/2 கொண்டதும் 1994 மாச்சு 18ஆம் நாளிடப்பட்டதுமான எமது வழிகாட்டல்களின்மீது அனைத்து அங்கீகாரம் பெற்ற வணிகர்ளினதும் கவனம் ஈர்க்கப்படுகின்றது. இதன் நியதிகளின்படி வெளிநாட்டு கப்பற்படுத்தல்/வான்வழிக் கம்பனிகள் அவர்களது சரக்கு கட்டணங்கள் மற்றும் பயணக் கட்டண சேகரிப்புக்களை வரவு வைப்பதற்காக அவற்றின் தாய்க்கம்பனியின் சார்பில் ரூபாக்கணக்கொன்றினைத் திறந்து பேணிவருவதற்கும் அரசாங்கத்திற்கு செலுத்தப்பட வேண்டிய வரி உள்ளிட்ட, இலங்கையிலுள்ள அவர்களின் பொறுப்புக்கள் அனைத்தையும் ஈடுசெய்த பின்னர் அத்தகைய கணக்குகளிலிருந்து வெளியில் பணத்தினை அனுப்புவதற்கும் அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்திலிருந்து (பிரிவு 17இன் கீழ் ஒப்புதலளிக்கப்பட்ட முதலீட்டுச்சபை கம்பனிகள்) முழுமையாக விலக்குப் பெற்றுள்ள முதலீட்டுச்சபைச் சட்டத்தின் பிரிவு 17இன் கீழ் ஒப்புதலளிக்கப்பட்ட முதலீட்டுச்சபைக் கம்பனிகளும் வெளிநாட்டு நாணயக்கணக்கு வசதிகளைக் கொண்டுள்ள ஏற்றுமதியாளர்களும் இலங்கை வங்கிகளிலுள்ள அவர்களின் வெளிநாட்டு நாணயக்கணக்குகளில் பற்று வைப்பதன் மூலம் வெளிநாட்டு கப்பற்படுத்தல்/வான் கம்பனிகளுக்கு சரக்குக் கட்டணங்களைச் செலுத்துவதற்கு இத்தால் அனுமதிக்கப்பட்டுள்ளமை பற்றி அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகிறது. ஆகவே, மேற்குறிப்பிட்ட ரூபாக்கணக்கிற்குப் புறம்பாக, பிரிவு 17 ஒப்புதலளித்த முதலீட்டுச்சபைக் கம்பனிகளினாலும் ஏற்றுமதியாளர்களினாலும் செலுத்தப்பட்டும் சரக்குக் கட்டணங்களைச் சேகரிக்கும் நோக்கத்திற்காக மட்டும் கப்பற்படுத்தல் வான் கம்பனி முகவர்களினால் அவர்களது வெளிநாட்டு தாய்க்கம்பனிகளின் சார்பில், பின்வருகின்ற நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டு, அங்கீகரிக்கப்பட்ட வணிகரொருவரின் (வர்த்தக வங்கி) உள்நாட்டு பிரிவில் வெளிநாட்டு நாணயக்கணக்கொன்றினையும் பேணமுடியும்.

(i) பந்தி 1இல் குறிப்பிடப்பட்ட ரூபாக்கணக்குப் பேணப்படும் அதே அங்கீகரிக்கப்பட்ட வணிகருடன் மட்டுமே வெளிநாட்டு நாணயக்கணக்கும் பேணப்பட வேண்டும்.

(ii) பிரிவு 17 இனால் ஒப்புதலளிக்கப்பட்ட முதலீட்டுச்சபைக் கம்பனி அல்லது ஏற்றுமதியாளர்களினால் இலங்கையிலுள்ள வங்கியொன்றுடன் வைத்திருக்கப்படும் வெளிநாட்டு நாணயக்கணக்கில் வரையப்பட்ட வங்கி வரைவு அல்லது காசோலை ஒன்றின் மூலமே அத்தகைய வெளிநாட்டுக் கணக்கிற்கான சரக்குக் கட்டணக் கொடுப்பனவுகளின் அனைத்து வரவுகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(iii) சரக்குக் கட்டணத்திற்குப் புறம்பாக, உள்நாட்டுச் செலவுகளை ஈடுசெய்வதற்காக வெளிநாட்டுக் கப்பற்படுத்தல்/வான்வழிக் கம்பனிகளிலிருந்து வெளிநாட்டு நாணயங்களில் உள்நாட்டிற்குள் பெறப்படும் ஏதாவது பணவனுப்பல்களும் வெளிநாட்டு நாணயக்கணக்குகளில் வரவு வைக்கப்படும்.

(iv) வெளிநாட்டு நாணயக் கணக்கிலிருந்து ஏதாவது பணவனுப்பல்களை நாட்டிற்கு வெளியே செய்வதாயின், வெளிநாட்டு கப்பற்படுத்தல்/ வான்வழிக் கம்பனிகள் அரசாங்கத்திற்கு செலுத்தற்பாலதான வரி உட்பட இலங்கையிலுள்ள அதன் அனைத்துப் பொறுப்புக்களையும் ஈடுசெய்யத்தக்க விதத்தில் ஒன்றில் அவற்றின் வெளிநாட்டு நாணயக்கணக்கில் அல்லது அவற்றின் ரூபாக்கணக்கில் போதுமான நிதி இருக்கின்றது என்பதனை உறுதிப்படுத்திய பின்னரே செய்தல் வேண்டும். இதன் பொருட்டு வெளிநாட்டு கப்பற்படுத்தல்/ வான்வழிக் கம்பனிக்கு வெளியில் பணவனுப்பல்களை மேற்கொள்ள முன்னர் கப்பற்படுத்தல்/ வான்வழிக் கம்பனி முகவரிடமிருந்து வங்கிகளினால் உறுதிப்பாடு ஒன்று பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

3. ரூபாவில் செலுத்தப்படும் சரக்குக் கட்டணத்தினை அங்கீகரிக்கப்பட்ட வணிகர்கள் தொடர்ந்து வெளிநாட்டு கப்பற்படுத்தல்/ வான்வழிக் கம்பனியின் சார்பில் பேணப்படும் ரூபாக்கணக்கில் வரவு வைத்தல் வேண்டும்.

4. இது தொடர்பாக ஏதாவது விளக்கங்கள் தேவையாயின் தயவுசெய்து என்னைத் தொடர்புகொள்ளவும்.

உங்கள் உண்மையுள்ள

செலாவணிக் கட்டுப்பாட்டாளர்

பிரதிகள்- ஆளுநர்

துஆ. (என்)

து.ஆ. (வி)

ஆ.உ. (ஆர்.ஜே)

ஆ.உ. (கு)

பொ.ஆ.ப

வ.மே.ப

தொடர்பு எண் 06/04/08/2002

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
அ.பெ. 883
கொழும்பு
10 ஏப்பிறல் 2002

அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களுக்கான
தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்

அன்புள்ள ஐயா,

**இலங்கை நாணயத்தின் இறக்குமதியும் ஏற்றுமதியும்**
**பயன்படுத்தப்படாத வெளிநாட்டு நாணயத்தினை வைத்திருத்தலும்**

2002 மாச்சு 16ஆம் நாளிடப்பட்ட எண் 1227/11 கொண்ட அதிவிசேட அரச வர்த்தமானியில் வெளியிடப்பட்ட செலாவணிக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழான அறிவித்தலின்பால் அனைத்து அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களினதும் கவனம் ஈர்க்கப்படுகிறது. (இணைப்பு 1)

இவ்வர்த்தமானி அறிவித்தலின் நியதிகளின்படி தற்பொழுது பின்வருவன அனுமதிக்கப்படுகின்றன.

1. **இலங்கை நாணயத்தின் இறக்குமதியும் ஏற்றுமதியும்.**

இலங்கையர்கள் வெளிநாடுகளுக்குப் பயணம் செய்யும்போது ஆளொருவர் ரூ.5000 தினை விஞ்சாத இலங்கை நாணயத்தாள்களை ஏற்றுமதி செய்யவும் அவர்கள் இலங்கைக்கு திரும்பிவரும் போது அதே தொகையைக் கொண்டு வரவும் முடியும். முன்னர் இந்நோக்கத்திற்காக அனுமதிக்கப்பட்ட வரையறை ஆள் ஒருவருக்கு ரூ.1000 ஆக இருந்தது.

2. **பயன்படுத்தப்படாத வெளிநாட்டு நாணயத்தினை வைத்திருத்தல்.**

இலங்கையில் வதியும் ஆள் ஒருவர் தம்முடன் வைத்திருக்கும் வெளிநாட்டு நாணயம் ஐ.அ.டொலர் 2000 இனை அல்லது அதற்குச் சமமான எந்த ஒரு மாற்றத்தக்க வெளிநாட்டு நாணயத்தினையும் விஞ்சாதவிடத்தும், அவ்வாறு வைத்திருக்கும் நாணயத்தாள்கள் ஐ.அ.டொலர் 500 இனை அல்லது அதற்குச் சமமான மாற்றத்தக்க நாணயத்திற்குக் மேற்படாது காணப்படுமிடத்தும் அவை அவர்/ அவளின் வெளிநாட்டுப் பயணத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களிடமிருந்து அவரால்/ அவளால் பயணிகள் காசோலையாகவும் நாணயத்தாளாகவும் இருக்குமிடத்து அத்தகைய பயணத்திற்காகப் பயன்படுத்தாத தொகையை இலங்கையில் வதியும் ஆள் ஒருவர் தம்முடன் வைத்திருக்கலாம்.

நீங்கள், உங்கள் வாடிக்கையாளர்களுக்கு மேலேயுள்ளவற்றை அறிவிக்கலாம்.

உங்கள் உண்மையுள்ள
செலாவணிக் கட்டுப்பாட்டாளர்

பிரதிகள்- சுங்கப் பணிப்பாளர் நாயகம்
துணைச் செயலாளர் நாயகம்- இலங்கை வர்த்தகச் சம்மேளனம்

தொடர்ப இலக்கம். 06/07/09/2002

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
அ.பெ.இல 883
கொழும்பு 01
11 ஏப்பிறல் 2002

**அனைத்து அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களுக்கான**
**தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்**

அன்புள்ள ஐயா

**பொருட்களின் கப்பலேற்றல் மற்றும் உள்நாட்டு வான் பட்டியல்/ உள்நாட்டு ஏற்று முறிகள் கப்பலேற்றுவோரின் சரக்குப் பற்றுச்சீட்டுக்கள் என்பனவற்றின் வழங்கல்**

மேற் குறிப்பிடப்பட்ட விடயம் தொடர்பாக எண் ஈசி/ 48/ 91 (ஜீ) கொண்ட 1991.07.12 நாளிடப்பட்டதும் ஈசி/04/ 97(ஜீ) கொண்ட 1997 மார்ச்சு 04ஆம் நாளிடப்பட்டதுமான எனது தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு மேலதிகமாக தற்போது இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்து கொண்டுள்ள பின்வரும் கப்பலேற்றுவோரை தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் தரப்பட்டுள்ள கப்பலேற்றுவோர் பட்டியலில் உள்ளடக்குமாறும் ஏற்றுமதிச் சரக்குகள் தொடர்பான கொடுக்கல் வாங்கல்களுக்காக அவர்களால் வழங்கப்படும் உள்நாட்டு வான் வழிப் பட்டியல்கள்/ உள்நாட்டு ஏற்றுமுறிகள்/ கப்பலேற்றுவோரின் சரக்குப் பற்றுச் சீட்டுக்கள் ஆகியவற்றை ஏற்றுக் கொள்ளுமாறும் அங்கீகரிக்கப்பட்ட வணிகர்கள் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

| கப்பலேற்றுவோரின் பெயர் | பதிவு எண் |
|---|---|
| 1. பக்ஸ் குளோபல் (பிரைவேட்) லிமிட்டெட் | 06/ 07 / 009/ 0110 |
| 2. செட்மில் யுனைட் காகோ (பிரைவேட்) லிமிட்டெ | 06/ 07/ 009/ 0111 |

உங்கள் உண்மையுள்ள
**எச். ஏ. ஜீ. எட்டியாரச்சி**
செலாவணிக் கட்டுப்பாட்டாளர்

ஒரு பங்கு முதலீட்டு வெளிப்புற ரூபாக்கணக்கிலிருந்து அல்லது அதற்கு மட்டும் செய்யப்படல் வேண்டும்.

(ஈ) எந்தக் கம்பனியில் இலங்கைக்கு வெளியே வதிவுள்ள ஆட்களுக்கு 3ஆம் பந்தியின் கீழ் பங்குகள் வழங்கல் அல்லது கைமாற்றம் செய்தல் மட்டுப்படுத்தப்பட்டுள்ளனவோ, அக்கம்பனியின் செயலாளர்/ பதிவாளர், அக்கம்பனியைப் பதிவு செய்தல் மூலம் 3ஆம் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட எல்லைகள் மீறப்படுமாயின், இலங்கைக்கு வெளியே வதியும் எவரேனும் ஆளின் அல்லது வெளிநாட்டு அரசொன்றின் பிரசையின் அல்லது அவர்களின் நியமத்தரின் பெயரை அத்தகைய கம்பனியின் பங்குதாரராகப் பதிவு செய்தலாகாது.

5. (அ) ஒப்புதல் அளிக்கப்பட்ட நாட்டு நிதியங்கள், ஒப்புதல் அளிக்கப்பட்ட பிராந்திய நிதியங்கள், இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்கள் (இலங்கைக்கு வெளியே வதியும் இலங்கையர்களையும் உள்ளிட்ட) இலங்கை வதியும் தனியாட்களும் பந்திகள் 4 (அ), 4(ஆ) மற்றும் 4(இ) என்பவற்றில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு பங்குகளின் கைமாற்றலுக்கு செலாவணிக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 7இன் கீழ் அனுமதி வழங்கப்படுகின்றது.

ஆ) பந்தி 4(இ) இன் ஏற்பாடுகளுக்கு இணங்க இதன்கீழ் அனுமதி வழங்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக இலங்கைக்கு வெளியே வதியும் ஆளொருவருக்கு ஏதேனும் கொடுப்பனவுக்கு அல்லது வரவு வைப்பதற்கு செலாவணிக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 7 இன் கீழ் அனுமதி வழங்கப்படுகின்றது.

6. பொதுவானவை- இக்கட்டளையில் உள்ளது எதுவும்,

(அ) 1978ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க இலங்கை முதலீட்டுச்சபைச் சட்டத்தில் வரைவிலக்கணஞ் செய்யப்பட்டவாறான எத்தொழில் முயற்சிகளுக்கு செலாவணிக்கட்டுப்பாட்டுச் சட்டத்திலிருந்து விதிவிலக்குகள் அளிக்கப்பட்டுள்ளனவோ, அத்தகைய விதிவிலக்கின் அளவுக்கு, அத்தகைய தொழில் முயற்சியைப் பாதிப்பதாகவோ அல்லது பற்றுதல் கொண்டிருப்பதாகவோ பொருள் கொள்ளலாகாது,

(ஆ) எழுதப்பட்ட ஏனைய ஏதேனும் சட்டமொன்றின் ஏற்பாடுகள்.

7. பொருள்கோடல்-இக்கட்டளையின் நோக்கங்களுக்காக.

(i) வழங்கப்பட்ட மூலதனம், என்பது 1982ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க கம்பனிகளின் சட்டத்திலுள்ள அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்

(ii) இலங்கைக்கு வெளியே வசிக்கும் ஆட்கள் என்பது 21.04.1992 ஆந் திகதிய, 15007ஆம் இலக்க வர்த்தமானியின் கீழ் வெளியிடப்பட்ட கட்டளையில் உள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

8. செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 7ஆம், 10ஆம், 11ஆம், 15ஆம் அத்துடன் 30ஆம் பிரிவின் 5ஆம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக அனுமதி வழங்கும் 29.06.1992ஆந் திகதிய 721/ 4 ஆம் இலக்க அத்துடன் 7.03.2000ஆந் திகதிய 1122/12 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தல்கள் இத்தால் இல்லாதாக்கப்படுகின்றன.

எச். ஏ. ஜி. எட்டியாரச்சி.

செலாவணிக்கட்டுப்பாட்டாளர்.

கொழும்பு

2002 ஏப்பிறல் 19.

தொடர்பு இலக்கம். 06/02/10/2002

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
அ.பெ. 883,
கொழும்பு .01
08 மே 2002

அனைத்து அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களுக்கான
தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்

அன்புள்ள ஐயா

**பங்கு முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்குகள்**

**(அ) பங்குகளில் முதலீடு**

2002ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டவாறு, செலாவணிக் கட்டுப்பாட்டுத் தடைகள் எதுவுமின்றி, இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளின் பங்கு மூலதனத்தில் 100% வரையில் இதுதொடர்பான ஒழுங்கு முறைப்படுத்தல் அதிகார சபைகளின் ஒழுங்கு விதிகளுக்கு மாத்திரம் உட்பட்ட விதத்தில்; வங்கித் தொழில், நிதி, காப்புறுதி, பங்குத் தரகு, வதிவிடக் கட்டடங்கள் மற்றும் வீதிகளின் கட்டுமானம், நீர்வழங்கல், பொது மக்கள் போக்குவரத்து, தொலைத் தொடர்பூட்டல், மின்வலு மற்றும் சக்தி, தொழில்சார் பணிகள் ஆகிய துறைகளிலுள்ள வெளிநாடுகளில் கூட்டிணைக்கப்பட்டிருக்கும் கம்பனிகளின் கிளைகள்/தொடர்பு அலுவலகங்களை ஏற்படுத்துவதிலும் முதலீடு செய்வதற்கு வதிவற்றோரை அனுமதிப்பதன் மூலம் வெளிநாட்டு முதலீடுகளின் மீது தற்போதுள்ள கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது.

2. இத் தீர்மானத்திற்கு வலுவளிக்கும் பொருட்டு 2002.04.19ஆம் நாளிடப்பட்ட எண் 1232/ 14 கொண்ட அரச வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தலின் மூலம் என்னால் பொது அனுமதி ஒன்று (இணைப்பு 1 இனைப் பார்க்கவும்) வழங்கப்பட்டுள்ளது. வதிவற்றோருக்கு பங்குகளை வழங்குவதும் அவர்களிடமிருந்து பங்குகளை மாற்றல் செய்வதும் தொடர்பாக 29.06.1992ஆம் நாளிடப்பட்ட எண் 721/ 4 கொண்டதும் 07.03.2000 ஆம் நாளிடப்பட்ட எண் 1122/ 12 கொண்டதுமான அரச வர்த்தமானிகளின் முன்னர் வெளியிடப்பட்ட அறிவித்தல்கள் நீக்கப்படுகின்றன.

3. இதன்படி, அங்கீகரிக்கப்பட்ட வணிகர்கள் ஏற்கனவேயுள்ள கணக்குகள் உட்பட பங்குமூலதன வெளிநாட்டு ரூபாக் கணக்குகளை பின்வரும் பெயர்களில் திறக்கவும் தொழிற்படுத்தவும் இத்தால் அனுமதிக்கப்படுகின்றார்கள்

(அ) நிதி அமைச்சினால் ஒப்புதல் வழங்கப்பட்ட நாட்டு நிதிகள் மற்றும் பிராந்திய நிதிகள் (ஒப்புதலளிக்கப்பட்ட நிதிகளின் பட்டியல் இணைப்பு IIஇல் தரப்பட்டுள்ளது)

(ஆ) இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள்; அத்துடன்

(இ) வெளிநாட்டுப் பிரசைகள் (இலங்கையில் வதிந்தாலும் அல்லது இலங்கைக்கு வெளியே வதிந்தாலும் சரி) மற்றும் 21.04.72ஆம் நாளிடப்பட்ட அரச வர்த்தமானி எண் 15007இல் மாண்புமிகு நிதியமைச்சரினால் வழங்கப்பட்ட பணிப்பின்படி வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு இலங்கைக்கு வெளியே வதியும் இலங்கையர் (பிரதி இணைப்பு IIIஇல்)

அவர்களது முதலீடுகளுக்கு வசதியளிக்கின்ற நோக்கத்திற்காக பின்வரும் வழிகாட்டல்களுக்கு உட்பட்டிருக்கிறது.

1. பங்குகளின் கொடுக்கல் வாங்கல் தொடர்பான வரவுகளும் பற்றுக்களும் பின்வருவனவற்றிற்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

அ. வரவுகள்

i. முதலீட்டாளரின் உள் பணவனுப்பல்கள் அல்லது வ.வெ.நா.க/ வெ.நா.வ.பி மாற்றல்கள்;

ii. ஆவணங்களின் சான்றுகளினால் உறுதிப்படுத்தப்பட்டவாறு (தரகர்களின் ஒப்பந்தக் குறிப்புக்கள் மற்றும் வரிக் கொடுப்பனவுச் சான்று போன்றன) வரி நீங்கலாக பங்குகளின் விற்பனைத் தொகை;

iii. வரி நீங்கலாக பங்குகளின் மீது செலுத்தப்பட்ட பங்கிலாபங்கள் (இணைப் பற்றுச்சீட்டுடன் கூடிய பங்கிலாப உத்தரவாதங்கள், வரிக் கொடுப்பனவுச் சான்று ஆவணங்கள் போன்ற வற்றினால் உறுதிப்படுத்தப்பட்டது);

iv. உறுதிப்படுத்தல் சான்றுகளுடன் கூடிய அத்தகைய கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்பான தரகு;

v. பங்குக் கடன்பாடுகள் மற்றும் கடன் வழங்கல் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக 06.11.2001 ஆம் நாளிடப்பட்ட எண் 06/02/12/2001 கொண்ட எமது தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் நியதிகளுக்கிணங்க அனுமதிக்கப்பட்ட அனைத்து வரவுகளும்.

ஆ. பற்றுக்கள்

i. முதலீடுகளுக்கான கொடுப்பனவு

ii. தரகர்கள் மற்றும் வங்கிக் கட்டணங்களுக்கான கொடுப்பனவுகள்

iii. கணக்கு வைத்திருப்பவரின் உள்நாட்டுச் செலவுகள்

iv. பங்கிலாபங்கள் மற்றும் பங்குகளின் விற்பனைப் பெறுகைகளின் அனுப்பல்கள்

v. பங்குத் தொகுதிக் கடன்பாடு மற்றும் கடன் வழங்கல்களின் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக 2001.11.06 ஆம் நாளிடப்பட்ட எண் 06/02/ 12/ 2001 கொண்ட எமது தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் அனுமதிக்கப்பட்ட அனைத்துப் பற்றுக்களும்

### 11. பங்கு கொடுக்கல் வாங்கல்களுக்காக வெளிநாட்டுச் செலாவணியின் முன்னோக்கிய கொள்வனவு

அங்கீகரிக்கப்பட்ட வணிகர்கள் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையிலிருந்து அவர்கள் சார்பில் கொள்வனவு செய்யப்பட்ட பங்குகள் தொடர்பான கொடுப்பனவுகளைத் தீர்ப்பனவு செய்வதற்காக மேலேயுள்ள பந்தி 3(அ) இலிருந்து (இ) வரை குறிப்பிடப்பட்டுள்ள வெளிநாட்டு முதலீட்டாளர் வகையினரிடமிருந்து முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணியினைக் கொள்வனவு செய்யலாம். அத்தகைய முன்னோக்கிய கொள்வனவுகள் உள்ளடக்குகின்ற ஒப்பந்தக் காலம் கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளப்பட்ட நாளிலிருந்து தீர்ப்பனவு செய்யப்படும் நாள் வரையான காலப் பகுதியாயிருத்தல் வேண்டும். அதாவது, வாங்குனர்களின் தீர்ப்பனவிற்காக கொழும்புப் பங்குச் சந்தையினால் நிர்ணயிக்கப்பட்ட விதிகளுக்கிணங்க வர்த்தகப்படுத்தப்பட்ட நாள் + 5 சந்தை நாட்களாகும்.

வெளிநாட்டுச் செலாவணிகளின் முன்னோக்கிய கொள்வனவுகள் தொடர்பான அனைத்து வாங்குனர்களின் தீர்ப்பனவுகளும் பங்கு முதலீடுகள் வெளிநாட்டு ரூபாக் கணக்குகளினூடாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

### 111.பங்குகளின் ஆரம்ப வழங்கல்கள்

கீழே எடுத்துக் காட்டப்பட்டுள்ள நடைமுறைகளை; கம்பனிகளின் ஆரம்ப பங்கு வழங்கல்களுக்கான உதவு தொகைகளை கையாள்வது போன்று மேலேயுள்ள முதலீட்டாளர் வகையினரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்படும் வெளிநாட்டு நாணயத்தின் உள்வருகைகளைக் அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களினால் பின்பற்றப்படலாம்.

(அ) வெளிநாட்டு நாணயத்திலான உள்நோக்கிய பணவனுப்பல்கள், இம் முதலீட்டாளர்களுக்கான பங்குகளின் பகிர்ந்தளிப்பினை எதிர்பார்த்து வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவுகளில் வைத்திருக்கப்படலாம்.

(ஆ) வரைவுகள் அல்லது காசோலைகள் மூலம் கொடுப்பனவு செய்யப்படாவிடின், முதலீட்டாளர்களின் பங்கிற்கான விண்ணப்பங்கள், பங்குகளின் பெறுமதியின் அளவிற்கு, பங்குகளை வழங்குகின்றவரின் பேரிலான வங்கி உத்தரவாதத்தினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.;

(இ) அவர்களுக்கு பங்குகள் ஒதுக்கப்பட்டதும், ஒதுக்கப்பட்ட பங்குகளின் பெறுமதிக்கு அளவான வெளிநாட்டு நாணயங்களின் ரூபாப் பெறுமதி, வழங்குபவரின் கொடுப்பனவிற்காக அவர்களின் பெயர்களில் திறக்கப்பட்டுள்ள பங்கு முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்குகளில் வரவு வைக்கப்பட வேண்டும்.

(ஈ) விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படல் அல்லது பகுதியளவில் ஏற்றுக் கொள்ளப்படல் என்பனவற்றின் காரணமாக வெ.நா.வ. தொழில் பிரிவுக் கணக்கில் கணக்கில் வைக்கப்பட்டிருக்கும் மாற்றப்படாத வெளிநாட்டுக் நாணயங்களை அவர்களுக்கு பின்னர் மீளளிப்புச் செய்யலாம்.

**(ஆ)கூறு நம்பிக்கைகளின் கூறுகளில் முதலீடு**

2000.03.07 ஆம் நாளிலிடப்பட்ட எண் 1122/12 கொண்ட அதிவிசேட அரச வாத்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தலில் என்னால் அனுமதிக்கப்பட்டவாறு, வதிவற்றோர் கூறுநம்பிக்கைகளின் கூறுகளில் முதலீடு செய்வதனை இயலச் செய்யும் பொருட்டு பங்கு முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்குகளின் மேலேயுள்ள திட்டம் தொடர்ந்து நடைமுறையிலிருக்கும்.

2. கூறுநம்பிக்கைகளின் கூறுகளில் செய்யப்படும் முதலீடுகள் தொடர்பான வரவுகளும் பற்றுக்களும் பின்வருவனவற்றிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

(அ) வரவுகள்;

i. முதலீட்டாளர்களிடமிருந்தான உள்நாட்டுப் பணவனுப்பல்கள் அல்லது வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு / வெ.நா.வ பிரிவு மாற்றல்கள்

ii. கூறு நம்பிக்கை முகாமைத்துவக் கம்பனியினால் வழங்கப்பட்ட சான்றிதழ் போன்ற ஆவணச் சான்றுகளால் உறுதிப்படுத்தப்படும் வரி நீங்கலான கூறுகள் மீதான பங்கு இலாபங்கள்.

iii கூறு நம்பிக்கை முகாமைத்துவக் கம்பனியினால் வழங்கப்பட்ட சான்றிதழ்கள் போன்ற ஆவணச் சான்றுகளினால் உறுதிப்படட வரி நீங்கலான கூறுகளின் மீட்பின் மீதான பெறுகைகள்.

(அ) பற்றுக்கள்;

i. முகாமையாளர்களின் விற்பனை விலையினை அடிப்படையாகக் கொண்டு கூறுகளின் கொள்வனவிற்காக கூறு நம்பிக்கையின் முகாமைத்துவக் கம்பனிக்கு செய்யப்படவுள்ள கொடுப்பனவுகள்

ii. கூறுநம்பிக்கை முகாமைத்துவக் கம்பனிக்கும், வங்கிக் கட்டணங்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய முகாமைத்துவக் கட்டணமும் (நுழைவுக் கட்டணம் வெளிச் செல்லும் கட்டணமும்)

iii. கூறு உடமையாளர்களின் உள்ளூர்ச் செலவுகள்

iv. வரி நீங்கலாக பங்கிலாப வருமானம் மற்றும் கூறுகளின் மீட்பின் மீதான பெறுகைகள் தொடர்பான வெளிப்பணவனுப்பல்கள்

3. கூறு நம்பிக்கைகள் 1995 ஓகத்து 18ஆம் நாளிடப்பட்ட எண் 884/13 கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கூறு நம்பிக்கைச் சட்டக்கோவையினாலும் 1991 செத்தெம்பர் 24ஆம் நாளிடப்பட்ட எண் 681/2 கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கூறு நம்பிக்கை ஒழுங்கு விதிகளின் மூலமும் முகாமைத்துவக் கம்பனி மற்றும் கூறு நம்பிக்கைப் பொறுப்பாளர்களுக்குமிடையில் செய்யப்பட்ட நம்பிக்கை உறுதியின் மூலமும் நிருவகிக்கப்படுகின்றன.

4. இங்கு முகாமைத்துவக் கம்பனி என்பது கூறு நம்பிக்கையொன்றைத் தொழிற்படுத்துவதற்காக இலங்கைப் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் உரிமம் வழங்கப்பட்ட முகாமைத்துவக் கம்பனிகளைக் குறிக்கிறது.

**(இ) அறிக்கையிடும் தேவைப்பாடுகள்**

அங்கீகரிக்கப்பட்ட வணிகர்கள், இத் திணைக்களத்தின் கண்காணிப்புப் பிரிவிற்கு இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களைக் குறிப்பிட்டு பின்வரும் அறிக்கைகளைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

(அ) ஒவ்வொரு வதிவற்ற முதலீட்டாளர்களுக்கும் ஒதுக்கப்பட்ட பங்குகள் / கூறுகளுக்காக அவரின்/ அவளின் பங்கு முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்குகளூடாக செய்யப்பட்ட கொடுப்பனவு தொடர்பாக கொடுப்பனவு செய்ததன்பின் 15 நாட்களுக்குப் பிந்தாமல் ஒரு கூற்று.

(ஆ) மாத இறுதியிலுள்ளவாறு ஒவ்வொரு பங்கு முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்குகளுக்குச் செய்யப்பட்ட வைப்புக்கள் மற்றும் மீளப்பெறுகைகள் பற்றி அடுத்தமாதம் 15ஆம் நாளுக்குப் பிந்தாமல் ஒரு கூற்று

2. மேற் குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாக 1992.07.28ஆம் நாளிடப்பட்ட எண் ஈசி/ 74/ 92 (சிஅன்ட்எப்) மற்றும் 2000.05.10ஆம் நாளிடப்பட்ட எண் ஈசி/ 06/ 2000 (சிஅன்ட்எப்) கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்

இத்தால் இல்லாதாக்கப்படுவதுடன் பங்குக் கடன் வாங்கல் மற்றும் கடன்வழங்கல் தொடர்பாக 2001.11.06ஆம் நாளிடப்பட்ட எண் 06/ 02/ 12/ 2001 கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் 08.05.2002 நாளிடப்பட்ட எண் 06/ 02/ 10/ 2002 கொண்ட இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் மூலம் பதிலீடு செய்யப்பட வேண்டும்.

உங்கள் உண்மையுள்ள

**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

தொடர்பு இலக்கம். 06/07/11/2002

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
அ.பெ. 883, கொழும்பு .01
17 யூன் 2002

**அனைத்து அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களுக்கான**
**தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்**

அன்புள்ள ஐயா

**பொருட்களின் கப்பலேற்றல் மற்றும் உள்நாட்டு வான் பட்டியல்/ உள்நாட்டு ஏற்று முறிகள் கப்பலேற்றுவோரின் சரக்குப் பற்றுச்சீட்டுக்கள் என்பனவற்றின் வழங்கல்**

மேலே குறிப்பிடப்பட்ட விடயம் தொடர்பாக எண் ஈசி/ 48/ 91 (ஜீ) கொண்ட 1991.07.12 நாளிடப்பட்டதும் எண் ஈசி/04/ 97(ஜீ) கொண்ட 1997 மார்ச்சு 04ஆம் நாளிடப்பட்டதுமான எனது தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு மேலதிகமாக தற்போது இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்து கொண்டுள்ள பின்வரும் கப்பலேற்றுவோரை தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் தரப்பட்டுள்ள கப்பலேற்றுவோர் பட்டியலில் உள்ளடக்குமாறும் ஏற்றுமதிச் சரக்குகள் தொடர்பான கொடுக்கல் வாங்கல்களுக்காக அவர்களால் வழங்கப்படும் உள்நாட்டு வான் வழிப் பட்டியல்கள்/ உள்நாட்டு ஏற்றுமுறிகள்/ கப்பலேற்றுவோரின் சரக்குப் பற்றுச் சீட்டுக்கள் ஆகியவற்றை ஏற்றுக் கொள்ளுமாறும் அங்கீகரிக்கப்பட்ட வணிகர்கள் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

| கப்பலேற்றுவோரின் பெயர் | பதிவு எண் |
|---|---|
| 1. சிடபிள்யூரி குளோபிலிங் கொழும்பு (தனியார்) லிட்டெட் | 06/ 07 / 009/ 0112 |

உங்கள் உண்மையுள்ள

**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிப் பத்திரிகை

**அதிவிசேஷமானது**

**1248/19ஆம் இலக்கம் - 2002ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 08ஆந் திகதி வியாழக்கிழமை**

## பகுதி I தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

### செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் அத்தியாயம் 423) கீழான அறிவித்தல்

செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவுகள் 7, 10, 11, 15 மற்றும் 30 (5) என்பனவற்றின் நியதிகளின்படி அனுமதி

2002 ஏப்பிறல் 19ஆம் திகதிய 1232/14ஆம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தமானியில் (அதிவிஷேட) வெளியிடப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழான அறிவித்தலிலுள்ள பந்தி 2 பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(அ) விடயம் (iv) அதாவது ஏற்றுமதி அல்லது சுற்றுலாத்துறைகள் அல்லாதவற்றிற்கு ஆளணிப் பணிகளை வழங்குகின்றமை என்பதனை நீக்கம் செய்தவன் மூலமும்:

(ஆ) விடயம் (v) அதாவது கரையோர மீன்பிடித்தல் விடயத்தினை (iv) ஆக மீள இலக்கமிடுவதன் மூலமும்.

**எச். ஏ. ஜீ. எட்டியாரச்சி.**
செலாவணிக் கட்டுப்பாட்டாளர்.

கொழும்பு
2002 ஓகத்து 08.

தொடர்பு இலக்கம். 06/02/12/2002

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
அ.பெ. 883, கொழும்பு .01
04. 9. 2002

அனைத்து அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களுக்கான
தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்

அன்புள்ள ஐயா

**வெளிநாட்டில் தொழில்புரியும் இலங்கையர்களுக்கு**
**வெளிநாட்டு நாணயத்தில் வீடமைப்புக் கடன்கள்**

செலாவணிக் கட்டுப்பாட்டினைத் தளர்த்துவதற்கான மேலுமொரு வழிமுறையாக வீடுகளை இலங்கையில் நிருமாணிப்பதற்கு அல்லது கொள்வனவு செய்வதற்காக வெளிநாட்டில் தொழில் புரிகின்ற, அக்கடன்களை வெளிநாட்டு நாணயங்களில் திருப்பிச் செலுத்தக்கூடிய நிலையிலுள்ள இலங்கையர்களுக்கு பின்வரும் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உள்பட்ட விதத்தில் வெளிநாட்டு நாணயங்களில் கடன்களை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.

1. குறிப்பாக, கடன்படுநர் வெளிநாட்டு நாணயத்தில் கடனை மீளச் செலுத்தவதற்கான இயலுமையை அவரின்/அவளின் வெளிநாட்டுத் தொழில்நிலை அத்துடன் அல்லது அவரின் /அவளின் வெளிநாட்டு நாணயக் கணக்குகளிலுள்ள நிலுவை என்பனவற்றைக் கவனத்திற் கொண்டு கடன்களை வழங்கு முன்னர் வெளிநாட்டு நாணயத்தில் அமைந்த கடனின் கொடுகடன் இடர்நேர்வு பற்றிய மதிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும்.

2. கடனின் வெளிநாட்டு நாணயத் தொகை கடன் பெறுபவருக்கு கடன் வழங்கும் வெளிநாட்டுச் செலாவணியினைக் கொள்வனவு செய்யும் வங்கியினால் இலங்கை ரூபாவில் வழங்கப்படும்.

3. வீடுகளின் கொள்வனவு அல்லது நிருமாண நோக்கங்களுக்காக கடன்களை வழங்கும் வேளையில் வங்கிகளினால் வழமையாகப் பின்பற்றப்படும் நடைமுறைகளுக்கிணங்க கடன்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். நிருமானத்திற்கான கடன்களைப் பொறுத்தவரையில், வழமையாக வங்கிகளினால் செய்யப்படுவது போன்று நிருமாண செயற்பாடுகளைப் பொறுத்து தவணை அடிப்படையில் வழங்கப்பட வேண்டும்.

4. வெளிநாட்டு நாணயத்திலமைந்த கடன்களின் மீள் கொடுப்பனவுகள் மேற்கொள்ள தவறும் நிகழ்வுகளின் காரணமாக எழக்கூடிய ஏதாவது வெளிநாட்டுச் செலாவணி இடர்நேர்வுகளை வங்கியிலுள்ள வெளிநாட்டு நாணயத்தின் முன்மதியுடைய ஒதுக்குகளைக் கட்டியெழுப்புவதன் மூலம் தவிர்த்துக் கொள்ளல் வேண்டும்.

5. கொடுகடன் இடர்நேர்வுகளை ஈடு செய்வதற்காக ஒன்றில் சொத்தினை ஈடு வைப்பதன் மூலமோ அல்லது வெளிநாட்டு நாணய வைப்புக்கள் போன்றன மீதான பற்றுரிமையின் மூலமோ போதுமான பாதுகாப்பினைப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

6. நாணய இடர்நேர்வுகளைத் தவிர்த்துக் கொள்வதற்கான கட்டியெழுப்பப்பட்ட முன்மதியுடைய ஒதுக்கங்களின் தொகை உட்பட வழங்கப்பட்ட அத்தகைய கடன்களின் விபரங்களை காலாண்டு அடிப்படையில் ஒவ்வொரு காலாண்டு இறுதியின் 15 நாட்களுக்கிடையில் அறிவிக்குமாறு அங்கீகரிக்கப்பட்ட வணிகர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

உங்கள் உண்மையுள்ள

**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

தொடர்பு இலக்கம். 06/07/15/2002

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
அ.பெ. 883, கொழும்பு .01
24. 10. 2002

**அனைத்து அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களுக்கான**
**தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்**

அன்புள்ள ஐயா

**பொருட்களின் கப்பலேற்றல் மற்றும் உள்நாட்டு வான் பட்டியல்/ உள்நாட்டு ஏற்று முறிகள் கப்பலேற்றுவோரின் சரக்குப் பற்றுச்சீட்டுக்கள் என்பனவற்றின் வழங்கல்**

மேலே குறிப்பிடப்பட்ட விடயம் தொடர்பாக எண் ஈசி/ 48/ 91 (ஜீ) கொண்ட 1991.07.12 நாளிடப்பட்டதும் எண் ஈசி/04/ 97(ஜீ) கொண்ட 1997 மார்ச்சு 04ஆம் நாளிடப்பட்டதுமான எனது தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு மேலதிகமாக தற்போது இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்து கொண்டுள்ள பின்வரும் கப்பலேற்றுவோரை தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் தரப்பட்டுள்ள கப்பலேற்றுவோர் பட்டியலில் உள்ளடக்குமாறும் ஏற்றுமதிச் சரக்குகள் தொடர்பான கொடுக்கல் வாங்கல்களுக்காக அவர்களால் வழங்கப்படும் உள்நாட்டு வான் வழிப் பட்டியல்கள்/ உள்நாட்டு ஏற்றுமுறிகள்/ கப்பலேற்றுவோரின் சரக்குப் பற்றுச் சீட்டுக்கள் ஆகியவற்றை ஏற்றுக் கொள்ளுமாறும் அங்கீகரிக்கப்பட்ட வணிகர்கள் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

| கப்பலேற்றுவோரின் பெயர் | பதிவு எண் |
|---|---|
| 1. பெல்கோன் பிறைட் சர்விஸ் லிமிடட் | 06/ 07 / 009/ 0113 |
| 2. ஸ்பீட் மார்க் கொன்சோலிடேசன் சேர்விஸ் லங்கா (பிரைவேட்) லிமிடட் | 06/ 07/ 009/ 0114 |
| 3. பசுபிக் லங்கா (பிரைவேட்) லிமிடட் | 06/ 07/ 009/ 0115 |

உங்கள் உண்மையுள்ள

**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிப் பத்திரிகை

**அதிவிசேஷமானது**

**1263/10 ஆம் இலக்கம்– 2002 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை**


## பகுதி I தொகுதி (I) - பொது

### இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்

### செலாவணிக் கட்டுப்பாட்டு அறிவித்தல்

செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம்

*செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவுகள் 5, 21 மற்றும் 22 என்பவற்றின் நியதிகளில் தேவைப்படுத்தப்பட்ட அனுமதி.*

1. கீழே பந்தி (4) இற்கு உட்பட்டு, சட்டத்தின் பிரிவு 3 மற்றும் பிரிவு 48 உடன் சேர்த்து வாசிக்கப்படும் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவுகள் 5, 21 மற்றும் 22 என்பவற்றின் நியதிகளுக்கிணங்க பின்வரும் நோக்கங்களுக்காக பொது அனுமதி இத்தால் வழங்கப்படுகின்றது:–

(அ) இலங்கையில் தங்கத்தினை கொள்வனவு செய்வதற்கும்:

(ஆ) இலங்கையில் வதியும் எவரேனும் ஆள் ஒருவர் இலங்கையில் தங்கத்தினை விற்பனை செய்வதற்கும்:

(இ) கீழே பந்தி (2) மற்றும் (3) இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு எவரேனும் ஆள் ஒருவரினால் இலங்கைக்குள் தங்கத்தினை இறக்குமதி செய்வதற்கும் அல்லது இலங்கையிலிருந்து தங்கத்தினை ஏற்றுமதி செய்வதற்கும்.

2. பந்தி (I) (iii) இன் கீழ் தங்கத்தினை இறக்குமதி செய்யும் ஒவ்வொரு இறக்குமதியாளரும் இலங்கைச் சுங்கத்திலிருந்து தங்கத்தினை வெளிக்கொண்டு செல்லுமுன்னரும் பந்தி (I) (iii) இன் கீழ் தங்கதினை ஏற்றுமதி செய்யும் ஒவ்வொரு ஏற்றுமதியாளரும் இலங்கையிலிருந்து தங்கத்தினை ஏற்றுமதி செய்யும்போது அல்லது அதற்கு முன்பாக சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்படக்கூடிய அத்தகைய படிவம் ஒன்றில் தங்கத்தின் அளவு மற்றும் பெறுமதி தங்கம் இறக்குமதி செய்யப்படுவதற்கு அல்லது ஏற்றுமதி செய்யப்படுவதற்கான நோக்கம் என்பவற்றை சுங்கப் பணிப்பாளர் நாயகத்துக்கு வெளிப்படுத்த வேண்டும்.

3. இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் பொருட்களின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி என்பனவற்றிற்றாக அவற்றில் குறித்துரைக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கும் பந்தி (I) (iii) இன் கீழ் தங்கத்தின் ஒவ்வொரு இறக்குமதி/ ஏற்றுமதியாளரும் இசைவாக நடந்துகொள்ள வேண்டும்.

4. (I) பின்வருவோர் தவிர்ந்த எந்த ஒரு ஆளும் சரக்குக்கணக்கு அடிப்படையில் இலங்கைக்குள் தங்கத்தினை இறக்குமதி செய்யக்கூடாது: –

(அ) உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்று: அத்துடன்

(ஆ) செலாவணிக் கட்டுப்பாட்டாளரினால் ஒப்புதலளிக்கப்பட்ட பின்வருவனவற்றைக் கொண்ட:–

(i) ஏற்றுமதிக்கான தங்க வர்த்தகத்தில் அல்லது தங்க ஆபரணத் தயாரிப்பில் அல்லது வேறு ஏதேனும் தங்க உற்பத்திகளில் முக்கியமாக ஈடுபட்டுள்ள,

(ii) ரூ.10 மில்லயனுக்குக் குறையாத செலுத்தப்பட்ட மூலதனத்தினைக் கொண்டுள்ள,

(iii) மூன்று ஆண்டுகளுக்குக் குறையாத சிறந்த நிதியியல் தொழிற்பாட்டு பதிவேடுகளைக் கொண்டுள்ள, அத்துடன்

(iv) தங்க வர்த்தகத்தில் மூன்றாண்டுகளுக்குக் குறையாத அனுபவத்தினைக் கொண்டுள்ள

வரையறுக்கப்பட்ட பொறுப்புக்களைக் கொண்ட கம்பனி ஒன்று.

மேலேயுள்ள (iii) மற்றும் (iv) இன் நோக்கங்களைப் பொறுத்தவரையில் மூன்று ஆண்டுகளைக் கொண்டிராத கம்பனியொன்றினைப் பொறுத்தவரை, அக்கம்பனிக்குச் சொந்தமான கம்பனிகளின் தொகுதியின் நிதியியல் தொழிற்பாட்டுப் பதிவேடுகளும் அனுபவங்களும் கருத்திற் கொள்ளப்படும்.

(2) முன் சொல்லப்பட்ட ஏற்பாடுகளின் நியதிகளில் சரக்குக்கணக்கு அடிப்படையின் மீதான தங்க இறக்குமதி, செலாவணிக் கட்டுப்பாட்டாளரினால் காலத்திற்குக்காலம் விதிக்கப்படும் அத்தகைய நியதிகளுக்கும், நிபந்தனைகளுக்கும் உட்பட்டதாக இருக்கும்.

5, 2001 மே 30 ஆந் திகதிய 1186/ 18 ஆம் இலக்க இலங்கை அரசாங்க அதிவிஷேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தல் இத்தால் நீக்கம் செய்யப்படுகின்றது.

எச். ஏ. ஜி. எட்டியாரச்சி,

செலாவணிக் கட்டுப்பாட்டாளர்.

தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் எண் 01/ 2002

தொடர்பு எண் 06/04/15/2001

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்

தொடர்பு எண்:33/03/011/0013/001

பன்னாட்டு தொழிற்பாட்டுத் திணைக்களம்

20 திசெம்பர் 2002

## வர்த்தக வங்கிகளுக்கான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்

### ஐரோப்பிய தனிநாணயத்தின் அறிமுகம் "யூரோ"

செலாவணிக் கட்டுப்பாட்டாளரினாலும் முதன்மைக் கணக்காளரினாலும் கையெழுத்திடப்பட்டு 28.11.2001 இல் வழங்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தலுக்கு மேலதிகமாக, யூரோ நாணயத்தினைக் காசாக மாற்றுவது தொடர்பான பின்வரும் தகவல்களை தங்களுக்கு வழங்க விரும்புகின்றோம்.

யூரோ சட்டரீதியான நாணயத்தினை காசாக மாற்றும் கால ஒழுங்கு

01 சனவரி 2002 - யூரோ தாள்களையும் குத்திகளையும் ஐரோப்பிய வலயம் முழுவதிலும் சட்டரீதியான நாணயமாக ஏற்றுக்கொள்ளல்

- சட்டரீதியான பழைய நாணயத்தாள்களையும் குத்திகளையும் ஐரோப்பிய வலய வங்கிகளில் யூரோ நாணயத்திற்கு மாற்றிக்கொள்ளலாம்.

01 மாச்சு 2002 - பழைய நாணயத்தாள்களும் குத்திகளும் யூரோ வலயத்தின் எந்த ஒரு இடத்திலும் சட்டரீதியான நாணயமாக இனிமேல் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

எமது இணைக்கிளைக் கட்சியினர்களில் ஒருவரிடமிருந்து பழைய நாணயங்களை ஏற்றுக்கொள்வதற்கான இறுதி திகதி பற்றியும் யூரோ வலயத்திலுள்ள தனிப்பட்ட உறுப்பினர் நாடுகளினால் பழைய நாணயங்களை மாற்றிக் கொள்வதற்கான இறுதி திகதி பற்றியும் நாம் பெற்ற இணைப்பினை நீங்கள் பார்க்கமுடியும். மேலதிக விபரங்களை ஐரோப்பிய மத்திய வங்கியின் www.europa.eu.int. என்ற இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

செலாவணிக் கட்டுப்பாட்டாளர்

பணிப்பாளர், பன்னாட்டுத் தொழிற்பாடு

**இணைப்பு**

## ஐரோப்பிய தனி நாணயமான - "யூரோவின்" அறிமுகம்

## பழைய நாணயங்களை ஏற்றுக்கொள்வதற்கும் மாற்றுவதற்குமான கடைசித் திகதிகள்

| நாடு | நாணயம் | சட்டரீதியான நாணயமாக ஏற்றுக் கொள்வதற்கான கடைசி நாள் | வர்த்தக வங்கிகளில் மாற்றிக் கொள்வதற்கான கடைசி நாள் | மத்திய வங்கிகளில் காசாக மாற்றிக் கொள்வதற்கான கடைசி நாள் | |
|---|---|---|---|---|---|
| | | | | தாள் | குத்தி |
| ஒசுத்திரியா | சிலிங் | 28.02.2002 | தனிப்பட்ட வங்கிகளின் தீர்மானங்களின்படி | வரையறை இல்லை | வரையறை இல்லை |
| பெல்ஜியம் | பெ.பிராங் | 28.02.2002 | 31.12.2002 | வரையறை இல்லை | 31.12.2004 |
| பின்லாந்து | மார்க் | 28.02.2002 | தனிப்பட்ட வங்கிகளின் தீர்மானங்களின்படி | 31.12.2011 | 31.12.2011 |
| பிரான்சு | பிராங் | 17.02.2002 | 30.6.2002 | 31.12.2011 | 31.12.2004 |
| சேர்மனி | மார்க்கா | 3.12.2001/ 28.02.2002* | 28.02.2002* | வரையறை இல்லை | வரையறை இல்லை |
| கிறிசு | டிராசினா | 28.02.2002 | தனிப்பட்ட வங்கிகளின் தீர்மானங்களின்படி | 31.12.2011 | 31.12.2003 |
| அயர்லாந்து | பன்ட் | 09.02.2002 | தனிப்பட்ட வங்கிகளின் தீர்மானங்களின்படி | வரையறை இல்லை | வரையறை இல்லை |
| இத்தாலி | லீரா | 28.02.2002 | பரிசீலனையின் கீழ் | 31.12.2011 | 31.12.2011 |
| இலக்சம்போர்க் | லக்.பிராங் | 28.02.2002 | 30.06.2002 | வரையறை இல்லை | 31.12.2004 |
| நெதர்லாந்து | கில்டர் | 28.01.2002 | 31.12.2002 | 31.12.2031 | 31.12.2006 |
| போர்த்துக்கல் | எஸ்குடோ | 28.02.2002 | 30.06.2002 | 31.12.2021 | 31.12.2002 |
| இசுப்பெயின் | பெசெட்டா | 28.02.2002 | 30.06.2002 | வரையறை இல்லை | வரையறை இல்லை |

* சேர்மனி 2001 திசெம்பர் 31அன்று மார்க்கினை ஏற்றுக் கொள்வதனை அலுவல்சார் ரீதியில் நிறுத்திக் கொள்ளும். எனினும் 1998 ஒத்தோபர் 22ஆம் நாளன்று வெளியிடப்பட்ட தொழில்சார் நிபுணர்களின் அமைப்பினது கூட்டு அறிக்கையின்படி வியாபார நிறுவனங்கள் 2002 பெபப்பருவரி 28 வரையிலாவது டியுச் மார்க் தாள்களையும், குத்திகளையும் ஏற்றுக்கொள்ளும்

# இலங்கை மத்திய வங்கி

## அறிவித்தல்கள்

அனைத்து வர்த்தக வங்கிகளுக்கும்

**வெளிநாட்டு நாணயங்களின் நாளாந்த தொழிற்படு நிலுவைகளின் மீதான வரையறை**

ஒவ்வொரு வேலை நாளினதும் இறுதியில் வர்த்தக வங்கிகள் வைத்திருக்க வேண்டிய அனைத்து வெளிநாட்டு நாணயங்களினது தொழிற்படு நிலுவைகளின் ஆகக்கூடிய தொகை 2002 மாச்சு 1ஆம் நாளிலிருந்து திருத்தப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றோம். இது 2002 பெப்புருவரி 28ஆம் நாளிடப்பட்ட எமது கடிதம் எண் 33/04/014/0009/001 இன் மூலம் அனைத்து வர்த்தக வங்கிகளுக்கும் தெரியப்படுத்தப்பட்டிருக்கிறது.

**வை.எம்.டபிள்யூபீ. வீரசேகர**
பணிப்பாளர் பன்னாட்டு தொழிற்பாடுகள்

# வர்த்தக வங்கிகளிடமிருந்து வெளிநாட்டு நாணயத் தாள்களின் கொள்வனவிற்கான மத்திய வங்கியின் வீதங்கள் - 2002

( இலங்கை ரூபாய்களில் )

| நடை முறையான நாள் | சுற்றறிக்கை எண் | அவுஸ்திரே. டொலர் (டொலர் 1இற்கு) | ஒஸ்திரிய சிலிங் (சிலிங் 10 இற்கு) | பாரெய்ன் தினார் (தினார் 1இற்கு) | பெல்ஜியம் பிராங்கு (பிராங்கு 10 இற்கு) | கனடிய டொலர் (டொலர் 1 இற்கு) | டெனிஷ் குரோனர் (குரோனர் 10 இற்கு) | ஜேர்மன் மார்க்கு (மார்க்கு 1இற்கு) | யூரோ (யூரோ 1இற்கு) | பின்லாந்து பிராங்கு (மார்க்கா 10 இற்கு) | பிரான்சிய பிராங்கு (பிராங்கு 10 இற்கு) | ஹொங்கொங் டொலர் (டொலர் 10 இற்கு) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 08.01.02 | 2 | 46.35 | 58.00 | 236.50 | 19.80 | 55.90 | 107.15 | 40.80 | 79.85 | 134.25 | 121.70 | 114.30 |
| 15.01.02 | 4 | 46.70 | 58.00 | 237.25 | 19.80 | 55.95 | 107.35 | 40.80 | 79.80 | 134.20 | 121.65 | 114.70 |
| 22.01.02 | 6 | 46.05 | 57.60 | 237.25 | 19.65 | 55.35 | 106.60 | 40.50 | 79.25 | 133.30 | 120.80 | 114.70 |
| 29.01.02 | 8 | 46.50 | 57.10 | 237.25 | 19.45 | 55.80 | 105.70 | 40.15 | 78.55 | 132.10 | 119.75 | 114.70 |
| 05.02.02 | 10 | 45.40 | 55.90 | 237.35 | 19.05 | 56.30 | 103.55 | 39.35 | 76.90 | 129.35 | 117.25 | 114.75 |
| 12.02.02 | 12 | 45.80 | 56.75 | 237.10 | 19.35 | 56.00 | 105.00 | 39.90 | 78.05 | 131.30 | 119.00 | 114.70 |
| 19.02.02 | 14 | 46.25 | 56.80 | 237.35 | 19.35 | 56.25 | 105.20 | 39.95 | 78.15 | 131.40 | 119.10 | 114.70 |
| 26.02.02 | 16 | 45.90 | 56.90 | 237.40 | 19.40 | 56.05 | 105.40 | 40.05 | 78.30 | 131.70 | 119.35 | 114.75 |
| 05.03.02 | 18 | 46.70 | 56.50 | 238.30 | 19.30 | 56.40 | 104.65 | 39.75 | 77.75 | 130.80 | 118.55 | 115.20 |
| 13.03.02 | 20 | 47.05 | 57.40 | 239.75 | 19.60 | 56.95 | 106.30 | 40.40 | 79.00 | 132.90 | 120.45 | 115.85 |
| 19.03.02 | 22 | 47.70 | 58.00 | 240.50 | 19.80 | 57.25 | 107.40 | 40.80 | 79.80 | 134.20 | 121.65 | 116.25 |
| 26.03.02 | 24 | 48.45 | 58.15 | 242.15 | 19.85 | 57.85 | 107.60 | 40.90 | 80.00 | 134.55 | 121.95 | 117.05 |
| 02.04.02 | 26 | 48.90 | 58.10 | 243.10 | 19.85 | 57.45 | 107.55 | 40.90 | 80.00 | 134.50 | 121.95 | 117.50 |
| 09.04.02 | 28 | 48.60 | 58.65 | 243.25 | 20.00 | 57.75 | 108.50 | 41.25 | 80.70 | 135.70 | 123.00 | 117.70 |
| 16.04.02 | 30 | 49.20 | 58.75 | 243.20 | 20.05 | 57.75 | 108.90 | 41.25 | 80.85 | 135.95 | 123.25 | 117.55 |
| 23.04.02 | 32 | 49.70 | 59.40 | 243.75 | 20.25 | 58.40 | 109.95 | 41.80 | 81.70 | 137.45 | 124.60 | 117.80 |
| 30.04.02 | 34 | 50.10 | 60.30 | 244.00 | 20.55 | 58.90 | 111.55 | 42.40 | 82.95 | 139.50 | 126.45 | 117.95 |
| 07.05.02 | 36 | 49.60 | 61.20 | 243.95 | 20.90 | 58.80 | 113.40 | 43.05 | 84.25 | 141.65 | 128.40 | 117.95 |
| 14.05.02 | 38 | 50.05 | 61.15 | 244.15 | 20.85 | 59.10 | 112.95 | 43.00 | 84.15 | 141.50 | 128.25 | 118.00 |
| 21.05.02 | 40 | 50.75 | 61.50 | 244.10 | 21.00 | 59.55 | 113.95 | 43.25 | 84.65 | 142.35 | 129.05 | 118.00 |
| 28.05.02 | 42 | 51.35 | 61.60 | 244.20 | 21.00 | 59.95 | 114.00 | 43.35 | 84.75 | 142.50 | 129.20 | 118.05 |
| 04.06.02 | 44 | 52.15 | 62.30 | 244.15 | 21.25 | 59.90 | 115.35 | 43.85 | 85.75 | 144.20 | 130.70 | 118.00 |
| 11.06.02 | 46 | 52.55 | 63.15 | 244.30 | 21.55 | 60.05 | 116.95 | 44.45 | 86.90 | 146.15 | 132.50 | 118.10 |
| 18.06.02 | 48 | 51.65 | 63.25 | 244.35 | 21.55 | 59.55 | 117.00 | 44.50 | 87.00 | 146.35 | 132.65 | 118.10 |
| 25.06.02 | 50 | 52.75 | 64.55 | 244.25 | 22.00 | 60.25 | 119.50 | 45.40 | 88.80 | 149.35 | 135.40 | 118.05 |
| 02.07.02 | 52 | 51.65 | 66.45 | 244.00 | 22.65 | 60.65 | 122.95 | 46.75 | 91.40 | 153.75 | 139.35 | 117.95 |
| 09.07.02 | 54 | 51.45 | 65.65 | 244.15 | 22.40 | 60.35 | 121.10 | 46.20 | 90.30 | 151.90 | 137.70 | 118.00 |
| 16.07.02 | 56 | 51.50 | 66.45 | 244.05 | 22.65 | 60.10 | 122.75 | 46.75 | 91.45 | 153.80 | 139.40 | 117.95 |
| 23.07.02 | 58 | 51.0 | 67.60 | 243.80 | 23.05 | 59.50 | 125.05 | 47.55 | 93.00 | 156.40 | 141.80 | 117.85 |
| 30.07.02 | 60 | 49.40 | 65.95 | 244.10 | 22.50 | 58.05 | 122.15 | 46.40 | 90.75 | 152.65 | 138.40 | 118.00 |
| 06.08.02 | 62 | 49.60 | 65.90 | 244.40 | 22.50 | 58.25 | 122.05 | 46.35 | 90.70 | 152.55 | 138.25 | 118.10 |
| 13.08.02 | 64 | 49.30 | 64.95 | 244.20 | 22.15 | 58.55 | 120.30 | 45.70 | 89.35 | 150.30 | 136.20 | 118.05 |
| 20.08.02 | 66 | 50.35 | 66.00 | 244.25 | 22.50 | 59.05 | 122.25 | 46.45 | 90.80 | 152.75 | 138.45 | 118.05 |
| 27.08.02 | 68 | 50.15 | 65.15 | 244.60 | 22.25 | 59.20 | 120.75 | 45.85 | 89.65 | 150.80 | 136.70 | 118.25 |
| 03.09.02 | 70 | 50.60 | 65.65 | 244.30 | 22.40 | 59.05 | 121.65 | 46.20 | 90.35 | 151.95 | 137.70 | 118.10 |
| 10.09.02 | 72 | 50.30 | 65.55 | 243.90 | 22.35 | 58.95 | 121.40 | 46.10 | 90.20 | 151.65 | 137.50 | 117.90 |
| 17.09.02 | 74 | 50.45 | 68.40 | 244.10 | 22.10 | 58.25 | 120.40 | 45.60 | 89.20 | 150.00 | 135.95 | 118.00 |
| 24.09.02 | 76 | 50.30 | 65.65 | 244.05 | 22.40 | 58.45 | 121.55 | 46.20 | 90.30 | 151.90 | 137.70 | 117.95 |
| 01.10.02 | 78 | 50.05 | 65.80 | 244.45 | 22.45 | 58.35 | 121.40 | 46.30 | 90.55 | 152.30 | 138.05 | 118.15 |
| 08.10.02 | 80 | 50.45 | 65.55 | 244.45 | 22.35 | 57.90 | 121.40 | 46.10 | 90.20 | 151.70 | 137.50 | 118.15 |
| 15.10.02 | 82 | 50.40 | 66.10 | 244.40 | 22.55 | 58.10 | 122.40 | 46.50 | 90.95 | 152.95 | 138.65 | 118.15 |
| 22.10.02 | 84 | 50.90 | 64.95 | 244.50 | 22.15 | 58.60 | 120.25 | 45.70 | 89.35 | 150.30 | 136.20 | 118.20 |
| 29.10.02 | 86 | 51.20 | 65.45 | 244.70 | 22.35 | 58.90 | 121.20 | 46.05 | 90.10 | 151.50 | 137.35 | 118.30 |
| 05.11.02 | 88 | 51.20 | 66.35 | 244.55 | 22.65 | 59.15 | 122.85 | 46.70 | 91.30 | 153.55 | 139.20 | 118.20 |
| 12.11.02 | 90 | 52.10 | 67.95 | 244.95 | 23.20 | 59.05 | 125.85 | 47.80 | 93.50 | 157.25 | 142.55 | 118.40 |
| 19.11.02 | 92 | 52.00 | 67.85 | 244.95 | 23.15 | 58.30 | 125.65 | 47.75 | 93.35 | 157.00 | 142.30 | 118.40 |
| 26.11.02 | 94 | 52.10 | 66.80 | 245.25 | 22.80 | 58.60 | 123.80 | 47.00 | 91.95 | 154.65 | 140.15 | 118.55 |
| 03.12.02 | 96 | 51.75 | 66.75 | 245.20 | 22.75 | 59.15 | 123.65 | 46.95 | 91.85 | 154.45 | 140.00 | 118.50 |
| 10.12.02 | 98 | 52.05 | 67.95 | 245.50 | 23.15 | 59.15 | 125.90 | 47.80 | 93.50 | 157.20 | 142.50 | 118.70 |
| 17.12.02 | 100 | 52.40 | 68.80 | 245.60 | 23.45 | 59.30 | 127.50 | 48.40 | 94.70 | 159.25 | 144.35 | 118.70 |
| 24.12.02 | 102 | 52.15 | 69.05 | 245.55 | 23.55 | 59.75 | 127.95 | 48.60 | 95.00 | 159.80 | 144.85 | 118.70 |
| 31.12.02 | 104 | 52.05 | 70.20 | 245.65 | 23.95 | 59.00 | 130.00 | 49.35 | 96.55 | 162.40 | 147.20 | 118.75 |

| நடை முறையான நாள் | சுற்றறிக்கை எண் | இத்தாலிய லீறா (லீறா 1000 இற்கு) | யப்பானிய யென் (யென் 100 இற்கு) | குவைத் தினார் (தினார் 1 இற்கு) | நெதர்லாந்து கில்டர் (கில்டர் 1இற்கு) | நோர்வே குரோனர் (குரோனர் 10 இற்கு) | ஓமானிய றியால் (றியால் 1 இற்கு) | சவூதி அரேபிய றியால் (றியால் 1 இற்கு) | சிங்கப்பூர் டொலர் (டொலர் 1இற்கு) | சுவீடன் குரோனர் (குரோனர் 10 இற்கு) | சுவிட்சர்லா. பிராங்கு (பிராங்கு 1 இற்கு) | ஐ.அரபிய எமிரேற்ஸ் திறாம் (திறாம் 10இற்கு) | ஐ. இராச்சிய பவுண் (பவுண் 1 இற்கு) | ஐ.அமெரிக்க டொலர் (டொலர் 1 இற்கு) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 08.01.02 | 2 | 41.25 | 68.15 | 290.40 | 36.20 | 100.20 | 231.55 | 23.75 | 48.40 | 86.60 | 54.00 | 24.25 | 128.90 | 90.10 |
| 15.01.02 | 4 | 41.20 | 67.65 | 291.10 | 36.20 | 100.10 | 232.25 | 23.85 | 48.55 | 87.05 | 53.85 | 24.35 | 128.95 | 90.35 |
| 22.01.02 | 6 | 40.95 | 67.65 | 291.00 | 35.95 | 99.90 | 232.35 | 23.85 | 48.80 | 85.85 | 53.85 | 24.35 | 128.75 | 90.40 |
| 29.01.02 | 8 | 40.55 | 66.35 | 290.40 | 35.65 | 99.60 | 232.35 | 23.85 | 48.65 | 84.95 | 53.45 | 24.35 | 127.55 | 90.40 |
| 05.02.02 | 10 | 39.75 | 66.50 | 290.35 | 34.90 | 98.10 | 232.45 | 23.85 | 48.70 | 84.00 | 52.05 | 24.35 | 126.35 | 90.40 |
| 12.02.02 | 12 | 40.30 | 66.35 | 290.50 | 35.45 | 99.60 | 232.35 | 23.85 | 48.80 | 84.35 | 52.95 | 24.35 | 126.80 | 90.40 |
| 19.02.02 | 14 | 40.35 | 67.45 | 291.00 | 35.45 | 100.75 | 232.40 | 23.85 | 49.00 | 85.15 | 52.70 | 24.35 | 128.150 | 90.40 |
| 26.02.02 | 16 | 40.45 | 66.80 | 291.00 | 35.55 | 100.75 | 232.50 | 23.85 | 48.85 | 85.65 | 52.95 | 24.35 | 128.20 | 90.45 |
| 05.03.02 | 18 | 40.15 | 67.45 | 291.75 | 35.30 | 101.05 | 233.35 | 23.95 | 49.05 | 85.65 | 52.60 | 24.45 | 127.60 | 90.80 |
| 13.03.02 | 20 | 40.80 | 70.10 | 294.15 | 35.85 | 102.55 | 234.75 | 24.10 | 49.55 | 87.00 | 53.60 | 24.60 | 128.50 | 91.30 |
| 19.03.02 | 22 | 41.20 | 70.00 | 295.55 | 36.20 | 102.75 | 235.50 | 24.20 | 49.80 | 87.45 | 54.60 | 24.70 | 128.90 | 91.60 |
| 26.03.02 | 24 | 41.30 | 68.70 | 296.95 | 36.30 | 103.85 | 237.10 | 24.35 | 49.80 | 88.75 | 54.75 | 24.85 | 129.90 | 92.25 |
| 02.04.02 | 26 | 41.30 | 68.85 | 298.05 | 36.30 | 103.60 | 238.05 | 24.45 | 49.65 | 88.60 | 54.50 | 24.95 | 130.60 | 92.60 |
| 09.04.02 | 28 | 41.65 | 69.75 | 298.95 | 36.60 | 105.45 | 238.40 | 24.50 | 50.10 | 89.35 | 55.15 | 25.00 | 131.55 | 92.75 |
| 16.04.02 | 30 | 41.75 | 69.55 | 298.65 | 36.70 | 106.00 | 238.15 | 24.45 | 49.90 | 88.85 | 55.20 | 24.95 | 131.75 | 92.65 |
| 23.04.02 | 32 | 42.20 | 70.50 | 299.60 | 37.10 | 107.55 | 238.70 | 24.50 | 50.50 | 89.20 | 55.75 | 25.00 | 133.05 | 92.85 |
| 30.04.02 | 34 | 42.85 | 71.95 | 300.80 | 37.65 | 109.35 | 238.95 | 24.55 | 51.00 | 89.90 | 56.60 | 25.05 | 134.10 | 92.95 |
| 07.05.02 | 36 | 43.50 | 72.30 | 301.50 | 38.20 | 110.95 | 238.90 | 24.55 | 50.95 | 90.80 | 57.85 | 25.05 | 135.00 | 92.95 |
| 14.05.02 | 38 | 43.45 | 72.35 | 301.45 | 38.20 | 111.10 | 239.05 | 24.55 | 51.05 | 90.05 | 57.85 | 25.05 | 134.70 | 93.00 |
| 21.05.02 | 40 | 43.70 | 73.05 | 301.75 | 38.40 | 112.25 | 239.00 | 24.55 | 51.25 | 91.90 | 58.25 | 25.05 | 134.20 | 93.00 |
| 28.05.02 | 42 | 43.75 | 73.75 | 301.90 | 38.45 | 114.10 | 239.15 | 24.55 | 51.30 | 92.70 | 58.15 | 25.05 | 134.05 | 93.00 |
| 04.06.02 | 44 | 44.30 | 74.00 | 302.30 | 38.90 | 114.95 | 239.05 | 24.55 | 51.45 | 94.40 | 58.55 | 25.05 | 133.95 | 93.00 |
| 11.06.02 | 46 | 44.90 | 73.85 | 302.75 | 39.45 | 116.75 | 239.20 | 24.55 | 51.35 | 94.20 | 59.10 | 25.10 | 134.25 | 93.05 |
| 18.06.02 | 48 | 44.95 | 74.10 | 303.05 | 39.50 | 117.00 | 239.25 | 24.55 | 51.50 | 95.35 | 58.95 | 25.10 | 135.95 | 93.10 |
| 25.06.02 | 50 | 45.85 | 74.55 | 303.70 | 40.30 | 120.45 | 239.20 | 24.55 | 51.85 | 98.10 | 60.40 | 25.05 | 137.90 | 93.05 |
| 02.07.02 | 52 | 47.20 | 76.90 | 304.90 | 41.50 | 122.70 | 238.95 | 24.55 | 52.10 | 100.60 | 62.15 | 25.05 | 141.05 | 92.95 |
| 09.07.02 | 54 | 46.65 | 77.20 | 304.50 | 41.00 | 122.85 | 239.05 | 24.55 | 52.10 | 98.40 | 61.45 | 25.05 | 140.85 | 93.00 |
| 16.07.02 | 56 | 47.20 | 78.95 | 305.60 | 41.50 | 124.55 | 239.00 | 24.55 | 52.75 | 99.05 | 62.20 | 25.05 | 142.90 | 92.95 |
| 23.07.02 | 58 | 48.05 | 79.25 | 306.20 | 42.20 | 124.85 | 238.70 | 24.50 | 53.10 | 99.05 | 63.75 | 25.00 | 144.80 | 92.85 |
| 30.07.02 | 60 | 46.90 | 77.40 | 305.55 | 41.20 | 119.60 | 239.00 | 24.55 | 52.15 | 97.65 | 62.70 | 25.05 | 144.20 | 93.00 |
| 06.08.02 | 62 | 46.85 | 77.50 | 305.65 | 41.15 | 120.35 | 239.30 | 24.55 | 52.60 | 96.00 | 62.45 | 25.10 | 144.65 | 93.10 |
| 13.08.02 | 64 | 46.15 | 76.85 | 304.60 | 40.55 | 119.80 | 239.15 | 24.55 | 52.20 | 96.25 | 61.30 | 25.05 | 140.35 | 93.00 |
| 20.08.02 | 66 | 46.90 | 78.30 | 305.35 | 41.20 | 122.70 | 239.15 | 24.55 | 52.80 | 98.40 | 61.95 | 25.05 | 142.10 | 93.05 |
| 27.08.02 | 68 | 46.30 | 77.10 | 305.10 | 40.70 | 121.20 | 239.55 | 24.60 | 52.55 | 97.55 | 60.95 | 25.10 | 140.40 | 93.20 |
| 03.09.02 | 70 | 46.65 | 77.60 | 305.15 | 41.00 | 122.10 | 239.25 | 24.55 | 52.60 | 98.20 | 61.35 | 25.10 | 142.65 | 93.05 |
| 10.09.02 | 72 | 46.55 | 77.50 | 304.85 | 40.90 | 122.65 | 238.85 | 24.50 | 52.50 | 98.10 | 61.80 | 25.05 | 143.25 | 92.90 |
| 17.09.02 | 74 | 46.05 | 75.50 | 304.35 | 40.45 | 121.80 | 239.05 | 24.55 | 51.80 | 97.80 | 60.75 | 25.05 | 142.60 | 93.00 |
| 24.09.02 | 76 | 46.65 | 74.65 | 304.35 | 41.00 | 122.50 | 238.95 | 24.55 | 51.70 | 100.00 | 61.70 | 25.05 | 143.00 | 92.95 |
| 01.10.02 | 78 | 46.75 | 75.40 | 304.90 | 41.10 | 123.05 | 239.40 | 24.55 | 51.80 | 99.35 | 61.85 | 25.10 | 144.00 | 93.15 |
| 08.10.02 | 80 | 46.60 | 74.85 | 304.85 | 40.95 | 123.75 | 239.40 | 24.55 | 51.70 | 99.45 | 61.75 | 25.10 | 144.10 | 93.10 |
| 15.10.02 | 82 | 46.95 | 74.30 | 305.15 | 41.25 | 124.90 | 239.35 | 24.55 | 51.15 | 99.80 | 62.20 | 25.10 | 143.85 | 93.10 |
| 22.10.02 | 84 | 46.15 | 73.55 | 304.30 | 40.55 | 120.65 | 239.40 | 24.60 | 51.55 | 98.55 | 60.80 | 25.10 | 142.40 | 93.15 |
| 29.10.02 | 86 | 46.55 | 74.20 | 304.65 | 40.90 | 122.20 | 239.65 | 24.60 | 51.95 | 98.95 | 61.40 | 25.10 | 143.05 | 93.20 |
| 05.11.02 | 88 | 47.15 | 75.15 | 305.40 | 41.45 | 124.00 | 239.50 | 24.60 | 52.20 | 100.70 | 62.45 | 25.10 | 144.30 | 93.15 |
| 12.11.02 | 90 | 48.30 | 77.05 | 307.00 | 42.45 | 127.75 | 239.85 | 24.60 | 52.55 | 102.85 | 63.95 | 25.15 | 146.85 | 93.30 |
| 19.11.02 | 92 | 48.20 | 76.70 | 306.80 | 42.35 | 127.60 | 239.85 | 24.65 | 52.40 | 102.80 | 63.7 | 25.15 | 146.05 | 93.30 |
| 26.11.02 | 94 | 47.50 | 75.25 | 306.45 | 41.70 | 126.00 | 240.15 | 24.65 | 52.20 | 102.35 | 62.45 | 25.15 | 145.75 | 93.45 |
| 03.12.02 | 96 | 47.45 | 75.20 | 306.15 | 41.65 | 126.05 | 240.10 | 24.65 | 52.30 | 101.95 | 62.25 | 25.15 | 144.05 | 93.40 |
| 10.12.02 | 98 | 48.30 | 75.10 | 307.05 | 42.40 | 128.45 | 240.35 | 24.70 | 52.45 | 103.20 | 63.55 | 25.20 | 146.00 | 93.50 |
| 17.12.02 | 100 | 48.90 | 76.80 | 307.95 | 42.95 | 129.25 | 240.45 | 24.70 | 52.95 | 103.60 | 64.10 | 25.20 | 147.10 | 93.55 |
| 24.12.02 | 102 | 49.05 | 76.90 | 307.90 | 43.10 | 130.45 | 240.45 | 24.70 | 53.10 | 104.60 | 65.00 | 25.20 | 148.30 | 93.55 |
| 31.12.02 | 104 | 49.85 | 77.20 | 309.00 | 43.80 | 132.55 | 240.55 | 24.70 | 53.40 | 105.25 | 66.50 | 25.20 | 148.60 | 93.55 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

தொடர்பு எண்: 08/24/002/005/01

**பத்திரப் பிணையங்களைப் பாதுகாப்பில் வைத்திருப்பதன் மீதான பணிப்புரைகள்**

உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் கட்டளைச்சட்டம் மற்றும் பதிவு செய்யப்பட்ட பங்குத்தொகுதிகள் பிணையங்கள் கட்டளைச்சட்டம் என்பனவற்றின்கீழ் 2000ஆம் ஆண்டு மாச்சு 1ஆம் நாள் சனாதிபதியினால் பிறப்பிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் பிரிவு 10இன் கீழ் வழங்கப்படும் இப்பணிப்புரை 2002 சனவரி 1ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும்.

**கே.ஜி.டீ.டீ. தீரசிங்க**
பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்

கொழும்பு
1 சனவரி 2002.

1. ஒன்றிற்கு மேற்பட்ட வாடிக்கையாளரின் சார்பில் நேரடி வணிக பங்கேற்பாளர் கொள்வனவு செய்த, பெற்ற அல்லது வைத்திருக்கும் பிணையொன்றினை நேரடி வணிக பங்கேற்பாளர்கள் பிணையத்திலுள்ள அத்தகைய ஒவ்வொரு வாடிக்கையாளர்களினதும் உரிமைகளைக் காட்டும் விதத்தில் கணக்குகளைப் பேணுமிடத்து நேரடி வணிக பங்குபற்றுபற்றுனரொருவர், நேரடி வணிக பங்குபற்றுனரால் கொள்வனவு செய்யப்பட்ட, பெறப்பட்ட அல்லது வைத்திருக்கப்பட்ட எந்த ஒரு பிணையத்தினையும் வாடிக்கையாளர் பெயரிலுள்ள பாதுகாப்பு பிணையங்கள் கணக்கில் வாடிக்கையாளர் பேரில் வைப்புச்செய்யலாம், என்பதுடன் அத்தகைய பிணையம் அத்தகைய அனைத்து வாடிக்கையாளர்களினதும் சார்பில் பாதுகாப்பு பிணையங்கள் கணக்கில் பேணப்பட்டு வரலாம்.
2. நேரடி வணிக பங்குபற்றுநர் ஒருவர், வாடிக்கையாளர் சார்பில் வைத்திருக்கும் பிணையங்கள், வாடிக்கையாளரினால் நேரடி வணிக பங்குபற்றுநர் ஒருவருக்கு எழுத்து மூலமாக வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கிணங்க மட்டுமே வணிகம் செய்யமுடியும்.
3. வாடிக்கையாளர் ஒருவரின் சார்பில் நேரடி வணிக பங்கு பற்றுநரொருவரினால் பிணையங்கள் வைத்திருக்கப்படுமிடத்து அத்தகைய பிணையங்கள் நேரடி வணிக பங்குபற்றுநரின் அல்லது நேரடி வணிக பங்குபற்றுநரின் மற்றைய வாடிக்கையாளர்களின் பிணையங்களிலிருந்து புறம்படுத்தப்பட வேண்டியதுடன் பாதுகாப்பாகவும் மீட்கத்தக்க கட்டுக்காப்பிலும் வைத்திருக்கப்படுத்தலும் வேண்டும்.
4. வாடிக்கையாளரின் சார்பில் நேரடி வணிக பங்குபற்றுநரினால் வைத்திருக்கப்படும் பிணையங்கள் வாடிக்கையாளர்களுக்காக வைத்திருக்கப்படுகின்றது என நேரடி வணிக பங்குபற்றுநரின் பதிவேடுகளில் தெளிவாக இனங்காட்டப்பட்டிருக்க வேண்டியதுடன், நேரடி வணிக பங்குபற்றுநரின் ஒரு பகுதிச் சொத்தாகக் கொள்ளப்படக்கூடாது.
5. வாடிக்கையாளரின் சார்பில் வைத்திருக்கப்படும் பிணையங்கள் தொடர்பான நேரடி வணிக பங்குபற்றுநரின் பதிவேடுகள் மத்திய வங்கியினாலும் வாடிக்கையாளர் அல்லது வாடிக்கையாளரின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளினதும் பரிசோதனைகளுக்கு ஏற்புடைய சட்டங்களுக்கு அமைவாக, நியாயமான காலப்பகுதியில் கிடைக்கத்தக்கதாக இருத்தல் வேண்டும்.
6. வணிகள் நேரடிப் பங்குபற்றுநரொருவர் கட்டுக்காப்பில் வைத்திருக்கப்படும் பிணையங்கள் தொடர்பான கூற்றுக்களை மாதாந்த அடிப்படையில் அட்டவணை 1 இலுள்ள படிவத்தில் மத்திய வங்கிக்கு சமர்ப்பிக்க வேண்டும்.
7. நேரடி வணிக பங்குபற்றநரொருவர் அட்டவணை IIஇல் உள்ள படிவத்தில் வாடிக்கையாளர் சார்பாக பிணையங்களின் கொள்வனவுகள் மற்றும் விற்பனைகள் தொடர்பாக, அவரின் வாடிக்கையாளருக்கு உறுதிப்படுத்தலினை வழங்கலாம். அத்துடன் வாடிக்கையாளரின் சார்பில் நேரடி வணிக பங்குபற்றுநர் வசமுள்ள பிணையங்கள் தொடர்பாக மாதாந்த கூற்று ஒன்றினை வாடிக்கையாளருக்கு வழங்குதல் வேண்டும். ஒன்றிற்கு மேற்பட்ட வாடிக்கையாளரின் சார்பில் நேரடி வணிக பங்குபற்றுநர் பிணையங்களை கொண்டிருக்குமிடத்து, நேரடி வணிக பங்குபற்றுநர் அத்தகைய வாடிக்கையாளர் ஒவ்வொருவருக்கும், வாடிக்கையாளர் பிணையங்களின் உரிமைகளைப் பெற்றுக்கொள்ளும் நேரத்தில், வாடிக்கையாளருக்குரித்தான பிணையங்களின் குறித்துரைக்கப்பட்ட தொடர் எண், அத்தகைய பிணையத்தின் மீது வாடிக்கையாளருக்கு செலுத்த வேண்டிய நறுக்குவீதம் ஏதுமிருப்பின் அதனையும் அட்டவணை IIஇல் உள்ள படிவத்தில் குறித்துரைத்து உறுதிப்பாட்டினை வழங்க வேண்டும்.

அட்டவணை 1

.................... மாதத்திற்கான வாடிக்கையரின் சார்பில் கட்டுக்காப்பில் வைத்திருக்கப்பட்ட பிணையங்களின் பதிவேடு

| கொள்வனவு நாள் | வாடிக்கையாளரின் பெயர் | உறுதிப்படுத்தல் கடிதத்தின் தொடர்பு எண் | கொள்வனவு தொகை (முகப்பு பெறுமதி) | முதிர்ச்சி நாள் | தி.உண்டியல்/ தி. முறி | பகுதி/ முழு உடமை | திறை.உ முறியின் முகப்பு பெறுமதி | பிணையங்கள் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | உள்ளே | | வெளியே | |
| | | | | | | | | கையொ. | நாள் | கையொ. | நாள் |
| | | | | | | | | | | | |

அட்டவணைII

**<u>உறுதிப்படுத்தல் பத்திரம்</u>**

கட்டுக்காப்பு ஒழுங்குகளின்கீழ் திறைசேரி உண்டியல்களின் கொள்வனவு

தொடர்பு எண் :
திகதி :
வாடிக்கையாளரின் பெயர் :
முகவரி :
அன்புள்ள ஐயா/ அம்மணி :

**<u>திறைசேரி உண்டியல்களின் கொள்வனவு</u>**

உமது விண்ணப்பம் தொடர்பாக, வேறுவிதமாக அறிவுறுத்தல் விடுக்கப்பட்டாலன்றி, பின்வரும் திறைசேரி உண்டியல்/ உண்டியல்கள் உங்களின் சார்பில் எங்கள் கட்டுக்காப்பில் உள்ளன என்பதை இத்தால் உறுதிப்படுத்துகின்றோம். முதிர்ச்சியின் போது நீங்கள் முகப்புப் பெறுமதியினைப் பெறுவீர்கள்.

1. முகப்புப் பெறுமதி :
2. திறைசேரி உண்டியல் எண் :
3. திறைசேரி உண்டியலின் உடமை-முழுமையான அல்லது பகுதி உடமை :-
4. கொள்வனவு நாள் :
5. விளைவு :
6. விலை :
7. முதிர்ச்சி நாள் :

உங்கள் உண்மையுள்ள,

............................................ ............................................................

முகாமையாளர் அங்கீகரிக்கப்பட்ட அலுவலர்

அட்டவணை II

**உறுதிப்படுத்தல் பத்திரம்**

கட்டுக்காப்பில் வைத்திருக்கும் ஒழுங்குகளின்கீழ் திறைசேரி முறிகளின் கொள்வனவு

தொடர்பு எண் :

நாள் :

வாடிக்கையாளரின் பெயர் :

முகவரி :

அன்பான ஐயா/ அம்மணி :

**திறைசேரி முறிகளின் கொள்வனவு**

உங்கள் விண்ணப்பம் தொடர்பாக, வேறு விதமாக அறிவுறுத்தல் விடுக்கப்பட்டாலன்றி பின்வரும் திறைசேரி முறி/முறிகள் உங்களின் சார்பாக எங்களின் கட்டுக்காப்பில் இருக்கும். முதிர்ச்சியின் போது நீங்கள் முகப்புப் பெறுமதியினைப் பெறுவதுடன் வேறுவிதமான அறிவித்தல் எழுத்தில் விடுக்கப்பட்டாலன்றி நறுக்குக் கொடுப்பனவு நாளன்று வட்டிக் கொடுப்பனவினைப் பெறுவீர்கள்.

1. முகப்புப் பெறுமதி :
2. திறைசேரி முறி எண் :
3. திறைசேரி முறிகளின் சொத்துடமை, முழு அல்லது பகுதியளவான சொத்துடமை:
4. நறுக்கு வீதம் :
5. விளைவு :
6. கொள்வனவு நாள் :
7. நறுக்கு கொடுப்பனவு நாள் :
8. முதிர்ச்சி நாள் :
9. ஒன்று சேர்ந்த வட்டி :
10. உண்மையான விலை :
11. கண்ணியமற்ற விலை :

உங்கள் உண்மையுள்ள,

.......................................... ..............................................................

முகாமையாளர் அங்கீகரிக்கப்பட்ட அலுவலர்

## நிதியியல் கூற்றுக்கள் மீதான பணிப்புரை

உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டம் மற்றும் பதிவு செய்யப்பட்ட பங்குத்தொகுதிகள் பிணையங்கள் கட்டளைச்சட்டம் என்பனவற்றின்கீழ் 2000ஆம் ஆண்டு மாச்சு 1ஆம் நாள் சனாதிபதியால் பிறப்பிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் பிரிவு 10(2)இன் கீழ் வழங்கப்படும் இப்பணிப்புரை 2002 சனவரி 1ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும்.

**கே.ஜி.டீ.டீ. தீரசிங்க**

பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்

கொழும்பு

*1 சனவரி 2002*

1. 2002 சனவரி 1ஆம் நாளிலிருந்து முதனிலை வணிகர்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களில் குறித்துரைக்கப்பட்ட கணக்கீட்டு முறையியலுக்கு இணங்க, தமது ஆண்டு நிதியியல் கூற்றுக்கள் ஐந்தொகை மற்றும் இலாபநட்டக் கணக்கினைத் தயாரிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

2. மேலும், முதனிலை வணிகர்கள் அரசிற்குச் சொந்தமான அரச பிணையங்கள் கணக்கினைப் புறம்புபடுத்தல் மீதான பணிப்புரைகளுக்கு இணங்க, முதலீட்டு கணக்கு மற்றும் வர்த்தகப்படுத்தல் கணக்கு ஆகிய இருவேறுபட்ட கணக்குகளில் ஒன்றில், அவர்களது அரசிற்குச் சொந்தமான பிணையங்கள் சொத்துப்பட்டியலை பேணுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

3. முதனிலை வணிகர்களின் ஆண்டு நிதியியல் கூற்றுக்கள் இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க, இலங்கை மத்திய வங்கியுடன் பதிவுசெய்து கொண்டுள்ள வெளியக கணக்காய்வாளரினால் கணக்காய்வு செய்யப்பட வேண்டும்.

4. முதனிலை வணிகர்களின் கணக்காய்வு செய்யப்பட்ட ஆண்டு நிதியியல் கூற்றுக்கள் தொடர்பான நிதியாண்டு முடிவடைந்து ஐந்து (5) மாதங்களுக்குள் இலங்கை மத்திய வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனக் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

5. கணக்காய்வு செய்யப்படாத ஆண்டு நிதியியல் கூற்றுக்கள் தொடர்பான நிதியாண்டு முடிவடைந்த மூன்று 3 மாதங்களுக்கிடையில் இலங்கை மத்திய வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்குமாறு முதலிலை வணிகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

6. முதனிலை வணிகர்கள் நிதியாண்டிற்கான அவர்களது ஐந்தொகை மற்றும் இலாபநட்டக் கூற்றுக்களை இலங்கையிலுள்ள செய்தித் தாள்களில் பெரும்பாலும் மூன்று மொழிகளிலும் (சிங்களம், தமிழ், ஆங்கிலம்) அல்லது குறைந்தது ஆங்கிலமொழிச் செய்தித்தாள்களிலாவது தொடர்பான நிதியாண்டு முடிவடைந்த ஆறு (6) மாதங்களுக்குள் வெளியிட வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

7. முதனிலை வணிகர்கள், ஒவ்வொரு அரையாண்டுக்குமான அவர்களின் கணக்காய்வு செய்யப்படாத ஐந்தொகை மற்றும் இலாபநட்டக் கூற்றுக்கள் தொடர்பான அரையாண்டு முடிவடைந்த இரண்டு (2) மாதங்களுக்கிடையில் இலங்கையின் செய்தித்தாள்களில் பெரும்பாலும் மூன்று மொழிகளிலும் (சிங்களம், தமிழ், ஆங்கிலம்) அல்லது குறைந்தது ஆங்கிலமொழிச் செய்தித்தாள்களிலாவது வெளியிட வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## அரசிற்குச் சொந்தமான பிணையங்கள் கணக்கினை

## புறம்பாக்கல் மீதான பணிப்புரை

உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் கட்டளைச்சட்டம் மற்றும் பதிவு செய்யப்பட்ட பங்குத்தொகுதிகள் பிணையங்கள் கட்டளைச்சட்டம் என்பனவற்றின்கீழ் 2000ஆம் ஆண்டு மாச்சு 1ஆம் நாள் சனாதிபதியினால் பிறப்பிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் பிரிவு 10(2)இன் கீழ் வழங்கப்படும் இப்பணிப்புரை 2002 சனவரி 1ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும்.

**கே.ஜி.டீ.டீ. தீரசிங்க**

பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்

கொழும்பு

10 சனவரி 2002

1. 2002 சனவரி 1ஆம் நாளன்று முதனிலை வணிகர்கள் அவர்களது அரசிற்குச் சொந்தமான பிணையங்கள் சொத்துப்பட்டியலை இருவகைகளாக: முதலீட்டுக்கணக்கு, வர்த்தகப்படுத்தல் கணக்கு என வகைப்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர்.
2. அரச பிணையங்களை அத்தகைய வகைகளாக வகைப்படுத்துவதற்கான பிரமாணங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**வர்த்தகப்படுத்தல் கணக்கு**

(அ) சந்தை விலைகளிலும், விளைவுகளிலும் ஏற்படுகின்ற குறுங்கால மாற்றங்களிலிருந்து இலாபத்தினைப் பெற்றுக்கொள்வதற்காக கிரமமான அடிப்படையில் வர்த்தகப்படுத்தும் குறிப்பிட்ட நோக்கத்திற்காக பொறுப்பேற்கப்பட்ட அரச பிணையங்கள் வர்த்தகப்படுத்தல் கணக்கில் வைத்திருக்கப்பட வேண்டும்.

(ஆ) வர்த்தகப்படுத்தல் கணக்கில் வைத்திருக்கப்படும் அரச பிணையங்கள் மத்திய வங்கியினால் திரட்டப்பட்ட நிறையேற்றப்பட்ட சராசரி சந்தை விலைகளின் மீதான வாராந்த அறிக்கைகளைப் பயன்படுத்தி வாராந்த அடிப்படையில் மீளமதிப்பிடப்பட வேண்டும் அல்லது “சந்தைக்கு குறிக்கப்படல்” வேண்டும்.

(இ) வர்த்தக கணக்கில் வைத்திருக்கப்படும் பிணையங்கள் மீதான எந்தவொரு இலாபமும் அல்லது இழப்பும் வருவாய்களாகக் கருதப்பட வேண்டும்.

**முதலீட்டுக் கணக்கு**

(அ) முதிர்ச்சி வரை வைத்திருப்பதற்கென சாதகமான நோக்குடனும் இயலாற்றலுடனும் பெற்றுக்கொள்ளப்பட்ட அரச பிணையங்களை முதலீட்டுக் கணக்கில் வைத்துக்கொள்ள வேண்டும். இப்பிணையங்களிலிருந்து கிரமமான வட்டி வருவாயினைப் பெற்றுக்கொள்ளும் உத்தேசத்தினை முதனிலை வணிகர்கள் கொண்டிருத்தல் வேண்டும். முதலீட்டுக் கணக்கிற்கு வகைப்படுத்தப்பட்ட பிணையங்கள் ஆவணப்படுத்தப்பட வேண்டியதுடன் முதனிலை வணிகரின் முதன்மை நிறைவேற்று அலுவலரினால் அங்கீகரிக்கப்பட்டு மாதாந்த நிதியியல் கூற்றுக்களுடன் இலங்கை மத்திய வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(ஆ) முதலீட்டுக்கணக்கிலுள்ள பிணையங்களை மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களுக்குப் பயன்படுத்தலாம்.

(இ) முதலீட்டுக்கணக்கிலுள்ள பிணையங்களை பின்வரும் விதிவிலக்கல்களுடன் மீட்சிக்காலப்பகுதியில் கொள்விலையில் அறிக்கையிடலாம்.

(i) முதலீட்டுக்கணக்கில் பிணையங்கள் கொண்டிருக்கும் பெறுமதிகள் ஒன்று சேர்ந்த கழிவிடலுக்கான கணக்கீட்டிற்காக சீராக்கம் செய்யப்படக்கூடியதாகும். (அல்லது கட்டணத்தினைக் குறைத்தல்) சீராக்கங்கள் முதிர்ச்சிக்காலப்பகுதியில் நேர்கோட்டு அடிப்படையில் தீர்க்கப்பட வேண்டும்.

(ii) முதலீட்டுக்கணக்கில் பிணையங்கள் கொண்டிருக்கும் பெறுமதிகள் தற்காலிகமானவை நீங்கலாக எதிர்பார்க்கப்படும் பெறுமதியில் ஏற்படும் (அதாவது வீழ்ச்சியானது பிணையத்தின் பெறுமதியில் நிரந்தரமான குறைப்பினை ஏற்படுத்துமாயின்) ஏதாவது குறைப்பின் பேரில் அவற்றின் நியாயமான பெறுமதிக்கு குறைத்து எழுதப்படலாம்.

(iiii) மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களிலுள்ள தற்காலிக மாற்றுக் கொடுக்கல் வாங்கல்களின்கீழ் பயன்படுத்தப்பட்ட முதலீட்டுக் கணக்கிலுள்ள பிணையங்கள் கொண்டிருக்கும் பெறுமதி நேர்மாற்றல் அல்லது கொடுக்கல் வாங்கல்களின் "இரண்டாவது படிமுறை" முடிவுறுத்தப்பட்டதன் பின்னர் இலாபத்தன்மையினைப் பிரதிபலிக்கும் விதத்தில் சீராக்கப்படலாம்.

(iv) வர்த்தகப்படுத்தல் கணக்குகளிலிருந்து முதலீட்டுக்கணக்கிற்கு மாற்றல் செய்யப்பட்ட பிணையங்கள் கொண்டிருக்கும் பெறுமதி மாற்றல் செய்வதற்கு முன்னர் சந்தைக்கு குறிப்பிடப்பட வேண்டும். ஆகவே மீள்மதிப்பீட்டின் காரணமாக ஏற்படும் எந்த ஒரு இலாபமும் அல்லது நட்டமும் மாற்றலுக்கு முன்னைய வருவாய்களில் அறிந்து கொள்ளப்பட்டிருக்கும். முதலீட்டுக்கணக்கிற்கு மாற்றல் செய்யப்படும் வேளையில் பிணையங்களின் சந்தைப் பெறுமதி அதன் பின்னர் கணக்கீட்டு நோக்கத்திற்காக "வரலாற்று ரீதியான செலவு" என மாற்றமுறும்.

**பிணையங்களின் மீள்வகைப்படுத்தல்**

(அ) வர்த்தகப்படுத்தல் கணக்கிற்கும் முதலீட்டுக்கணக்கிற்குமிடையிலான பிணையங்களின் மாற்றல் நியாயப்படுத்தக்கூடியதாகவும் ஆவணப்படுத்தப்பட்டு அங்கீகரிக்கப்படக்கூடியதாகவும் இருத்தல் வேண்டும். சொத்துப்பட்டியல் மாற்றல்கள் தொடர்பான கூற்றுக்கள் ஏதுமிருப்பின் அது முதனிலை வணிகர்களின் முதன்மை நிறைவேற்று அலுவலரினால் கையொப்பமிடப்பட்டு மாதாந்த நிதியியல் கூற்றுக்களுடன் சேர்த்து பொதுப்படுகடன் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(ஆ) சொத்துப்பட்டியல் மாற்றல்களை மிக அரிதாகவே மேற்கொள்ளல் வேண்டும். முதலீட்டுக் கணக்கிலிருந்தும் முதலீட்டுக்கணக்கிற்கும் சொத்துப்பட்டியல் மாற்றல் செய்வதனை நியாயப்படுத்தக்கூடிய சூழல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(i) அனுமதிக்கத்தக்க முதலீட்டுப் பிணையங்களின் வகை அல்லது மட்டம் தொடர்பாக நியதி மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளில் மாற்றமொன்று ஏற்படுகையில்

(ii) முதனிலை வணிகர்கள் அவற்றின் முதலீட்டு உடைமைகளைக் குறைப்பதற்கு கடமைப்படுத்தும் வகையில் மூலதனத் தேவைப்பாடுகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்று ஏற்படுகையில்

(iii) முதனிலை வணிகர்களின் இடர்நேர்வு தோற்றப்பாட்டினைப் பேணுவதற்கு பிணையங்களின் விற்பனையை அவசியப்படுத்தும் முக்கியமானதொரு வியாபார நிகழ்வு ஏற்படுகையில்

(iv) மூலதனப் போதுமை விகிதத்தினைக் கணக்கிடும் நோக்கத்திற்காக அரச பிணையங்களுக்கு வழங்கப்பட்டுள்ள இடர்நேர்வு நிறையில் குறிப்பிடத்தக்கதொரு மாற்றம் ஏற்படுகையில்.

## சொந்தப் பிணையங்கள் கணக்குகளில் சந்தை மீள்மதிப்பீடு

பிணையங்கள் கணக்கின் சந்தை மீள்மதிப்பீடு மற்றும் கணக்கிடல் முறைகளின் மீதான வழிகாட்டல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 1**

**சொந்தப் பிணையங்கள் கணக்குகளின் சந்தை மீள்மதிப்பீடு**

| *விபரங்கள்* | *கணக்கிடல் முறைமை* |
|---|---|
| i. மூலதனக் கணக்கு | ஏடுகளை செலவில் பேணுதல் மீட்புக்காலப்பகுதி முழுவதற்கும் வட்டத்தை அல்லது கழிவை பதிவழித்தல்.<br>தற்காலிகமானவை நீங்கலாக எதிர்பார்க்கப்படும் குறைப்பிற்கு சீராக்கம் செய்தல் முதலீட்டு பிணையங்கள் மீதான மூலதன இலாபங்களுக்கு (நட்டங்கள்) விதிக்கப்படும் முதிர்ச்சிக்கு முன்னைய விற்பனையிலிருந்தான இலாபம் (நட்டம்) மூலதனத்துடன் சேர்க்கப்படும். முதலீட்டு பிணைங்களிலிருந்தான இலாபங்கள் (நட்டங்கள்) வருமானத்துடன் சேர்க்கப்படும். |

| | |
|---|---|
| ii. வர்த்தகப்படுத்தல் கணக்கு | இலங்கை மத்திய வங்கியின் சந்தை வீதங்களைப் பயன்படுத்தி குறைந்தது வாரந்தோறுமாவது சந்தைகளைக் குறிப்பிடல் வேண்டும். முதிர்ச்சிக்கு முன்னைய விற்பனையிலிருந்தான இலாபம் (நட்டம்) மூலதனத்துடன் சேர்க்கப்படும். முதலீட்டுப் பிணையங்கள் மீதான மூலதன இலாபங்களுக்கு (நட்டங்கள்) வருமானமாகக் கொள்ளப்படுகின்றது. |
| iii. நிதியிடல் கொடுக்கல் வாங்கல்களில் பயன் படுத்தப்படும் பிணையங்கள் (மீள்கொள்வனவு நேர்மாற்று மீள்கொள்வனவு) | ஐந்தொகையில் பிணையங்களை வைத்திருத்தல்<br>வெளிநின்ற பிணையங்களின் பெறுமதி (அதாவது மீள்கொள்வனவின் நேர்மாற்று அத்துடன் அல்லது நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படாதவிடத்து) இலாப அழைப்புக்களுக் கேற்ப சீராக்கப்பட வேண்டும்.<br>ஏட்டு வட்டி வருமானம் செலவு ஐந்தொகைக்கு அது வெளிக்கிடையானதோ அல்லது உட்கிடையானதோ; வட்டி வருமான அல்லது வட்டிச் செலவுக்கணக்கு. |
| iv. வர்த்தகப்படுத்தலிருந்து முதலீட்டுக் கணக்கிற்கு பிணைய ங்களை மீள வகைப்படுத்தல் | நடைமுறைச் சந்தை வீதத்தில் மீளவகைப்படுத்தப்பட்ட பிணையம்<br>நடைமுறை சந்தை வீதங்கள், பிணையத்தின் "வரலாற்று ரீதியான செலவாக" மாறும். |
| v. முதலீடுகளிலிருந்து வர்த்தக கணக்கு களுக்கு பிணையங்களை மீள வகைப் படுத்தல் | மாற்றல்கள் அடிப்படையில் விற்பனையொன்றாக அமைவதால் (அதாவது உத்தேசம்) மீள்வகைப்படுத்தலிலிருந்தான இலாபம் (நட்டம்) வருமானத்துடன் சேர்க்கப்படல் வேண்டும். |

## அரச பிணையங்களுக்கான கணக்கிடல்

**அரச பிணையங்கள்**

**முதலீட்டுப் பிணையங்கள்**

↓

முதிர்ச்சி வரையில் வைத்திருப்பதற்கான சாத்தியமான உத்தேசம் மற்றும் இயலாற்றத்திற்கான சான்று கொண்ட நீண்டகால முதலீடுகள்

↓

வரலாற்றுரீதியான (கடன் தீர்ப்பனவுச்) செலவில் மேற்கொள்ளல்; பெறுமதி நிரந்தரமாகக் குறைவதற்கான சான்று காணப்படுகையில் மீள்மதிப்பிடல்

↓

முதிர்ச்சிக்கு முன்னர் மீட்கப்படுமாயின் மூலதன இலாபம் (நட்டம்) வருமானத்திற்கு சேர்த்தல்

↓

பிரமாணங்கள் பூர்த்தி செய்யப்படும்போது மட்டும் வர்த்தகப்படுத்தல்கணக்கிற்கு மீளவகைப்படுத்தல்

↓

மீள்கொள்வனவு நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களுக்கு பயன்படுத்தப்படுமாயின் (முதனிலை வணிகர் விற்பனையாளர்) ஐந்தொகையில் முதலீட்டுப் பிணையங்களின் கீழ் வைத்திருத்தல்

**வர்த்தகப்படுத்தப்படுகின்ற பிணையங்கள்**

↓

சந்தை விலைகளில் ஏற்படும் தளம்பல்களிருந்து அனுகூலங்களைப் பெறுவதற்கான குறுங்கால முதலீடுகள்

↓

இலங்கை மத்திய வங்கியின் சந்தை வீதங்களை அடிப்படையாகக்கொண்டு வாரத்திலாவது சந்தைக்கு குறியிட்டு சந்தைப்பெறுமதியில் மேற்கொள்ளல்

↓

மீள்மதிப்பிடலிலிருந்தான இலாபத்தினை/ (நட்டத்தினை) வருமானமாக எடுத்தல்

↓

ஒருமுறை வரைவிலக்கணம் செய்யப்பட்ட பின்னர் வர்த்தகப்படுத்தல் பிணையங்களின் மீள்வகைப்படுத்தல் பெரும்பாலும் ஒருபோதும் செய்யப்படுவதில்லை

## உள்நாட்டுத் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டம்

*1995ஆம் ஆண்டின் 31ஆம் இலக்கச் சட்டத்தினால் இறுதியாகத் திருத்தப்பட்டவாறான உள்நாட்டுத் திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 420) 16ஆம் பிரிவின் கீழ் நிதியமைச்சரினால் மேற்கொள்ளப்பட்ட ஒழுங்கு விதிகள்.*

**பெப்புருவரி 2002** **நிதியமைச்சர்**

### ஒழுங்கு விதிகள்

1. இவ்வொழுங்கு விதிகள் 2002ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளை (முதனிலை வணிகர்கள்) ஒழுங்கு விதிகள் என எடுத்துக் காட்டப்படலாம், என்பதுடன் இது 2002 பெப்புருவரி 1ஆம் நாளிலிருந்தும் நடைமுறைக்கு வரும்.

**2. முதனிலை வணிகர்களின் நியமனம்**

(1) கட்டளைச் சட்டத்தின் நோக்கங்களுக்காக, முதனிலை வணிகர்களை நியமிப்பதற்கான பிரமாணங்கள் நாணயச்சபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படலாம்.

(2) கட்டளைச் சட்டங்கள், மற்றைய எந்தவொரு எழுதப்பட்ட சட்டம், பணிப்புரைகள், வழிகாட்டல்கள். தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் மற்றும் ஒப்பந்தங்கள் போன்ற பொருந்தத்தக்கவை எவையாக இருப்பினும் அவற்றிற்கு இணங்க, முதனிலை வணிகர்கள் முதலாந்தர மற்றும் இரண்டாந்தரச் சந்தையில் மத்திய வங்கிக்கு இணையான கட்சியினராக திறைசேரி உண்டியல்களின் கொடுக்கல் வாங்கலில் நேரடியாக ஈடுபடவும் திறைசேரி உண்டியல்களை அதன் சொந்தக் கணக்குகளுக்கும் வாடிக்கையாளர்களின் கணக்குகளுக்கும் மாற்றல் செய்யவும் முடியும்.

(3) நாணயச்சபையினால் நியமிக்கப்பட்ட ஒவ்வொரு முதனிலை வணிகர்களும் இவ்வொழுங்கு விதிகளுக்கும் மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட எந்தவொரு பணிப்புரைகளுக்கும் வழிகாட்டல்களுக்கும் கட்டுப்படுபவர்களாகவும் இணங்கி ஒழுகுபவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

**3. முதனிலை வணிகர்களாக நியமிக்கப்படுவதற்கான விண்ணப்பம்**

(1) முதனிலை வணிகர்களாக நியமிக்கப்படுவதற்கான விண்ணப்பத்தினை மத்திய வங்கியின் உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றினாலோ அல்லது எந்தவொரு கம்பனியினாலுமோ அல்லது முதனிலை வணிகர்களின் நடவடிக்கைகளை கொண்டு நடாத்தும் நோக்கத்திற்காக உருவாக்கப்பட்ட கம்பனியாயின் அத்தகைய கம்பனியொன்றின் ஊக்குவிப்பாளரினால் இங்கே அட்டவணை 1 அல்லது அட்டவணை 11இல் தரப்பட்டுள்ள பொருத்தமான வடிவில் அட்டவணை 1 அல்லது 11 இற்கான இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களுடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும்.

(2) முதனிலை வணிகர்களாக நியமிக்கப்படுவதற்கு பொருத்தமான விண்ணப்பதாரிகளை பரிசீலிக்கும் நோக்கத்திற்காக அவசியமானது என மத்திய வங்கி கருதும் அத்தகைய தகவல்களையும் ஆவணங்களையும் விண்ணப்பதாரி மத்திய வங்கிக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

(3) முதனிலை வணிகர்களாக நியமிக்கப்படுவதற்குள்ள விண்ணப்பதாரிகளின் பொருத்தமான தன்மையினை உறுதிப்படுத்துவதற்குத் தேவையானதென கருதுகின்ற அத்தகைய விசாரணைகளை அதன் பணிப்பாளர்களினதும் முதன்மை அலுவலர்களினதும் தகுதி, நற்பண்பு, நேர்மை, மற்றும் பொருத்தமானதன்மை என்பன உள்ளிட்டவற்றை மத்திய வங்கி நடாத்தும்.

**4. நியமனம்**

முதனிலை வணிகர்களின் அனுமதிக்காக நாணயச்சபையினால் பின்பற்றப்படும் பிரமாணங்களின் அடிப்படையிலும் தேசிய பொருளாதாரத்தின் நலவுரித்துக்கள் மற்றும் முதனிலை வணிகர்முறை என்பனவற்றின் அடிப்படையிலான அக்கறையைக் கருத்திற்கொண்டு முதனிலை வணிகர்களாக நியமிக்கப்படுவதற்கான பொருத்தமான தன்மையைக் கொண்ட விண்ணப்பதாரர் ஒருவரை மத்திய வங்கி முதனிலை வணிகராக நியமிக்கலாம்.

**5. முதனிலை வணிகர்களாக நியமிக்கப்படவுள்ள உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு பொருந்தத்தக்க நிபந்தனைகள்**

உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றினை நாணயச்சபை முதனிலை வணிகர்களாக நியமிக்குமிடத்து வங்கி பின்வரும் நிபந்தனைகளுக்கு இணங்கி ஒழுக வேண்டும்.

(1) (அ)உரிமம் பெற்ற வர்த்தக வங்கி காலத்திற்குக் காலம் நாணயச்சபையினால் தீர்மானிக்கப்படும் குறைந்த தொகையொன்றில் "முதனிலை வணிகர் சிறப்பு ஒதுக்கு" என்றழைக்கப்படும். சிறப்பு ஒதுக்கு, ஒன்றினை உருவாக்கிப் பேண வேண்டும். முதனிலை வணிகர் சிறப்பு ஒதுக்கு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் முதனிலை வணிகர் தொழிற்பாடுகள் மற்றும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் நடவடிக்கைகளிலிருந்து எழும் கடப்பாடுகளுக்கே பிரத்தியேகமாகப் பயன்படுத்தப்பட வேண்டும்.

(ஆ) துணைப்பந்தி (1) (அ) இன் கீழ் தீர்மானிக்கப்பட்ட குறைந்த தொகையில் ஏதாவது மாற்றங்கள் இருக்குமிடத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்படும்.

(இ) துணைப்பந்தி (1)(ஆ) இல் ஏதாவது மாற்றங்கள் செய்யப்படும் பொழுது துணைப்பந்தி 1 (அ) அல்லது துணைப்பந்தி 1(ஆ)இல் தீர்மானிக்கப்பட்ட குறைந்ததொகையை அதிகரிக்குமாறு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் கேட்டுக் கொள்ளப்படும். நாணயச்சபைக்கு விண்ணப்பிக்குமிடத்து அது அத்தகைய தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு ஆறு மாதகாலப்பகுதியினை (6) அல்லது அத்தகைய நீண்ட காலப்பகுதியினை உரிமம் பெற்ற வர்த்தக் வங்கிகளுக்கு வழங்கும்.

(2) உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் முதனிலை வணிகர் நடவடிக்கைகள் தொடர்பாக தனியான கணக்கேடுகளைப் பேண வேண்டியதுடன், அவ்வாறான முதனிலை வணிகர் நடவடிக்கைகளை தனியான பிரிவொன்றில் நடாத்தவும் வேண்டும்.

(3) உரிமம் பெற்ற வர்த்தக வங்கி அதன் பணிப்பாளர் சபையில் இன்னொரு முதனிலை வணிகர் கம்பனியின் பணிப்பாளருக்கோ ஊழியருக்கோ இடமளித்தலாகாது.

(4) உரிமம் பெற்ற வர்த்தக வங்கியின் முதனிலை வணிகர் தொழிற்பாடுகள் அத்தகைய வங்கியில் மூத்த முகாமைத்துவப் பதவியிலிருக்கும் தகுதியும் அதிகாரமும் பெற்ற ஆள் ஒருவரின் தலைமையினைக் கொண்டிருக்க வேண்டியதுடன், அவர் அவரது முழு நேரத்தையும் அத்தகைய முதனிலை வணிகர் தொழிற்பாட்டிற்கே அர்ப்பணிக்கவும் வேண்டும்.

(5) உரிமம் பெற்ற வர்த்தக வங்கி, முதனிலை வணிகர் நடவடிக்கைகள் மற்றும் தொழிற்பாடுகள் தொடர்பாக மத்திய வங்கியினால் காலத்திற்குக் காலம் விதிக்கப்படும் தொழிற்பாட்டு வழிகாட்டல்களுக்கும் முன்மதியுடைய தேவைப்பாடுகளுக்கும் உட்பட்டதாகும்.

(6) உரிமம் பெற்ற வர்த்தக வங்கியின் முதனிலை வணிகர் நடவடிக்கைகளும் தொழிற்பாடுகளும் மத்திய வங்கியினால் கண்காணிக்கப்பட்டு மேற்பார்வை செய்யப்படும்.

**6. முதனிலை வணிகர்களாக நியமிக்கப்படுகின்ற கம்பனிகளுக்குப் பொருந்தத்தக்க நிபந்தனைகள்**

கம்பனியொன்று நாணயச்சபையினால் முதனிலை வணிகர்களாக நியமிக்கப்படுமிடத்து அதன் பின்னர் அக்கம்பனி "முதனிலை வணிகர் கம்பனி" எனக் குறிப்பிடப்படுவதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் இணங்கி ஒழுகுதல் வேண்டும்.

(1) கம்பனியின் அமைப்பு விதி, அதன் குறிக்கோள்களை இவ்வொழுங்கு விதிகளின் அட்டவணை 111 இல் குறிப்பிடப்பட்டுள்ள அதன் நடவடிக்கைகளுக்கும் அல்லது அத்தகைய நடவடிக்கைகளுடன் தொடர்பானவற்றுக்கும் வரையறுக்க வேண்டும்.

(2) கம்பனியானது நாணயச் சபையில் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படுகின்றவாறான ஆகக் குறைந்த மூலதனத்தைப் பேண வேண்டியதுடன் இதில் அடுக்கு 11 மூலதனம் அடுக்கு 1 மூலதனத்தின் 50 சதவீதத்தினை விஞ்சக்கூடாது.

(3) கம்பனியானது அதன் பணிப்பாளர் சபையில் கம்பனியின் ஊழியரான தலைமை நிறைவேற்று அலுவலரைத் தவிர இன்னொரு முதனிலை வணிகர் கம்பனியின் பணிப்பாளரையோ அல்லது ஒரு ஊழியரையோ கொண்டிருக்க கூடாது.

(4) கம்பனியானது வங்கித்தொழில் சட்டத்தின் நியதிகளின்படி உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றின் பணிப்பாளருக்குப் பொருந்தத்தக்க எந்தஒரு தகுதியீனத்திற்கும் உட்பட்ட ஒருவருக்கு அதன் பணிப்பாளர் சபையில் இடமளித்தலாகாது. எனினும், உரிமம்பெற்ற வர்த்தக வங்கி முதனிலை வணிகராக இல்லாதவிடத்து அதன் ஊழியர் அல்லது பணிப்பாளர் ஒருவர் முதனிலை வணிகர் கம்பனியின் பணிப்பாளராவதற்கு தகுதியற்றவராகமாட்டார்.

(5) ஆரேனும் ஒரு ஆள் வைத்திருக்கும் பங்குடமை அந்த முதனிலை வணிகர் கம்பனியின் நலவுரித்துக் கட்டுபாடுகளில் மாற்றங்களை விளைவிக்கக் கூடியளவிற்கு இருக்குமாயின் நாணயச்சபையின் எழுத்து மூலமான ஒப்புதல் இல்லாமல் அக்கம்பனி பதிவு செய்யப்படமாட்டாது. இந் நோக்கத்திற்காக "கட்டுப்படுத்துகின்ற நலவுரித்து" என்பது கம்பனியின் செலுத்தப்பட்ட மூலதனத்தில் 51% அல்லது கூடுதலானது எனக் கருதப்படும்.

(6) கம்பனியின் செலுத்தப்பட்ட மூலதனத்தில் 10 சதவீதத்திற்கும் கூடுதலான பங்கினைக் கொண்டிருக்கும் ஒருவர், ஒரு தொகுதிக் கம்பனியாகவோ அல்லது ஏதேனும் மற்றைய முதனிலை வணிகர் கம்பனியின் துணைக் கம்பனியாகவோ இருக்குமிடத்து நாணச்சபையின் எழுத்து மூலமான ஒப்புதலில்லாமல் அக்கம்பனி பதிவு செய்யப்படமாட்டாது.

**7. முதனிலை வணிகர் கம்பனியொன்றின் மூலதனத்தின் மாறும் தன்மை**

(1) நாணய்ச்சபையானது முதனிலை வணிகர் முறையின் ஆற்றல் வாய்ந்த தன்மை, உறுதிப்பாடு மற்றும் தேசிய பொருளாதாரத்தின் நலவுரித்துக்கள் என்பனவற்றைக் கவனத்திற் கொண்டு முதனிலை வணிகர் கம்பனியினரினால் பேணப்பட வேண்டிய மூலதனத் தேவைப்பாட்டினை தீர்மானிப்பதுடன் அத்தகைய தீர்மானம் காலத்திற்குக் காலம் மாறவும் கூடும். இத்துணைப் பந்தியின் கீழ் நாணயச்சபையினால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு தீர்மானமோ அல்லது மாற்றமோ அனைத்து முதனிலை வணிகர் கம்பனிகளுக்கும் எழுத்து மூலமாக அறிவிக்கப்படும்.

(2) மேலேயுள்ள துணைப்பந்தி (1) இன் கீழ் மாறும் தன்மையின் காரணமாக அவற்றின் மூலதனத்தினை அதிகரிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்ட முதனிலை வணிகர் கம்பனிகள் அத்தகைய தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு ஆறு மாத காலப்பகுதியினை அல்லது அத்தகையதொரு நீண்ட காலப்பகுதியினை வழங்குமாறு நாணயச்சபைக்கு விண்ணப்பிக்குமிடத்து நாணயச்சபை அத்தகைய காலப்பகுதியினை வழங்கும்.

(3) இவ்வொழுங்கு விதிகளின் நியதிகளுக்கிணங்க பேணப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட ஆகக் குறைந்த மட்டத்திற்குக் குறைவாக முதனிலை வணிகர் கம்பனி ஒன்றின் மூலதனம் வீழ்ச்சியடைந்தால் அத்தகைய நிலைமை பற்றி காலந்தாழ்த்தாமல் மத்திய வங்கிக்கு எழுத்து மூலமாக அறிவித்தல் வேண்டும்.

(4) இவ்வொழுங்கு விதிகளின் நியதிகளின்படி பேணப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட ஆகக் குறைந்த மூலதனத்தைப் பேணத்தவறிய முதனிலை வணிகர் கம்பனியின் நியமனத்தினை இடைநிறுத்தும் அல்லது இரத்துச் செய்யும் நாணயச்சபையின் உரிமைகளுக்கு எவ்வித பாதிப்புமில்லாதவிதத்தில், மூலதனத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியினை ஈடு செய்வதற்கு நாணயச் சபையினால் தீர்மானிக்கப்பட்ட ஒரு காலப்பகுதியினை வழங்குவது மூலதன வணிகர் முறையின் நலவுரித்துக்களுக்கு அல்லது தேசிய பொருளாதாரத்திற்கும் நலன் பயத்திடுமென நாணயச்சபை கருதுமாயின் அவ்வாறு செய்யலாம். நாணயச்சபை அவ்வாறு வழங்கும் அனுமதி அது விதிக்கப்படக்கூடிய அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைக்களுக்கு உட்பட்டதாகும்.

**8. பொருள் சார்ந்த நலவுரித்து**

முதனிலை வணிகர் ஒருவர் இன்னொரு முதனிலை வணிகர் கம்பனியின் பொருள் சார்ந்த நலவுரித்துக்களை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வாங்கவோ அல்லது உடனடியாகப் பெறவோ கூடாது. இந் நோக்கத்திற்காக" பொருள் சார்ந்த நலவுரித்து" கருத்து அத்தகைய முதனிலை வணிகர் கம்பனியின் வழங்கப்பட்ட மூலதனத்தில் 10 சதவீதத்திற்கும் கூடுதலான பங்குடமை எனப் பொருள்படும்.

**9. முதனிலை வணிகர்களின் கடமைகளும் சிறப்புரிமைகளும்**

(1) முதனிலை வணிகர் ஒருவர் பிணையங்களுக்கான முதலாந்தர, இரண்டாந்தர சந்தைகளில் மத்திய வங்கியுடன் இணைக்கட்சியினராக நடந்துகொள்ளும் உரிமைகளைக் கொண்டிருப்பர்.

(2) முதனிலை வணிகர் ஒருவர் மத்திய வங்கியினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்பட்டு முதனிலை வணிகருக்கு தெரியப்படுத்தப்படும் தன்மை மற்றும் மட்டங்களில் முதலாந்தரச் சந்தையில் பங்கேற்க வேண்டும்.

(3) முதனிலை வணிகர் பிணையங்களின் இரண்டாந்தரச் சந்தையினை உருவாக்கவும் அதனைப் பேணுவதற்குமான பொறுப்புக்களையும் கொண்டிருப்பார்.

(4) முதனிலை வணிகரொருவர் பிணையங்களின் பங்குத் தொகுதியினை பேணுவதற்கான மட்டங்களுக்கு இணங்கியொழுக வேண்டியதுடன் காலத்திற்குக் காலம் மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்பட்டு முதனிலை வணிகர்களுக்கு தெரியப்படுத்தப்படும் விதத்தில் இரண்டாந்தரச் சந்தையில் பங்கேற்க வேண்டும்.

(5) முதனிலை வணிகரொருவர் தனது சொந்தப்பேரிலும் வாடிக்கையாளர்களின் பேரிலும் பிணையங்கள் தொடர்பான கொடுக்கல் வாங்கல்களிலீடபடுவதற்கான உரிமையினைக் கொண்டிருப்பர்.

(6) முதனிலை வணிகரொருவர் மத்திய வங்கியினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்பட்டு முதனிலை வணிகர்களுக்கு தெரியப்படுத்தப்படும் தகுதி நியமங்களையும் உள்கட்டமைப்பு வசதிகளையும் பேணவேண்டும்.

(7) முதனிலை வணிகரொருவர் வாடிக்கையாளரைப் பொறுத்தவரையில் பங்குடைமையின் முதிர்ச்சியடைந்த பெறுகைகளின் சேகரிப்பு மற்றும் கொடுப்பனவுகள் மற்றும் பிணையங்கள் மீதான வட்டி போன்றவை தொடர்பாகவும் தனது சொந்த சொத்துக்களிலிருந்து வாடிக்கையாளரின் சொத்துக்களை தனியாகப் பிரிக்கும் நோக்கம் தொடர்பாகவும் நம்பிக்கைப் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும். மூடப்படுகையில் வாடிக்கையாளரின் சொத்துக்கள் முதனிலை வணிகர்களின் சொத்துக்களின் ஒரு பகுதியாக அமையக்கூடாது.

(8) முதனிலை வணிகரொருவர் அதன் வாடிக்கையாளர்களுடனான கொடுக்கல் வாங்கல்களில் கடுமையான இரகசியங்களைப் பேண வேண்டும்.

(9) முதனிலை வணிகரொருவர் அவர்களுக்காக மத்திய வங்கியினால் காலத்துக்குக் காலம் உருவாக்கப்பட்ட தொழிற்பாட்டு கையேடு நடத்தைச் சட்டக்கோவை மற்றும் ஏனைய வழிகாட்டல்களுக்கு இணங்க அவர்களின் வியாபாரத்தையும் நடவடிக்கைகளையும் மேற்கொள்ளலாம்.

**10. முதனிலை வணிகர்களை மேற்பார்வை செய்தல், பரீட்சித்தல் மற்றும் புலனாய்வு செய்தல்**

(1) முதனிலை வணிகரினால் நடத்தப்பட்டுவரும் வியாபாரம் முதனிலை வணிகர்களின் வாடிக்கையாளர்களின் நலவுரித்துக்களுக்கும், முதனிலை வணிகர் முறைக்கும் பாதகமில்லாமல் நடந்து கொள்வதனையும் அத்துடன் அல்லது முதனிலை வணிகர்கள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் அத்துடன் கட்டளைச் சட்டத்தின் கீழ் இயற்றப்பட்ட ஒழுங்குவிதிகள், தொழிற்பாட்டு கையேடு, நடத்தைச் சட்டக்கோவை, வழிகாட்டல்கள் மற்றும் ஏனைய எழுதப்பட்ட பொருத்தமான சட்டங்கள் என்பனவற றுக்கு இணங்கத் தொழிற்படுவதனையும் உறுதிப்படுத்துகின்ற நோகத்திற்காக மத்திய வங்கி முதனிலை வணிகர்களை மேற்பார்வை மற்றும் பரீட்சிப்புச் செய்வதுடன் முதனிலை வணிகர்களில் குறிப்பிடப்பட்ட எந்தவொரு விடயத்தையும் அல்லது நடவடிக்கையையும் புலனாய்வு செய்யலாம்.

(2) முதனிலை வணிகர் கம்பனியொன்று அதன் முதனிலை வணிகர் என்ற நடவடிக்கைகளுடன் தொடர்பான மின்னியல் மற்றும் காந்தநாடா என்பனவற்றில் பேணப்பட்ட பதிவுகள் உள்பட ஏடுகள். கணக்குகள், இடாப்புக்கள், கோவைகள் மற்றும் பதிவேடுகள் என்பனவற்றை மத்திய வங்கிக்குக் கிடைக்கச் செய்ய வேண்டியதுடன் துணைப்பந்தி (1)இல் குறிப்பிடப்பட்ட நோக்கங்களுக்காக தேவைப்படுத்தக்கூடிய எந்தவொரு தகவலையும் சமர்ப்பிக்க வேண்டும்.

(3) முதனிலை வணிகர் கம்பனியொன்றின் பணிப்பாளர்கள் மற்றும் அலுவலர்கள் துணைப்பந்தி (2)இன் கீழ் எந்தஒரு ஏடு, கணக்குகள், இடாப்புக்கள், கோவைகள் அல்லது தகவல்களைச் சமர்ப்பிக்கும்படி கேட்கப்படுமிடத்து அதனைச் சமர்ப்பிக்க வேண்டும்.

**11. செயலாற்றத்தின் மதிப்பீடு**

(1) முதனிலை வணிகர்களின் செயலாற்றமானது காலத்திற்குக் காலம் மத்திய வங்கியினால் பின்வரும் விடயங்களில் மதிப்பீடு செய்யப்படும்.

(அ) பிணையங்கள் தொடர்பான முதலாந்தரச் சந்தையில் அதன் பங்கேற்பு

(ஆ) பிணையங்களில் இரண்டாந்தரச் சந்தைகளை உருவாக்கிப் பேணல்

(இ) ஏற்புடைய சட்டங்கள், விதிகள், ஒழுங்கு விதிகள், பணிப்புரைகள், வழிகாட்டல்கள் மற்றும் நடத்தைச் சடடக்கோவை என்பனவற்றிற்கு இணங்கி ஒழுகியமைக்கான பதிவுகள்

(2) அத்தகைய மதிப்பீடுகளின்போது வெளிச்சத்திற்கு வரும் ஏதாவது குறைபாடுகள் பற்றி மத்திய வங்கியினால் முதனிலை வணிகர்களுக்கு அறிவிக்கப்படுவதுடன் அத்தகைய குறைபாடுகளை சரிசெய்வதற்கு முதனிலை வணிகர்கள் மத்திய வங்கியினால் விதந்துரைக்கப்படக் கூடிய எந்த ஒரு வழிமுறையையாவது பின்பற்ற வேண்டும்.

**12. பணிப்புரைகள்**

(1) இவ்வொழுங்கு விதிகளுடன் முதனிலை வணிகர்கள் இணங்கி ஒழுகுவதனை உறுதிப்படுத்துவதற்காக மத்திய வங்கி பணிப்புரைகளை விடுக்கக்கூடும். முன் கூறப்பட்ட பொதுவான தன்மைகளுக்கும் கட்டளைச் சட்டம் அல்லது மற்றைய எந்தவொரு எழுதப்பட்ட சட்டங்களுக்குக் கீழும் பணிப்புரைகளை வழங்குவதற்கான மத்திய வங்கியின் அதிகாரத்திற்குப் பாதிப்பில்லாத விதத்திலும், அத்தகைய பணிப்புரைகள் எல்லாவற்றிற்கும் அல்லது கீழேயுள்ள விடயங்களில் எந்த ஒன்றிற்கும் வழங்கப்படலாம்.

(அ) மத்திய வங்கியினால் நடத்தப்படுகின்ற பிணையங்களின் ஏலங்கள் மற்றும் முதனிலை வணிகர்களின் இரண்டாந்தரச் சந்தைத் தொழிற்பாடுகள் தொடர்பாக முதனிலை வணிகர்களால் இணங்கி ஒழுகப்பட வேண்டிய நடைமுறைகள்

(ஆ) மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட பிணையங்களின் முதலாந்தர ஏலங்களில் முதனிலை வணிகர்களினால் பங்கேற்கப்பட்ட ஆகக் குறைந்த மட்டம்

(இ) முதிர்ச்சிப் பெறுகைகளின் சேகரிப்பு மற்றும் கொடுப்பனவு மற்றும் பிணையங்கள் மீது வாடிக்கையாளர்களுக்கான வட்டி என்பன தொடர்பாக முதனிலை வணிகர்கள் இணங்கி ஒழுக வேண்டிய நிபந்தனைகள்.

(ஈ) முதனிலை வணிகர்களினால் ஏடுகள், பதிவேடுகள் மற்றும் கணக்குகளைப் பேணல்

(உ) உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் இடர் நேர் முகாமைத்துவ முறைகளின் போதுமை;

(ஊ) முதனிலை வணிகர்களினால் மத்திய வங்கிக்கு காலத்திற்குக் காலம் சமர்ப்பிக்கப்படும் அறிக்கைகள் அல்லது தகவல்கள்

(எ) முதனிலை வணிகர்களின் இரண்டாந்தரச் சந்தைத் தொழிற்பாடுகளுக்கான ஆகக் குறைந்தமட்டம்.

(ஏ) இரண்டாந்தரச் சந்தையில் பிணையங்கள் பங்குத் தொகுதிக்கான கேள்வியை ஈடுசெய்வதற்காக அத்தகைய பிணையங்களைப் பேணுதல்.

(ஐ) வாடிக்கையாளர்களின் மீது முதனிலை வணிகர்கள் விதிக்கக்கூடிய கட்டணங்கள்

(ஒ) முதனிலை வணிகர்கள் கம்பனியின் முதன்மை நிறைவேற்று அலுவலர் அல்லது உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றின் முதனிலை வணிகர் தொழிற்பாடுகளுக்கு தலைமை வகிக்கும் ஆளினதும் ஏனைய மூத்த நிறைவேற்று அலுவலர்களினதும் தேவைப்படுத்தப்பட்ட தகைமைகள்;

(ஓ) முதனிலை வணிகர்கள் அவர்களது கடமைகளைச் சரியான முறையில் நிறைவேற்றுவதற்காக அவர்களினால் பேணப்பட வேண்டிய உள்கட்டமைப்பு மற்றும் ஏனைய வசதிகள்;

(ஔ) அட்டவணை 111இன் பந்தி (1) இலிருந்து (3) வரையில் குறிப்பிடப்பட்டிருக்கும் நடவடிக்கைகளுடன் தொடர்புபட்ட தற்செயலான நடவடிக்கைகள் அல்லது வியாபாரங்களாக முதனிலை வணிகர் கம்பனிகளால் தமது நடவடிக்கைகள் மற்றும் வியாபாரங்களை மேற்கொள்ள முடியும்;

(க) மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்படும் மேற்பார்வை, பரீட்சிப்பு, புலனாய்வு அல்லது மதிப்பீடு என்பனவற்றின் போது வெளிச்சத்திற்குவரும் ஏதாவது தவறுகை அல்லது குறைபாட்டின் விளைவாகத் தோன்றும் எந்தஒரு நிலையையும் திருத்தல்;

(ங) பந்தி 13இன் கிழ் முதனிலை வணிகராக வியாபாரத்தையும் நடவடிக்கையையும் கொண்டு நடத்த இடைநிறுத்தப்பட்ட முதனிலை வணிகரினால் மத்திய வங்கி ஏனைய முதனிலை வணிகர்கள், நேரடிப் பங்கேற்பாளர்கள் மற்றும் வாடிக்கையாளர் என்போருக்கு ஆற்றப்பட வேண்டிய கடப்பாடுகளும் கடமைகளும்;

(ச) மூலதனம், ஒதுக்குகள் , மூலதனப் போதுமையும் ஏனைய முன்மதிகளும் மற்றும் தொழிற்பாட்டுத் தேவைப்பாடுகள்;

(2) கட்டளைச் சட்டத்தின், இவ்வொழுங்கு விதிகளின் அல்லது மற்றைய எந்த ஒரு ஏற்பாட்டிற்கும் அல்லது கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பணிப்புரைகளுக்கும் இணங்கி ஒழுகுவதற்கு முதனிலை வணிகர்கள் தவறும் சந்தர்ப்பங்களில் அல்லது அதன் வாடிக்கையாளர்களின் நலவுரித்துக்களுக்கு தீங்கு பயக்கக்கூடிய தன்மைகளைக்கொண்ட வியாபாரங்களை நடத்தும் சந்தர்ப்பத்தில், அவசியமானது எனக்கருதுமிடத்து நாணயச்சபை அத்தகைய புலனாய்வுகளை நடத்துவதுடன் அத்தகைய ஏற்பாடுகளுக்கு இணங்கி ஒழுகுமாறு அத்தகைய முதனிலை வணிகர்களுக்கு பணிப்புரைகளை வழங்க அல்லது அத்தகைய தன்மை கொண்ட வியாபாரங்களைக் கொண்டு நடத்துவதனை பணிப்புரையில் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய காலப்பகுதிக்கிடையில் நிறுத்திக் கொள்ளும்படியும் கேட்டுக் கொள்வதுடன் முதனிலை வணிகர் அத்தகைய பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகத் தவறுமிடத்து பந்தி 13இன் கீழான மற்றைய எந்த ஒரு நடவடிக்கைக்கும் பாதகமில்லாத விதத்தில் பொதுமக்களின் தகவலுக்காக முதனிலை வணிகர்களுக்கு வழங்கப்பட்ட அப் பணிப்புரைகளை அனைத்து மூன்று மொழிகளிலும் உள்நாட்டுச் செய்தித்தாள்களில் வெளியிட வேண்டும்.

***13. முதனிலை வணிகரொருவரின் நியமனத்தினை இடைநிறுத்தல் மற்றும் இரத்துச் செய்தல்***

(1) முதனிலை வணிகர் அவருக்குப் பொருந்தத்தக்க சட்டம் ஒழுங்குவிதி பணிப்புரை வழிகாட்டல் அல்லது நடத்தைச் சட்டக்கோவை என்பனவற்றிற்கு இணங்கி ஒழுகத் தவறியிருக்குமிடத்து அல்லது முதனிலை அல்லது முதனிலை வணிகர்முறை அல்லது தேசிய பொருளாதாரத்திற்கு நலவுரித்துக்களுக்கு தீங்கு பயக்கக்கூடிய தன்மைத்தான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமிடத்து நாணயச்சபை அத்தகைய முதனிலை வணிகர் வியாபாரத்தினையும் நடவடிக்கைகளையும் கொண்டு நடாத்துவதிலிருந்தும் ஆறுமாத காலப்பகுதியை விஞ்சாத காலப்பகுதிக்கு இடைநிறுத்தலாம் அல்லது முதனிலை வணிகரின் நியமனத்தினை இரத்துச் செய்யலாம்.

(2) நாணயச்சபையானது மேலேயுள்ள துணைப்பந்தி (1)இன் கீழ் முதனிலை வணிகரொருவரை முதனிலை வணிகராக வியாபாரத்தையும் நடவடிக்கையையும் கொண்டு நடாத்துவதிலிருந்தும் இடைநிறுத்துமிடத்து பின்வரும் சந்தர்ப்பங்களில் நாணயச்சபையானது அத்தகைய இடைநிறுத்தம் முடிவடையும் காலப்பகுதியில் அல்லது அதற்கு முன்னதாக இடைநிறுத்தத்தை மேலுமொரு காலப்பகுதிக்கு நீடிக்கலாம்.

(அ) முதனிலை வணிகரொருவர் மத்திய வங்கிக்கும், மற்றைய முதனிலை வணிகர்களுக்கும், நேரடிப் பங்காளர் மற்றும் வாடிக்கையாளர்களுக்கும் தமது கடப்பாடுகளையும் கடமைகளையும் சரியான முறையில் ஆற்றுவதனை உறுதிப்படுத்துவதற்கு மேலும் காலம் தேவைப்படுகிறது என்ற அபிப்பிராயமொன்று இருக்குமாயின்; அல்லது

(ஆ) முதனிலை வணிகர் அத்தகைய நீடிப்பிற்கான வேண்டுகோளை விடுக்குமிடத்து நாணயச்சபை அத்தகைய நீடிப்பு முதனிலை வணிகர் முறையின் நலவுரித்துக்களுக்கேற்றதாக இருக்குமென கருதுமிடத்தும்

இத்துணைப் பந்தியின் நியதிகளின்படி இடைநிறுத்தமொன்று நீடிக்கப்படக் கூடுமெனினும் அத்தகைய நீடிப்பு துணைப் பந்தி (1)இல் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய காலப்பகுதியை விஞ்சியிருக்கும்.

(3) இடைநிறுத்தத்திற்கு வழிவகுத்த சூழ்நிலை சரிசெய்யப்பட்டுள்ளதென்றும் இது முதனிலை வணிகர்முறை அல்லது தேசிய பொருளாதாரத்திற்கு ஊறு விளைவிக்காது எனவும் கருதப்படுமிடத்து

நாணயச்சபையானது முதனிலை வணிகர்கள் மீது விதிக்கப்பட்ட இடை நிறுத்தலை மாற்றியமைத்துக் கொள்ளும்.

(4) இடைநிறுத்தல் முடிவடையும் காலப்பகுதியில் நாணயச்சபையானது முதனிலை வணிகரின் வியாபார நடவடிக்கைகள் தொடர்வது முதனிலை வணிகர் முறைக்கு தேசிய பொருளாதாரத்திற்கும் ஊறுவிளைவிக்கும் எனக் கருதுமாயின் அது முதனிலை வணிகரின் நியமனத்தை இரத்துச் செய்துவிடலாம்.

(5) நாணயச்சபையினால் வழங்கப்பட்ட பணிப்புரைகளுக்கிணங்க முதனிலை வணிகரொருவரின் நியமனம் இடைநிறுத்தப்பட்டு அல்லது இரத்துச் செய்யப்பட்டிருக்குமிடத்து அவ்வணிகர் பிணையங்களின் முதலாந்தர மற்றும் இரண்டாந்தரச் சந்தைகளில் இணைக்கட்சியினதாக மத்திய வங்கியுடன் வியாபாரங்களை மேற்கொள்ளும் உரிமைகளைக் கொண்டிருக்காது என்பதுடன் வாடிக்கையாளர்களுடன் புதிய வியாபாரக் கொடுக்கல் வாங்கல்களையும் மேற்கொள்ள முடியாது. அத்துடன் மத்திய வங்கி, எனைய முதனிலை வணிகர்கள் மற்றும் ஏனையோருக்கான கடப்பாடுகளையும் கடமைகளையும் வழங்குவதற்கென அத்தகைய முதனிலை வணிகருக்கு மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட கால நீடிப்பினைத் தவிர, முதனிலை வணிகர்களுக்கென மத்திய வங்கி வழங்கும் வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ள உரித்துள்ளதுமாகும்.

**14. மத்திய வங்கி**

இவ்வொழுங்கு விதிகளின் மூலம் நடைமுறைப்படுத்தப்படவுள்ள எந்த ஒரு அதிகாரமும் அல்லது மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்படவுள்ள எந்தவொரு சட்ட விதியும், அத்தகைய அதிகாரம் அல்லது அத்தகைய சட்ட விதியும் இந் நோக்கத்திற்காக நாணயச்சபையினால் அங்கீகரிக்கப்பட்ட மத்திய வங்கியின் அலுவலரினால் மேற்கொள்ளப்படலாம்.

**15. பொருள் விளக்கம்**

சூழ்நிலை வேறுவிதமாகத் தேவைப்படுத்தினாலன்றி இவ்வொழுங்கு விதிகளில்

**''வங்கித் தொழில் சட்டம்''** என்பது 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டத்தைக் குறிக்கும்

**''மூலதனம்''** என்பது அடுக்கு I மூலதனம் மற்றும் அடுக்கு II மூலதனம் என்பனவற்றின் மொத்தத்தைக் குறிக்கும்.

**''மத்திய வங்கி''** என்பது 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச்சட்டத்தினால் நிறுவப்பட்ட இலங்கை மத்திய வங்கியைக் குறிக்கும்.

**''கம்பனி''** என்பது 1982ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கருத்திற்குள் அடங்கும் கம்பனியைக் குறிக்கும்; ஆனால் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளை உள்ளடக்காது.

**''வாடிக்கையாளர்''** என்பது முதனிலை வணிகருடன் உறவுகளைக் கொண்டுள்ள எந்தஒரு ஆளையும் முதனிலை வணிகரிடமிருந்து கொள்வனவு செய்யவும் அல்லது வேறுவிதத்தில் பிணையங்களை அல்லது வேறு ஏதாவது நலவுரித்துக்களை அத்தகைய முதனிலை வணிகர்களுக்கு விற்பனை செய்யும் அல்லது வேறு விதத்தில் பிணையங்களை அல்லது வேறு ஏதாவது நலவுரித்துக்களை அத்தகைய முதனிலை வணிகரூடாக கொள்வனவு செய்கின்ற அல்லது விற்கின்ற அல்லது அத்தகைய பிணையங்களை கொள்வனவு செய்யும் அல்லது விற்பனை செய்யும் சாத்தியம் பற்றி பேரம்பேசும் ஆளைக் குறிக்கும்.

**''உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்''** என்பது 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டத்தின் கருத்திற்குள்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கியைக் குறிக்கும்.

**''நாணயச்சபை''** என்பது இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையைக் குறிக்கும்.

**''கட்டளைச் சட்டம்''** என்பது உள்நாட்டுத் திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டத்தினைக் குறிக்கும்.

**''முதனிலை வணிகர் சிறப்பு ஒதுக்கு''** என்பது உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றினால் அதன் முதனிலை வணிகர் தொழிற்பாடுகள் தொடர்பாக உருவாக்கப்பட்டு பேணப்படும் சிறப்பு ஒதுக்குகளைக்

குறிக்கும். முதனிலை வணிகர் சிறப்பு ஒதுக்கினை பிடித்து வைத்திருக்கும் இலாபங்களின் மூலம் அல்லது வைத்திருக்கும் இலாபம் மற்றும் படுகடன் கொண்ட கூட்டாக உருவாக்கலாம். அடுக்கு II மூலதனம் (துணைப்படுகடன்) அடுக்கு I மூலதனத்தின் (வைத்திருக்கப்படும் இலாபம்) 50 சதவீதத்தினை விஞ்சக்கூடாது.

"பிணையங்கள்" என்பது கட்டளைச் சட்டத்தில் அதற்கு வழங்கப்பட்டுள்ள கருத்தினைக் கொண்டிருக்கும்

**"அடுக்கு I மூலதனம்"** என்பது

(அ) வழங்கப்பட்டு செலுத்தப்பட்ட சாதாரண பங்கு மூலதனம்;

(ஆ) வழங்கப்பட்டு செலுத்தப்பட்ட நிலையான திரளாத முன்னுரிமைப் பங்கு (மீட்புச் செய்யமுடியாத அல்லது மத்திய வங்கியின் முன் ஒப்புதலுடன் வழங்குனரின் விருப்புடன் மீட்புச் செய்யத்தக்கது);

(இ) பங்குக் வட்டக் கணக்கு

(ஈ) வைத்திருக்கும் வருவாய்கள் அல்லது மற்றைய மிகைகளின் ஒதுக்குகள் மூலம் ஒதுக்குகளை உருவாக்குவது அல்லது அதிகரிப்பது உதாரணம் வைத்திருக்கும் இலாபங்களும் ஏனைய ஒதுக்குகளும் (நிலையாய சொத்து மீள் மதிப்பீட்டு ஒதுக்குகளும் கணக்காய்வு செய்யப்படாத நிதியியல் கூற்றுக்களின் மீதான வைத்திருக்கும் இலாபமும் நீங்கலாக கணக்காய்வு செய்யப்படாத நிதியியல் கூற்றுக்கள் மீதான வைத்திருக்கும் இலாபத்தினை நியதிக் கணக்காய்வாளரின் சான்றிதழ் வழங்கப்படுமிடத்து உள்ளடக்க முடியும்)

கழிக்க; நன்மதிப்பு மற்றும் அருவச் சொத்துக்கள், கணக்காய்வு செய்யப்படாத நிதியியல் கூற்றுக்களின் மீதான இழப்புக்கள் உற்பட ஒன்று சேர்ந்த இழப்புக்கள்.

**"அடுக்கு II மூலதனம்"** என்பதன் கருத்து பின்வருவனவற்றின் மொத்தம் என்பதாகும்.

(அ) குறுங்காலத் துணைப்படுகடன் (மூன்று ஆண்டுகளுக்கும் கூடுதலான முதிர்ச்சிக் காலம்);

(ஆ) நீண்டகாலத் துணைப்படுகடன் (ஐந்து ஆண்டுகளுக்கும் கூடுதலான முதிர்ச்சிக் காலம்);

(இ) திரண்ட முன்னுரிமைப் பங்குகள்;

(ஈ) நிலையான துணைப்படுகடன்;

16. (அ) 2000ஆம் ஆண்டில் 1ஆம் இலக்க உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்ட (முதனிலை வணிகர்கள்) ஒழுங்கு விதிகள் 2002 பெப்புருவரி 1ஆம் நாளிலிருந்து நீக்கப்படுகின்றன.

(ஆ) பந்தி (அ) இன் மூலம் நீக்கம் செய்யப்பட்டிருந்தபோதும்.

(i) பந்தி (அ) இன் கீழ் இரத்துச் செய்யப்பட்ட ஒழுங்கு விதிகளின் கீழ் முதனிலை வணிகர்களாக நியமிக்கப்பட்ட கம்பனிகள் இவ்வொழுங்கு விதிகளின் கீழ் நியமிக்கப்பட்ட முதனிலை வணிகர்களாகக் கருதப்படுவர்.

(ii) பந்தி (அ) இன் கீழ் இரத்துச் செய்யப்பட்ட ஒழுங்கு விதிகளின் கீழ் வழங்கப்பட்ட எந்தப் பணிப்புரைகளும் அல்லது வழிகாட்டல்களும் இவ்வொழுங்கு விதிகளின் கீழ் வழங்கப்பட்டவையாகவிருப்பின் செல்லுபடியானவையாயும் பயனுறுதியுடையனவாகவும் இருக்கும்.

*அட்டவணை 1*

**அரச/ திறைசேரி பிணையங்களிலும் மத்திய வங்கிப் பிணையங்களிலும் முதனிலை வணிகர்களாகுவதற்கான விண்ணப்பம்**

**உரிமம் பெற்ற வர்த்தக வங்கி**

(1) வங்கியின் பெயர் :

(2) இலங்கையில் வங்கி கூட்டிணைக்கப்பட்ட திகதி:
இலங்கையில் கிளை நிறுவிய திகதி* :

(3) வங்கியின் பணிப்பாளர்கள்:

(4) வங்கியின்/ கிளையின்* மூலதனமும் ஒதுக்கும்:
(இறுதியாகக் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்களிலுள்ளவாறு)

(5) அரச பிணையங்கள் சந்தை, நாணய மற்றும் மூலதனச் சந்தை தொடர்பான நடவடிக்கைகளிலுள்ள அனுபவச் சான்று:

(6) முதனிலை வணிகராவதற்கு விண்ணப்பிப்பதற்கான குறித்துரைக்கப்படும் காரணம்:

(7) அரச பிணையங்களின் முதலீடுகள் மீதான வரையறை, தலைமை அலுவலகத்தினால் விதிக்கப்பட்ட அளவு ஏதுமிருப்பின்:*

......................................................................

வங்கியின் பணிப்பாளர் சபையின் செயலாளர்/
முதன்மை நிறைவேற்றுநர்*

வங்கியின் முத்திரை

திகதி

*இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட வங்கியின் கிளை அலுவலகமொன்றினைப் பொறுத்தவரையில்

*அட்டவணை 1 இன் பிண்ணிணைப்பு*

**விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்**

**(உரிமம் பெற்ற வர்த்தக வங்கி)**

(அ) முதனிலை வணிகராக வங்கி தொழிற்படுவதற்கு ஒப்புதலளிப்பதற்கான வங்கியின்/தலைமை அலுவலகப் பணிப்பாளர் சபையின் தீர்மானம்.

(ஆ) முதனிலை வணிகர்களின் தொழிற்பாடுகள் தொடர்பாக மத்திய வங்கியினால் காலத்திற்குக் காலம் வெளியிடப்படவுள்ள விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகள், நடத்தைச் சட்டக்கோவை, மற்றும் தொடர்பான வழிகாட்டல்கள் மற்றும் பணிப்புரைகளுக்கு இணங்கி ஒழுகுவதுபற்றி வங்கி/ கிளைகளிடமிருந்தான உறுதி மொழி.

(இ) முதனிலை வணிகர்களுடன் தொடர்பான நடவடிக்கைகளிலீடுபட்டுள்ள மூத்த முகாமையாளர்களின் தகைமை அனுபவம் என்பனவற்றுடன் கூடிய பட்டியல்

(ஈ) அரச பிணையங்கள் மற்றும் மத்திய வங்கிப் பிணையங்களின் தொழிற்பாடுகளுடன் தொடர்பான நிறுவன ரீதியான வலையமைப்பினையும் வாடிக்கையாளர் தளத்தினையும் விரிவாக்குவதற்கான செயற்றிட்டங்களுடன் கூடிய விபரமான வேலைத் திட்டம்.

(உ) கிடைக்கத்தக்கதாகவுள்ள ஆகப் பிந்திய வங்கியின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுகள்.

அட்டவணை 11

கண்காணிப்பாளர்,

பொதுப்படுகடன் திணைக்களம்

இலங்கை மத்திய வங்கி

கொழும்பு. 1

**அரச/ திறைசேரி பிணையங்களிலும் மத்திய வங்கிப் பிணையங்களிலும் முதனிலை வணிகர் கம்பனிகளாவதற்கான விண்ணப்பம்**

நாங்கள் ...................................... (கம்பனியின் பெயர்) உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டம் மற்றும் பதிவு செய்யப்பட்ட பங்குத் தொகுதிக் கட்டளைச் சட்டம் என்பனவற்றின் நியதிகளில் முதனிலை வணிகர்ளாக நியமிக்கப்படுவதற்காக விண்ணப்பிக்கின்றோம். கம்பனி தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**பிரிவு அ- பொதுவான தகவல்கள்**

1. விண்ணப்பிக்கும் கம்பனியின் பெயர்
2. பதிவு செய்யப்பட்ட முகவரி

   தொலைபேசி எண். .............................. தொலைநகல். .................... மின் அஞ்சல்..................
3. கூட்டிணைக்கப்பட்ட நாள்.
4. நிறுவனத்தின் வகை (வரையறுக்கப்பட்ட தனியார்அல்லது வரையறுக்கப்பட்ட பொது அல்லது ஏனையவை)
5. வங்கிக் கணக்கு/ களின் விபரங்கள்

| **வங்கியின் பெயரும் கிளையும்** | **நடைமுறைக் கணக்கு எண்** | **சேமிப்புக்கணக்கு எண்** |
|---|---|---|

**பிரிவு ஆ. மதிப்பீடு**

(1) பங்கு மூலதனம் ரூ.மில்

அங்கீகரிக்கப்பட்டது ........................

வழங்கப்பட்டு முழுமையாகச் செலுத்தப்பட்டது ........................

(தயவு செய்து பங்குடமையாளர்களின் பெயரைக் குறிப்பிடவும்)

(2) பணிப்பாளர்களின் பெயர்கள்.

(அவர்களது கல்விசார்/ தொழில்சார் தகைமைகளையும் அனுபவங்களையும் தனித்தனியாகப் பட்டியற்படுத்தவும்)

(3) முகாமை.

(முதன்மை நிறைவேற்று அலுவலர் உட்பட அனைத்து முக்கிய அலுவலர்களினதும் கல்விசார்/தொழில்சார் தகைமைகளையும் அனுபவங்களையும் பட்டியற்படுத்தவும்)

(4) தொழில்நிலை விபரங்கள்

| தரம் | தற்பொழுதுள்ளவை | | | | உத்தேசிக்கப்பட்டுள்ளது | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண் | | பெண் | | ஆண் | | பெண் | |
| | நி | அ | நி | அ | நி | அ | நி | அ |
| நிறைவேற்று | | | | | | | | |
| நிறைவேற்று அல்லா | | | | | | | | |
| மொத்தம் | | | | | | | | |

நி - நிரந்தரம் அ - அமைய

(5) அரச பிணையங்கள், நாணயம் மற்றும் மூலதனச் சந்தைகள் தொடர்பான நடவடிக்கைகளில் கொண்டுள்ள அனுபவத்திற்கான சான்று

(6) முதலாந்தர / இரண்டாந்தரச் சந்தைக் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளுவதற்குத் தேவையான உள்கட்டமைப்பு வசதிகள் தொட்பான சான்று.

(7) விண்ணப்பமானது முதனிலை வணிகர் தகுதிக்குப் பரிசீலிக்கப்பட வேண்டுமென்பதற்கான ஏதாவது சிறப்புக் காரணங்கள்

(8) விண்ணப்பத்தினை மதிப்பிடுவதற்கு இலங்கை மத்திய வங்கிக்கு பயனுள்ளது என விண்ணப்பதாரி கருதும் மற்றைய விடயங்கள்

(9) அட்டவணை 111இல் குறிப்பிடப்பட்ட ஆவணங்கள்

(தயவு செய்து ஆவணங்களை இணைக்கவும்)

(10) முதனிலை வணிகராக நியமிக்கப்படுவதற்கு எமது உறுதிப்பாட்டினைப் பரிசிலிக்கும் நோக்கத்திற்காக அவசியமானது என மத்திய வங்கி கருதக்கூடிய எந்தஒரு மேலதிக தகவல்களையும் அல்லது ஆவணங்களையும் மேலும் வழங்குவதற்கு நாம் பொறுப்பேற்றுக் கொள்கிறோம்.

அங்கீகரிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பம்........................................

விண்ணப்பிக்கும் கம்பனியின் பெயர்.

திகதி.

குறிப்பு.

தரப்பட்டுள்ள இடம் போதாமல் இருக்குமிடத்து, தகவல்களை அதேதொடர்பான எண்களின் கீழ் புறம்பான தாளில் தரலாம்.

அட்டவணை 11 இற்கான இணைப்பு

## விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்

I. கம்பனியின் அமைப்பு அக மற்றும் புற விதிகள்

II. கம்பனியின் கூட்டிணைப்புச் சான்றிதழ்

III. முதனிலை வணிகர்களாக நியமனம் பெறுவதற்காக இலங்கை மத்திய வங்கிக்கு விண்ணப்பமொன்றைச் செய்வதற்கும் மற்றும் விண்ணப்பதாரியின் சார்பில் விண்ணப்பத்தில் கையொப்பமிடுவதற்கான விண்ணப்பத்தின் கையெழுத்தினை அங்கீகாரப்படுத்துவதற்குமான பணிப்பாளர் சபையின் தீர்மானம்.

IV. முதனிலை வணிகர்கள் தொடர்பாகவும் முதலாந்தர/ இரண்டாந்தரச் சந்தைக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாகவும் இலங்கை மத்திய வங்கியினால் காலத்திற்குக்காலம் வெளியிடப்படும் விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகள், பணிப்புரைகள், நடத்தைச் சட்டக்கோவைகள் மற்றும் தொடர்பான வழிகாட்டல்களுக்கு இணங்கிச் செல்வது பற்றிய கம்பனியின் உறுதிமொழி

V. இறுதியாக கணக்காய்வு செய்யப்பட்ட கம்பனியின் நிதியியல் கூற்றுகள்.

அட்டவணை 111

## முதனிலை வணிகர்களின் நடவடிக்கைகள்

(1) அரசாங்கத்தினாலும் மத்திய வங்கியினாலும் வழங்கப்படும் திறைசேரி உண்டியல்கள் திறைசேரி முறிகள் மற்றும் கருவிகள் தொடர்பாக மத்திய வங்கியினால் நடாத்தப்படும் முதலாந்தர ஏலங்களில் விலைக் குறிப்பீடுகளை மேற்கொள்ளுவதும் அத்தகைய முதனிலைச் சந்தைகளில் அத்தகைய பிணையங்களை கொள்வனவு செய்வதும்;

(2) திறைசேரி உண்டியல்கள், திறைசேரி முறிகள் மற்றும் ஏனைய அரச மற்றும் மத்திய வங்கிப் பிணையங்களின் இரண்டாந்தரச் சந்தையில் மத்திய வங்கியுடனும் மற்றையவர்களுடனும் ஈடுபடல்;

(3) திறைசேரி உண்டியல்கள், திறைசேரி முறிகள் மற்றும் அரச மற்றும் மத்திய வங்கியின் ஏனைய பிணையங்களினதும் இரண்டாந்தரச் சந்தையினை மேம்படுத்தி, அபிவிருத்தி செய்தல்; அத்துடன்

(4) மேலேயுள்ள பந்தி (1)இலிருந்து (3) வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கைகளுடன் தொடர்பான அல்லது இணைந்த எந்த ஒரு நடவடிக்கையும்.

## பதிவு செய்யப்பட்ட பங்குத் தொகுதிகளும் பிணையங்களும்

**கட்டளைச்சட்டம்**

*1995ஆம் அண்டின் 32ஆம் இலக்கச் சட்டத்தினால் இறுதியாகத் திருத்தப்பட்டவாறான பதிவு செய்யப்பட்ட பங்குத் தொகுதிகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 420) பிரிவு 55இன் கீழ் நிதியமைச்சரினால் மேற்கொள்ளப்பட்டுள்ள ஒழுங்குவிதிகள்*

**நிதியமைச்சர்**

பெப்புருவரி 2002

### ஒழுங்கு விதிகள்

1. இவ்வொழுங்கு விதிகள் 2002ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க பதிவு செய்யப்பட்ட பங்குத்தொகுதிகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்ட (முதனிலை வணிகர்) ஒழுங்கு விதிகள் என எடுத்துக்காட்டப்படுவதுடன், இவை பெப்புருவரி 2002, 01இலிருந்து நடைமுறைக்கு வரும்.

2. **முதனிலை வணிகர்களின் நியமனம்**

(1) கட்டளைச் சட்டத்தின் நோக்கங்களுக்காக, முதனிலை வணிகர்களை நியமிப்பதற்கான பிரமாணங்கள் நாணயச்சபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படலாம்.

(2) கட்டளைச் சட்டங்கள், மற்றைய எந்தவொரு எழுதப்பட்ட சட்டம், பணிப்புரைகள், வழிகாட்டல்கள். தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் மற்றும் ஒப்பந்தங்கள் போன்ற பொருந்தத்தக்கவை எவையாக இருப்பினும் அவற்றிற்கு இணங்க, முதனிலை வணிகர்கள் முதலாந்தர மற்றும் இரண்டாந்தரச் சந்தையில் மத்திய வங்கிக்கு இணையான கட்சியினராக திறைசேரி உண்டியல்களின் கொடுக்கல் வாங்கலில் நேரடியாக ஈடுபடவும் திறைசேரி உண்டியல்களை அதன் சார்பிலும் வாடிக்கையாளர்களின் சார்பிலும் கொடுக்கல் வாங்கல் செய்ய முடியும்.

(3) நாணயச்சபையினால் நியமிக்கப்பட்ட ஒவ்வொரு முதனிலை வணிகர்களும் இவ்வொழுங்கு விதிகளுக்கும் மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட எந்தவொரு பணிப்புரைகளுக்கும் வழிகாட்டல்களுக்கும் கட்டுப்படுபவர்களாகவும் இணங்கி ஒழுகுபவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

3. **முதனிலை வணிகர்களாக நியமிக்கப்படுவதற்கான விண்ணப்பம்**

(1) முதனிலை வணிகர்களாக நியமிக்கப்படுவதற்கான விண்ணப்பத்தினை மத்திய வங்கியின் உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றினாலோ அல்லது எந்தவொரு கம்பனியினாலுமோ அல்லது முதனிலை வணிகர்களின் நடவடிக்கைகளை கொண்டு நடாத்தும் நோக்கத்திற்காக உருவாக்கப்பட்ட கம்பனியாயின் அத்தகைய கம்பனியொன்றின் ஊக்குவிப்பாளரினால் இங்கே அட்டவணை 1 அல்லது அட்டவணை 11இல் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களுடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும்.

(2) முதனிலை வணிகர்களாக நியமிக்கப்படுவதற்கு பொருத்தமான விண்ணப்பதாரிகளை பரிசீலிக்கும் நோக்கத்திற்காக அவசியமானது என மத்திய வங்கி கருதும் அத்தகைய தகவல்களையும் ஆவணங்களையும் விண்ணப்பதாரி மத்திய வங்கிக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

(3) முதனிலை வணிகர்களாக நியமிக்கப்படுவதற்குள்ள விண்ணப்பதாரிகளின் பொருத்தமான தன்மையினை உறுதிப்படுத்துவதற்குத் தேவையானதென கருதுகின்ற அத்தகைய விசாரணைகளை அதன் பணிப்பாளர்களினதும் முதன்மை அலுவலர்களினதும் தகுதி, நற்பண்பு, நேர்மை, மற்றும் பொருத்தமானதன்மை என்பன உள்ளிட்டவற்றை மத்திய வங்கி நடாத்தும்.

4. **நியமனம்**

முதனிலை வணிகர்களின் அனுமதிக்காக நாணயச்சபையினால் பின்பற்றப்படும் பிரமாணங்களின் அடிப்படையிலும் தேசிய பொருளாதாரத்தின் நலவுரித்துக்கள் மற்றும் முதனிலை வணிகர்முறை என்பனவற்றின் அடிப்படையிலும் தன்மையைக் கருத்திற்கொண்டு முதல்நிலை வணிகர்களாக நியமிக்கப்படுவதற்கான பொருத்தமான தன்மையைச் மத்திய வங்கி விண்ணப்பதாரர் ஒருவரை முதனிலை வணிகராக நியமிக்கலாம்.

**5. முதனிலை வணிகர்களாக நியமிக்கப்படவுள்ள உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு பொருந்தத்தக்க நிபந்தனைகள்**

உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றினை நாணயச்சபை முதனிலை வணிகர்களாக நியமிக்குமிடத்து வங்கி பின்வரும் நிபந்தனைகளுக்கு இணங்கி ஒழுக வேண்டும்.

(1) (அ)உரிமம் பெற்ற வர்த்தக வங்கி காலத்திற்குக் காலம் நாணயச்சபையினால் தீர்மானிக்கப்படும் குறைந்த தொகையொன்றில் "முதனிலை வணிகர் சிறப்பு ஒதுக்கு" என்றழைக்கப்படும். சிறப்பு ஒதுக்கு, ஒன்றினை உருவாக்கிப் பேண வேண்டும். முதனிலை வணிகர் சிறப்பு ஒதுக்கு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் முதனிலை வணிகர் தொழிற்பாடுகள் மற்றும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் நடவடிக்கைகளிலிருந்து எழும் கடப்பாடுகளுக்கே பிரத்தியேகமாகப் பயன்படுத்தப்பட வேண்டும்.

(ஆ) துணைப்பந்தி (1) (அ) இன் கீழ் தீர்மானிக்கப்பட்ட குறைந்த தொகையில் ஏதாவது மாற்றங்கள் இருக்குமிடத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிக்கு எழுத்துமூலம் அறவிக்கப்படும்.

(இ) துணைப்பந்தி (1)(ஆ) இல் ஏதாவது மாற்றங்கள் செய்யப்படும் பொழுது துணைப்பந்தி 1 (அ) அல்லது துணைப்பந்தி 1(ஆ)இல் தீர்மானிக்கப்பட்ட குறைந்ததொகையை அதிகரிக்குமாறு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் கேட்டுக் கொள்ளப்படும். நாணயச்சபைக்கு விண்ணப்பிக்குமிடத்து அது அத்தகைய தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு ஆறு மாதகாலப்பகுதியினை (6) அல்லது அத்தகைய நீண்ட காலப்பகுதியினை உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு வழங்கும்.

(2) உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் முதனிலை வணிகர் நடவடிக்கைகள் தொடர்பாக தனியான கணக்கேடுகளைப் பேண வேண்டியதுடன், அவ்வாறான முதனிலை வணிகர் நடவடிக்கைகளை தனியான பிரிவொன்றில் நடாத்தவும் வேண்டும்.

(3) உரிமம் பெற்ற வர்த்தக வங்கி அதன் பணிப்பாளர் சபையில் இன்னொரு முதனிலை வணிகர் கம்பனியின் பணிப்பாளருக்கோ ஊழியருக்கோ இடமளித்தலாகாது.

(4) உரிமம் பெற்ற வர்த்தக வங்கியின் முதனிலை வணிகர் தொழிற்பாடுகள் அத்தகைய வங்கியில் மூத்த முகாமைத்துவப் பதவியிலிருக்கும் தகுதியும் அதிகாரமும் பெற்ற ஆள் ஒருவரின் தலைமையினைக் கொண்டிருக்க வேண்டியதுடன், அவர் அவரது முழு நேரத்தையும் அத்தகைய முதனிலை வணிகர் தொழிற்பாட்டிற்கே அர்ப்பணிக்கவும் வேண்டும்.

(5) உரிமம் பெற்ற வர்த்தக வங்கி, முதனிலை வணிகர் நடவடிக்கைகள் மற்றும் தொழிற்பாடுகள் தொடர்பாக மத்திய வங்கியினால் காலத்திற்குக் காலம் விதிக்கப்படும் தொழிற்பாட்டு வழிகாட்டல்களுக்கும் முன்மதியுடைய தேவைப்பாடுகளுக்கும் உட்பட்டதாகும்.

(6) உரிமம் பெற்ற வர்த்தக வங்கியின் முதனிலை வணிகர் நடவடிக்கைகளும் தொழிற்பாடுகளும் மத்திய வங்கியினால் கண்காணிக்கப்பட்டு மேற்பார்வை செய்யப்படும்.

**6. முதனிலை வணிகர்களாக நியமிக்கப்படுகின்ற கம்பனிகளுக்குப் பொருந்தத்தக்க நிபந்தனைகள்**

கம்பனியொன்று நாணயச்சபையினால் முதனிலை வணிகர்களாக நியமிக்கப்படுமிடத்து அதன் பின்னர் அக்கம்பனி "முதனிலை வணிகர் கம்பனி" எனக் குறிப்பிடப்படுவதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் இணங்கி ஒழுகுதல் வேண்டும்.

(1) கம்பனியின் அமைப்பு விதி, அதன் குறிக்கோள்களை இவ்வொழுங்கு விதிகளின் அட்டவணை 111 இல் குறிப்பிடப்பட்டுள்ள அதன் நடவடிக்கைகளுக்கும் அல்லது அத்தகைய நடவடிக்கைகளுடன் தொடர்பானவற்றுக்கும் வரையறுக்க வேண்டும்.

(2) கம்பனியானது நாணயச் சபையில் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படுகின்றவாறான ஆகக் குறைந்த மூலதனத்தைப் பேண வேண்டியதுடன் இதில் அடுக்கு 11 மூலதனம் அடுக்கு 1 மூலதனத்தின் 50 சதவீதத்தினை விஞ்சக்கூடாது.

(3) கம்பனியானது அதன் பணிப்பாளர் சபையில் கம்பனியின் ஊழியரான தலைமை நிறைவேற்று அலுவலரைத் தவிர இன்னொரு முதனிலை வணிகர் கம்பனியின் பணிப்பாளரையோ அல்லது ஒரு ஊழியரையோ கொண்டிருக்க கூடாது.

(4) கம்பனியானது வங்கித்தொழில் சட்டத்தின் நியதிகளின்படி உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றின் பணிப்பாளருக்குப் பொருந்தத்தக்க எந்தஒரு தகுதியீனத்திற்கும் உட்பட்ட ஒருவருக்கு அதன் பணிப்பாளர் சபையில் இடமளித்தலாகாது. எனினும், உரிமம்பெற்ற வர்த்தக வங்கி முதனிலை வணிகராக இல்லாதவிடத்து அதன் ஊழியர் அல்லது பணிப்பாளர் ஒருவர் முதனிலை வணிகர் கம்பனியின் பணிப்பாளராவதற்கு தகுதியற்றவராகமாட்டார்.

(5) ஆரேனும் ஒரு ஆள் வைத்திருக்கும் பங்குடமை அந்த முதனிலை வணிகர் கம்பனியின் நலவுரித்துக் கட்டுபாடுகளில் மாற்றங்களை விளைவிக்கக் கூடியளவிற்கு இருக்குமாயின் நாணயச்சபையின் எழுத்து மூலமான ஒப்புதல் இல்லாமல் அக்கம்பனி பதிவு செய்யப்படமாட்டாது. இந் நோக்கத்திற்காக "கட்டுப்படுத்துகின்ற நலவுரித்து" என்பது கம்பனியின் செலுத்தப்பட்ட மூலதனத்தில் 51% அல்லது கூடுதலானது எனக் கருதப்படும்.

(6) கம்பனியின் செலுத்தப்பட்ட மூலதனத்தில் 10 சதவீதத்திற்கும் கூடுதலான பங்கினைக் கொண்டிருக்கும் ஒருவர், ஒரு தொகுதிக் கம்பனியாகவோ அல்லது ஏதேனும் மற்றைய முதனிலை வணிகர் கம்பனியின் துணைக் கம்பனியாகவோ இருக்குமிடத்து நாணச்சபையின் எழுத்து மூலமான ஒப்புதலில்லாமல் அக்கம்பனி பதிவு செய்யப்படமாட்டாது.

## 7. முதனிலை வணிகர் கம்பனியொன்றின் மூலதனத்தின் மாறும் தன்மை

(1) நாணயச்சபையானது முதனிலை வணிகர் முறையின் ஆற்றல் வாய்ந்த தன்மை, உறுதிப்பாடு மற்றும் தேசிய பொருளாதாரத்தின் நலவுரித்துக்கள் என்பனவற்றைக் கவனத்திற் கொண்டு முதனிலை வணிகர் கம்பனியினால் பேணப்பட வேண்டிய மூலதனத் தேவைப்பாட்டினை தீர்மானிப்பதுடன் அத்தகைய தீர்மானம் காலத்திற்குக் காலம் மாறவும் கூடும். இத்துணைப் பந்தியின் கீழ் நாணயச்சபையினால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு தீர்மானமோ அல்லது மாற்றமோ அனைத்து முதனிலை வணிகர் கம்பனிகளுக்கும் எழுத்து மூலமாக அறிவிக்கப்படும்.

(2) மேலேயுள்ள துணைப்பந்தி (1) இன் கீழ் மாறும் தன்மையின் காரணமாக அவற்றின் மூலதனத்தினை அதிகரிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்ட முதனிலை வணிகர் கம்பனிகள் அத்தகைய தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு ஆறு மாத காலப்பகுதியினை அல்லது அத்தகையதொரு நீண்ட காலப்பகுதியினை வழங்குமாறு நாணயச்சபைக்கு விண்ணப்பிக்குமிடத்து நாணயச்சபை அத்தகைய காலப்பகுதியினை வழங்கும்.

(3) இவ்வொழுங்கு விதிகளின் நியதிகளுக்கிணங்க பேணப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட ஆகக் குறைந்த மட்டத்திற்குக் குறைவாக முதனிலை வணிகர் கம்பனி ஒன்றின் மூலதனம் வீழ்ச்சியடைந்தால் அத்தகைய நிலைமை பற்றி காலந்தாழ்த்தாமல் மத்திய வங்கிக்கு எழுத்து மூலமாக அறிவித்தல் வேண்டும்.

(4) இவ்வொழுங்கு விதிகளின் நியதிகளின்படி பேணப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட ஆகக் குறைந்த மூலதனத்தைப் பேணத்தவறிய முதனிலை வணிகர் கம்பனியின் நியமனத்தினை இடைநிறுத்தும் அல்லது இரத்துச் செய்யும் நாணயச்சபையின் உரிமைகளுக்கு எவ்வித பாதிப்புமில்லாதவிதத்தில், மூலதனத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியினை ஈடு செய்வதற்கு நாணயச் சபையினால் தீர்மானிக்கப்பட்ட ஒரு காலப்பகுதியினை வழங்குவது மூலதன வணிகர் முறையின் நலவுரித்துக்களுக்கு அல்லது தேசிய பொருளாதாரத்திற்கும் நலன் பயத்திடுமென நாணயச்சபை கருதுமாயின் அவ்வாறு செய்யலாம். நாணயச்சபை அவ்வாறு வழங்கும் அனுமதி அது விதிக்கப்படக்கூடிய அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகும்.

## 8. பொருள் சார்ந்த நலவுரித்து

முதனிலை வணிகர் ஒருவர் இன்னொரு முதனிலை வணிகர் கம்பனியின் பொருள் சார்ந்த நலவுரித்துக்களை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வாங்கவோ அல்லது உடனடியாகப் பெறவோ கூடாது. இந் நோக்கத்திற்காக" பொருள் சார்ந்த நலவுரித்து" கருத்து அத்தகைய முதனிலை வணிகர் கம்பனியின் வழங்கப்பட்ட மூலதனத்தில் 10 சதவீதத்திற்கும் கூடுதலான பங்குடமை எனப் பொருள்படும்.

**9. முதனிலை வணிகர்களின் கடமைகளும் சிறப்புரிமைகளும்**

(1) முதனிலை வணிகர் ஒருவர் பிணையங்களுக்கான முதலாந்தர, இரண்டாந்தர சந்தைகளில் மத்திய வங்கியுடன் இணைக்கட்சியினராக நடந்துகொள்ளும் உரிமைகளைக் கொண்டிருப்பர்.

(2) முதனிலை வணிகர் ஒருவர் மத்திய வங்கியினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்பட்டு முதனிலை வணிகருக்கு தெரியப்படுத்தப்படும் தன்மை மற்றும் மட்டங்களில் முதலாந்தரச் சந்தையில் பங்கேற்க வேண்டும்.

(3) முதனிலை வணிகர் பிணையங்களின் இரண்டாந்தரச் சந்தையினை உருவாக்கவும் அதனைப் பேணுவதற்குமான பொறுப்புக்களையும் கொண்டிருப்பார்.

(4) முதனிலை வணிகரொருவர் பிணையங்களின் பங்குத் தொகுதியினை பேணுவதற்கான மட்டங்களுக்கு இணங்கியொழுக வேண்டியதுடன் காலத்திற்குக் காலம் மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்பட்டு முதனிலை வணிகர்களுக்கு தெரியப்படுத்தப்படும் விதத்தில் இரண்டாந்தரச் சந்தையில் பங்கேற்க வேண்டும்.

(5) முதனிலை வணிகரொருவர் தனது சொந்தப்பேரிலும் வாடிக்கையாளர்களின் பேரிலும் பிணையங்கள் தொடர்பான கொடுக்கல் வாங்கல்களிலீடுபடுவதற்கான உரிமையினைக் கொண்டிருப்பர்.

(6) முதனிலை வணிகரொருவர் மத்திய வங்கியினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்பட்டு முதனிலை வணிகர்களுக்கு தெரியப்படுத்தப்படும் தகுதி நியமங்களையும் உள்கட்டமைப்பு வசதிகளையும் பேணவேண்டும்.

(7) முதனிலை வணிகரொருவர் வாடிக்கையாளரைப் பொறுத்தவரையில் முதிர்ச்சியடைந்த பெறுகைகளின் சேகரிப்பு மற்றும் கொடுப்பனவுகள் மற்றும் பிணையங்கள் மீதான வட்டி போன்றவை தொடர்பாகவும் தனது சொந்த சொத்துக்களிலிருந்து வாடிக்கையாளரின் சொத்துக்களை தனியாகப் பிரிக்கும நோக்கம் தொடர்பாகவும் நம்பிக்கைப் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும். மூடப்படுகையில் முதனிலைப் பணிகளின் சொத்துக்களின் ஒரு பகுதியாக வாடிக்கையாளரின் சொத்துக்கள் அமையக்கூடாது.

(8) முதனிலை வணிகரொருவர் அதன் வாடிக்கையாளர்களுடனான கொடுக்கல் வாங்கல்களில் கடுமையான இரகசியங்களைப் பேண வேண்டும்.

(9) முதனிலை வணிகரொருவர் அவர்களுக்காக மத்திய வங்கியினால் காலத்துக்குக் காலம் உருவாக்கப்பட்ட தொழிற்பாட்டு கையேடு நடத்தைச் சட்டக்கோவை மற்றும் ஏனைய வழிகாட்டல்களுக்கு இணங்க அவர்களின் வியாபாரத்தையும் நடவடிக்கைகளையும் மேற்கொள்ளலாம்.

**10. முதனிலை வணிகர்களை மேற்பார்வை செய்தல், பரீட்சித்தல் மற்றும் புலனாய்வு செய்தல்**

(1) முதனிலை வணிகரினால் நடத்தப்பட்டுவரும் வியாபாரம் முதனிலை வணிகர்களின் வாடிக்கையாளர்களின் நலவுரித்துக்களுக்கும், முதனிலை வணிகர் முறைக்கும் பாதகமில்லாமல் நடந்து கொள்வதனையும் அத்துடன் அல்லது முதனிலை வணிகர்கள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் அத்துடன் கட்டளைச் சட்டத்தின் கீழ் இயற்றப்பட்ட ஒழுங்குவிதிகள், தொழிற்பாட்டு கையேடு, நடத்தைச் சட்டக்கோவை, வழிகாட்டல்கள் மற்றும் ஏனைய எழுதப்பட்ட பொருத்தமான சட்டங்கள் என்பனவற்றுக்கு இணங்கத் தொழிற்படுவதனையும் உறுதிப்படுத்துகின்ற நோகத்திற்காக மத்திய வங்கி முதனிலை வணிகர்களை மேற்பார்வை மற்றும் பரீட்சிப்புச் செய்வதுடன் முதனிலை வணிகர்களில் குறிப்பிடப்பட்ட எந்தவொரு விடயத்தையும் அல்லது நடவடிக்கையையும் புலனாய்வு செய்யலாம்.

(2) முதனிலை வணிகர் கம்பனியொன்று அதன் முதனிலை வணிகர் என்ற நடவடிக்கைகளுடன் தொடர்பான மின்னியல் மற்றும் காந்தநாடா என்பனவற்றில் பேணப்பட்ட பதிவுகள் உள்பட ஏடுகள். கணக்குகள், இடாப்புக்கள், கோவைகள் மற்றும் பதிவேடுகள் என்பனவற்றை மத்திய வங்கிக்குக் கிடைக்கச் செய்ய வேண்டியதுடன் துணைப்பந்தி (1)இல் குறிப்பிடப்பட்ட நோக்கங்களுக்காக தேவைப்படுத்தக்கூடிய எந்தவொரு தகவலையும் சமர்ப்பிக்க வேண்டும்.

(3) முதனிலை வணிகர் கம்பனியொன்றின் பணிப்பாளர்கள் மற்றும் அலுவலர்கள் துணைப்பந்தி (2)இன் கீழ் எந்தஒரு ஏடு, கணக்குகள், இடாப்புக்கள், கோவைகள் அல்லது தகவல்களைச் சமர்ப்பிக்கும்படி கேட்கப்படுமிடத்து அதனைச் சமர்ப்பிக்க வேண்டும்.

**11. செயலாற்றத்தின் மதிப்பீடு**

(1) முதனிலை வணிகர்களின் செயலாற்றமானது காலத்திற்குக் காலம் மத்திய வங்கியினால் பின்வரும் விடயங்களில் மதிப்பீடு செய்யப்படுகின்றது.

(அ) பிணையங்கள் தொடர்பான முதலாந்தரச் சந்தையில் அதன் பங்கேற்பு

(ஆ) பிணையங்களில் இரண்டாந்தரச் சந்தைகளை உருவாக்கிப் பேணல்

(இ) ஏற்புடைய சட்டங்கள், விதிகள், ஒழுங்கு விதிகள், பணிப்புரைகள், வழிகாட்டல்கள் மற்றும் நடத்தைச் சடடக்கோவை என்பனவற்றிற்கு இணங்கி ஒழுகியமைக்கான பதிவுகள்

(2) அத்தகைய மதிப்பீடுகளின்போது வெளிச்சத்திற்கு வரும் ஏதாவது குறைபாடுகள் பற்றி மத்திய வங்கியினால் முதனிலை வணிகர்களுக்கு அறிவிக்கப்படுவதுடன் அத்தகைய குறைபாடுகளை சரிசெய்வதற்கு முதனிலை வணிகர்கள் மத்திய வங்கியினால் விதந்துரைக்கப்படக் கூடிய எந்த ஒரு வழிமுறையையாவது பின்பற்ற வேண்டும்.

**12. பணிப்புரைகள்**

(1) இவ்வொழுங்கு விதிகளுடன் முதனிலை வணிகர்கள் இணங்கி ஒழுகுவதனை உறுதிப்படுத்துவதற்காக மத்திய வங்கி பணிப்புரைகளை விடுக்கக்கூடும். முன் கூறப்பட்ட பொதுவான தன்மைகளுக்கும் கட்டளைச் சட்டம் அல்லது மற்றைய எந்தவொரு எழுதப்பட்ட சட்டங்களுக்குக் கீழும் பணிப்புரைகளை வழங்குவதற்கான மத்திய வங்கியின் அதிகாரத்திற்குப் பாதிப்பில்லாத விதத்திலும், அத்தகைய பணிப்புரைகள் எல்லாவற்றிற்கும் அல்லது கீழேயுள்ள விடயங்களில் எந்த ஒன்றிற்கும் வழங்கப்படலாம்.

(அ) மத்திய வங்கியினால் நடத்தப்படுகின்ற பிணையங்களின் ஏலங்கள் மற்றும் முதனிலை வணிகர்களின் இரண்டாந்தரச் சந்தைத் தொழிற்பாடுகள் தொடர்பாக முதனிலை வணிகர்களால் இணங்கி ஒழுகப்பட வேண்டிய நடைமுறைகள்

(ஆ) மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட பிணையங்களின் முதலாந்தர ஏலங்களில் முதனிலை வணிகர்களினால் பங்கேற்கப்பட்ட ஆகக் குறைந்த மட்டம்

(இ) முதிர்ச்சிப் பெறுகைகளின் சேகரிப்பு மற்றும் கொடுப்பனவு மற்றும் பிணையங்கள் மீது வாடிக்கையாளர்களுக்கான வட்டி என்பன தொடர்பாக முதனிலை வணிகர்கள் இணங்கி ஒழுக வேண்டிய நிபந்தனைகள்.

(ஈ) முதனிலை வணிகர்களினால் ஏடுகள், பதிவேடுகள் மற்றும் கணக்குகளைப் பேணல்

(உ) உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் இடர் நேர் முகாமைத்துவ முறைகளின் போதுமை;

(ஊ) முதனிலை வணிகர்களினால் மத்திய வங்கிக்கு காலத்திற்குக் காலம் சமர்ப்பிக்கப்படும் அறிக்கைகள் அல்லது தகவல்கள்

(எ) முதனிலை வணிகர்களின் இரண்டாந்தரச் சந்தைத் தொழிற்பாடுகளுக்கான ஆகக் குறைந்தமட்டம்.

(ஏ) இரண்டாந்தரச் சந்தையில் பிணையங்கள் பங்குத் தொகுதிக்கான கேள்வியை ஈடுசெய்வதற்காக அத்தகைய பிணையங்களைப் பேணுதல்.

(ஐ) வாடிக்கையாளர்களின் மீது முதனிலை வணிகர்கள் விதிக்கக்கூடிய கட்டணங்கள்

(ஒ) முதனிலை வணிகர்கள் கம்பனியின் முதன்மை நிறைவேற்று அலுவலர் அல்லது உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றின் முதனிலை வணிகர் தொழிற்பாடுகளுக்கு தலைமை வகிக்கும் ஆளினதும் ஏனைய மூத்த நிறைவேற்று அலுவலர்களினதும் தேவைப்படுத்தப்பட்ட தகைமைகள்;

(ஓ) முதனிலை வணிகர்கள் அவர்களது கடமைகளைச் சரியான முறையில் நிறைவேற்றுவதற்காக அவர்களினால் பேணப்பட வேண்டிய உள்கட்டமைப்பு மற்றும் ஏனைய வசதிகள்;

(ஔ) அட்டவணை 111இன் பந்தி (1) இலிருந்து (3) வரையில் குறிப்பிடப்பட்டிருக்கும் நடவடிக்கைகளுடன் தொடர்புபட்ட தற்செயலான நடவடிக்கைகள் அல்லது வியாபாரங்களாக முதனிலை வணிகர் கம்பனிகளால் தமது நடவடிக்கைகள் மற்றும் வியாபாரங்களை மேற்கொள்ள முடியும்;

(க) மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்படும் மேற்பார்வை, பரீட்சிப்பு, புலனாய்வு அல்லது மதிப்பீடு என்பனவற்றின் போது வெளிச்சத்திற்குவரும் ஏதாவது தவறுகை அல்லது குறைபாட்டின் விளைவாகத் தோன்றும் எந்தஒரு நிலையையும் திருத்தல்;

(ந) பந்தி 13இன் கீழ் முதனிலை வணிகராக வியாபாரத்தையும் நடவடிக்கையையும் கொண்டு நடத்த இடைநிறுத்தப்பட்ட முதனிலை வணிகரினால் மத்திய வங்கி ஏனைய முதனிலை வணிகர்கள், நேரடிப் பங்கேற்பாளர்கள் மற்றும் வாடிக்கையாளர் என்போருக்கு ஆற்றவேண்டிய கடப்பாடுகளும் கடமைகளும் வழங்கல்.

(ச) மூலதனம், ஒதுக்குகள் , மூலதனப் போதுமையும் ஏனைய முன்மதிகளும் மற்றும் தொழிற்பாட்டுத் தேவைப்பாடுகள்

(2) கட்டளைச் சட்டத்தின், இவ்வொழுங்கு விதிகளின் அல்லது மற்றைய எந்த ஒரு ஏற்பாட்டிற்கும் அல்லது கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பணிப்புரைகளுக்கும் இணங்கி ஒழுகுவதற்கு முதனிலை வணிகர்கள் தவறும் சந்தர்ப்பங்களில் அல்லது அதன் வாடிக்கையாளர்களின் நலவுரித்துக்களுக்கு தீங்கு பயக்கக்கூடிய தன்மைகளைக்கொண்ட வியாபாரங்களை நடத்தும் சந்தர்ப்பத்தில், அவசியமானது எனக்கருதுமிடத்து நாணயச்சபை அத்தகைய புலனாய்வுகளை நடத்துவதுடன் அத்தகைய ஏற்பாடுகளுக்கு இணங்கி ஒழுகுமாறு அத்தகைய முதனிலை வணிகர்களுக்கு பணிப்புரைகளை வழங்க அல்லது அத்தகைய தன்மைத்தான வியாபாரங்களைக் கொண்டு நடத்துவதனை பணிப்புரையில் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய காலப்பகுதிக்கிடையில் நிறுத்திக் கொள்ளும்படியும் கேட்டுக் கொள்வதுடன் முதனிலை வணிகர் அத்தகைய பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகத் தவறுமிடத்து பந்தி 13இன் கீழான மற்றைய எந்த ஒரு நடவடிக்கைக்கும் பாதகமில்லாத விதத்தில் பொதுமக்களின் தகவலுக்காக முதனிலை வணிகர்களுக்கு வழங்கப்பட்ட அப் பணிப்புரைகளை அனைத்து மூன்று மொழிகளிலும் உள்நாட்டுச் செய்தித்தாள்களில் வெளியிட வேண்டும்.

**13. முதனிலை வணிகரொருவரின் நியமனத்தினை இடைநிறுத்தல் மற்றும் இரத்துச் செய்தல்**

(1) முதனிலை வணிகர் அவருக்குப் பொருந்தத்தக்க சட்டம் ஒழுங்குவிதி பணிப்புரை வழிகாட்டல் அல்லது நடத்தைச் சட்டக்கோவை என்பனவற்றிற்கு இணங்கி ஒழுகத் தவறியிருக்குமிடத்து அல்லது முதனிலை அல்லது முதனிலை வணிகர்முறை அல்லது தேசிய பொருளாதாரத்திற்கு நலவுரித்துக்களுக்கு தீங்கு பயக்கக்கூடிய தன்மைத்தான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமிடத்து நாணயச்சபை அத்தகைய முதனிலை வணிகர் வியாபாரத்தினையும் நடவடிக்கைகளையும் கொண்டு நடாத்துவதிலிருந்தும் ஆறுமாதகாலப்பகுதியை விஞ்சாத காலப்பகுதிக்கு இடைநிறுத்தலாம் அல்லது முதனிலை வணிகரின் நியமனத்தினை இரத்துச் செய்யலாம்.

(2) நாணயச்சபையானது மேலேயுள்ள துணைப்பந்தி (1)இன் கீழ் முதனிலை வணிகரொருவரை முதனிலை வணிகராக வியாபாரத்தையும் நடவடிக்கையையும் கொண்டு நடாத்துவதிலிருந்தும் இடைநிறுத்துமிடத்து பின்வரும் சந்தர்ப்பங்களில் நாணயச்சபையானது அத்தகைய இடைநிறுத்தம் முடிவடையும் காலப்பகுதியில் அல்லது அதற்கு முன்னதாக இடைநிறுத்தத்தை மேலுமொரு காலப்பகுதிக்கு நீடிக்கலாம்.

(அ) முதனிலை வணிகரொருவர் மத்திய வங்கிக்கும், மற்றைய முதனிலை வணிகர்களுக்கும், நேரடிப் பங்காளர் மற்றும் வாடிக்கையாளர்களுக்கும் தமது கடப்பாடுகளையும் கடமைகளையும் சரியான முறையில் ஆற்றுவதனை உறுதிப்படுத்துவதற்கு மேலும் காலம் தேவைப்படுகிறது என்ற அபிப்பிராயமொன்று இருக்குமாயின்; அல்லது

(ஆ) முதனிலை வணிகர் அத்தகைய நீடிப்பிற்கான வேண்டுகோளை விடுக்குமிடத்து நாணயச்சபை அத்தகைய நீடிப்பு முதனிலை வணிகர் முறையின் நலவுரித்துக்களுக்கேற்றதாக இருக்குமென கருதுமிடத்தும்

இத்துணைப் பந்தியின் நியதிகளின்படி இடைநிறுத்தமொன்று நீடிக்கப்படக் கூடுமெனினும் அத்தகைய நீடிப்பு துணைப் பந்தி (1)இல் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய காலப்பகுதியை விஞ்சியிருக்கும்.

(3) இடைநிறுத்தத்திற்கு வழிவகுத்த சூழ்நிலை சரிசெய்யப்பட்டுள்ளதென்றும் இது முதனிலை வணிகர்முறை

அல்லது தேசிய பொருளாதாரத்திற்கு ஊறு விளைவிக்காது எனவும் கருதப்படுமிடத்து நாணயச்சபையானது முதனிலை வணிகர்கள் மீது விதிக்கப்பட்ட இடை நிறுத்தலை மாற்றியமைத்துக் கொள்ளும்.

(4) இடைநிறுத்தல் முடிவடையும் காலப்பகுதியில் நாணயச்சபையானது முதனிலை வணிகரின் வியாபார நடவடிக்கைகள் தொடர்வது முதனிலை வணிகர் முறைகளும் தேசிய பொருளாதாரத்திற்கும் ஊறுவிளைவிக்கும் எனக் கருதுமாயின் அது முதனிலை வணிகரின் நியமனத்தை இரத்துச் செய்துவிடலாம்.

(5) நாணயச்சபையினால் வழங்கப்பட்ட பணிப்புரைகளுக்கிணங்க முதனிலை வணிகரொருவரின் நியமனம் இடைநிறுத்தப்பட்டு அல்லது இரத்துச் செய்யப்பட்டிருக்குமிடத்து அவ்வணிகர் பிணையங்களின் முதலாந்தர மற்றும் இரண்டாந்தரச் சந்தைகளில் இணைக்கட்சியினதாக மத்திய வங்கியுடன் வியாபாரங்களை மேற்கொள்ளும் உரிமைகளைக் கொண்டிருக்காது என்பதுடன் வாடிக்கையாளர்களுடன் புதிய வியாபாரக் கொடுக்கல் வாங்கல்களையும் மேற்கொள்ள முடியாது. அத்துடன் மத்திய வங்கி, எனைய முதனிலை வணிகர்கள் மற்றும் ஏனையோருக்கான கடப்பாடுகளையும் கடமைகளையும் வழங்குவதற்கென அத்தகைய முதனிலை வணிகருக்கு மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட கால நீடிப்பினைத் தவிர, முதனிலை வணிகர்களுக்கென மத்திய வங்கி வழங்கும் வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ள உரித்துள்ளதுமாகும்.

***14. மத்திய வங்கி***

இவ்வொழுங்கு விதிகளின் மூலம் நடைமுறைப்படுத்தப்படவுள்ள எந்த ஒரு அதிகாரமும் அல்லது மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்படவுள்ள எந்தவொரு சட்ட விதியும், அத்தகையஅதிகாரம் அல்லது அத்தகைய சட்ட விதியும் இந்நோக்கத்திற்காக நாணயச்சபையினால் அங்கீகரிக்கப்பட்ட மத்திய வங்கியின் அலுவலரினால் மேற்கொள்ளப்படலாம்.

***15. பொருள் விளக்கம்***

சூழ்நிலை வேறுவிதமாகத் தேவைப்படுத்தினாலன்றி இவ்வொழுங்கு விதிகளில்

**''வங்கித் தொழில் சட்டம்''** என்பது 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டத்தைக் குறிக்கும்

**''மூலதனம்''** என்பது அடுக்கு I மூலதனம் மற்றும் அடுக்கு II மூலதனம் என்பனவற்றின் மொத்தத்தைக் குறிக்கும்.

**''மத்திய வங்கி''** என்பது 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச்சட்டத்தினால் நிறுவப்பட்ட இலங்கை மத்திய வங்கியைக் குறிக்கும்.

**''கம்பனி''** என்பது 1982ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கருத்திற்குள் அடங்கும் கம்பனியைக் குறிக்கும்; ஆனால் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளை உள்ளடக்காது.

**''வாடிக்கையாளர்''** என்பது முதனிலை வணிகருடன் உறவுகளைக் கொண்டுள்ள எந்தஒரு ஆளையும் முதனிலை வணிகரிடமிருந்து கொள்வனவு செய்யவும் அல்லது வேறுவிதத்தில் பிணையங்களை அல்லது வேறு ஏதாவது நலவுரித்துக்களை அத்தகைய முதனிலை வணிகர்களுக்கு விற்பனை செய்யும் அல்லது வேறு விதத்தில் பிணையங்களை அல்லது வேறு ஏதாவது நலவுரித்துக்களை அத்தகைய முதனிலை வணிகரூடாக கொள்வனவு செய்கின்ற அல்லது விற்கின்ற அல்லது அத்தகைய பிணையங்களை கொள்வனவு செய்யும் அல்லது விற்பனை செய்யும் சாத்தியம் பற்றி பேரம்பேசும் ஆளைக் குறிக்கும்.

**''உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்''** என்பது 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டத்தின் கருத்திற்குள்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கியைக் குறிக்கும்.

**''நாணயச்சபை''** என்பது இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையைக் குறிக்கும்.

**''கட்டளைச் சட்டம்''** என்பது பதிவு செய்யப்பட்ட பங்குத் தொகுதிகளும் பிணையங்களும் கட்டளைச் சட்டத்தினைக் குறிக்கும்.

**''முதனிலை வணிகர் சிறப்பு ஒதுக்கு''** என்பது உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றினால் அதன் முதனிலை வணிகர் தொழிற்பாடுகள் தொடர்பாக உருவாக்கப்பட்டு பேணப்படும் சிறப்பு ஒதுக்குகளைக்

குறிக்கும். முதனிலை வணிகர் சிறப்பு ஒதுக்கினை பிடித்து வைத்திருக்கும் இலாபங்களின் மூலம் அல்லது வைத்திருக்கும் இலாபம் மற்றும் படுகடன் கொண்ட கூட்டாக உருவாக்கலாம். அடுக்கு II மூலதனம் (துணைப்படுகடன்) அடுக்கு I மூலதனத்தின் (வைத்திருக்கப்படும் இலாபம்) 50 சதவீதத்தினை விஞ்சக்கூடாது.

"பிணையங்கள்" என்பது கட்டளைச் சட்டத்தில் அதற்கு வழங்கப்பட்டுள்ள கருத்தினைக் கொண்டிருக்கும்.

**"அடுக்கு I மூலதனம்"** என்பது

(அ) வழங்கப்பட்டு செலுத்தப்பட்ட சாதாரண பங்கு மூலதனம்;

(ஆ) வழங்கப்பட்டு செலுத்தப்பட்ட நிலையான திரளாத முன்னுரிமைப் பங்கு (மீட்புச் செய்யமுடியாத அல்லது மத்திய வங்கியின் முன் ஒப்புதலுடன் வழங்குனரின் விருப்புடன் மீட்புச் செய்யத்தக்கது);

(இ) பங்கு வட்டக் கணக்கு

(ஈ) வைத்திருக்கும் வருவாய்கள் அல்லது மற்றைய மிகைகளின் ஒதுக்குகள் மூலம் ஒதுக்குகளை உருவாக்குவது அல்லது அதிகரிப்பது உதாரணம் வைத்திருக்கும் இலாபங்களும் ஏனைய ஒதுக்குகளும் (நிலையாய சொத்து மீள் மதிப்பீட்டு ஒதுக்குகளும் கணக்காய்வு செய்யப்படாத நிதியியல் கூற்றுக்களின் மீதான வைத்திருக்கும் இலாபமும் நீங்கலாக கணக்காய்வு செய்யப்படாத நிதியியல் கூற்றுக்கள் மீதான வைத்திருக்கும் இலாபத்தினை நியதிக் கணக்காய்வாளரின் சான்றிதழ் வழங்கப்படுமிடத்து உள்ளடக்க முடியும்)

கழிக்க; நன்மதிப்பு மற்றும் அருவச் சொத்துக்கள், கணக்காய்வு செய்யப்படாத நிதியியல் கூற்றுக்களின் மீதான இழப்புக்கள் உற்பட ஒன்று சேர்ந்த இழப்புக்கள்.

**"அடுக்கு II மூலதனம்"** என்பதன் கருத்து பின்வருவனவற்றின் மொத்தம் என்பதாகும்.

(அ) குறுங்காலத் துணைப்படுகடன் (மூன்று ஆண்டுகளுக்கும் கூடுதலான முதிர்ச்சிக் காலம்);

(ஆ) நீண்டகாலத் துணைப்படுகடன் (ஐந்து ஆண்டுகளுக்கும் கூடுதலான முதிர்ச்சிக் காலம்);

(இ) திரண்ட முன்னுரிமைப் பங்குகள்;

(ஈ) நிலையான துணைப்படுகடன்;

16\. (அ) 2000ஆம் ஆண்டின் பதிவு செய்யப்பட்ட பங்குத் தொகுதிகளும் பிணையங்களும் 1ஆம் இலக்க உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்ட (முதனிலை வணிகர்கள்) ஒழுங்கு விதிகள் 2002 பெப்புருவரி 1ஆம் நாளிலிருந்து நீக்கப்படுகின்றன.

(ஆ) பந்தி (அ) இன் மூலம் நீக்கம் செய்யப்பட்டிருந்தபோதும்.

(i) பந்தி (அ) இன் கீழ் இரத்துச் செய்யப்பட்ட ஒழுங்கு விதிகளின் கீழ் முதனிலை வணிகர்களாக நியமிக்கப்பட்ட கம்பனிகள் இவ்வொழுங்கு விதிகளின் கீழ் நியமிக்கப்பட்ட முதனிலை வணிகர்களாகக் கருதப்படுவர்.

(ii) பந்தி (அ) இன் கீழ் இரத்துச் செய்யப்பட்ட ஒழுங்கு விதிகளின் கீழ் வழங்கப்பட்ட எந்தப் பணிப்புரைகளும் அல்லது வழிகாட்டல்களும் இவ்வொழுங்கு விதிகளின் கீழ் வழங்கப்பட்டவையாகவிருப்பின் செல்லுபடியானவையாயும் பயனுறுதியுடையனவாகவும் இருக்கும்.

அட்டவணை 1

## அரச/ திறைசேரி பிணையங்களிலும் மத்திய வங்கிப் பிணையங்களிலும் முதனிலை வணிகர்களாகுவதற்கான விண்ணப்பம்

### உரிமம் பெற்ற வர்த்தக வங்கி

(1) வங்கியின் பெயர் :

(2) இலங்கையில் வங்கி கூட்டிணைக்கப்பட்ட திகதி:
இலங்கையில் கிளை நிறுவிய திகதி* :

(3) வங்கியின் பணிப்பாளர்கள்:

(4) வங்கியின்/ கிளையின்* மூலதனமும் ஒதுக்கும்:
(இறுதியாகக் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்களிலுள்ளவாறு)

(5) அரச பிணையங்கள் சந்தை, நாணய மற்றும் மூலதனச் சந்தை தொடர்பான நடவடிக்கைகளிலுள்ள அனுபவச் சான்று:

(6) முதனிலை வணிகராவதற்கு விண்ணப்பிப்பதற்கான குறித்துரைக்கப்படும் காரணம்:

(6) அரச பிணையங்களின் முதலீடுகள் மீதான வரையறை, தலைமை அலுவலகத்தினால் விதிக்கப்பட்ட அளவு ஏதுமிருப்பின்:*

..........................................................................

வங்கியின் பணிப்பாளர் சபையின் செயலாளர்/
முதன்மை நிறைவேற்றுநர்*

வங்கியின் முத்திரை
திகதி

*இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட வங்கியின் கிளை அலுவலகமொன்றினைப் பொறுத்தவரையில்

அட்டவணை 1 இன் பிண்ணிணைப்பு

## விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்
## (உரிமம் பெற்ற வர்த்தக வங்கி)

(அ) முதனிலை வணிகராக வங்கி தொழிற்படுவதற்கு ஒப்புதலளிப்பதற்கான வங்கியின்/தலைமை அலுவலகப் பணிப்பாளர் சபையின் தீர்மானம்.

(ஆ) முதனிலை வணிகர்களின் தொழிற்பாடுகள் தொடர்பாக மத்திய வங்கியினால் காலத்திற்குக் காலம் வெளியிடப்படவுள்ள விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகள், நடத்தைச் சட்டக்கோவை, மற்றும் தொடர்பான வழிகாட்டல்கள் மற்றும் பணிப்புரைகளுக்கு இணங்கி ஒழுகுவதுபற்றி வங்கி/ கிளைகளிடமிருந்தான உறுதி மொழி.

(இ) முதனிலை வணிகர்களுடன் தொடர்பான நடவடிக்கைகளிலீடுபட்டுள்ள மூத்த முகாமையாளர்களின் தகைமை அனுபவம் என்பனவற்றுடன் கூடிய பட்டியல்

(ஈ) அரச பிணையங்கள் மற்றும் மத்திய வங்கிப் பிணையங்களின் தொழிற்பாடுகளுடன் தொடர்பான நிறுவன ரீதியான வலையமைப்பினையும் வாடிக்கையாளர் தளத்தினையும் விரிவாக்குவதற்கான செயற்றிட்டங்களுடன் கூடிய விபரமான வேலைத் திட்டம்.

(உ) கிடைக்கத்தக்கதாகவுள்ள ஆகப் பிந்திய வங்கியின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுகள்.

அட்டவணை 11

கண்காணிப்பாளர்,

பொதுப்படுகடன் திணைக்களம்

இலங்கை மத்திய வங்கி

கொழும்பு. 1

**அரச/ திறைசேரி பிணையங்களிலும் மத்திய வங்கிப் பிணையங்களிலும் முதனிலை வணிகர் கம்பனிகளாவதற்கான விண்ணப்பம்**

நாங்கள் ..................................... (கம்பனியின் பெயர்) உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டம் மற்றும் பதிவு செய்யப்பட்ட பங்குத் தொகுதி மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் என்பனவற்றின் நியதிகளில் முதனிலை வணிகர்ளாக நியமிக்கப்படுவதற்காக விண்ணப்பிக்கின்றோம். கம்பனி தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**பிரிவு அ- பொதுவான தகவல்கள் :**

1. விண்ணப்பிக்கும் கம்பனியின் பெயர்
2. பதிவு செய்யப்பட்ட முகவரி

   தொலைபேசி எண். ..................... தொலைநகல். ........................... மின் அஞ்சல்.............................
3. கூட்டிணைக்கப்பட்ட நாள்.
4. நிறுவனத்தின் வகை (வரையறுக்கப்பட்ட தனியார்அல்லது வரையறுக்கப்பட்ட பொது அல்லது ஏனையவை):
5. வங்கிக் கணக்கு/ களின் விபரங்கள்

| வங்கியின் பெயரும் கிளையும் | நடைமுறைக் கணக்கு எண் | சேமிப்புக்கணக்கு எண் |
|---|---|---|

**பிரிவு ஆ - மதிப்பீடு:**

(1) பங்கு மூலதனம் — ரூ.மில்

அங்கீகரிக்கப்பட்டது ........................

வழங்கப்பட்டு முழுமையாகச் செலுத்தப்பட்டது ........................

(தயவு செய்து பங்குடமையாளர்களின் பெயரைக் குறிப்பிடவும்)

(2) பணிப்பாளர்களின் பெயர்கள்.

(அவர்களது கல்விசார்/ தொழில்சார் தகைமைகளையும் அனுபவங்களையும் தனித்தனியாகப் பட்டியற்படுத்தவும்)

(3) முகாமை.

(முதன்மை நிறைவேற்று அலுவலர் உட்பட அனைத்து முக்கிய அலுவலர்களினதும் கல்விசார்/தொழில்சார் தகைமைகளையும் அனுபவங்களையும் பட்டியற்படுத்தவும்.)

(4) தொழில்நிலை விபரங்கள்

| தரம் | தற்பொழுதுள்ளவை | | | | உத்தேசிக்கப்பட்டுள்ளது | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண் | | பெண் | | ஆண் | | பெண் | |
| | நி | அ | நி | அ | நி | அ | நி | அ |
| நிறைவேற்று | | | | | | | | |
| நிறைவேற்று அல்லாத | | | | | | | | |
| மொத்தம் | | | | | | | | |

நி - நிரந்தரம் அ - அமைய

(5) அரச பிணையங்கள், நாணயம் மற்றும் மூலதனச் சந்தைகள் தொடர்பான நடவடிக்கைகளில் கொண்டுள்ள அனுபவத்திற்கான சான்று

(6) முதலாந்தர / இரண்டாந்தரச் சந்தைக் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளுவதற்குத் தேவையான உள்கட்டமைப்பு வசதிகள் தொடர்பான சான்று.

(7) விண்ணப்பமானது முதனிலை வணிகர் தகுதிக்குப் பரிசீலிக்கப்பட வேண்டுமென்பதற்கான ஏதாவது சிறப்புக் காரணங்கள்

(8) விண்ணப்பத்தினை மதிப்பிடுவதற்கு இலங்கை மத்திய வங்கிக்கு பயனுள்ளது என விண்ணப்பதாரி கருதும் மற்றைய விடயங்கள்

(9) அட்டவணை 111இல் குறிப்பிடப்பட்ட ஆவணங்கள்

(தயவு செய்து ஆவணங்களை இணைக்கவும்)

(10) முதனிலை வணிகராக நியமிக்கப்படுவதற்கு எமது உறுதிப்பாட்டினைப் பரிசிலிக்கும் நோக்கத்திற்காக அவசியமானது என மத்திய வங்கி கருதக்கூடிய எந்தஒரு மேலதிக தகவல்களையும் அல்லது ஆவணங்களையும் மேலும் வழங்குவதற்கு நாம் பொறுப்பேற்றுக் கொள்கிறோம்.

அங்கீகரிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பம்.......................................

விண்ணப்பிக்கும் கம்பனியின் பெயர்.

திகதி. .......................

குறிப்பு.

தரப்பட்டுள்ள இடம் போதாமல் இருக்குமிடத்து, தகவல்களை அதேதொடர்பான எண்களின் கீழ் புறம்பான தாளில் தரலாம்.

*அட்டவணை 11 இற்கான இணைப்பு*

## விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்

I. கம்பனியின் அமைப்பு அக மற்றும் புற விதிகள்

II. கம்பனியின் கூட்டிணைப்புச் சான்றிதழ்

III. முதனிலை வணிகர்களாக நியமனம் பெறுவதற்காக இலங்கை மத்திய வங்கிக்கு விண்ணப்பமொன்றைச் செய்வதற்கும் மற்றும் விண்ணப்பதாரியின் சார்பில் விண்ணப்பத்தில் கையொப்பமிடுவதற்கான விண்ணப்பத்தின் கையெழுத்தினை அங்கீகாரப்படுத்துவதற்குமான பணிப்பாளர் சபையின் தீர்மானம்.

IV. முதனிலை வணிகர்கள் தொடர்பாகவும் முதலாந்தர/ இரண்டாந்தரச் சந்தைக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாகவும் இலங்கை மத்திய வங்கியினால் காலத்திற்குக்காலம் வெளியிடப்பட்ட விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகள், பணிப்புரைகள், நடத்தைச் சட்டக்கோவைகள் மற்றும் தொடர்பான வழிகாட்டல்களுக்கு இணங்கிச் செல்வதுபற்றிய கம்பனியின் உறுதிமொழி

V. இறுதியாக கணக்காய்வு செய்யப்பட்ட கம்பனியின் நிதியியல் கூற்றுகள்.

*அட்டவணை 111*

## முதனிலை வணிகர்களின் நடவடிக்கைகள்

(1) அரசாங்கத்தினாலும் மத்திய வங்கியினாலும் வழங்கப்படும் திறைசேரி உண்டியல்கள் திறைசேரி முறிகள் மற்றும் கருவிகள் தொடர்பாக மத்திய வங்கியினால் நடாத்தப்படும் முதலாந்தர ஏலங்களில் விலைக் குறிப்பீடுகளை மேற்கொள்ளுவதும் அத்தகைய முதனிலைச் சந்தைகளில் அத்தகைய பிணையங்களை கொள்வனவு செய்வதும்;

(2) திறைசேரி உண்டியல்கள், திறைசேரி முறிகள் மற்றும் ஏனைய அரச மற்றும் மத்திய வங்கிப் பிணையங்களின் இரண்டாந்தரச் சந்தையில் மத்திய வங்கியுடனும் மற்றையவர்களுடனும் ஈடுபடல்;

(3) திறைசேரி உண்டியல்கள், திறைசேரி முறிகள் மற்றும் அரச மற்றும் மத்திய வங்கியின் ஏனைய பிணையங்களினதும் இரண்டாந்தரச் சந்தையினை மேம்படுத்தி, அபிவிருத்தி செய்தல்; அத்துடன்

(4) மேலேயுள்ள பந்தி (1)இலிருந்து (3) வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கைகளுடன் தொடர்பான அல்லது இணைந்த எந்த ஒரு நடவடிக்கையும்.

தொடர்பு எண்: 08/ 24/002/0005/001

பொதுப்படுகடன் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
இல.30, சனாதிபதி மாவத்தை
கொழும்பு 01
11 மார்ச்சு, 2002

கவனிப்பு: முதன்மை நிறைவேற்று அலுவலர்

அனைத்து முதனிலை வணிகர்களுக்கும்

## இரண்டாந்தரச் சந்தை விலைக்குறிப்பீடு (கோரல் மற்றும் வழங்கல் விலைகள்)

முதனிலை வணிகர்கள் அரச பிணையங்களுக்கான இரண்டாம்தரச் சந்தையில் "சந்தை அமைப்பவர்களாக" இருக்குமாறு வேண்டப்படுவதுடன் சந்தையின் திரவத்தன்மையையும் முன்னேற்றுமாறு வேண்டப்படுகின்றனர். தேவைப்படும்போதும், எந்தவித வர்த்தக நிலைமைகளிலும் தொடர்ச்சியான மற்றும் நிலையான (பயன்தரு) இருவழி விலைகளை குறிப்பீடு செய்வதற்கான பொறுப்பை ஏற்பதற்கு கரிசனையுடன் தொழிற்படும் சந்தை அமைப்பாளர்களால் திரவத்தன்மை இலகுபடுத்தப்படும். பொதுமக்களும், ஒவ்வொரு முதனிலை வணிகர்களின் ஆகப்பிந்திய கோரல் வழங்கும் விலைகள் மீதான தகவல்களை இலகுவாக அடையும் வழிவகைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

சகல முதன்மை வணிகர்களும், இலங்கை மத்திய வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களத்தால் வழங்கப்பட்ட திரையில் 3 ஆண்டுகள் வரையிலான முதிர்ச்சியைக் கொண்ட பிணையங்களுக்கான வாங்கும் மற்றும் விற்கும் விலைக்குறியீட்டை சமர்ப்பிக்குமாறு இத்தால் பணிக்கப்படுகின்றனர். நாளொன்றுக்கான முதலாம் விலைக்குறிப்பீடு ஆகக்குறைந்தது மு.ப.10.00 மணிக்கு முன்பாவது சமர்ப்பிக்கப்பட வேண்டும். இவ் விலைக்குறிப்பீடுகள் இலங்கை மத்திய வங்கியின் இணையத்தளம், பொதுப்படுகடன் திணைக்களத்தின் இணையத்தளம், மற்றைய மின்ஊடகங்கள் மற்றும் புதினத்தாள்களில் பிரசுரிக்கப்படுவதன் மூலமும் பொதுமக்களுக்கு தெரியப்படுத்தப்படும். முதனிலை வணிகர்கள் அவர்களின் சொந்த தகவல்கள் தெரியப்படுத்தும் முறை மூலமாகவும் பொதுமக்களுக்கு இருவழி விலைகளின் தகவலை தெரியப்படுத்துமாறு வேண்டப்படுகின்றனர்.

இப்பணிப்பு, உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டம் மற்றும் பதிவு செய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் விதியின் கீழ் பெப்புருவரி 01, 2002 திகதியிடப்பட்டு நிதி அமைச்சரால் மேற்கொள்ளப்பட்ட ஒழுங்குவிதிகளின் பிரிவு 12இன் கீழ் வழங்கப்பட்டதுடன், இது மாச்சு 11, 2002 இலிருந்து நடைமுறைக்குவரும்

**எச்.என்.தேனுவர**

பொதுப்படுகடன் திணைக்களத்தின் பதில் கண்காணிப்பாளர்

தொடர்பு எண் 08/24/002/005/01

பொதுப்படுகடன் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
இல.30, சனாதிபதி மாவத்தை
கொழும்பு 01
9 ஏப்பிறல், 2002

**முதனிலை வணிகர்களினால் கிளை அலுவலகமொன்றினை நிறுவுவதன் மீதான பணிப்புரை**

உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் கட்டளைச்சட்டம் மற்றும் பதிவு செய்யப்பட்ட பங்குத்தொகுதிகள் பிணையங்கள் கட்டளைச்சட்டம் என்பனவற்றின் கீழ் 2002ஆம் ஆண்டு பெப்புருவரி 1ஆம் நாள் சனாதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட ஒழுங்குவிதிகளின் பிரிவு 12இன் கீழ் வழங்கப்பட்ட பணிப்புரை 2002 ஏப்பிறல் 12ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும்.

**கே.ஜி.டீ.டீ. தீரசிங்க**
பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்

கொழும்பு
12 ஏப்பிறல், 2002

முதனிலை வணிகர்கள், அரச பிணையங்களின் வர்த்தகம் மற்றும் முதனிலை வணிகர் வியாபாரத்தில் ஈடுபடும் உத்தேசத்துடன் கிளைகளையோ அல்லது எந்த ஒரு வகை அலுவலகத்தையுமோ நிறுவுவதற்கு முன்னர் பொதுப்படுகடன் திணைக்களத்தின் முன் அனுமதியினை 2002 ஏப்பிறல் 12ஆம் நாளிலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டுமென அறிவிக்கப்படுகின்றனர்.

உத்தேச கிளை தொடர்பாக பின்வரும் விபரங்களைப் பொதுப்படுகடன் திணைக்களத்தின் பரிசீலனைக்காகச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(1) நிறுவனத்தின் வகை
(2) அமைவிடமும் முகவரியும்
(3) நடவடிக்கைகளின் தன்மை
(4) முகாமையாளரும் அவரது தகைமைகளும்
(5) அலுவலர்களின் எண்ணிக்கையும் கடமைகளும்
(6) நிறுவனத்தின் அமைப்பும் உள்ளக கட்டுப்பாட்டு முறையும்
(7) தொழிற்பாட்டு முறைகள்
(8) இடர்நேர்வு முகாமைத்துவ முறைகள்
(9) வியாபாரத்தினை தொடங்குவதற்கு உத்தேசித்துள்ள நாள்

முதனிலை வணிகர்கள் இப் பணிப்புரைகளுக்கு முழுமையாக இணங்கி ஒழுகுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தொடர்பு எண்: 08/24/002/005/01

பொதுப்படுகடன் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
இல.30, சனாதிபதி மாவத்தை
கொழும்பு 01
*9 ஏப்பிறல், 2002*

## புதிய கருவிகள் மீதான பணிப்புரை

உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் கட்டளைச்சட்டம் மற்றும் பதிவு செய்யப்பட்ட பங்குத்தொகுதிகள் பிணையங்கள் கட்டளைச்சட்டம் என்பனவற்றின் கீழ் 2002ஆம் ஆண்டு பெப்புருவரி 1ஆம் நாள் சனாதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட ஒழுங்குவிதிகளின் பிரிவு 12இன் கீழ் வழங்கப்பட்ட பணிப்புரை 2002 ஏப்பிறல் 12ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும்.

**கே.ஜி.டீ.டீ. தீரசிங்க**
பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்

கொழும்பு
*12 ஏப்பிறல் 2002*

12 ஏப்பிறல் 2002ஆம் நாளிலிருந்து முதனிலை வணிகர்கள் தாங்கள் நடைமுறைப்படுத்துவதற்கு உத்தேசித்துள்ள புதிய கருவிகள் பற்றி, அவற்றைச் சந்தைக்கு அறிமுகப்படுத்துவதற்கு முன்னர் பொதுப்படுகடன் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும் என கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள். உத்தேச கருவிகளின் அமைப்புத் தொடர்பான விபரங்கள், விலை, வட்டி விளைவு, முதிர்ச்சி மற்றும் தொடர்பான தகவல்கள் பரிசீலனைக்காக சமர்ப்பிக்கப்பட வேண்டும். உத்தேச கருவிகள் தொடர்பாக வாடிக்கையாளர்களுடன் ஏதாவது ஆவணப்படுத்தல் அல்லது ஒப்பந்தங்கள் செய்யப்பட்டிருப்பின் அவையும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். புதிய கருவிகளை அறிமுகப்படுத்துவதற்கு முன்னர் பொதுப்படுகடன் திணைக்களத்தின் இணக்கத்தினைப் பெற்றுக்கொள்ளுமாறு முதனிலை வணிகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இப் பணிப்புரை வாடிக்கையாளர்களின் பாதுகாப்பு நலவுரித்துக்காகவும் அரச பிணையங்கள் சந்தையில் நேர்மையையும், பாதுகாப்பினையும் பேணுவதற்காகவும் வெளியிடப்படுகின்றது.

முதனிலை வணிகர்கள் இப் பணிப்புரைக்கு முழுமையாக இணங்கி ஒழுகுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## மூலதனப் போதுமை மீதான பணிப்புரை

உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் கட்டளைச்சட்டம் மற்றும் பதிவு செய்யப்பட்ட பங்குத்தொகுதிகள் பிணையங்கள் கட்டளைச்சட்டம் என்பனவற்றின் கீழ் 2002ஆம் ஆண்டு பெப்புருவரி 1ஆம் நாள் நிதியமைச்சரினால் மேற்கொள்ளப்பட்ட ஒழுங்குவிதிகளின் பிரிவு 12இன் கீழ் வழங்கப்பட்ட பணிப்புரை 2002 யூன் 1ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும்.

**கே.ஜி.டீ.டீ. தீரசிங்க**

பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்

கொழும்பு

02 மே 2002

1. முதனிலை வணிகர் முறையின் பாதுகாப்பு, வலுவாற்றல் மற்றும் உறுதிப்பாடு என்பனவற்றினை மேம்படுத்தும் பொருட்டு முதனிலை வணிகர்களுக்கு மூலதனப் போதுமைத் தேவைப்பாட்டினை அறிமுகப்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

2. 2002 யூன் 1ஆம் நாளிலிருந்து முதனிலை வணிகர் கம்பனிகள் மொத்த மூலதனத்தின் நிதியத்தில் 70 சதவீதத்திற்குக் குறையாத அளவினை உள்ளடக்குகின்ற அடுக்கு 1 உடன் 3 சதவீதம் கொண்ட ஆகக் குறைந்த மூலதனத்துக்கான சொத்து விகிதாசாரத்தை (மூலதனப்போதுமை) பேணுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

3. மூலதனப்போதுமை விகித நோக்கத்திற்காக மூலதனம் பின்வருமாறு வரைவிலக்கணம் செய்யப்படுகிறது.

**அடுக்கு 1 மூலதனம்**

(அ) வழங்கப்பட்டு செலுத்தப்பட்ட சாதாரணபங்கு மூலதனம்

(ஆ) வழங்கப்பட்டு செலுத்தப்பட்ட ஒன்று திரளாத முன்னுரிமைப்பங்குகள் (வழங்குனரின் விருப்பத்தின் பேரில் மீட்கத்தக்க) மீட்கத்தக்கதல்லாத அல்லது

(இ) பங்குவட்டக் கணக்கு

(ஈ) வைத்திருக்கப்பட்ட வருவாய்களின் பகிர்ந்தளிப்பின் மூலம் அல்லது ஏனைய மிகைகளின் மூலம் அதாவது வைத்திருக்கப்பட்ட இலாபம் மற்றும் ஏனைய ஒதுக்குகள் (நிலையான சொத்து மீள்மதிப்பீடு ஒதுக்கு நீங்கலாக) மூலம் உருவாக்கப்பட்ட அல்லது அதிகரிக்கப்பட்ட ஒதுக்குகள்.

**கழிக்குக**

நன்மதிப்பு மற்றும் ஏனைய புலப்படாச்சொத்துக்கள், ஒன்று திரண்ட இழப்புக்கள், துணை மற்றும் இணைந்த கம்பனிகளின் பங்குகளிலான முதலீடுகள்

**அடுக்கு- 2 மூலதனம்**

(அ) குறுங்கால துணைப்படுகடன்

(ஆ) நீண்டகால துணைப்படுகடன்

(இ) ஒன்று திரண்ட முன்னுரிமைப் பங்குகள்

(ஈ) நிரர்தர துணைப்படுகடன்

**கழிக்குக**

மற்றைய கம்பனிகளின் துணைப்படுகடனில் முதலீடு, துணை நிறுவனங்கள், இணைக் கம்பனிகள் மற்றும் துணை உதவி கம்பனிகளினால் வழங்கப்பட்ட தொகுதிக்கடன் மற்றும் ஏதாவது படுகடன் கருவிகள் மற்றும் துணை மற்றும் இணைக்கம்பனிகள் மற்றும் துணை உதவி கம்பனிகளுக்கு வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள்.

4. இப் பணிப்புரையின் நோக்கத்திற்காக, சொத்துக்கள் என்பதன் கருத்து:

(அ) வர்த்தகப்படுத்தல் பிணையங்கள் கணக்கு – ஐந்தொகைப் பெறுமதி (சந்தைப் பெறுமதி)
(i) திறைசேரி உண்டியல்கள்
(ii) திறைசேரி முறிகள்

(ஆ) முதலீட்டுப் பிணையங்கள் கணக்கு – ஐந்தொகைப் பெறுமதி (வரலாற்று விளைவு வீதங்களில் தீர்க்கப்பட்ட பெறுமதி)
(i) திறைசேரி உண்டியல்கள்
(ii) திறைசேரி முறிகள்

(இ) நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கைகளின் கீழ் (மீள விற்பதற்கான உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள்) பணம் கடன்வழங்கல் – ஐந்தொகைப் பெறுமதி (படிமுறை-1 / படிமுறை-1 உடன் ஒன்று சேர்ந்த வட்டியையும் கூட்டியது)

(ஈ) காசு மற்றும் வங்கி நிலுவைகள்

(உ) நிலையான சொத்துக்கள் – ஐந்தொகைப் பெறுமதி (தேய்மானம் நீங்கலாக)

(ஊ) ஏனைய சொத்துக்கள் – மேலேயுள்ளவற்றில் உள்ளடக்கப்படாதவையும் மூலதன கணிப்பிலிருந்து கழிக்கப்பட்ட விடயங்கள் தவிர்ந்தவையும் – ஐந்தொகைப்பெறுமதி.

5. மூலதனப்போதுமை நிலைமை மீதான கூற்றுக்கள் இணைப்பு 1 மற்றும் 2இல் உள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவத்தில் ஒவ்வொரு மாத இறுதியில் பொதுப்படுகடன் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

இணைப்பு 1

## மூலதனப்போதுமை விகிதம் மீதான கூற்று
## முதனிலை வணிகர்களின் மூலதனத் தளம்

நிறுவனத்தின் பெயர்:............................................ ......................அன்று உள்ளவாறு

### அடுக்கு 1 – மைய மூலதனம்

| | விபரணம் | தொகை |
|---|---|---|
| 1. | வழங்கப்பட்டு செலுத்தப்பட்ட சாதாரண பங்கு மூலதனம் | |
| 2. | வழங்கப்பட்டு செலுத்தப்பட்ட ஒன்று திரளாத முன்னுரிமைப் பங்குகள் (மீட்கத்தக்கதல்லாத அல்லது இலங்கை மத்திய வங்கியின் முன்ஒப்புதல்களுடன் வழங்குனரின் விருப்பத்தின் பேரில் மீட்கத்தக்கவை | |
| 3. | பங்குவட்டக் கணக்கு | |
| 4. | வைத்திருக்கப்பட்ட வருவாய்கள் அல்லது ஏனைய மிகைகளின் ஒதுக்கங்களின் மூலம; அதாவது வைத்திருக்கப்பட்ட இலாபம் மற்றும் ஏனைய ஒதுக்குகளின் மூலம் உருவாக்கப்பட்ட அல்லது அதிகரிக்கப்பட்ட ஒதுக்குகள் (நிலையான சொத்துக்கள் மீள்மதிப்பீட்டு ஒதுக்குகள் மற்றும் கணக்காய்வு செய்யப்படாத நிதியியல் கூற்றுக்கள் நீங்கலாக) | |
| **துணை மொத்தம்** | | |
| **கழிப்புக்கள்** | | |
| 1. | நன்மதிப்பு மற்றும் ஏனைய அருவச்சொத்துக்கள் | |
| 2. | கணக்காய்வு செய்யப்படாத நிதியியல் கூற்றுக்கள் மீதான இழப்புக்கள் உட்பட ஒன்று சேர்ந்த இழப்புக்கள் | |
| **துணை மொத்தம்** | | |
| **மொத்த அடுக்கு – 1 மூலதனம்** | | |

## அடுக்கு 2 - குறைநிரப்பு மூலதனம்

| | விபரணம் | தொகை |
|---|---|---|
| 1. | குறுங்கால துணைப்படுகடன் (3 ஆண்டுகளுக்கும் கூடுதலான முதிர்ச்சி) | |
| 2. | நீண்டகால துணைப்படுகடன் (5 ஆண்டுகளுக்கும் கூடுதலான முதிர்ச்சி) | |
| 3. | திரண்ட முன்னுரிமைப் பங்குகள் | |
| 4. | நிலையான துணைப்படுகடன் | |
| **மொத்த அடுக்கு - 2 மூலதனம்** | | |

இணைப்பு 2

**<u>மூலதனப் போதுமை விகிதம் மீதான கூற்று</u>**

**மூலதனப் போதுமை விகிதத்தின் கணிப்பீடு**

நிறுவனத்தின் பெயர்........................................................................ ..........................அன்று உள்ளவாறு

| | விபரணம் | தொகை |
|---|---|---|
| 1. | மொத்த மூலதனம்<br>1.1 அடுக்கு - 1 மைய மூலதனம் (இணைப்பு-1)<br>1.2 அடுக்கு - 2 குறைநிரப்பு மூலதனம் (இணைப்பு-1) | |
| 2. | சொத்துக்கள் (மூலதனப்போதுமை மீதான பணிப்புரையில் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு) | |
| 3. | மூலதனப் போதுமை விகிதம்<br>(மொத்த மூலதனம்/ சொத்துக்கள்) | |
| 4. | மைய மூலதன போதுமை விகிதம்<br>(அடுக்கு-1 மைய மூலதனம்/ சொத்துக்கள்) | |
| | | |

## மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கைகள் மீதான பணிப்புரை

உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் கட்டளைச்சட்டம் மற்றும் பதிவு செய்யப்பட்ட பங்குத்தொகுதிகள் பிணையங்கள் கட்டளைச்சட்டம் என்பனவற்றின் கீழ் 2002ஆம் ஆண்டு பெப்புருவரி 1ஆம் நாள் நிதியமைச்சரினால் மேற்கொள்ளப்பட்ட ஒழுங்குவிதிகளின் பிரிவு 12இன் கீழ் வழங்கப்பட்ட பணிப்புரை 2002 யூன் 1ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும்.

**கே.ஜி.டீ.டீ. தீரசிங்க**

பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்

கொழும்பு

2 மே 2002

**வரைவிலக்கணமும் அமைப்பும்**

ஒரு மீள்கொள்வனவென்பது விற்பனையும் மீள்கொள்வனவு உடன்படிக்கையுமாகும். எடுத்துக்காட்டாக, குறித்துரைக்கப்பட்ட எதிர்வரும் நாளொன்றில் அல்லது அழைப்பின் போது உடன்பாடு காணப்பட்ட விலையொன்றிற்கு பீ கட்சியிடமிருந்து சமமான பிணையங்களைக் கொள்வனவு செய்வதற்கான சட்டரீதியில் பிணைக்கப்பட்ட உடன்படிக்கையொன்றுடன் ஏ கட்சியானது கட்சி பீ இற்கு பிணையங்களை விற்பனை செய்வதாகும். பிணையங்களின் மாற்றங்களுக்கான சட்ட உடமை கட்சி பீ இற்கு முழுமையான (தடைகளற்ற) பிணையங்களுக்கான பெயரை வழங்குகிறது. கட்சி பீ அது விரும்புகின்றவாறு அவற்றை பயன்படுத்தலாம். அல்லது விற்றுவிடலாம். ஆனால் இது, மீள்கொள்வனவின் இறுதியில் கட்சி ஏ இற்கு சமமான பிணையங்களை வழங்குகின்ற கடப்பாட்டினைக் கொண்டிருக்கும். கட்சி ஏ யின் உடன் விற்பனையும் முன்கொள்வனவும் (மீள்கொள்வனவு) கட்சி பீ இன் உடன்கொள்வனவு மற்றும் முன்னோக்கிய விற்பனையுடன் (நேர்மாற்று மீள்கொள்வனவு) பொருந்தத்தக்கதாக இருக்கும்.

விற்பனை விலைக்கும் "மீள்கொள்வனவு" விலைக்குமிடையிலான வேறுபாட்டின் மூலம் காட்டப்படும் வட்டிவீதமே மீள்கொள்வனவு வீதம் எனப்படுகிறது. கட்சி ஏ அதற்கான நிதியினை தானாவே திரட்டும் பொருட்டு கட்சி பீ இற்கு பிணையங்களை விற்பனை செய்யின் அப்பொழுது பயனுறு மீள்கொள்வனவு வீதம் பிணையிடப்பட்ட நிதியத்தினை திரட்டும் கட்சி ஏ இற்கு ஏற்படும் செலவாக இருக்கும். கட்சி பீ வட்டியின் "மீள்கொள்வனவு" வீதவட்டிக்கு கட்சி ஏ இற்கு பணத்தினை கடனாக வழங்கிஅரச பிணையங்களைப் பெறும். இது ஒரு "பொதுவான பிணையம் அல்லது பொதுப்பிணைய மீள்கொள்வனவு" ஆக இருப்பதுடன் (இணைப்பு 1 இனைப் பார்க்கவும்) பொதுவாக பணத்தைக் கடன்பட விரும்பும் அதாவது காசு பெறுநரினாலேயே ஆரம்பிக்கப்படுகிறது.

மாறாக, கட்சி பீ குறிப்பிட்ட அரச பிணையில் ஒரு பற்றாக்குறையான நிலைமையைக் கொண்டிருக்கக்கூடும். இது கட்சி ஏ யிடமிருந்து பிணையங்களை (மாறாக அதாவது நேர்மாற்று மீள்கொள்வனவு) பெற்றுக்கொள்வதன் மூலம் ஈடுசெய்யப்படுகின்றது. கட்சி பீ கொடுக்கல் வாங்கல்களை ஆரம்பிப்பதனால் பெறப்பட்ட காசின் மீது அவர் செலுத்தத்தக்க மீள்கொள்வனவு வீதம் தொடர்பாக ஏ கூடியளவு பேரம் பேசக்கூடிய சக்தியைக் கொண்டிருக்கும். ஆகவே மீள்கொள்வனவு வீதம் குறைவாக (பூஜ்யமாகக் கூட இருக்கலாம்) இருக்கும். இது கட்சி ஏ அது பெரும்பாலும் பொதுவான பிணைய மீள்கொள்வனவு ஊடாக, பெற்ற காசினை அவர் பி இற்கு செலுத்த வேண்டியதிலும் பார்க்க உயர்ந்த வீதத்தில் முதலீடு செய்வதற்கு ஏ இனை அனுமதிக்கின்றதுடன் தேறிய இலாபமொன்றினையும் உழைக்கிறது. இது "சிறப்பு மீள்கொள்வனவு" அதாவது குறித்துரைக்கப்பட்ட அரச பிணையத்தின் மீள்கொள்வனவாக இருப்பதுடன் (இணைப்பு 2 இனைப் பார்க்கவும்) இது வழமையாக வழங்குனரினால் ஆரம்பிக்கப்படுகிறது.

"பிணையாக" வழங்கப்பட்ட பிணையங்களின் இரண்டாந்தரச் சந்தைப் பெறுமதி வேறுபட முடியுமாதலினால், பொதுப்பிணையிடல் மீள்கொள்வனவுகளில் உள்ள காசுப்பெறுநர், பிணையத்தின் சந்தை விலையில் ஏற்படும் மோசமான அசைவுகளுக்கெதிராக காசு வழங்குநரைப் பாதுகாக்க இலாபத்தினை வழங்கலாம். எடுத்துக்காட்டாக பயன்படுத்தப்பட்ட பிணையங்களின் எதிர்பார்க்கப்படும் விலை அதன் அடுத்த மீள்மதிப்பீட்டிற்கான இலாபத்தின் தொடக்க கொடுப்பனவிலிருந்தான காலப்பகுதிக்கான அளவைவிட இருப்பின் அப்பொழுது

100இன் மீள்கொடுப்பனவுக்கடனொன்றானது 100 உடன் v%[1] கூட்டிய பிணையத்தினைத் தேவைப்படுத்தும். பிணையங்கள் ஒவ்வொரு நாளும் அல்லது குறைந்தது ஒவ்வொரு வாரமாவது மீளமதிப்பீடு செய்யப்பட வேண்டும்.

**ஒன்று திரண்ட வட்டியும் பிணையங்களின் விலையிடலும்**

பிணையங்களின் சந்தைப்பெறுமதி ஒன்று திரண்ட வட்டியினால் பாதிக்கப்படும். நறுக்கு முறிகளைப் பொறுத்தவரையில் ஏனைய விடயங்கள் சமமானதாக இருக்கையில் வட்டியை உள்ளடக்கிய (கண்ணியமற்ற விலையில்[3]) சந்தைப் பெறுமதி நறுக்கு கொடுப்பனவு நாட்களுக்கிடையே உறுதியாக அதிகரிப்பதுடன் நறுக்கு நாளன்று நறுக்குத்தொகையினால் வீழ்ச்சியடையும். பூஜ்ய நறுக்கு முறிகளைப் பொறுத்தவரையில் ஏனையவை மாறாதிருக்கையில் சந்தைப்பெறுமதி உறுதியாக அதிகரிப்பிற்கு மீட்புநாள் வரையில் இதேபோன்று மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களில் காசு வழங்குநரின் வெளிப்படுத்துகை கடன் மீதான வட்டி ஒன்று திரள்வதனால் அதிகரிக்கும்.

மிகக் குறுங்கால மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களைப் பொறுத்தவரையில் பிணையங்களின் இரண்டாந்தரச்சந்தைப் பெறுமதி கடன்களுடன் சேர்ந்த ஒன்று திரண்ட வட்டியின் பெறுமதிக்கு இணையாக பரந்தளவில் அதிகரிக்கும் என்பதே அதன் கருத்தாகும். நீண்டகால கொடுக்கல் வாங்கல்களுடன் குறிப்பாக, விளைவு வளைகோடு குறிப்பிடத்தக்களவிற்கு சாய்வாக இருக்குமாயின் (சாதகமாகவோ அல்லது பாதகமாகவோ எதுவாக இருப்பினும்) பிணையங்கள்: கடன் வீதம் இக் காலப்பகுதியில் மாற்றமுறும். இது வழங்கப்பட்டுள்ள பிணையத்தொகையில் காலத்திற்குக்காலம் சீர்ப்படுத்தலை தேவைப்படுத்தும்.[4]

மீள்கொள்வனவுக் காலப்பகுதியில் நறுக்குகொடுப்பனவு செய்யத்தக்கதாயின், ஒன்று திரண்ட வட்டியுடன் சேர்ந்த கடனின் பெறுமதிக்கு தொடர்பான மாற்றங்களைச் செய்யாமல் பிணையங்களின் சந்தைப்பெறுமதிக்கு படிப்படியான சீராக்கங்கள் இருக்குமாகையால், பிணைய மட்டத்திற்கு சமகால சீராக்கத்தினைச் செய்யும் தேவை காணப்படும். நடைமுறையில், பெரும்பாலான மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்கள், மீள்கொள்வனவுக் காலப்பகுதிக்கு வெளியே வரும் நறுக்கு கொடுப்பனவு நாட்கள் கொண்ட பிணையங்களை பயன்படுத்த முயற்சிக்கும்.

**கட்டுக்காப்பிலுள்ள மீள்கொள்வனவு**

சில விடயங்களைப் பொறுத்தவரையில், காசு பெறுநர் பிணையங்களை-மாற்றல் செய்வதிலும் பார்க்க-புறம்பாக்கப்பட்ட கணக்கில் வைத்திருக்கலாம். எடுத்துக்காட்டாக, பாரிய வங்கியொன்று மீள்கொள்வனவு மூலம் காசினைக் கடன்பட முடியுமென்றும் கொடுக்கல் வாங்கல் செலவுகளை பதிலீட்டினை வசதிப்படுத்துவதற்காக (இணைப்பு-1 இனைப் பார்க்கவும்) மீள்கொள்வனவை (மத்திய வங்கியின்) அரச பிணையங்கள் பதிவு/வைப்பகத்துடன் பதிவு செய்யாதிருக்கலாம். காசு வழங்குநர் பிணையங்களின் நன்மை பெறுநராக இருந்த அதேவேளையில் இவை இன்னமும் காசு பெறுநரின் பெயரிலேயே பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. உயர்ந்த வருவாயைப் பெறும் பொருட்டு காசு வழங்குநர் ஓரளவு கொடுகடன் இடர்நேர்வுகளை மேற்கொள்கின்றனர்.

**முக்கூட்டு மீள்கொள்வனவு**

தீர்ப்பனவு முறையில் (கொடுப்பனவிற்கான கேள்வி) கணக்கொன்றினைக் கொண்டிராத அல்லது மீள்கொள்வனவு நிருவாகத்தினை முகாமைப்படுத்துவதற்கு தேவையான பின் அலுவலக உட்கட்டமைப்பினைக் கொண்டிராத கட்சிகளிலொன்று கட்டுக்காப்பிலுள்ள மீள்கொள்வனவினைப் பயன்படுத்துகின்றதன் மூலம் காசு பெறுநர் மீதான எதிர்பார்க்கும் கொடுகடன் இடர்நேர்வுகளை காசு வழங்குநர் விரும்பாதுவிடின் அவர் மூன்றாவது கட்சியினரை-பெரும்பாலும் சிறந்த கொடுகடன் தரமிடலுடன் கூடிய கட்டுக்காப்பு வங்கியொன்றினை அல்லது பன்னாட்டு தீர்ப்பனவு அமைப்பினை-நடுநிலையாளராக பயனுறு முறையில் முகவர் தரகராக தொழிற்படுமாறு கேட்கலாம்.

**தடுத்து வைக்கப்பட்ட மீள்கொள்வனவு**

மீள்கொள்வனவுகள் பிணையிடப்பட்ட கடன்வழங்கல் வடிவமாக இன்றியமையாத முறையில் பயன்படுத்தப்பட்டு வருகின்றவிடத்து "பிணையாக" கொள்ளப்பட்ட பிணையங்கள் தடுத்துவைத்தல் கணக்கில் இடப்படலாம். மீள்கொள்வனவின்போது சட்டரீதியான உடமை "காசு வழங்குநரிடம்" மாற்றப்படுகின்றபோதும் அங்கு திருப்பி செலுத்தாத சந்தர்ப்பமொன்று ஏற்பட்டாலொழிய அவற்றை விற்கவோ வேறுவிதத்தில் பிணையாகக் கொள்ளவோ முடியாது. இவ்விடயத்தினைப் பொறுத்தவரையில் பிணையங்களைத் விடுவிக்கக்கூடிய அதிகாரத்தினை எச்சந்தர்ப்பத்தில் கொண்டிருக்கிறார்களென்பதனை தெளிவாக்கிக் கொள்வது அவசியமானதாக இருக்கிறது. திருப்பிச் செலுத்தத் தவறும் சந்தர்ப்பத்தில் காசு வழங்குநர் பிணையங்களை விரைவாக அடையமுடிவது (விலை இடர்நேர்வுகளை மிகக் குறைப்பதற்கு) முக்கியமானதாகவுள்ளது.

தடுத்துவைக்கும் அத்தகைய நிலையொன்றில் விற்பனை செய்வதோ அல்லது பெறப்பட்ட பிணையங்களை மீள்கொள்வனவிலிருந்து அகற்றுவதோ சாத்தியமில்லையாகையால் தடுத்துவைக்கப்பட்ட மீள்கொள்வனவு காசு வழங்குநருக்கான கொடுக்கல் வாங்கல்களில் திரவத்தன்மையினைக் குறைக்கிறது. இது நீண்டகால ஒப்பந்தங்களின் பயன்பாட்டினை ஊக்கமிழக்கச் செய்வதுடன் மீள்கொள்வனவின் பயன்படுத்தலுக்கு பாரிய எச்சரிக்கையினையும் இது எடுத்துக்காட்டுவதாகவுள்ளது. சில நாடுகளைப் பொறுத்தவரையில் குறைந்தது சந்தையின் ஆரம்பக் கட்டங்களிலாவது தடுத்து வைக்கப்பட்ட மீள்கொள்வனவுகளுக்கு சில அதிகாரசபைகளால், முன்னுரிமை அளிக்கப்படுகின்றது. ஏனெனில் தனியொரு பிணையத்துடன் தொடர்புபடுகின்ற தொடர்ச்சியான கொடுக்கல் வாங்கல்கள் தடுக்கப்படுமாயின் அங்கு திருப்பிச் செலுத்தாமை தொடர்ச்சியான எதிர்நடவடிக்கைகளை தீவிரமாக்கக்கூடும். (அவ்வங்கி பிணையங்களை பீ வங்கிக்கு திருப்பிக் கொடுக்காவிடின் வங்கி பீ அவற்றினை வங்கி சி இற்கும் அவ்வாறே மற்றையவற்றிற்கும் வழங்கமுடியாது)

தடுத்து வைக்கப்பட்ட மீள்கொள்வனவும் காசு வழங்குநரை மீள்கொள்வனவு பிணையங்களை உடனடியாக விற்பதன் மூலம் குறுங்கால நன்மைகளைப் பெறுவதனைத் தடுக்கிறது. எனினும் நீண்டகாலமோ அல்லது குறுங்காலமோ எதுவாயினும் அதற்கேற்ற அளவில் அவை இடர்நேர்வுகளைக் கொண்டிருப்பதனால் இது சந்தையில் இடர்நேர்வுகளைக் குறைக்கின்றதா என்பதனை தெளிவாகக் கூறமுடியாது.

**<u>அடிக்குறிப்புக்கள்</u>**

1. முழுமையாகக் குறிப்பிடுகையில் பிணையம் 100/(1-V%) மாக இருக்கும்; எனினும் V இன் குறைந்த பெறுமதிகளின் வேறுபாடு மிகக் குறைவேயாகும்.

2. மீள்கொள்வனவு வட்டி வீதம் “கடனின்” அளவு* வட்டி வீதம் (வீதம் 6.5% இருப்பதனால் 0.065) மீள்கொள்வனவுக் காலம் (எடுத்துக்காட்டாக 7 நாள் மீள்கொள்வனவிற்கு 7/365) 100* 0.065* (7/365) =0.125 என்பவற்றை பொறுத்துக் கணிக்கப்படுகிறது.

3. வேறுபட்ட பிணையங்களுக்கும் காலப்பகுதிக்குமிடையிலான ஒப்பீட்டிற்கு இது வசதியளிப்பதனால் திரண்ட வட்டி நீங்கலான பிணையங்களின் விலைகளைக் (சரியான விலை) குறிப்பீடு செய்வது சாதாரணச்சந்தை நடைமுறையாகும். ஆனால் ஏதேனும் கொடுக்கல் வாங்கல்களுக்கான சரியான கொடுப்பனவை கணிப்பிடும் போது ஒன்று திரண்ட வட்டியானது உண்மையில் கருத்திற்கெடுத்துக் கொள்ளப்படும்.

3. பிணையத்தினை மதிப்பீடு செய்கையில் பங்கிலாபத்திற்கு முன்னைய நாளினையே (இவை பொருந்தத்தக்கதாயின்) கருத்தில் கொள்ளல் வேண்டும்.

இணைப்பு 1

**வரைபடம் அ: பொதுப்பிணையங்களுடனான மீள்கொள்வனவு (குறித்துரைக்கப்படாத தொகுதி)**

பொதுப்பிணைய மீள்கொள்வனவின் முதற்படி

| | | |
|---|---|---|
| கட்சி ஏ | 100 பெறுமதியான அரச பிணையங்களின் விற்பனை[1] ⇒<br>⇐ அரசு பிணையத்திற்காக காசு 100 கொடுப்பனவு | கட்சி பீ |

[1]/X கொண்ட பெயரளவுப் பெறமதியுடன்; அல்லது ஆரம்ப இலாபம் உள்ளடக்கப்பட்டிருப்பின் X /(1 - V%) கட்சி ஏ தற்பொழுது 100 காசினைக் கொண்டுள்ளதுடன் இதற்கு எதிராக 100 பெறுமதியான பிணையங்களை கட்சி பீ இற்கு வழங்கியுள்ளதுடன் பீ அவற்றிற்கான பூரணமான உரிமையைக் கொண்டுள்ளது.

பொதுப்பிணைய மீள் கொள்வனவின் இரண்டாவது படி

| | | |
|---|---|---|
| கட்சி ஏ | 100 காசுடன் மீள்கொள்வனவு வீதம் 6 1/2 [2] சேர்த்து கொடுப்பனவு ⇒<br>⇐ அரச பிணையத்தின் பெயரளவு விற்பனை X பெறுமதியில் | கட்சி பீ |

கட்சி பீ அதன் காசின் மீது 6 1/2 "வட்டியை" உழைத்திருப்பதுடன் கட்சி ஏ காசிற்காக இது பிணையிடப்படாத நிதியினைத் திரட்டியிருக்குமாயின் அது வேண்டியிருப்பதிலும் பார்க்க குறைந்த வீத "வட்டியை" செலுத்தியிருக்கிறது.

இணைப்பு 1

**வரைபடம் ஆ சிறப்பு மீள்கொள்வனவு(குறித்துரைக்கப்பட்ட அரசபிணையங்களில்**

சிறப்பு மீள்கொள்வனவின் முதற்கால்

| | | |
|---|---|---|
| கட்சி ஏ | 100 பெறுமதியான அரச பிணையங்களின் விற்பனை[1] ⇒<br>⇐ அரச பிணையத்திற்கான காசு 100 கொடுப்பனவு | கட்சி பீ |

1/ X கொண்ட பெயரளவுப் பெறுமதியுடன்

கட்சி பீ தற்பொழுது 100 அரச பிணைகளை கொண்டுள்ளதுடன் (அதன் குறுங்கால நிலைமையை ஈடுசெய்ய)

கட்சி ஏ, 100 காசுப் பயன்பாட்டினையும் கொண்டுள்ளது
சிறப்பு மீள்கொள்வனவின் இரண்டாவது படி%

| | | |
|---|---|---|
| கட்சி ஏ | 100 காசுடன் மீள்கொள்வனவு வீதம் 2% [1]உடன் சேர்த்து கொடுப்பனவு ⇒<br>⇐ விற்பனை X அரச பிணையத்தின் பெயரளவுபெறுமதி | கட்சி பீ |

கட்சி ஏ மீள்கொள்வனவில் பெறப்பட்ட காசின் மீது 2% மட்டும் செலுத்தியிருக்கிறது எனினும் மீள்கொள்வனவுக் காலப்பகுதியில் காசினை மீள் முதலீடு செய்திருப்பின் உயர்ந்த பணச்சந்தை வீதத்தினை உழைத்திருக்கும். கட்சி பீ அரச பிணையத்திலுள்ள பற்றாக்குறையினை ஈடுசெய்யும் பொருட்டு அதன் காசு மீதான வட்டியின் ஒரு பகுதியை இழந்திருக்கிறது.

இணைப்பு 3

## சிறப்பு மீள்கொள்வனவு எதிர் விற்பனையும் மீள்வாங்கலும்

விற்பதும் மீள்வாங்குவதும் "மிகப் பழைய" விடயமாக இருந்தபோதும் பல அம்சங்களில் இது மீள் கொள்வனவை ஒத்ததாக இருக்கின்றது. முக்கியமான ஒத்த தன்மைகளும் வேறுபாடுகளும் கீழே தொகுத்து தரப்படுகின்றன.

- **கொள்வனவும் விற்பனையும்:** இரண்டும் கொள்வனவுடனும், விற்பனையுடனும் தொடர்பானவையாகும். அதாவது பிணையங்களை பிணையாகப் பயன்படுத்துவதனைவிட உடமை உரிமையை மாற்றல் செய்துவிடல் (தவறு நிகழும் சந்தர்ப்பத்தில் மட்டும் உரிமை மாற்றல் செய்யப்படுகிறது).

- **இலாபத்தைப் பேணல்:** விற்பனை மற்றும் மீள்வாங்குதல் குறிப்பாக இலாபத்தினைப் பேணுவதுடன் தொடர்பானதல்ல. பிணையங்களின் இரண்டாந்தர சந்தை விலைகளில் மாற்றங்கள் இல்லையாயின் மேலதிக இலாபத்தினை வழங்குவதற்கான தேவை ஏற்படாதாகையினால் இது கொடுக்கல் வாங்கல்களை இலகுபடுத்துகின்ற அதேவேளையில் அதிகரித்த இடர்நேர்வுக்கு வழிவகுக்கலாம். இணைப்பு' இனைப் பார்க்கவும்

- **நறுக்கு:** மீள்கொள்வனவில் காசு பெறுநர் எந்த ஒரு நறுக்கு கொடுப்பனவுகளுக்குமான உரிமையை கொண்டிருப்பார். மீள்கொள்வனவுக் காலத்தில் நறுக்கு செலுத்தப்படுமாயின் (சட்டரீதியான உரிமையாளராக காசு வழங்குனருக்கு) இது உடனடியாக காசு பெறுநரிடம் ஒப்படைக்கப்படும். அவ்வாறு செய்யத்தவறுமிடத்து அது தவறொன்று இழைத்தலுக்கு இட்டுச்செல்லும். விற்பனை மற்றும் மீள்வாங்குவதில் நறுக்குவீதத்தின் பெறுமதி மீள்கொள்வனவு விலைகளுடன் பின்னிப்பிணைந்திருக்கும். இது நறுக்கு கொடுப்பனவிற்கும் மீள்கொள்வனவின் முதிர்ச்சிக்குமிடையிலான காலப்பகுதிக்கான காசு வழங்குனருக்கெதிராக கொடுகடன் வெளிப்படுத்துகைகளுக்கு வழிவகுக்கும்.

- **பதிலீடு செய்தல்:** மீள்கொடுப்பனவுக் கொடுக்கல் வாங்கல்களில், கோட்பாட்டுரீதியாக செய்யப்பட்ட பிணையத்தினை அதே பெறுமதியினைக் கொண்ட மற்றொரு பிணையத்திற்கு பதிலீடு செய்துகொள்ள முடியும். சந்தை தொழிற்பாட்டாளரொருவரை பிணையமொன்றினை மீள கொள்வனவாக வழங்குகின்றார் எனவும் அக்குறிப்பிட்ட பிணைய விலைக்கு வாங்குமாறு வாடிக்கையாளர் ஒருவர் கோருகிறார் எனவும் கொள்வோம். சந்தை தொழிற்பாட்டாளர் வாடிக்கையாளருடன் வணிகம் பேரத்தினை முடிவிற்கு கொண்டுவருவதுடன் மீள்கொள்வனவாக வழங்கப்பட்ட பிணைக்காக வேறு பிணையொன்றினை பதிலீடு செய்யலாம். வாடிக்கையாளர் தனக்கு வேண்டிய குறித்துரைக்கப்பட்ட பிணையத்தினைப் பெற்றுக்கொள்வதுடன் மீள்கொள்வனவு காசு வழங்குநர் இன்னமும் திருப்திகரமான "பிணையத்தினைக்" கொண்டிருக்கிறார். (நடைமுறையில் பிணையங்கள் "சிறப்பான" தன்மையைப் பெறுமாயின் நன்மைகளை பெறுவதற்கான வாய்ப்பினை காசு வழங்குநரிலும் பார்க்க காசு பெறுநருக்கு வழங்குவதன் காரணமாக, காசு வழங்குநர் பதிலீட்டுக்கான வாசகத்தினை உள்ளடக்குவதற்காக ஒருசில சதவீதப் புள்ளிகளை அறிவிடலாம்) விற்றல் மற்றும் மீள-வாங்கல் கொடுக்கல் வாங்கல்களில் பதிலீடுகளுக்கான உரிமை எதுவுமில்லை.

- **கைத்தொழில் ஒப்புதலளித்த ஒப்பந்தம்:** இரு பங்கேற்பாளர்களுக்கும் சட்டரீதியாக பெருமளவு உறுதிப்பாட்டினை வழங்குகின்றதன் மூலம் மீள்கொள்வனவிற்காக வழமையாக PSA / ISMA உடன்படிக்கைக்காக இது நடைமுறையிலுள்ளது.

### சிறப்பு மீள் கொள்வனவு எதிர் விற்பனையும் மீளவாங்கலும்

| | மீள்கொள்வனவு | விற்றல்/ மீள்வாங்கல் |
|---|---|---|
| கொள்வனவும் விற்பனையும் | X | X |
| இலாபத்தைப் பேணுதல் | X | - |
| அனுமதிக்கப்பட்ட நறுக்கு | X | - |
| இறுதி விலைக்கு கூட்டப்பட்ட நறுக்கு | -- | X |
| பதிலீடு | X | - |
| கைத்தொழில் ஒப்புதலளித்த ஒப்பந்தம் | X | - |

தொடர்பு எண் 08/24/002/0005/001

பொதுப்படுகடன் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
இல.30 சனாதிபதி மாவத்தை
கொழும்பு 1
2 யூலை 2002

முதன்மை நிறைவேற்று அலுவலர்,

- சீ பாங் செக்குறிட்டீஸ் லிமிட்டட்
- கொமர்சல் பாங் பிரைமரி டீலர் லிமிட்டட்
- என்.எஸ்.பீ பன்ட மனேஜ்மன்ட் லிமிட்டட்
- எச்.என்.பீ செக்குறிட்டீஸ் லிமிட்டட்
- பெஸ்ட் கப்பிடல் ரிசர்றீஸ் லிமிட்டட்
- சம்பத் சுரக்கும் லிமிட்டட்
- செலான் பாங் அசெட்ஸ் மனேஜ்மன்ட் லிமிட்டட்
- சிலின்கோ சிறீராம் செக்குறிட்டீஸ் லிமிட்டட்

## இரண்டாந்தர சந்தை உண்மை வீதங்களின் மீதான பணிப்புரை

பொதுப்படுகடன் திணைக்களம் உடனடி நேர அடிப்படையில் உண்மையான இரண்டாந்தர சந்தை வீதங்களை கணக்காணிப்பதற்காக முறையொன்றை ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பாக, நாளொன்றில் கொடுக்கல் வாங்கல் செய்யப்பட்ட பிணையங்களின் அனைத்து முதிர்ச்சிகளுக்குமான உண்மையான வாங்கும் மற்றும் விற்கும் வீதங்களை கீழே தரப்பட்டுள்ள படிவத்தில் சமர்ப்பிக்குமாறு முதனிலை வணிகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள். ஆரம்ப நடவடிக்கையாக, வர்த்தகம் செய்யப்பட்ட குறுங்கால பிணையங்களின் உண்மையான வீதங்களை வழங்குவது கட்டாயமானதாகும்.

ஆகவே அனைத்து முதனிலை வணிகர்களும் 91 நாள் மற்றும் 364 நாள் திறைசேரி உண்டியல்களுக்கான உண்மையான வாங்கும் மற்றும் விற்கும் வீதங்களை நாள்தோறும் பி.ப 4.00 மணியளவில் பொதுப்படுகடன் திணைக்களத்திற்கு தொலைநகல் மூலம் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். தொலைநகல் இலக்கங்கள் 477718/ 9.

முதனிலை வணிகரின் பெயர் ......................................

| கருவி/ காலம் | விற்கும் விளைவு வீதம் (வீச்சு) | வாங்குகின்ற விளைவு வீதம் (வீச்சு) |
|---|---|---|
| 3 மாத திறைசேரி உண்டியல் | | |
| 12 மாத திறைசேரி உண்டியல் | | |
| 2 ஆண்டு திறைசேரி முறி | | |
| 3 ஆண்டு திறைசேரி முறி | | |
| 4 ஆண்டு திறைசேரி முறி | | |
| 5 ஆண்டு திறைசேரி முறி | | |
| 6 ஆண்டு திறைசேரி முறி | | |

அனைத்து முதனிலை வணிகர்ளும் பதிவு செய்யப்பட்ட பங்குகள் தொகுதி மற்றும் பிணையங்கள் கட்டளைச்சட்டம் மற்றும் உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச்சட்டம் என்பவற்றின் கீழான 2002ஆம் ஆண்டிற்கான ஒழுங்குவிதிகளின் பிரிவு 12இன் கீழ் வழங்கப்பட்ட இப் பணிப்புரைகளுக்கு கட்டாயமாக இணங்கி ஒழுகுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

**கே.ஜி.டீ.டீ. தீரசிங்க**
பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்

தொடர்பு எண். 08/24/002/0005/01

பொதுப்படுகடன் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
இல.30, சனாதிபதி மாவத்தை
கொழும்பு.1
2 யூலை 2002

முதன்மை நிறைவேற்று அலுவலர்,

வரையறுக்கப்பட்ட சீ பாங் செக்குறிட்டீஸ்
வரையறுக்கப்பட்ட கொமசல் பாங் பிறைமரி டீலர்
வரையறுக்கப்பட்ட என்எஸ்பீ பன்ட் மனேஜ்மன்ட்
வரையறுக்கப்பட்ட எச்என்பீ செக்குறிட்டீஸ்
வரையறுக்கப்பட்ட வெர்ஸ்ட் கபிட்டல் றெசறீஸ்
வரையறுக்கப்பட்ட சம்பத் சுரக்கும்
வரையறுக்கப்பட்ட செலான் பாங் அசெட் மனேஜ்மன்ட்
வரையறுக்கப்பட்ட சிலிங்கோ சிறீராம் செக்குறிட்டீஸ்

**திறைசேரிமுறி ஏலங்களுக்கான ஆகக் குறைந்த உதவு தொகைத் திட்டங்கள் மீதான பணிப்புரை**

பதியப்பட்ட பங்குத் தொகுதி பிணையங்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் நிதியமைச்சரினால் வெளியிடப்பட்ட 2002 பெப்புரவரி 1ஆம் நாளிடப்பட்ட ஒழுங்கு விதிகளின் 12ஆம் பிரிவினது நியதிகளுக்கிணங்க இப்பணிப்புரை வெளியிடப்படுகிறது. இப் பணிப்புரையின் நியதிகளுக்கிணங்க. ஒவ்வொரு முதனிலை வணிகர்களும், ஏலங்கள் முழுமையாக உதவப்பட்டன என்பதனை உறுதிப்படுத்தும் பொருட்டு ஒவ்வொரு திறைசேரி முறி ஏலங்களிலும் ஒவ்வொரு முதிர்ச்சிக்காகவும் வழங்கப்பட்ட தொகையில் ஆகக் குறைந்தது 15% ஆவது உதவும்படி இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

அனைத்து முதனிலை வணிகர்களும் உடனடியாக இப் பணிப்புரைக்கு இணங்கி ஒழுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

கே. ஜீ. டீ. டீ. தீரசிங்க
பொதுப்படுகடன் பணிப்பாளர்

**இலங்கை சனநாயக சோசலிச குடியரசு வர்த்தமானிப் பத்திரிகை**

**அதிவிஷேசமானது**

**1253/ 24ஆம் இலக்கம் - 2002ஆம் ஆண்டு செத்தெம்பர் மாத் 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை**

**1991ஆம் ஆண்டின் 23ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான**

**1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டம்**

*1991ஆம் ஆண்டின் 23ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க, நிதிக்கம்பனிகள் சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினால் விடுக்கப்படுவதும் பொதுமக்கள் தகவலுக்காக வெளியிடப்படுவதுமான பணிப்பு.*

ஏ.எஸ்.ஜயவர்த்தன,

தவிசாளர்,

இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபை

கொழும்பு

*2002 செத்தெம்பர் 13*

**2002ஆம் ஆண்டின் இல.1 கொண்ட நிதிக்கம்பனிகளின் (வைப்புக்கள்) பணிப்புரை**

1. இப்பணிப்பு, 2002ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க, நிதிக்கம்பனிகள் (வைப்புக்கள்) பணிப்பு என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், 1991ஆம் ஆண்டின் 23ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க, நிதிக்கம்பனிகள் சட்டத்தின் 2ஆம் பிரிவின் கீழ் பதிவுசெய்யப்பட்ட ஒவ்வொரு நிதிக்கம்பனிக்கும் ஏற்புடையதாதலும், உடனடியாக நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. "நிதிக்கம்பனியொன்று கோரப்படுவதன் மீது மீளச் செலுத்தப்படற்பாலதான அல்லது ஏதேனும் வைப்புப் பெறப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாதத்திற்கு குறைவானதும் அத்தகைய வைப்புப் பெறப்பட்ட தேதியிலிருந்து அறுபது மாதங்களுக்குமேற்படுவதுமான ஒரு காலப்பகுதிக்குப் பின்னர் மீளச்செலுத்தப்படற்பாலதான அத்தகைய வைப்பை ஏற்றுக்கொள்ளுதலாகாது அல்லது அவ்வாறு புதுப்பிக்கப்படும் அத்தகைய வைப்பு, அத்தகைய புதுப்பித்தல் தேதியிலிருந்து ஒரு மாதத்திற்கு முந்தாமலும் அறுபது மாதங்களுக்குப் பிந்தாமலும் மீளச் செலுத்தப்படற்பாலதாகவிருந்தாலொழிய அதனாற் பெறப்பட்ட ஏதேனும் வைப்பைப் புதுப்பித்தலாகாது."

3. (i) நிதிக்கம்பனி ஒவ்வொன்றும் ஒவ்வொரு நிலையான வைப்புக்கும் ஒரு உறுதிப்பத்திரத்தை எல்லா வைப்பாளருக்கும் வெவ்வேறாக வழங்குதல் வேண்டும். அந்தப் பத்திரம் எல்லாத் தேவைகளுக்கும் நிதிக்கம்பனியால் குறிப்பிட்ட தொகைப்பணத்தை பெற்றுக் கொண்டதற்கான பற்றுச்சீட்டாக கருதப்படும்.

(ii) அத்தகைய ஒவ்வொரு பற்றுச்சீட்டும், வைப்புக்களை ஏற்று அத்தகைய பற்றுச்சீட்டை வழங்கும் நோக்கத்துக்காக, நிதிக்கம்பனியின் பணிப்பாளர் சபையினால் அதிகாரமளிக்கப்பட்டவர்களான இரு அலுவலர்களினால் கையொப்பமிடப்பட்டதாகவும், பின்வரும் தகவலைத் தெளிவாகக் குறித்துக்காட்டுவதாகவும் இருத்தல் வேண்டும். அவையாவன-

(அ) பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனியின் பெயரும் முகவரியும்,

(ஆ) வைப்புத் தேதி,

(இ) வைப்பாளரின் பெயரும், ஆளடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு இலக்கமும், முகவரியும்,

(ஈ) வைப்பு என்ற வகையாக நிதிக்கம்பனியால் பெறப்பட்ட பணத்தொகை சொற்களிலும் எண்களிலும்,

(உ) அதன் மீது செலுத்தப்படற்பாலதான வருடாந்த வட்டி வீதம்,

(ஊ) வைப்பு மீளச் செலுத்தப்படற்பாலதான தேதி,

(எ) பற்றுச்சீட்டில் ஒப்பமிட்ட அலுவலர்களின் பெயர்கள்,

(ஏ) உறுதிப் பத்திரத்தின் தொடர் இலக்கம்,

(ஐ) உறுதிப்பத்திரம் தொடர்பான கணக்கு இலக்கம்.

4. (i) ஒவ்வொரு நிதிக்கம்பனியும் வைப்பு இடாப்பொன்றை வைத்திருத்தல் வேண்டும். அவ்விடாப்பில், ஒவ்வொரு வைப்பாளரின் விடயத்திலும் தனித்தனியாகப் பின்வரும் விபரங்கள் பதியப்படுதல் வேண்டும்.

(அ) ஒவ்வொரு வைப்பாளரின் பெயரும் முகவரியும் மற்றும் அடையாள அட்டையின் அல்லது கடவுச் சீட்டின் இலக்கம்.

(ஆ) ஒவ்வொரு வைப்புத் தேதியும் தொகையும்,

(இ) ஒவ்வொரு வைப்புக்குமான காலநீட்சியும், சென்மதித் தேதியும்,

(ஈ) ஒவ்வொரு வைப்புத் தேதியும் திரண்ட வட்டித் தொகையும்,

(உ) முதலாகவோ வட்டியாகவோ உள்ள ஒவ்வொரு மீள்கொடுப்பனவுத் தேதியும் தொகையும்,

(ஊ) வைப்புத் தொடர்பிலான வேறு எவையேனும் விபரங்கள்,

(எ) உறுதிப்பத்திரத்தின் தொடர் இலக்கம்.

(ii) வைப்பு இடாப்பு சம்பந்தமான முதனிலைப் புத்தகங்கள் நிதிக்கம்பனியின் பதிவு பெற்ற அலுவலகத்தில் அல்லது வைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்ட கிளை அலுவலகத்தில் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

(iii) கிளைகளினாலும் பதிவு பெற்ற அலுவலகத்தினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட வைப்புக்கள் சம்பந்தமான இடாப்பு பதிவு பெற்ற அலுவலகத்தில் மேலே 4(i) ஆம் பிரிவினால் தேவைப்படுத்தப்பட்டவாறு பேணி வரப்படுதல் வேண்டும். அத்தகைய இடாப்பு கொடுக்கல் வாங்கல் தேதியிலிருந்து ஒரு வாரத்தினுள் பதியப்படுதல் வேண்டும்.

5. (i) ஒவ்வொரு நிதிக்கம்பனியும் ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்த மூன்று மாதங்களுக்குப் பிந்தாமல், பின்வரும் விபரங்களை அல்லது தகவலைத் தரும் அறிக்கையொன்றை பணிப்பாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும். அவையாவன-.

(அ) வைப்புக்கள் விடயத்திற்கேற்ப, மீளச்செலுத்தப்படுவதற்கு அல்லது புதுப்பிப்பதற்கான தேதியின் பின்னர் கம்பனியினால் அவர்களது வைப்புக்கள் மீளச்செலுத்தப்படாத அல்லது புதுப்பிக்கப்படாத நிதிக்கம்பனியின் வைப்பாளர்களது மொத்த எண்ணிக்கை,

(ஆ) வைப்பாளர்களுக்குச் செலுத்தப்பட வேண்டியவையும், மேலே (அ) வில் குறிப்பீடு செய்யப்படும் தேதிகளுக்குப் பின்னர் செலுத்தப்படாது அல்லது புதுப்பிக்கப்படாது இருப்பவையுமான தொகைகள்

(ii) உபபந்தி (i) இல் குறிப்பீடு செய்யப்படும் விபரங்கள் அல்லது தகவல்கள் அறிக்கையுடன் தொடர்புடைய நிதியாண்டின் கடைசி நாளன்றுள்ளவாறான நிலைமையைத் தொடர்புறுத்துவதாகக் கொடுத்துதவப்படுதல் வேண்டும். (i) (ஆ) என்னும் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறு செலுத்தப்படாது அல்லது புதுப்பிக்கப்படாது இருந்துவரும் தொகைகள் கூட்டு மொத்தமாக ரூபா 100,000 பணத்தொகையை விஞ்சுகின்றவிடத்து, வைப்பாளர்களுக்குச் செலுத்தப்பட வேண்டிய தொகை செலுத்தப்படாது அல்லது புதுப்பிக்கப்படாது இருப்பவையுமான தொகைகளை மீளச் செலுத்துவதற்கு நிதிக்கம்பனியினால் எடுக்கப்பட்ட அல்லது எடுக்க உத்தேசிக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய ஒரு கூற்றும் அறிக்கையில் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

6. கீழே குறிப்பீடு செய்யப்பட்ட விடயங்களில் ஏற்படும் மாற்றம் எதுவும் அத்தகைய மாற்றம் இடம் பெற்றதிலிருந்து ஒரு மாதத்தினுள் பணிப்பாளருக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(அ) பணிப்பாளர்களின் பெயர்களும் வதிவிட முகவரிகளும்,

(ஆ) அதன் பிரதான அலுவலர்களின் பெயர்கள், அவர்களது தேசிய அடையாள அட்டை இலக்கத்துடனும் அலுவலக பூர்வ பதவிப் பெயருடனும்,

(இ) கம்பனியின் சார்பில் ஒப்பமிட அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களின் மாதிரி ஒப்பங்கள்.

7. இப்பணிப்பில் -

(1) "பணிப்பாளர்" என்பது இலங்கை மத்திய வங்கியின் வங்கிசார நிதி நிறுவனங்களின் மேற்பார்வைப் பகுதிப் பணிப்பாளர் எனப் பொருளாகும்.

(2) "பணிப்பாளர் சபை" என்பது இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினால் நியமிக்கப்பட்ட ஏதேனும் பணிப்பாளர்கள் தவிர்ந்த கம்பனியின் பணிப்பாளர்சபை எனப் பொருளாகும்.

8. 2001ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க பணிப்புரையின் மூலம் இறுதியாகத் திருத்தப்பட்ட 1991ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதிக்கம்பனிகளின் (வைப்புக்கள்) பணிப்புரை இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.